
2



# அய்யன் திருவள்ளுவர்

புலவர் என். வி. கலைமணி எம்., எ

### உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

### Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# அய்யன் திருவள்ளுவர்

புலவர் **என்.வி.கலைமணி** எம்.ஏ.,

*விற்பனை உரிமை :*

**பாரதி நிலையம்**


*108, உஸ்மான் சாலை,*

*தியாகராய நகர், சென்னை - 600 017.*

விலை ரூ : 50.00

❍Ayyan Thiruvalluvar ❍ by N. V.Kalaimani ❍ First Edition : December 1999 ❍ Price Rs. 50.00 ❍ Publisher : Aringnar Anna Eazhuthagam, 30, Parthasarthy Nagar, 2nd Street, Adambakkam, Chennai-88. ❍ Sales Right : Bharathi Nilayam, 108, Usman Road, T.Nagar, Chennai - 600 017 ❍ Printed at : Sivakami Printo Graphics, 160, Big Street, Triplicane, Chennai-600 005. Phone : 844 31 54.

# உலக எட்டாவது
# அதிசயத்திற்குக் காணிக்கை!



வடநாட்டின் ஆக்ரா நகரில் உள்ள தாஜ்மஹால் என்ற கவினுறும் காதல் மாளிகை உலக ஏழு அதிசயங்களுள் ஒன்றென்று போற்றுகிறது உலகு - வாழ்த்துகிறது வரலாறு!

தென்னாட்டின் முக்கடல் சூழ்ந்த சங்கம முனையில், கன்னியாகுமரி நகரின் கடல் மீது தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களால் எழுப்பப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை உலகின் எட்டாவது அதிசயமாக நிலை பெற்று உள்ளதால், அந்த அய்யன் திருவள்ளுவர் மாணடிக்கு இந்நூலை மாலையாகச் சூட்டி, வணங்குகிறேன்.

வி. அறிஞர் அண்ணா

16.2.2000





# நூலுள்ளே - நுழைவோமா......


| | | |
|---|---|---|
| 1 | அய்யன் திருவள்ளுவரில் ஓர் இராக மாலிகை | 5 |
| 2 | அணிந்துரை | 7 |
| 3 | ஒரு கை விரல்களில் பெருவிரல் போன்றவர் | 9 |
| 4 | அய்யன் திருவள்ளுவரில் தமிழ் அஞ்சலி | 10 |
| 5 | தமிழ்க் கூத்து | 18 |
| 6 | எனக்குப் பொறாமையாக இருக்கிறது | 23 |
| 7 | செந்தமிழ் சந்தனாடவி | 29 |
| 8 | அய்யனுக்கு அஞ்சலி | 32 |
| 9 | அய்யன் திருவள்ளுவர் | 35 |
| 10 | மனிதப் புனிதன் காந்தி அண்ணல் | 49 |
| 11 | பாவேந்தர் பாரதிதாசனார் | 64 |
| 12 | அமெரிக்கக் காந்தி மார்ட்டின் லூதர் கிங் | 77 |
| 13 | கவிஞர் கண்ணதாசனின் நான் நினைத்துப் பார்க்கிறேன்... | 90 |
| 14 | விடுதலைக் குயில் பாரதியார் | 97 |
| 15 | இமை மூடா இரவுகள் சில... | 107 |
| 16 | நினைவுகள் சில.... | 118 |
| 17 | காஞ்சி ஒரு சிற்றாய்வு | 136 |
| 18 | அய்யன் திருவள்ளுவர் கிறித்துவரா? | 147 |
| 19 | பாரதிதாசன் பேசுகிறேன்.. | 170 |
| 20 | இயேசு ஒரு சீர்திருத்தவாதி | 178 |



# அய்யன் திருவள்ளுவரில் ஓர் இராக மாலிகை

"அய்யன் திருவள்ளுவர்" எனும் இந்தப் பாமாலை பல்வேறு ராக மலர்களால் கவித்துவம் என்னும் நூலில் கோக்கப் பட்டிருக்கிறது. சுதி சுத்தமாக இருக்கிறது. தாளம் கணக்குத் தப்பவில்லை. இராகங்களுக்குரிய ஆரோகணம் - அவரோகணம், ஸ்வரம் பிசகாமல் அமைத்து அடிநாதமாக விளங்குகிறது.

இந்த அய்யன் திருவள்ளுவர் என்ற பாமாலையில் - தமிழின் மோகனம், தமிழின் ஹம்சநாதம், தமிழின் கல்யாண வசந்தம், தமிழின் சாரமதி, தமிழின் சக்ரவாகம்... என்றெல்லாம் இனங்குறித்துச் சொல்லும்படி, பல்வேறு ராகங்களை - அவற்றின் ஆலாபனைகளை - செவிநுகர் கனிகளாக ஏற்றுச் சுவைத்து மகிழ்ந்தது போன்ற சுகானுபவம், பக்கத்திற்குப் பக்கம் நாம் வாசிக்கும் போது ஏற்படுகிறது.

அதற்குக் காரணம், இந்த திருவள்ளுவர் மாலையை இயற்றியிருக்கும் வித்தக விரல்கள், ஓர் உயரிய தமிழ் வித்துவானுக்குரியவையாக இருப்பதுதான்.

என் மதிப்பிற்குரிய நண்பர் புலவர் திரு. கலைமணி அவர்கள், 'சொல்லாடல்' என்னும் கலையில் வல்லவர் என்பதை, அவரது முந்தைய நூல்களைப் படித்து இன்புற்று உய்த்து உணர்ந்தவன் நான்.

அவருக்கென்று ஓர் அற்புத தமிழ்நடை வசப்பட்டு - தகத்தகாயமாக ஒளிபரப்பி, வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் வெளிச்ச விழுதாகத் தொங்கி, வாசிப்பவரின் அறியாமை இருட்டை அறவே அகற்றுகிறது.

நான், நண்பர் கலைமணியின் நூல்களை எப்பவுமே மிகவும் ஆசையோடு படிப்பவன்.

ஓர் உரைநடை ஆசிரியர், கவிஞராக இருப்பது வியப்பில்லை. இருப்பினும் - அப்படி இருப்பது அனைவருக்கும் சாத்தியமான தல்ல.

இந்த நூலில் யார் யாரைப் பற்றியெல்லாம் அவர் எழுதியிருக்கிறாரோ, அத்துணைபேரும் கொடுத்து வைத்தவர்கள் என்று நான் கூசாமல் கூறுவேன்

வாழ்க்கை நெறிகளைச் சொல்லிப்போன வள்ளுவன், காந்தி, மார்ட்டின் லூதர் கிங் போன்ற - சமூக அவலங் கள் கண்டு அனலாய்ப் பொங்கி, நெருப்புத் துண்டுகளாய்ப் பாடல்களை யாத்து - உணர்ச்சியற்ற மரத்துப்போன தோள்களுக்கெல்லாம் சூடும் சொரனையும் ஏற்படுத்திய - பாரதி, பாரதிதாசன் போன்ற மகா கவிகளையும்-

திரு.கலைமணி அவர்கள் சுட்டிக் காட்டும்போது, கலை மணி அவர்களே - இன்னொரு மகா கவியாக மலருகிறார்.

தமிழ் அர்த்தமுள்ள மொழி என்பதை - சில நூல்களைப் படிக்கும் போது நாம் அறியலாம்.

தமிழ் - அழகான மொழி என்பதை, சில கவிதைகளைப் படிக்கும் போது நாம் உணரலாம்.

ஆனால் - தமிழ் மொழி - அர்த்தமும் அழகும் வாய்க்கப் பெற்ற அபூர்வமான, ஆழமான மொழி என்பதை -

நண்பர் கலைமணியின் இந்த 'அய்யன் திருவள்ளுவர்' என்னும் நூல் துலாம்பரமாகக் காட்டுகிறது.

நான் வரிக்கு வரி, ரசித்து, ரசித்து வாசித்தேன். நீங்களும் அவ்வாறு வாசித்து அனுபவிக்க வேண்டும் என்பது என் ஆசை.

புலவர் பெருந்தகை திரு. என்.வி. கலைமணியின் எழுத்துத் திறனை நுண்மான் நுழை புலத்தை - நான் சுட்டிக் காட்டத் தேவையில்லை.

ஆதவனைச் சுட்டிக் காட்ட அகல்விளக்கு வேண்டுமா என்ன?

கலைமணியே சூரிய வெளிச்சமாக வாசகர்மேல் படருகிறார். அனைவருக்கும் தம் எழுதுகோலால் அறிவு வெளிச்சம் கொளுத்துகிறார். வாழ்க என் நண்பர்!

- வாலி

29-1-2000

12, முதல் தெரு, கற்பகம் அவின்யூ,
இராசா அண்ணாமலைபுரம், சென்னை - 600 028.



# அணிந்துரை

பேராசிரியர் மா.நன்னன்
புலவர், எம்.ஏ., பிஎச்.டி.,

புலவர் என்.வி. கலைமணி யவர்கள் தாம் தொகுத்து வெளியிடும் 'அய்யன் திருவள்ளுவர்' என்னும் பெயரிய நூலொன்றுக்கு அணிந்துரை வேண்டினார். கால் நூற்றாண்டு காலத்துக்கு முன்பிருந்தே அவரை யாமறிவோம். அவர் 'எரியீட்டி'யாயும், 'சவுக்கடி'யாயும், பலரையும் மருட்டியும், அச்சுருத்தியும் துலங்கி வாழ்ந்த காலத்திலேயே எம்மால் அறிந்து காமுறப் பட்டவர். அவரைப் பற்றி பலர் பல வகையில் மதிப்பிட்ட காலமது.

அவர் தமிழ் எழுத்துலகில் மறகத்தக்கவரல்லர். அவர் நிலைப்பதற்கு இந் நூலும் உதவும். ஆயினும் அவர் நன்கு நிலை கொள்வதற்குத் தம் எழுதுகோலை மீண்டும் தேடி எடுத்து ஆள வேண்டும் என்பது எமது விருப்பம் மட்டுமன்று, வேண்டுகோளும் ஆகும். தூண்டுகோலுமாக யாம் பயன்பட்டாலும் சரியே.

இந் நூல் பகுதிகளுள் தரப்பட்டுள்ளவை பல என் பாராட்டுக்குரியவையாகின்றன. இனிப்புருண்டையில் முந்திரிப்பருப்பும், பொடி முந்திரி வற்றலும், தலைகாட்டி நம்மை ஈர்ப்பன போல் இவை அமைந்துள்ளன. சுருங்கக் கூறுவதாயின் தக்கவற்றைத் தக்கவற்றிலிருந்து தக்கவாறு தேர்ந்தெடுத்துத் தக்காங்கமைத்துள்ளார் கலைமணி என்னலாம்.

பற்பல இடங்களிலும் புலவர் கலைமணி அவர்கள் தமக்கு மட்டுமே உரிய நடையில் எழுதியுள்ளார். அத் தனித் தன்மை மாறாமல் அமைந்திருப்பதைக் காண்கிறோம். 171 ஆம் பக்கத்திலுள்ளவை போன்றன செய்யுட் டிறம் காட்டுகின்றன. ஓசை நயம் பொதுளிய பாத்திறம் வாய்ந்தவர் இவர் என்பதை அப் பாக்களில் கண்டு மகிழ்ந்து எம் நண்பர் கலைமணியைப் பாராட்டுகிறோம். இம்முயற்சியை நிறுத்திட வேண்டா எனவும் வேண்டுகிறோம்.

பக்கம் 130 முதலியவை இந் நூலில் காணப்படும் பொதுப்

பகுதிகள். ஏனைய பல சிறப்புப் பகுதிகளாம்.

காந்தியடிகள் பற்றிய பகுதி எளிமையும், அருமையும் வாய்ந்த நல்ல பகுதி. குழந்தைகளும் காந்தியாரைப் பற்றிப் பொதுவாகவும், நன்றாகவும், போதுமான அளவிலும், எளிதாகத் தெரிந்து கொள்ள இது உதவும்.

பக்கம் 22 இல் வயிரம் உடையும் என்ற கருத்துடன் மர வயிரத்தின் உறுதியையும் சேர்த்துக் குறிப்பிட்டிருக்கலாம்.

பாவேந்தரைப் பற்றிய பகுதியில் கலைமணி ஓர் புரட்சிப் பாமணியாக மிளிர்வதைக் காண முடிகிறது.

கண்ணதாசனை வரவேற்று இவர் எழுதியுள்ள வரவேற்பு, சர். ஆர். கே. சண்முகத்தை வரவேற்று அண்ணா திராவிட நாட்டில் எழுதிய அரிய இலக்கியப் பகுதியை எமக்கு நினைவூட்டியது.

கலைமணியின் உள்ளத்தைப் பளிச்செனக் காட்டும் பகுதி கிருத்துவக் கலை இலக்கிய மன்றம் நடத்திய திருவள்ளுவர் கிருத்தவரா என்பது பற்றிய மாநாட்டு வரவேற்புரையாகும். தமிழக வரலாற்றில் குறிப்பிடத் தக்க ஒரு நிகழ்ச்சியே அது.

திருவள்ளுவரைக் கிருத்துவராகக் காட்ட முயன்ற முயற்சி முறியடிக்கப்பட்டுச் சாம்பலாகவும் ஆக்கப்பட்ட மாநாடே அது. அதில் யாமும் கலந்து கொண்டோமாதலால் இதன் மெய்ம்மையை எம்மால் உறுதிப் படுத்த முடிகிறது. பாவாணர், பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் போன்ற பெருமக்களே வழுக்கியும், நழுவியும் தப்பிய அந் நிகழ்ச்சிக்கு எம் உரை திருப்புமுனையாக அமைந்து, அம் மாநாட்டின் முடிவை தலைகீழாக மாற்றியமைத்தது.

அந்த வரவேற்புரை, நம் கலைமணியை 'நம்' கலைமணியாகக் காட்டும் மணியான உரை என்பதோடு இக்கால இளைஞர்களைச் சரியான திசை நோக்கி வருமாறு அழைக்கும் வரவேற்புரையாகவும் அமைந்துள்ளது. ஆதலால் அம்மாநாட்டு வரவேற்புரையும் 'அய்யன் திருவள்ளுவர்' பற்றிய கட்டுரையும் இந் நூலுக்குக் கோபுரங்கள் போல் இலங்குகின்றன.

இந் நூலை வெளியிடுவதன் வாயிலாகக் கலைமணி மீண்டும் தமிழ் ஞாயிற்றின் ஒளிப் பகுதிக்கு வருகிறார் எனக் கூறி அவரை யாம் அன்புடன் அங்கு வரவேற்கிறோம்.

– மா. நன்னன்

சென்னை

4.1.2000



# ஒரு கை விரல்களில் பெருவிரல் போன்றவர்

*உவமைக் கவிஞர் சுரதா*

என்னுடைய நண்பர் திரு. கலைமணி அவர்கள், மிகச் சிறந்த எழுத்தாளர், மேடைப் பேச்சாளர் - நல்ல சிந்தனையாளர்!

இலக்கியத்துறைக்கும், மொழிக்கும், நாடகக் கலைக்கும், பத்திரிகைத் துறைக்கும், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், புரட்சித்தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரன் ஆகியவர்களால் பாராட்டப்படும் அளவிற்கு அரும்பணிகள் ஆற்றியவர் அவர்.

நான், சினிமாத்துறைக்கு வருவதற்கு முன்பே, எனக்குப் பழக்கப்பட்ட நண்பர்களிலே அவரும் ஒருவராவார்.

தமிழ்நாட்டில் உள்ள எல்லா அறிஞர் பெருமக்கட்கும் பழக்கமானவர்.

பழக்கமானவர் என்றால், அத்தனை பேரும் மதித்துப் பாராட்டுமளவிற்கு நேர்முகமாகவே பழக்கமான பண்பாளர்.

தமிழ்நாட்டின், அரசியலில் - இலக்கியத்தில், வரலாற்றில் மிகச் சிறந்த, வேகமாக, விரைவாக எழுதும் எழுத்தாளர்களை நான் அறிவேன். "கல்கி, தினசரி ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம், காண்டீபம் ஆசிரியர் எஸ்.எஸ். மாரிசாமி" ஆகியவர்கள் வரிசையில் நண்பர் புலவர் என். வி. கலைமணி நான்காவது எழுத்தாளராக என்னால் மதிக்கப்படுபவர்.

மனிதனுக்கு ஒரு கையில் ஐந்து விரல்கள் எப்படி இன்றியமையாததோ அந்த விரல்களில் நண்பர் என். வி. கலைமணி அவர்கள் பெருவிரலைப் போன்றவர்.

அன்புடன்,

- சுரதா

56அ, இலட்சுமணசாமி சாலை,
கலைஞர் கருணாநிதி நகர், சென்னை - 600 078.
17.1.2000



# அய்யன் திருவள்ளுவரில்

# தமிழஞ்சலி

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

உளம் நினை மணம் தரு மலர் (மனோரஞ்சித மலர்) என்ற ஒன்று உண்டு. அதை எடுத்துக் கொண்டு, நாம் எந்த மலரின் மணத்தை விரும்புகிறோமோ அம் மணத்தை அது கொடுக்குமாம். மல்லிகையை நினைத்தால் மல்லிகை மணம், உரோசாவை நினைத்தால் உரோசா மணம், என எல்லா நறுமண மலர்களின் மணத்தையும் அது நல்குமாம். பல்வேறு நறுமண மலர்களின் கலவை மணமாக, மிகச் சிறந்த மணமாக அது விளங்குகிறது என்பதை, இவ்வாறு பெருமைபடக் குறிப்பிடுவர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு மனோரஞ்சித மலர். ஆற்றல்மிகு பேச்சாளர், அழகு தமிழ்க் கட்டுரையாளர், சிந்தையள்ளும் சிறுகதை எழுத்தாளர், புகழ்மிக்க புதின ஆசிரியர், நயமிகு நாடக ஆசிரியர், அறிவு நலஞ்சான்ற அரசியலாளர், பார் போற்றும் பண்பாளர் – என, யார் எந்நிலையில் நோக்கினாலும் அவ்வந்நிலையில் மிக உயர்ந்தவராகக் காட்சியளிப்பவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

புலவர் என்.வி. கலைமணி அவர்கள், அண்ணாவைக் காலமாக, ஞாயிறாக, நிலவாக, வானவில்லாக, அருவியாக, தென்றலாக என இயற்கைப் பொருள்களாகக் கண்டு, அவ்வியற்கைப் பொருள்களின் தன்மைகளை அண்ணா பெற்றிருக்கும் பாங்கினைக் கூறுகின்ற புகழ் மொழிகளே 'தமிழஞ்சலி' என்னும் இந்நூலாக உருவாகியுள்ளது.

எழுதுவோர் பல வகையினர். ஒரே பொருளை நோக்குவோர் தம் கருத்துக்கு ஏற்ப வெவ்வேறு வகையிலே அதனை எழுதுவர் என்பதை அண்ணா, ஓர் அருமையான எடுத்துக் காட்டுத் தந்து விளக்குகிறார். "குதிரை என்ற தலைப்பிலே ஒரு கட்டுரை எழுதச்

சொன்னால், ஒருவர், 'பியூசிபாலசு' காலம் முதற்கொண்டே குதிரைகள் சிறப்படைந்தன'' என்று எழுதுவார்.அவர், அலெக்சாந்தர் என்னும் கிரேக்க வீரன் ஏறி வந்த குதிரையின் பெயரைத் தெரிந்து கொண்டவர். - மேனாட்டு வரலாற்று நிகழ்ச்சிகளில் அறிவு படைத்தவராக இருப்பார். நீலவேணியை நினைவுக்குக் கொண்டுவருவார் இராசா தேசிங்கு கதை தெரிந்த எழுத்தாளர். 'மாணிக்க வாசகரின் மந்திரி பதவி போகவும், இடர் மிகவும், இறைவன் அருள் வந்து சேரவும் குதிரைகளே காரணம்!... மணிவாசகத்தை நாம் பெற குதிரைகளன்றோ காரணம். குதிரையே உன்னைக் கும்பிடுகிறேன்' என்று முடிப்பார் ஓர் எழுத்தாளர்.

“தாலி அறுக்கும் பிசாசே! தந்தைக்கும் தனயனுக்கும் பகை மூட்டும் சனியனே! சூது சூழ்ச்சியிலே மக்களைச் சிக்க வைக்கும் கருவியே! உன்னால் கெட்டன குடும்பங்கள். குதிரையே கோரத்தின் சொரூபமே ! மாயத்தின் கருவியே ! பாதகத்தின் பங்காளியே ! உன் குலம் அழிக ! கூண்டோடு அழிக ! பூண்டின்றி அழிக ! என்று எழுதுவார் ஒருவர் - கிண்டி குதிரைப் பந்தயத்தில் நேர்ந்த கொதிப்பினால் - கோபத்தினால் ! -இப்படிச் சுட்டிக் காட்டுகிறார் அண்ணா.

ஒரு பொருளைப் பற்றி வெவ்வேறு மனநிலையிலிருப் பவர்கள் எழுதினால், எண்ண ஓட்டங்கள் இவ்வாறு மாறுபட்டு வருவது இயல்பு.

புலவர் கலைமணி அவர்களோ, அண்ணாவைப் பற்றி ஒரே மன ஓட்டத்தில் - அண்ணாவின் உள்ளத்தையே பெற்று இந்நூலைப் படைத்திருப்பதால், இந்நூலே அண்ணா. அண்ணாவே இந்நூல் என அமைந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

இதைக் கலைமணியே குறிப்பிட்டிருக்கக் காண்கிறோம். “அண்ணாவை 'உடன்பிறந்த பாசத்தால் உந்தப்பட்டோர் - அண்ணன் என்றனர். கல்விப் பசி கொண்ட ஏழைகள் - அறிஞர் என்று கழறினர். கவிஞர்கள் அவரைக் கவிதைக்கு மூலம் என்றனர். அத்தகைய அண்ணனை நான் என்ன என்று அழைப்பது? எனக் கேட்டு, எனக்கு எல்லாமுமாக இருப்பது நீயேதான் அண்ணா” என நெகிழ்ந்து கூறுகிறார்.

நூலுள், அண்ணா பற்றிப் பல தலைப்புகள்! தந்துள்ள தலைப்புகளுக்கு ஏற்ப மிகப் பொருத்தமான அண்ணாவின் குணங்களை, ஆசிரியர் மிக அருமையாக இணைத்துக் காட்டுகிறார்.

நண்பர் கலைமணி,"எனது இணைப்பைச் சரியாகச் சொல்லு கிறேனா என்று என்னை நானே எண்ணிப் பார்க்கிறேன் - அஞ்சுகிறேன்" என்கிறார்!

அன்பர் கலைமணிக்கு இந்த அச்சம் வேண்டியதே இல்லை. இதைவிட யாரும் பொருத்தமாகச் செய்ய முடியாது என்ற அளவில் இணைப்பு போற்றத்தக்கதாக - ஏற்கத்தக்கதாக அமைந்திருக்கிறது.

"அண்ணா ஒரு காலம்" என எழுத முற்படும் கலைமணி, "அண்ணாவினுடைய குரல் மனித சமுதாயத்தற்காகக் கதறி அழுத குரல், காலத்தால் அது விழுங்கப்படுவதில்லை. ஆகவே, என்றும் காலமாக நிலைப்பார்" என அருமையாகப் பொருத்தி விளக்கிச் சொல்லுகிறார்.

அண்ணாவை நீர் வீழ்ச்சியாகக் கூறும்போது, "இது அறிவு மலையிலிருந்து விழுகின்ற நீர்வீழ்ச்சி! அதனுடைய இரைச்சல் எல்லா தேசத்தையும் செவிமடுக்கச் செய்தது" என அருமையாக இணைக்கிறார்.

நீர் வீழ்ச்சி என்று வெறுமனே சொல்வதோடு விட்டு விடா மல், நீர் வீழ்ச்சியின் ஒவ்வொரு செயலையும் அண்ணாவின் செயலோடு ஒப்பிட்டுக் காட்டி ஒன்று படுத்துகிறார்.

நீர்வீழ்ச்சி மேலே இருந்து கீழே விழும்போது, அடியில் சொரசொரப்பாக உள்ள பாறையை வழுவழுப்பாக்கி விடுகிறது. அதுபோல்தான் அண்ணாவும், "அரசியலில் முரடர்களை மிருதுவாக்கி, வழவழப்பாக்கிப் பக்குவப்படுத்தினார்" என அருவியின் பண்பை அண்ணாமேல் ஏற்றிச் சொல்கிறார்.

வானவில்லைக் கலைமணி காண்கிறார்.அதன் ஏழுவணஙணங்கள் அவரைக் கவருகின்றன.அந்த ஏழு வண்ணங்களோடு அண்ணாவை ஒப்பிட்டு அவரைக் காலம் எழுதிய ஒரு வானவில்லாகக் கண்டு மகிழ்கிறார்.

வானவில்லில் ஒவ்வொரு நிறத்துக்கும் ஒரு மலரை அல்லது தாவரத்தைச் சுட்டி, அவற்றின் இயல்புகளையெல்லாம் ஒரு தாவரவியல் அறிஞர் சொல்வதுபோலச் சொல்லியிருப்பது பாராட்டத்தக்கதாக இருக்கிறது.

'மாதவி' ஒரு கொடி (குருக்கத்திக் கொடி) அதைச் சொல்ல முற்பட்டதும், அதைப் பயிரீட வேண்டிய முறை, அதன் பூ, இலை அமைப்பு, இலக்கியத்தில் அது பெற்றுள்ள இடம், ஆகிய அனைத்தையும் கூறிவிடுகிறார்.

"மாதவிக் கொடியை கன்னட மொழியிலும் மாதவி என்றே அழைப்பர். ஓரிய மொழியில் அதனை 'மாதபி' என்றும், மாதபிளதோ என்றும் கூறுவர்

தாவர நூலறிஞர்கள்.அதனை ஆங்கிலத்தில், மாட பிளோட்டா என்று அழைக்கின்றனர்" என அரிய பல செய்தி களை இடையிடையே சொல்லி நம்மை வியக்க வைக்கிறார் நண்பர் கலைமணி.

வேங்கைப்பூ என்றதும் -"மறத்திற்கு இலக்கணமான புலியின் பெயரை ஒரு மரத்திற்குச் சூட்டி, மரத்தின் மாண்பை மேதினிக்குப் பரப்பிய நாடு தமிழ்நாடுதானே தம்பி" என்கிறார். மரம், மறம் ஆகிய இரு சொற்களும் இத்தொடரில் ஒரு தனி அழகையே பெறுகிறது எனலாம்.

"அண்ணாவின் தலைமையிலே துவங்கிய இயக்கம், வீரம் விளைந்த தமிழ் நிலத்தில் தோன்றியது என்பதை மட்டும் மறந்து விடாதே தம்பி! அவரது கட்சி ஒன்றுதானே 'வேங்கையைப் போல் வீரம் பொருந்திய பாசறையாக விளங்கியது. அந்தக் கட்சியின் வீரத்திருஉருவமாக - தன்னேரிலாத வழிகாட்டியாக - அண்ணா காட்சியளித்தா" என அண்ணாவை வேங்கைப் பூவாகவும், கட்சியை வேங்கை மரமாகவும் கலைமணி சொல்லும் அழகே அழகு!

'அண்ணா ஒரு கடல்' - கட்டுரைத் தலைப்பு கடலைப் பற்றிய அரிய பல செய்திகள் இதில் அலை மோதுகின்றன. கடலடியில் கடற்செடிகள். அவை மீன்களுக்கு உணவாகின்றன. அச் செடியின் தண்டைப் பிளந்து பார்த்தால் உள்ளே வெதவெதப்பு எப்படி வந்தது?

அச்செடியின் உடல் பூராவும் இருக்கின்ற 'செல்' என்ற உயிர்ப்பு சக்தி, சூரிய ஒளியால் சூடான நீரில் இருக்கின்ற வெதவெதப்பை உறிஞ்சிக் கொள்ளுகிறது.

இவ்வளவு விபரங்களைத் தருகின்ற கலைமணி, இறுதியில் அறிஞர் அண்ணா அவர்கள் நீரால் சூழப்பட்ட கடற்செடியைப் போல, பாதகம் விளைவிக்கின்றவர்களுக்கு மத்தியில் இருக்கின்றார். இந்நாட்டிலுள்ள பல கோடி ஏழை மக்களின் துன்பச் சூட்டை நன்குணர்ந்த அறிஞர் அண்ணா அவர்கள், அந்தத் துன்பத்தை மட்டும் தான் உறிஞ்சி வைத்துக் கொண்டிருக் கிறார்.

"கடல் செடி, நீரின் சூட்டை உறிஞ்சுவதற்கும், தன்னையே, மீனுக்குத் தீனியாக மாற்றிக் கொள்வதற்கும் உருவானதைப் போல, அறிஞர் அண்ணா அவர்கள் தன்னைப் பொது மக்களுக்கு அர்ப்பணித்தும், அவர்களது துன்ப வேட்காட்டைத் தான் உறிஞ்சுக் கொண்டும் வாழ்கிறார்" என, தான் முன்னர்ச் சொன்ன பொருளோடு அண்ணாவைத் தொடர்பு படுத்திக் காட்டும் நேர்த்தியே நேர்த்தி!

அண்ணாவைத் தென்றலாக்கும் அருமையைக் காணுங்கள். "தென்றலே! தமிழ்த் தரணியின் அணுவிலெல்லாம் நீ தவழ்ந்து, அறநெறிகளை ஏற்று, மாலை நேரமானதும் தமிழக வீதிகளை நோக்கி ஓடி வருகிறாயே - ஏன்?

மயக்கும் மாலைப் பொழுதான அந்தி நேரத்திலே, தமிழக வீதிகளிலே நடைபெறும் பொதுக் கூட்டங்கள் தோறும் நீ உலா வருகிறாயே! கூட்டத்தில் குழுமியுள்ள மக்களது உள்ளங்களை யெல்லாம் நீ சிலிர்க்க வைக்கிறாய்! கவருகிறாய்! கொள்ளை கொள்ளுகிறாய்! இதற்குக் காரணம் என்ன? உன்மீதுள்ள எல்லையற்ற பற்று. நீ வாடையா என்ன? - வெறுப்பதற்கு, தென்றல் அல்லவா?" அண்ணாவின் அழகு தமிழ்ப் பேச்சை, மேடையிலே வீசுகின்ற மென்பூங்காற்றான தென்றலாக்கிக் காட்டியிருப்பது, தென்றலினும் குளிர்ச்சியை நமக்குத் தருகிறது.

அண்ணாவின் "கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு" என்பதிலே தன்னை முற்றிலுமாகப் பறிகொடுத்து நிற்பவர் புலவர் கலைமணி. இதோ அவரே கூறுவதைக் கேளுங்களேன்!

“அண்ணா நீ வாய் திறந்தாய். கொட்டின முத்துக்கள்! சிதறின வைரங்கள்! எல்லாம் மரகதக் குப்பைகள். வந்தவன் ஒவ்வொருவனும், அந்த விலைமதிக்க முடியாத மணிகளை மனக் கூடையிலே வாரிக் கொண்டு, போயினன். எஞ்சியிருப்பது ஒரே ஒரு முத்து. அந்த முத்தை நாடி நான் நெருங்க ஆரம்பித்தேன். அது என்னருகிலேயே இருந்தது. அந்த முத்திலே ‘கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு’ என்ற சொல்லோவியங்கள் எழுதப்பட்டிருந்தன” என்பது கலைமணியின் உள்ளத்தின் ஆழத்தே இருந்து வெளிப்படும் உயிர்ப்பான எண்ணம்!

ஆட்சிமுறை எப்படி அமைய வேண்டும் என்பதை இயற்கை கொண்டு புலவர் கலைமணி விளக்கியிருப்பது எண்ணி யெண்ணி உள்ளத்தில் இருத்திக் கொள்ள வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

இன்றைய மக்களாட்சியில் பெரும்பான்மை பலம் கொண்ட கட்சி நாட்டை ஆள்கிறது. சிறுபான்மைக் கட்சிகள் எதிர்க்கட்சிகளாக உள்ளன.இயற்கைக் குடியரசில் சிறு பான்மைக் கட்சி ஆட்சி செய்கிறது. பெரும்பான்மைக் கட்சி ஆட்சி செய்வோரைக் கண்காணித்து வருகிறது. ஆம்! உலகில் நிலப்பரப்பு குறைவு. கடற் பரப்போ மிகுதி! எதிர்க் கட்சியைப் போலுள்ள பூமிதான் மக்களை ஆட்சி புரிகிறது. சிறு பான்மைக்குச் சிறப்பான தகுதியை வழங்கியதோடு பெரும் பான்மை நின்று விடவில்லை.“பூமியே! நீ கொடுங்கோலை ஏந்தினால், புரண்டு வரும் கடலலைகளால் உன்னைப் புதை குழிக்கு அனுப்புவேன். எச்சரிக்கை” என ஓயாமல் குரல் கொடுத்து வருகிறது. இயற்கையின் இந்தக் குடியாட்சி முறை நாட்டில் நடைமுறைக்கு வரக் கூடாதா? என நெஞ்சம் ஏங்குகிறது. புலவர் கலைமணி அவர்களுடைய உரை நடையே கவிதை நடையாகச் சிறந்துள்ளது. எடுத்துச் சொல்லும் முறையிலே ஒரு புதிய போக்கு, நெஞ்சில் நிற்கத் தக்கவாறு தக்க எடுத்துக் காட்டுக்கள் - இவை நூல் முழுவதும் பளிச்சிடுகின்றன. சான்றுக்குச் சில -

“மழைத் தோலால் நெய்யப்பட்ட பனித் திரையைக் கதிர வனுடைய கூரீட்டிகள் ஊடுறுவின. அதன் விளைவு? வானவில் வண்ணங் காட்டி மேற்கில் சிரித்தது.” -இது ஓவிய நடை.

"பாம்பாட்டி தன் கூடையில் போட்ட பாம்பை, கூடையின் முடியைத் திறக்கும் போதெல்லாம், அந்த அரவம் தலையை நீட்டுவதைப் போல, எனதுள்ளம் திறக்கப்படும் போதெல்லாம், என்னுடைய ஆசைகள் தலை நீட்டுகின்றன." இஃது எடுத்துக் காட்டு நடை.

"கதிரவனே! அடிவானத்தில் நீ தொட்டில் இட்டுக் கொண்டிருக்கிறாய்!

வானத்தின் சிம்மாசனத்தில் நீ மதியத்தில் அமருகின்றாய்! அந்தி நேரத்தில் கண் சிவந்த வீரனைப் போலக் காட்சி தருகிறாய். உனக்கிருக்கும் அன்பால் இரவில், நிலவிற்கு வழிவிட்டுப் போய் மறைகிறாய்!" - கற்பனை நடைக்கு இஃது ஒரு காட்டு.

"தொடுவான் இல்லையென்றால், உலகத்தில் வாழும் கோழிக் குஞ்சுகளான மக்களுக்கு வானம் போன்ற கூடை கிடைக்காது." உருவக நடை இது.

எங்கள் இலட்சியமே அறிஞர் அண்ணாதான்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் அறிஞர் அண்ணாவே என்ற எண்ணம்தான்.

அண்ணா,

கடிக்க நனி சொட்டும் கரும்பு!

மோப்ப மணக்கின்ற மலர்!

கேட்கப் பரவி வரும் இசை!

நோக்க எழிலீயும் காட்சி!

உணரச் சுகம் தரும் தென்றல்!

என ஐம்புலன்களையும் ஆட்கொள்பவர் அண்ணாவே என்றும் புகழ் மாலையைச் சூட்டி நண்பர் என்.வி.கலைமணி போற்றிப் பரவுகின்ற தமிழ் அஞ்சலியே இந்நூல்.

அவருடைய அஞ்சலி என்ன? அவரே சொல்கிறார் "கொம்புத் தேனும் செழும் பாகும் குலவும் பசும் பாலும் கூட்டி உண்டார் போல் இனிக்கும் குணம் கொண்டவனே!

*உன்னில் என்னைச் சேர்ப்பாய்!*

*எனது தமிழஞ்சலியை நின் மலரடியில் வைக்கின்றேன்!*

*புலவர் கலைமணியின் 'அஞ்சலி' பொருள் நிறைந்ததாய் இருக்கிறது.*

*தமிழ் மணப்பதாய்ப் பொலிகிறது, அண்ணாவின் புன்னகையாய் மிளிர்கிறது.*

*புலவர் கலைமணியின் எழுத்துப் பணி ஓங்குக! சிறக்க! என உள நிறைவோடு வாழ்த்துகிறேன்.*

*அன்புடன்,*

*சு. செல்லப்பா*

*சென்னை*

*1.3.1999*



# தமிழ்க் கூத்து

புலவர் த. கோவேந்தன், டி.லிட்

உலக மொழிக்கெல்லாம் மூல மொழியாகவும், வட இந்திய மொழிக்கெல்லாம் தாயாகவும் விளங்குவது தமிழ்.

உலகில் வேறு எந்த மொழிக்கும் இல்லாத இயல், இசை, நாடகம் என்ற ஏற்றத்தைத் தோற்ற நாள் முதலே ஊற்றாய் கொண்டது தமிழாகையால், முத்தமிழ் என்று பெயர் பெற்றது. அம் முத்தமிழ், இசைத் தமிழ், இயற்றமிழ், நாடகத்தமிழ் என வழங்கும் வழக்கு, அவ் வத்துறையைச் செவ்விதினை விளக்கத் தமிழிசை, தமிழியல், தமிழ் நாடகம் என்ற புத்தொளியையும், புத்துணர்வையும், புத்தெழுச்சியையும், காலந்தோறும் நிலமும், நீரும் நெருப்புமாய்த் தமிழர் வாழ்வில் உலவி, உயிர்ப்புடன் ஓங்கிய நிலையில் இருக்கின்றது.

சங்கச் சான்றோர்கள் அகப்புற எண்ணங்களை அவரவர்க் குரிய உயர்வெண்ணங்களால் மயர்வற நயம்பட உரைத்தனர். அகவல் ஓசையும், கலியின் துள்ளலோசையும், பரிபாட்டின் பண் ணார்ந்த தனியோசையும், எண்ணங்களின் ஏற்றங்களுக் கெல்லாம் சிறுசிறு தொடராகவும், செந்தமிழ் தாழை மடலாகவும் மணம் வீசின.

காப்பிய காலத்தில், இளங்கோவடிகள் இசையின் ஆழ அகலங்களையும், இயற்றமிழின் பரப்பையும் விரிப்பையும் நாடகத் தமிழின் நளி நயங்களையும் மலையிடைப் பிறவாமணி யாகவும், யாழிடைப் பிறவா இசையாகவும், ஆழியிடை பிறவா அமிழ்தாகவும், காப்பிய நோக்குக்கும் போக்குக்கும் உரிய நடையில் கோத்தமைத்தார்.

முத்த தமிழ் யாத்த சீத்தலைச் சாத்தனாரோ, புத்தரின் மெய்ப் பொருளை மணிமேகலையின் கைத்தலம் பற்றி அறியாமைப் பசி

நோய்க்கு அறிவுப் பசி தீர்க்கும் அமுத சுரபியாய், அகவலோசையில் தமிழ்க்குப் புதுப் புதுத் தகவல்களைத் தரும் பகலொளி நடையைத் தந்தார்.

திருத்தக்கத் தேவர் முதல், கவிக் கோவேந்தன் கம்பன் வரை, வடநாட்டுக் கதைகளைத் தமிழில் பழமைப் பண்ணையில் புதுமை விளைவிக்கும் முயற்சியில், அயற்சியின்றி கலியில் வருத்தப்படாமல் வளர்ந்த விருத்தப்பாவில், கருத்துக்கேற்ப ஆயிரம் திருத்தமான நடைகளைப் பொருத்தக் காட்டினார்.

தேவார முதலிகளிலும், திருவாசகம் ஏற்ற இரக்க அருளிரக்க நடை காட்டியது. நாலாயிரத்தில் நூலாயிர நடையின் நுட்பங்கள் பெரியாழ்வார் முதல் நம்மாழ்வார் வரை கடவுட்பற்றின் மேலாயிர நளி நயங்களுடன் கூத்தியற்றியது.

இடைக் காலத்தில் அனைத்தும் சமற்கிருத வெறியர்களின் பாடை நடைதான்.

குற்றாலக்குறவஞ்சியில் திரிகூட ராசப்பனும், முக்கூடற் பள்ளும், நந்திக் கலம்பகமும் பெயர் தெரியாப் புலவனின் உயிரோட்டமும் உணர்ச்சியோட்டமும், காதலியின் புணர்ச்சியில் மகிழும் மலர்ச்சியின் உள மலி உவகையும் மெய்மலி உவகையும், மொழி நடையில் களிநடம் பூண்டது.

இருபதாம் நூற்றாண்டின் வைகறையில் ஒளியும்தெளிவும் பெற்ற வள்ளலாரின் அருட்பாவில், தமிழ்நடை கோடையிலே வீசுகின்ற தென்றலாகியது.

புதுமைக் கவி சுப்பிரமணிய பாரதியின் பாட்டிலும் - உரைநடை, இரண்டிலேயேயும் தமிழுக்குப் புது வாழ்வு தந்தான். தமிழால் அவன் பெற்றத்த தகுதியினும் தமிழ் பெற்றத் தகுதியே மிகுதி. அவன் நடையில் இல்லாததில்லை.

ஆயிரம் நரம்புடைய பேரியாழின் பண்ணின் தாயிடமாக அவன் நடையின் உள்ளத்தின் உண்மை ஒளியும் ஊழிக் கூத்தும் கொண்டன.

தன்மான இயக்கத்தின் தந்தை பெரியாரிடம் தமிழ் உள்ளொளி பெற்றது. எதையும் உணர்த்தும் திறனைப் பெற்றது. அலங்காரமற்ற பகுத்தறிவணங்கே உயிரோட்டத்தில்

ஆடிப்பாடி, தமிழரைப் பிடித்த தீங்கை எல்லாம் சாடித் தனித் தொளிர்ந்தாள்.

அறிஞர் அண்ணா கையில் பலவேறு கருத்தூற்று மழையூற்றாய் பெருக்கெடுக்கையில், மக்களின் பழகு தமிழும் திரு.வி.க.வின் அழகு தமிழும், கதை - கட்டுரை - கவிதை - நாடகம், புதினம், பேச்சு பலக் கோணங்களில் முத்தமிழும் எத்திசையும் புகழ் மணக்க குற்றால அருவியாய் சொற்கோலம் பூண்டது.

புள்ளிசையின் தெள்ளிய திரட்சியும் புதுவெள்ளம் போன்ற அள்ளிசைப் புள்ளாய் குறையாத அமுதசுரபியாக, புத்தெண்ணங்களின் புரட்சியும், அவர் நடையில் அழகிய மயிலாட்டமும் கொண்டன.

கார்கால முகில் மூட்டத்தின் முழக்கமும் கொட்டின.

புரட்சிக் கவிஞரிடத்தில் கவிதை நடையின் வீச்சும், வீறும் முதன்மை பெற்றது. பெரியாரின் புத்தெண்ணங்களின் புயலாகவும், காட்டாறாகவும் பொழிந்தது - அவர் தமிழ் நடை.

தன்மான இயக்கத்தில் அறிஞர் அண்ணாவின் நடையைப் பின் பற்றியோர் பலர். அன்ன நடை நடக்கப் போய் உள்ள நடையும் இழந்தார்கள். தமிழ் பேராசிரியர்களில் எண்ணப் பொலிவு, நடைப் பொலிவு இரண்டிலும் திரு.வி.க., வளவன், பாட்டியனார்,. ம.இல. தங்கப்பா இவர்களைத்தான் குறிப்பிட முடியும். மற்றவர்கள் தொன்னூறு விழுக்காடு தன்னறிவற்ற சொத்தைகளே !

அறிஞர் அண்ணாவின் சமகாலத்தவருள் கா.ஸ்ரீ.ஸ்ரீ, வே.சாமிநாத சர்மா, ஜீவா, ஜெயகாந்தன் போன்றவர்களே தமிழின் வளமையில் ஆழங்கால் பட்டு, பைந்தமிழின் பன்முகங் களின் நளிநயத்தை செம்மாந்த சிந்தனைகளை எவ்வெவ்வா றெல்லாம் காட்ட முடியும் என்று காட்டியவர்கள்.

தன்மான இயக்கத்தில் அண்ணாவுக்குப் பிறகு, பாங்குடைய தமிழை, ஓங்கிய எண்ணங்களுடன் எழுதத் தெரிந்தவர் எனக்குத் தெரிந்தவரை தோழர் புலவர் என்.வி. கலைமணி ஒருவரே. கலைமணி நிலைமணியாய் நெஞ்சினில் உற்றதை நேர்பட உரைப்பதில் கிஞ்சித்தும் அஞ்சாதவர்.

அதற்கோர் நிகழ்வு, 1972, மே மாதம் 3 - 4-ஆம் நாளில் திருவள்ளுவரை ஒரு கிறித்துவர் என்று காட்ட நண்பர் புலவர் முனைவர் தெய்வநாயகம் அவர்கள் ஆறு நூல்களை எழுதி மாநாடு நடத்தினார். கருத்தில் வேறுபட்டும் மாறுபட்டு இருந்தாலும், அவரின் ஒரு சார்பு வேட்கையை மாய்க்க, அருந்துணையாகவும், பெருந்துணையாகவும் நின்று விளங் கியவர் நம் என்.வி. கலைமணி.

தமிழகத்தின் பல பேரறிஞர்களைக் கொண்டு, தெய்வ நாயகத்தின் நூல்களை மதிப்பிடச் செய்தார். வந்த பேரறிஞர் கள் அனைவரும் தெய்வநாயகத்தின் சமய வெறி, திருவள் ளுவருக்கு எந்தச் சாயமும் ஏற்றக்கூடாது என்பதில் முடிந்தது. தெய்வநாயகத்தின் கைவந்த கலைகள் அனைத்தையும் புறங்காணச் செய்த பெருமை புலவர் கலைமணிக்கே உண்டு.

“சமயக் கணக்கர் மதிவழி கூறாது தமிழ்ச் சிந்தனையால் உலகு தழுவிய ஒரு தமிழ்ப் பண்புடைச் சான்றோன் திருவள்ளுவச் செம்மல் என்பதை மெய்ப்பிக்கப் பன்மொழிப் புலவர் க. அப்பா துரையாரின் மதிற்மேல் பூனைக் கருத்துக்களையெல்லாம் எதிர்த்துக் கிளப்பிய புயல், கலைமணியின் கருத்தில் தெரித்தது, இன்றும் பட்டம் பகல் போல் கண்முன் நிற்கிறது.

ஒருவருக்கோ, ஒரு நாட்டுக்கோ, ஓர் இனத்துக்கோ, ஓர் எல்லைக்கோ உரியவர் அல்லர் திருவள்ளுவர். பூங்குன்றனின் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற ஓருலகச் சீர்மைக்குப் பேருள உணர்ச்சியை - உண்மையைத் தந்தவர் வள்ளுவர் என்பதை, பலரின் பண்புரைக்கும் உள்ளொளியாய், உயிரொளியாய் இருந்தவர் கலைமணி. அவரின் உள்ளத்தின் ஒளியும், ஒலியும் ‘அய்யன் திருவள்ளுவர் எனும் இந் நூலில் எங்கும் பளிங்கு போல் தெளிவுறக் காணலாம். புலவர் என்.வி.கலைமணியின் சொல் நோக்கும், பொருள் நோக்கும், நடைநோக்கும், தமிழ்த் தொடை நோக்கும் அருமை போக்குடையவை. அதனை இந்நூலிலே நுகரலாம்.

உட்கோட்டம் இல்லாத கருத்துகளுக்கேற்ற சொல்லோட்டம் கொண்டவர் கலைமணி. உரைநடையை யாப்புக்குள் அடக்கிக், கவிதை எழுதும் குழந்தைசாமிகள் இடையில், உரை நடைக் கூத்திலே பாட்டுணர்ச்சியின்அத்தனைப் பாங்கையும் ஓராயிரம்

*சிலம்பு, மேகலையின் ஒலியும் ஒளியும் ஊட்டும் இவர் நடையில், எப்பொருள் எடுத்தாலும், அப் பொருளின் முப்பரிமாணத்தையும், தப்பின்றிக் காட்டும் முப்பட்டை ஆடியின் அடவும், இவர் பண்ணிசை அய்யன் திருவள்ளுவர் மாலையில் வண்ணமிடும். சொல்வலை வேண்டு வனான புலவர் கலைமணியின் இந்த நல்ல நூலில், மெல்லிய இனிய மேவரு கருத்துச் சிறப்பின் சொல்லின்பத்தினை இனி நீங்கள் துய்க்கலாம்.*

அன்பன்,

*த.கோவேந்தன்.*

*24.4.99*



# எனக்குப் பொறாமையாக இருக்கிறது!

கவிஞர் வானி

கொண்டையா - ராஜூவும் -
கோபுலுவும்-
வரைந்த தெல்லாம்
வர்த்தகச் சந்தையில்
கிடைக்கும் - கவின்மிகு
கடைச் சித்திரங்கள்!

வி.ச. காண் டேகரும்
வ.ரா. வும் -
வரைந்த தெல்லாம்
வாசக சாலையில்
கிடைக்கும் - கருத்துமிகு
நடைச் சித்திரங்கள்!

ஆனால். ...
என் இனிய நண்பர்-
எழுத் தோவியர் -
என்.வி. கலைமணி!
எழில் கொஞ்ச வரைந்திருப்பது....
கடைச் சித்திரமுமல்ல,
நடைச் சித்திரமுமல்ல.

தன் -
நூல்வகை களையே
நால்வகைச் சேனையாய்க் கொண்டு....
தமிழர்களுக்காக - ஒரு
தங்கத் தலைவன் நடத்திய -
தர்ம யுத்தம் பற்றிய
படைச் சித்திரம்!

தென் பொதிகையில்

தோன்றி...
புலவர்கள்
நெய்தளித்த
'நூல்' புடவைகளை
உடுத்தி -
உலகெலாம்
உலா வந்த
பூந்தமிழ் அன்னை...

வேட்டியும்
சட்டையும்
மேல் துண்டும்
அணிந்து -

அழகுமிகு காஞ்சியில்
ஆண் மகனாய்
அவதரித்தாள்!
அந்நாள் வரை
அனைவர்க்கும்
அன்னையா யிருந்தவள்....

ஆடவனாய்ப் பிறந்ததால்...
அனைவர்க்கும்
'அண்ணா' ஆனாள்!

அண்ணாவாகப் பிறந்த
அருந்தமிழுக்கு
அஞ்சலி செய்வதால்....

இந்த நூல் -
'தமிழஞ்சலி'
எனும்
இடுகுறிப் பெயரை
ஏற்று இலங்குகிறது.

அடியேன் -
அறிஞர் பெருந்தகை
அண்ணாவால் ஆதரிக்கப் பெற்றவன்
என்
படவுலகப்

பிரவேசத்தின் போது -

'நல்லவன் வாழ்வா' னுக்காக
நான் எழுதிய பாட்டை
படித்துப்
பரவசப்பட்டு...

'உன்னுள்
ஒரு பொறியிருக்கிறது...'
என்று -
உளமாரச் சொல்லி
உள்ளிருந்த பொறியை
ஊதிக் கனல் வளர்த்த

உ
ய
ர்
ந்
த

மனித கோபுரம் - அந்த
மாமேதை!

அந்தக்
கோபுரத்திற்குக்
கும்பாபிஷேகம்
நடத்தியிருக்கிறார்
நண்பர் கலைமணி!

இந்த நூலை...
ஆசை ஆசையாக
வாசித் தேன்,
அனைத்து வரிகளும்
வண்ணத்தமிழ் பிலிற்றும்
வாசத் தேன்!
எத்தினை
உவமைகள்!
எத்துணை
உருவகங்கள்.
எத்துணை

சித்தாந்தங்கள்!
எத்துணை
வேதாந்தங்கள்!

தொட்ட இடங்கள் எல்லாம்
தத்துவப் பாதாகைகள் -
பட்டொளி வீசித் -
தகத்தகாயமாகப் பறக்கின்றன!

வரிக்கு வரி...
வரிக்குதிரை போல் -
தெள்ளு தமிழ்
துள்ளு நடை
போடுகிறது - நம்
நெஞ்ச வீதியில்
உலா வந்து -
நர்த்தனம்
ஆடுகிறது!

கடந்து
உள்ளிருப்பவனைக்

கடவுள்
என்கிறோம்.

இவரைக்
கடந்து
உள்ளிருப்பதால் -

இவருக்குக்
காஞ்சித் தலைவனே
கடவுள் ஆகிறார்.

அண்ணா என்னும் - அந்த
அன்பு தெய்வத்தை - இவர்
பண்ணார் தமிழில்
பூசிக்கும் போது -
வாசிக்கும்
என் நெஞ்சம் -
நிறைய இடங்களில்
நெகிழ்கிறது.

நெகிழ்ந்து
மகிழ்கிறது!

படிக்கப் படிக்க –
வார்த்தைகள்
இனிக் கின்றன,
விழிகள்
பனிக் கின்றன!

அண்ணாவை இவர்
காதலித் திருக்கிறார்,
அதன் காரணமாக – மனம்
பேதலித் திருக்கிறார்!

கட்சிகளைக் கடந்து
ஆதரித்திருக்கிறார்! – அண்ணா
மூதறிஞர் என்பதைப்
பல பக்கங்களில்
மூதரித் திருக்கிறார்!

கலைமணி
கைத்தட்டி அழைத்தால்
கைக் குழந்தை போல் – தமிழ்
கை கட்டி –
முன் வந்து நின்று – அவர்
மெய் கட்டி
மெல்லக் கொஞ்சுகிறது.

சிலர்
கவிதையை
உரை நடையாக
எழுதுங் காலத்தில் –
கலைமணி
உரை நடையைக்
கவிதையாக
வரைகிறார்!

எவரும்
படித்துப்
புலவ ராகலாம்

கவித்து வத்தைக்
கடவுளின்
கொண்டையாகப் பெற்றவன்தான் -
கவிஞனாக முடியும்!

புலவனாகவும் -
கவிஞனாகவும் -
மலர்ந்து நிற்பவர் ....
கலைமணி!

நிறையக்
கற்றிருந்தும்-
நிறை குடமாக
நிற்பதா லேயே -
கலைமணியை
நான்
காதலிக்கிறேன்!

இந்த நூல் -
நூல் நிலையங்களில் மட்டும்
கால் பரப்பப்
படைத்தது அல்ல -

நம் -
நெஞ்ச அலமாரியில்
நெடுங் காலம் -
வைத்திருந்து ...

அவ்வப்போது
வாசித்துப் பார்க்க வேண்டிய
வண்ணக் காவியம்!

இந்த நூலைப்
படித்து விட்டு
எனக்குச்
சொல்லத் தோன்றுவது
இதுதான்.

33 முதல் தெரு, கற்பகம் அவின்யூ,
சென்னை - 28

அன்பன்
வாலி



# செந்தமிழ் சந்தனாடவி

*பேராசிரியர்*

***கே.எஸ். சிவராமலிங்கம், எம்.ஏ.***

"அய்யன் திருவள்ளுவர்" என்று தலைப்பிட்டு நாற்பத்தைந் தாண்டு கால அருமை நண்பர், திரு. புலவர் என்.வி. கலைமணி எம்.ஏ அவர்கள் படைத்துத் தந்துள்ள இந்தப் பசுந்தமிழ் நூல் அவரது கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது.

அவருடைய கட்டுரைகளின் தமிழ் நடை என்றும் மாறா எழிலோடுதான் விளங்குகிறது.. கட்டுரையின் கருப் பொருட்கள் பல்வேறு தலைப்புகளில் கவினுற விளக்கம் பெற்றுள்ளன.

திருப்புகழ் இசை வகுப்பில் ஒன்றாகப் பயின்றதன் அடிப் படையில், இந்நூலுக்கு அணிந்துரை எழுதும் உரிமை இயல் பாகவே உண்டு. பேரறிஞர் அண்ணாவின் கம்பரசத்தைப் பருகி அதன்வழி திருப்புகழ் ரசம் வடித்துத் தந்தவர் திரு. கலைமணி.

அதே போல் 'ஆரிய மாயை' நூலை ஆழ்ந்து கற்று 'வஞ்சக வலை' என்ற நூலை அந்தக் காலத்திலேயே வனைந்த பெருமைக்குரியவர்.

ஐம்பதுகளில் தி. மு. க.வின் வளர்ச்சிக்கு 'திராவிடன்' மூலமாக உரமிட்டவர் கலைஞர். அந்தக் காலத்தில் தி.மு.க.வின் ஐம்பெரும் தூண்களில் ஒருவராகிய என்.வி. நடராசன் நடத்திய வார இதழ் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது.

ஆக, திராவிட இயக்கப் பாசறையின் தேன் தமிழ்க் கவிஞர் இவர் என்பதனாலோ என்னவோ இவருக்குத் கலைமணி என்னும் பெயர் பொருந்துவதாயிற்று.

நண்பர் கலைமணியின் சொற்சுவையும், பொருட்சுவையும் கலந்த நற்றமிழ் என்னும் கற்கண்டாக இனிக்கும் இயல்பு டையது. கற்கண்டை எப்பக்கம் சுவைத்தாலும் எவ்வகையில்

உண்டாலும் இனிப்பு மாறாதிருப்பது போல, இவர் எழுதத் தொடங்கிய நாள் தொடங்கி இப்பொழுது வெளிவரும் இந்நூல் வரை என்றும் குன்றா இளமையும் எழிலும் இனிமையும் நிறைந்த தமிழ்வளம் பாய்ந்து பெருகி பரவி வருதல் கண்டு உவந்துள் ளேன்.

தலைப்புக்குரிய தகைசான்ற கருத்துச் செறிவும் சொல் லாட்சித் திறனும் படைத்துப் பரிமாறும் பக்குவமும் இவருக்கு வாய்த்த நற்பேறுகள் என்று துணிந்து கூறலாம். நல்லவகை பயின்று, நாள்தோறும் நற்றமிழ்த் தொண்டு புரிந்து வரும் இவர் தமிழ் உலகில் இன்னும் உயரிய, உரிய இடம் பெறாமைக்கு என்ன காரணம் என்பது சிந்திக்க வேண்டும்.

வண்ணத் தமிழ் பூஞ்சோலையாகவும், உண்ண உண்ண இனிக்கும் தமிழ்க் கனிகளையுடைய பழந்தோப்பாகவும் - குற்றால மலையின் கொட்டும் நீர். வீழ்ச்சியாகவும் - செந் தமிழ்க்காடு முழுதும் மனங்கமழும் சந்தன அடவியாகவும் - அலைக் கொழித்து, அருந்தமிழ் முத்துக்களை வாரி இறைக்கும் அற்புதக் கடலாகவும் - இந்நூல் திகழ்கின்றது என்றால் அது மிகையில்லை.

பொதுமறை அருளிய "அய்யன் திருவள்ளுவர்" பற்றிய முதற் கட்டுரை நல்ல தொடக்கம். கிறிஸ்தவர்கள் நடத்திய திருக்குறள் ஆய்வு மாநாட்டில் இவர் ஆற்றியுள்ள வரவேற்புரை இவர்தம் ஆழ்ந்த ஆய்வுக்கும் அஞ்சா நெஞ்சுக்கும் சான்றாக விளங்கு கின்றது.

'புரட்சிக் கவிஞர்' பாவேந்தர் பாரதிதாசனார் பற்றி இரண்டு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் 'பாரதிதாசன் பேசுகிறேன்' என்ற கட்டுரை பாவேந்தரின் பாடல் தொடர் களைக் கொண்டே நன்கு வேயப்பட்டுள்ளது

'உலக உத்தமர்' காந்தியடிகளும், அமெரிக்க காந்தி மார்ட்டின் லூதர் கிங் அவர்களும், அமரகவி பாரதியாரும், இவர் எழுத்தில் ஏற்றமான தோற்றம் காட்டுகிறார்கள்.

கவியரசு கண்ணதாசன் பற்றி இடம் பெற்றுள்ள கட்டுரை தரமான ஆய்வுரை. ஐந்து இரவுகள் இமை மூடாதிருந்து இவர் எழுப்பியுள்ள கற்பனைச் சிற்பக் கோபுரங்கள் கன்னித் தமிழுக்கும் நமக்கும் நல்விருந்தாகின்றன.

*எந்தப் பொருளைப் பற்றியும் இனிது எடுத்து இயம்ப வல்ல இவர்தம் எழுத்தின் மாட்சிக்கு எடுத்துக்காட்டாக இவர்தம் மதிப்புரை, பதிப்புரை, கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.*

*பொற்குடத்திற்குப் பொட்டிட்டது போல் இந்நூலில் இவர்தம் கவிதையாற்றலுக்குச் சான்று கூறும் இரண்டு தலைப்புகளும் எழிலூட்டுகினறன.*

*ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பெருமக்களும், அருந்தமிழ்க் கவிஞர்களும் அவ்வப்போது தந்துள்ள மதிப்புரைகள் இவர்தம் மாட்சிக்கு சாட்சி கூறும் வகையில் இந்நூலில் காட்சி தருகின்றன.*

*சொல் புதிது, பொருள் புதிது, கற்பனை புதிது, கலை நலம் புதிது என்று சொல்லும் வகையில் நூல் முழுதும் செம்மாதுளையை உரித்துப் பார்ப்பதுபோல் கருத்துச் செம் முத்துக்கள் கைக்குக் கிடைத்துள்ளன. சுவைத்து மகிழ்வோம்! நண்பர் மேலும் வாழ்வும் வளமும் பெற வாழ்த்துகிறேன்.*

*பேராசிரியர்*

***கே.எஸ். சிவராமலிங்கம்,***



# அய்யனுக்கு அஞ்சலி

கவிதை, காவியம், அறிவு, ஆய்வு, வாழ்க்கை, வரலாறு, புதினம், போதனை, என்று எத்துறையை அடிதடமாகக் கொண்ட நூலாக இருப்பினும், அதனைப் படிக்கத் தொடங்குகின்றபோது, அதில் உள்ள இன்றியமையாத வரிகளை எழுதுகோலால் கோடிட்டுச் செல்வது சிலர் வழக்கம்.

ஆனால், அன்புச் சகோதரர் என்.வி. கலைமணி அவர்களின் தமிழஞ்சலி என்ற இந்த நூல், அந்த மரபிற்கு முற்றிலும் மாறுபட்டதாக விளங்குகின்றது.

இந்த நூலில் எந்த இடத்தில் கோடு போடுவது, எதை விடுவது என்று நோக்கினால், முதல் பக்கம் தொடங்கி, முற்றும் என்று நிறைவு பெறுகின்ற பக்கம் வரை கோடு போட்டுக் கொண்டே போக வேண்டிய, அதி அற்புதமான, ஒரு வகை விசித்திரமான உள்ளடக்கத்தை உடையதாகவே இது திகழ்கிறது.

இவர் எழுதுபொருளாகக் கொண்டது அறிஞர் அண்ணா எனும் இமயம் என்றால், இவர் பக்கத்திற்குப் பக்கம் பல சிகரங்களை அல்லவா தொட்டுச் செல்கிறார்.

விந்தையான வித்தகமான, சத்தியமான, சந்தம் மிகுந்த பல நடைகளை நான் பார்த்திருக்கிறேன். இவர் எந்த நடைக்கும் அப்பாற்பட்ட சொந்த நடை உடைய சூட்சுமக்காரராக விளங்குகிறார்.

இவருடைய கூறிய சொற்களைப் பார்க்கின்ற பொழுது ராமனுடைய வில்லிலிருந்து புறப்படும் அம்புகளே நினைவிற்கு வருகின்றன.

அதோடு, சகோதரர் கலைமணியை நினைத்தால், கம்பர் பெருமான்தான் நினைவிற்கு வருகிறார்.

*அவர் ஆயிரம் ஆயிரம் பாடல்களைத் தந்து எண்ணற்ற கதா பாத்திரங்களைக் காட்டினார் என்றாலும், அவருடைய காவியத்தில் நீக்கமற நிறைந்திருப்பவர் ராமபிரான் மட்டுமே! அதனால்தான் அது ராம காவியமாக விளங்குகிறது.*

*கலைமணி அவர்களும் நூலில் பல உத்திகளைக் கையாளு கிறார்.*

*அதில், பல சக்திகளையும் - சித்திகளையும் காண முடிகிறது. என்றாலும், நீக்கமற நிறைந்திருப்பவர் அறிஞர் அண்ணா மட்டுமே.*

*தமிழ் வசன நடைக்குப் புதியதொரு வாழ்வைத் தந்தவர் அண்ணா.*

*அவரைப் பற்றிய இவருடைய நூல், ஒரு புதியவராக, இன்னும் சொல்லப் போனால், தமிழ் உலகிற்கு ஒரு வரமாகத் திகழ்கிறது.*

*இவர் அஞ்சலிக்கு எடுத்துக்கொண்ட அத்துணை மலர்களும் காயா மலர்கள், மண மலர்கள், தேயா மணிகள், தெவிட்டா நறுங்கனிகள்.*

*இந்த நூலில் புலவர் என்.வி. கலைமணி ஓர் எழுத்தாளனாக, கட்டுரையாளனாக, கதாசிரியனாக, கவிஞனாக, ஞானாசிரிய னாக, வரலாற்று வல்லுநனாக, ஆன்மிகவாதியாக, நாத்திகனாக, சித்தனாக, இன்னும் சொல்லுவதற்கு அரிய பல அவதாரங்களை எடுத்துள்ளார்.*

*இவற்றோடு, அவர் ஒரு ரச வாதியாகவும் திகழ்கிறார். இந்த நூலில், பலர் கவிதைகளை வசமாக்கிவிடும் வல்லமையாளர் களாக உலா வரும்போது, இவர் வசனத்தைக் கவிதையாக்கித் தந்துள்ளார்.*

*அன்புச் சகோதரர் கலைமணி அவர்கள், என்னை நோக்கி, இந்நூலுக்கு ஒரு கருத்துரை தாருங்கள் என்றார்.*

*இந்த ஒப்பரிய நூலுக்கு நான் கருத்துரை தருவதை விட அய்யனுக்கு அஞ்சலி செலுத்துவதே பொருத்தம் எனக் கருதுகிறேன்,*

*வணக்கம்*

*அன்பன்,*

*புலவர் நாகசண்முகம்*





# அய்யன் திருவள்ளுவர்

எழுத்தின் வடிவத்தையும் - எழுத்தின் ஒலி வடிவத்தையும் தமிழ்ச் சான்றோர் உருவாக்கியபோது, எண்ணற்ற மேதைகள் அதற்காக உழைத்தார்கள்.

ஞாலம், ஞானத் திரட்சிக்காகக் கையேந்தி நிற்கும் காலத்தில், கோலத் தமிழ் எழுத்து ஒலியக் கூட்டங்களை அவர்கள் உருவாக்கினார்கள்.

ஓங்காரத் தமிழ் மொழியின் பயனை ஓர்ந்து, ஆங்கார ஞாயிற்றின் எரி நெருப்பை அலட்சியப் படுத்தி, பாங்கான தங்களின் பண்புக்கு வாழ்த்துக் கூறியவர்கள் - அந்தத் தமிழ் அறிஞர்கள்.

தீங்கு உளம் நடுங்கும் தீந்தமிழ் மனமுடைய அவர்கள், பரம்பரை பரம்பரையாகத் தமிழ் இலக்கிய, இலக்கணங்களை - ஓவியமாய், காவியமாய், ஜீவியமாய் இயற்றி மறைந்தார்கள்.

அழுதுகொண்டே பிறக்கின்ற மனிதப் பிஞ்சுகள் , சிரித்துக் கொண்டே சாகும்வரை, வாழ்க்கைக்குரிய மனித நெறித் தத்துவங்களை,'அகம், புறம்' என்று தமிழிலே அவர்கள் வடித்துத் தந்தார்கள்.

காலம், அவர்களைக் களவாடிச் சென்றாலும், அந்தக் கன்னித் தமிழ்ச் சிந்தனையாளர்கள் தேடித் தந்த சிந்தனைச் செல்வங்கள் இன்றும் நம்மிடையே நடமாடுகின்றன.

குடல் விழுங்கும் உணவைப் போல - கபாடபுரத்துப் பைந் தமிழ்க் கருவூலங்களைக் கடல் விழுங்கிய போதும், கண்டும் கலங்காத அறிவேறுகளாக - அவர்கள் திகழ்ந்தார்கள்.

உலகமே சிந்திக்கத் திராணியற்று, காலச் சிதைவுக்கு ஆட்

பட்டுக் கலங்கிக் கிடந்த நேரத்தில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற ஒரே உலகச் சமுதாயத் தத்துவத்தை தமிழ்ப் பண்பாட்டின் வாயிலாக, கொஞ்சு தமிழால் உலகுக்கு விளக்கிக் கொண்டிருந்த இனம் - தமிழ் இனம்.

காலக் கரையான்களால் அரிக்கப்படாத அந்தத் தமிழ் இனத்திலேதான் பரம்பரை பரம்பரையாகத் தமிழ் மேதைகள் தோன்றித், தெள்ளு தமிழை வளர்ப்பதற்காகச் சீரிய தொண்டாற்றி வந்தனர்.

நெடுங்குன்றம் நிமிர்ந்து நின்ற உச்சிக்கு மேல் நின்ற தமிழ் நிலவாய், ஞானச் செந்தாமரை எழிலையும் தோற்கடிக்கும் திருக்குறள் தோற்றமாய், தமிழ்ப் பண்பாட்டிற்குத் தடம் புரளா அறிவூட்டும் சிந்தனையாளராய் நிலைத்து, அவர்களில் ஒருவராக இன்றும் உயிராக நிற்பவர்தான் அய்யன் திருவள்ளுவர் பெருமான்.

வாழ்க்கை வளையத்தில் குறுக்கும் நெடுக்குமாக வெட்டுகின்ற துன்பக் கோடுகள், அழிக்கப்பட்டாக வேண்டும் என்பது திருவள்ளுவப் பெருமானின் சீரிய சிந்தனை.

அதற்காகவே, இரவு, பகலென்று பாராது, அவர் விழிப்போடு, திருவள்ளுவத்தை எழுத ஆரம்பித்தார்.

மனிதன் வாய் திறந்த உடனேயே வந்த ஒலி, முதிராத இளம் பிஞ்சின் மழலையாகத்தான் இருக்கமுடியும்!

அந்த ஒலி, அவன் வாழ்க்கையை நல்லிடத்துக்கு அழைத்துச் சென்றிருக்க வேண்டும்.

காரணத்தோடும் - காரணமில்லாமலும், கண்ணீர்க் கடலில் - கவலைக் கணவாயில் - மனிதன் விழுந்து, விழுந்து மீண்டும் மீண்டும் எழத் தடுமாறித் திணறிக் கொண்டே இருந்தான்.

கண்கண்ட இடங்களில் எல்லாம் காட்சிகளை கையெடுத்து அவன் கும்பிட்ட நேரம், இதுவரையில் அளந்தறியாத காலம்.

தொழுதலும், வணங்கலும் மனித வாழ்க்கையில் நீண்ட பெருங்கதையாக - முடிவே காணப்படாத தொடர் கதையாக வளர்ந்து வருகிறது.

மனித வாழ்க்கையின் மணி மகுடத்தைத் துன்பம் தனது

காலால் இடறி விடுகின்ற நேரத்தில், கூட்டமான கடவுள்களும் - குறிப்பிட்ட இடங்களிலே காணப்படுகின்ற திருக்கோயில் களும், காலத்தைப் பார்த்துக் கொண்டேதான் இருந்தன.

குலைந்தான்! அலைந்தான்! குமுறினான்! பதறினான்! நடு நடுங்கினான்! மீண்டும் எழுந்திருப்போமா, நிலத் துரும்பைப் பிடித்து நிற்போமா என்ற அச்சம் - மனிதனுக்கு!

விழுந்த இடம் மரணமா? அல்லது உலகத்தின் துன்பமா? என்ற ஐயம் அவனுக்கு எழுந்து கொண்டே இருந்தது.

இந்த வினாக்களுக்கு அன்று வரை தகுந்த பதில் கிடைக் காமையால், மனித சமுதாயம் விடைதேடி அலைந்து கொண்டே இருந்தது.

அப்போது, அய்யன் திருவள்ளுவர் நெசவுத் தொழிலைச் செய்து கொண்டே, வாழ்க்கையையும் நெய்ய ஆரம்பித்தார்.

மனித வாழ்க்கை, தறியின் பாவைவிட - மிக வேகமாக ஓடுவதைக் கண்டார்.

குளிருக்குப் போர்த்தப்படுகின்ற துணியாக - அது நெய்யப் பட்டால் பரவாயில்லை.

பிணத்தின் மீது மூடப்படுகின்ற சல்லாத் துணியாக - அது மாறி விட்டதை உணர்ந்தார்.

அதனால்தான், அவர் வாழ்க்கையை நெய்ய ஆரம்பித்தார். இல்லையென்றால் - உண்மையைப் பெய்ய ஆரம்பித்தார் என்று காலம் கணிக்கின்றது.

முதன் முதலாக அய்யன் திருவள்ளுவர் எழுத முற்பட்டபோது, அவருடைய எழுத்தின் கழுத்தின் மேல், மதத்தின் கூரிய வாள் விழ ஆரம்பித்தது.

அதை மீறித்தான் அவர் சீறி எழுந்தார்! மதத்தின் மாயங்கள், அற்புதங்கள், அவர் முன்பு எரிபட்ட மிளகாயாக மாறின.

அன்றைய சமுதாய வளர்ச்சி, சூழ்நிலைகட்கு ஏற்ப அந்த மிளகாய், நெடியை எழுப்பி, மூச்சைத் திணறடித்ததேயன்றி, வள்ளுவர் பெருமான் நெஞ்சுரத்தின் முன்பு நீண்ட நேரம் நிற்க முடியாப் புகையென ஓடி மறைந்தது!

அவர் காலத்தில், கிறிஸ்துவம், என்ற புல், பூண்டுகள் தோன்ற - ஏசு நாதர் என்ற மழையே பெய்யவில்லை.

கால வளர்ச்சியின் பரிணாமம் புரியாத சில மத வெறியர்கள், இன்றையத் திருவள்ளுவராண்டுக் கணக்கை விளக்கொளியாக ஏந்திக் கொண்டு - 'திருவள்ளுவர் கிறித்துவரா?' என்று கேட்டு, தமது மத அரிப்புக்கு இதமாக சொறிந்து கொள்கிறார்கள்.

காலொடிந்து போன அந்த நொண்டிகள், வணிகன் ஏலேலசிங்கனையும், பாதிரி தோமாசையும் இரு மரக்கட்டை களைக் கால்களாக்கிக் கொண்டு, மதச் சடுகுடு ஆடிப் பார்க்கிறார்கள்.

காலக் காற்றின் முன்பு ஆலாய் பறக்கும் அந்தக் கருத்துக்கு 'அமெரிக்கப் பணம்' ஆலவட்டம் வீசுகிறது.

தமிழை இலக்கண வழுவறக் கற்று, திருக்குறளை எழுத்தெண்ணி ஆழ்ந்து படித்து, அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ஜி.யு.போப் என்ற மேனாட்டுத் தமிழ் மாணவர்!

ஆங்கிலத்தில், திருக்குறள்போல் ஒரு நூல் இல்லையே, உலகப் புலவர்கள் யாரும் இன்றுவரை இப்படியொரு நூல் இயற்றிட முயற்சி கூடச் செய்யவில்லையே என்பதற்காக, திரு. போப் அவர்கள், அழுக்காற்றில் நீந்துகின்ற அரவமாக மாற வில்லை.

திரு.போப், கிறிதுவக் கூட்டுக்குள் அய்யன் திருவள்ளுவரை அடைத்துக் கோயில் கட்ட விரும்பவில்லை.

காரணம், அவர் தேர்ந்த சிந்தனையாளர்! வழுவிலா ஆய்வாளர்! திறன் மிக்க எழுத்தாளர்!

நஞ்சுண்டு சேய் காக்கும் தாயைப் போல, கடும் இன்னல் களையுண்டு உலகத் தலைமுறைகளுக்கு உயிரறிவு காக்க, பொய்யகற்றி, புதுமையேற்றி, வையகமே வாழ்த்தும் அறிவுச் செல்வங்களை அவர் வழங்கினார்.

அத்தகைய மேதைகூட, அய்யன் திருவள்ளுவரைக் கிறித்துவர் தான் என்று, உறுதியை அறுதியிட்டுக் இறுதியாகக் கூறவில்லை.

"அடக்கம், அறம், பாவ மன்னிப்பு என்பன கிறிஸ்துவ

இலட்சியங்களாக இருந்தும்கூட, அவற்றைத் தத்துவமேதை அரிஸ்டோட்டில் தமது நூலிலே குறிப்பிடவில்லை.

தமிழ் அற நெறியாளரான அய்யன் திருவள்ளுவர், இந்த மூன்றையும் மிக வலிமையாக மக்கள் மனதில் பதிய வைத்துள்ளர்.

அவருடைய அருமையான செய்யுள்களுக்கு - இவை தாம், ஆய்வுப் பொருட்களாக உள்ளன. எனவே, நாம் இந்தத் தமிழ்க் கவிஞரை ஒரு கிறித்துவன் என்றே அழைக்கலாம்.

-அருட்டிரு டாக்டர் ஜி.யு .போப்.

**"Humility, Charity and Forgiveness of Injuries, being Christian qualities are not described by Aristotile... Now these three are forcibly Inculcated by the Tamil Moralist! These are the themes of his finest verses. So far, then we may call Tamil Poet a Christian"**

**-Rev. Dr.G.U.POPE**

"கிறித்துவத்தின் தேன் சிந்தும் மலர்களெனக் கருதப்பட்ட அந்த மூன்று இலட்சியங்களையும், பல்கலை வித்தக மேதை அரிஸ்டோட்டில் என்பவராலேயே அவரது நூல்களில் குறிப்பிடப்படவில்லை.

ஆனால், ஒரு தமிழ்க் கவிஞரால் அருமையாகப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளதால், நாம் அவரை ஒரு கிறித்துவன் என்றே அழைக்கலாம்" என்றாரே தவிர, அய்யன் திருவள்ளுவர் ஒரு கிறிஸ்தவர்தான் என்று வலியுறுத்திக் கூறவில்லை.

திரு. டாக்டர் போப் அவர்கள், கிறித்துவத் திருமறைக் காவலராக இருந்ததனால்தான், May Call என்ற வார்த்தையை ஆண்டுள்ளார்.

ஒரு மத எல்லையின் காவலராகக் கருதாமல் - உலக மக்கள் மத எல்லையின் பொறுப்பாளராகத் தன்னை உயர்த்திக் கொண்டிருக்கிறார்!

அறிவை அலைக் கழித்துவிட்டு, பொருளை நாடிச் செல்லும் கிறித்துவ மதவெறியர்கள், அமைதியாக வாழும் தமிழ் மக்களிடத்திலே மதச் சர்ச்சைகளை எழுப்பி, கலங்கிய நீரிலே கயலைத் தேடி ஆதாயம் பெறப் பார்க்கிறார்கள்.

புனிதத்தினால் அச்சடிக்கப்பட்ட பைபிள் வாசகங்கள், புரையோடிய ஒரு சமுதாயத்திற்கு மருந்தாகப் பயன்படுகிறது என்பது உண்மை!

அந்த மருந்திலே, நஞ்சைக் கலப்பவர்களை எப்படி மக்கள் மன்னிப்பார்கள்.

அவர்களின் தீவிர மதவாத வெறி, நாட்டிலே மதப் பிளவு மேடு பள்ளங்களை மீண்டும் உருவாக்காதா?

அய்யன் திருவள்ளுவர் நூல் எழுதத் தொடங்கியபோது, கிறித்துவம், இசுலாம், சீக்கியம் என்ற மதங்களின் கர்த்தாக்கள், அவரவர் தாய் வயிற்றிலே சூல் பெறாத காலம்!

"யூதம், கன்பூசியம், பார்சியம் என்ற மதங்கள் திருவள்ளுவர் காலத்திற்கு முன்பே பிறந்தவை. அவை தமிழ் நாட்டிற்குள் அடியெடுத்து வைக்காத நேரம் – அதாவது கி.மு. காலம்.

இன்று நம்மிடையே ஆல் போல தழைத்துள்ள சைவம் வைணவ சமயங்கள், மிகப் பழமை வாய்ந்தனவே ஆயினும், இப்போதுள்ள நிலையில் அய்யன் திருவள்ளுவர் காலத்தில் சிறிதும் இருந்தில.

அய்யன் திருவள்ளுவருக்குப் பின்னரே, நாயன்மார்களும் – ஆழ்வார்களும் தோன்றி, இந்நாளில் நிலவும் நிலையிற், சைவ – வைணவ சமையங்களைப் பல்லாற்றானும் பரப்பி வளர்த் தருளினர்.

அய்யன் திருவள்ளுவர் காலத்தில், உலகாயுதம், வைதிகம், சமணம், பௌத்தம் எனும் சமயங்கள் மட்டுமே, தமிழகத்தில் பரவியிருந்தன எனத் தெரிகிறது"

புலவர் ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
– 'திருவள்ளுவர் உடன்படாத கொள்கைகள் சில"
(திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு மலர்)

எனவே, அய்யன் திருவள்ளுவர் நூல் எழுத முற்பட்டபோது, உலக மதங்களின் பரிணாம வளர்ச்சி இது என்றால், "திருவள்ளு வர் கிறித்துவரா?" என்று கேட்பது மதக் கிறுக்கே தவிர, அறிவுச் செருக்கென்று எப்படி ஏற்பர் அறிஞர்!

அவர் காலத்தில் இருந்த மதவாதிகளின் கூரிய வாள், அய்யன் திருவள்ளுவரது எழுத்தின் மீது விழ ஆரம்பித்தபோது,

தமிழுக்குள்ள பேராண்மை அவருக்குப் பெரிதும் பயன்பட்டது.

அதனால்தான், எல்லாச் சமயங்களும் - மக்களும் ஒப்பும் வகையில் - அவரால், திருக்குறள் என்ற பொதுமறையை எழுத முடிந்தது. திருக்குறளின் ஒவ்வொரு எழுத்துகளிலும் இருக்கின்ற வீரம், அவரை வாழ்க்கைக் களத்தின் போர் வீரனாகவே மாற்றியிருக்கின்றது.

இல்லாவிட்டால், இத்தனை மதங்களையும் எதிர்த்து - அதே நேரத்தில் அவர்கள் அனைவரும் உடன் படத் தக்க வகையில் - ஒரு பொதுமறையை நூலாக எழுதியிருக்க முடியுமா?

மனித வாழ்க்கையெனும் களத்திலே, ஆசாபாசங்கள் என்ற எதிரிகளை அய்யன் திருவள்ளுவர் வினாடிக்கு வினாடி சந்தித்தார்.

ஆழியில் பிசைந்து வைக்கப்பட்ட மண், குயவன் கையால் முழுமை பெறுவதைப் போல, மனிதனுடைய உணர்ச்சிகள் - அவர் எழுதிய தத்துவங்களுக்கு வளைந்து கொடுக்க ஆரம்பித்தன.

அய்யன் திருவள்ளுவரிடமிருந்த பேரறிவு, வானத்தின் வெட்ட வெளியிலே இருந்து அவருக்குப் பரிசாக அளிக்கப் பட்டதோ, அல்லது தேவதூதன் ஒருவனாலே ஒளியாகக் கருவில் திணிக்கப் பட்டதோ அல்ல !

மதங்களின் அற்புதங்களால் - மனித வயிற்றில் புகுந்த வரலாறுகள், அதை - அப்படியே மக்கள் நம்ப வேண்டும் என்ற மதக் கட்டுப்பாடுகள் - அய்யன் திருவள்ளுவர் பெருமானுக்கு அப்போது இல்லை - அதனால், இப்போதும் - எப்போதும் - இல்லை.

உதிரச் சகதியில், நரம்புப் பந்தரின் கீழ் சூலாகி, கூன் விழுந்த உடலோடு சுருக்கமாகப் பிறந்த ஒரு சாதாரண மனிதர் அவர்! கூன் என்றாலே அறிவுதானே!

அய்யன் திருவள்ளுவருக்குக் கல்வி அறிவைப் புகட்ட, அவரது நாவை நோக்கி எந்தச் சூலமும் வந்ததில்லை.

ஓயாத சிந்தனை ! ஓயாத எண்ணச் சூழல்கள்! இவற்றினிடையே சிக்கியவர், 'காலத்தைப் படைப்பவனும் - காலத்

தால் படைக்கப்பட்டவனும் கவிஞன்' என்ற உண்மையை உறுதிப்படுத்தியவர்!

மக்களிடையே மண்டிக் கிடந்த மனப் போராட்டங்களை, வாழ்க்கைச் சிக்கல்களை வேரறுக்க, ஞான ஞாயிறாய் வளரலானார்.

சாயாத தமிழ்ச் சமுதாயம் சாய்ந்து விடக்கூடாதே, தன்மானத்துடன் அது தனது பண்பாட்டினை ஓம்பி, தரணிக்கு முன் தலை நிமிர்ந்து வாழவேண்டுமே, என்பதற்காக அவர் பெரு முயற்சியில் ஈடுபட்டவர்! அவரது எழுத்துத் துறைக்கு அதுதான் அறிவு மூலம்.

தமிழுக்காக உழைக்க வந்த இடைக்காலக் கவிஞர்களைப் போல, விதி என்ற இரண்டு எழுத்துக்களோடு தனது வாதத்தை நிறுத்திக் கொள்ளவில்லை, அய்யன் திருவள்ளுவர்.

குறள் என்ற மூன்றெழுத்துக்களால் தனது வாதத்தை விரிவு படுத்திக் கொண்டவர்! வியப்பானது கூட அல்ல - இது!

தமிழ் என்ற அவரது தாய் மொழி - மூன்று எழுத்தாலானது. அதன் அடிப்படையிலேதான், முதற் குறளை 'அ'என்ற உயிர் எழுத்தில் துவங்கி, 1330-வது குறளை - 'ன்' என்ற மெய் எழுத்திலே முடித்தார்.

அவரது குறளுக்கு அடிப்படை உணர்ச்சிகளை வாரி வழங்கியது - தொட்டிலிலே சிரிக்கும் மழலையின் குழி விழுந்த கன்னம் முதல் - உரனெனும் தோட்டியான் வரையிலாகும்.

உவமைக்கு அடங்குகின்ற மனித இனத்திலேயிருந்து, உவமைக்கு அடங்காத ஏதோ ஒன்றுவரை - உணர்ச்சிகளை வாரி வாரி வழங்க ஆரம்பித்தன - அவருக்கு !

கொந்தளிக்கும் கடல்!
வெடிக்கின்ற நிலம்!
வீசுகின்ற புயல்!
நிமிர்ந்த நெடுங்குன்றம்!
நிமிராத வயற் கதிர்கள்!
ஓடுகின்ற மேகங்கள்!

ஓடாமல் நிற்கின்ற அடிவானம்!

காதலுக்கு ஊஞ்சலாட்டும் தென்றல்!

இவை கவிஞன் ஒருவனது சிந்தனைகளை வளரவைக்கும் ஆசான்களாகும்!

ஆனால், அவை அய்யன் திருவள்ளுவனாருக்கு ஆசான்களாக மட்டுமல்ல, அறிவின் ஆணி வேர்களாகவே அமைந்து விட்டன!

இயற்கை தரும் இந்தத் தத்துவங்களை விட்டுச் சிறிது மாறி இருந்தால், அவர் கோயில்களிலே உள்ள சிற்பங்களின் பக்கத்திலே நின்று கொண்டு பதிகங்களைப் பாடியிருப்பார்!

அவரைச் சுற்றிச் சுற்றி வளையம் போட்டது மனிதனுடைய வாழ்க்கையே தவிர, சொர்க்கமும் - நரகமும் அல்ல! புண்ணியமும் - பாவமுமல்ல ! நல்வினையும் - தீவினையும்தான்.

அய்யன் திருவள்ளுவரைத் தட்டிக் கொடுத்து எழுது என்று கூறியது, அவரது நண்பர்களும், வாழ்ந்த ஊரும் - சுற்றுச் சார்பான சூழ்நிலைகளும், வாழ்க்கைத் துணைவியுமாகும்.

தேனைச் சேகரிக்க வண்டுகள் நெடுந்தூரம் ஓடுவனபோல, ஒரு மனிதன் உண்மையைச் சேகரிக்கவும் மக்கட் சமுதாயத்தில் ஓடி அலைய வேண்டி இருக்கிறது!

மனோ வேகத்தை மட்டும் சற்று அதிகமாகவே ஓட்ட ஆரம்பித்தால் அதை மிக மிக விரைவு படுத்தினால், நிலவைக் குத்தி, விண்மீனை ஊடுருவி, பரிதியைத் துளைத்து அண்டத்தில் போய் தைத்து விடும்!

கண்கள், முகத்திலே மட்டுமல்லை - அகத்திலேயும் உண்டு! அதைத் தியானம் என்று வைதீகம் கூறினால், உள்ளொளி என்று அய்யன் திருவள்ளுவர் வரம்பு கட்டுகிறார்.

தமிழ்ச் சமுதாயத்தில் இருக்க வேண்டிய இலட்சணங்கள் எப்போதாவது ஒரு முறை குறைந்துவிடுமானால், அப்போதே நாம் அழிந்து விடுவோம் என்ற அச்சம் அவரிடம் அதிகரித்திருந்தது!

அவை அழியக் கூடாது என்று அவர் கருதியதால்தான், தமிழ்ச் சமுதாயத்தை அழிக்காமல் இருக்கக் கூடிய கற்பூரத்தைத் தயாரித்தார்! அக் கற்பூரம் என்ன தெரியுமா?

அனைத்து நாடுகளுக்கும் பொதுமறையாகுந் தன்மைத்தென, தனித் தமிழ் மறையாக, நல்லார் பலராலும் நவின்றும், நவில்வித்தும் வருகின்ற உலகறி உண்மை நூல்! ஒழுக்க நூல், ஒழுகலாறுக்குரிய இலக்கண மறை! இதற்கேற்ப வாழ்வாங்கு வாழ்ந்துறைவதே சமுதாயமாகும்!

கொடுமையான புயலடிக்கின்ற நேரத்தில், கணவனோடு கோபித்துக் கொண்ட பெண்ணொருத்தி, குழந்தைகளை அழைத்துக்கொண்டு இருட்டிலே தாய்வீடு செல்வாளானால், அவளைக் காப்பாற்றும் பொறுப்பு இயற்கையிடமே விடப் படுகிறது அல்லவா?

அதனைப் போல, அறிவின்மீது கோபப்பட்டுத் தமிழ்ச் சமுதாயம் தனது மக்களை இருட்டிலே அழைத்துச் செல்லும் போது, அதைக் காப்பாற்றும் பொறுப்பு இயற்கையிடமே விடப்பட்டு விடுகிறது.

விழியைப் பிடுங்கக் கூடாது, வெட்டிக் கிழிக்கும் மின்னல் - வழியைக் காட்ட வேண்டும்.

அய்யன் திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில், இப்படி ஓடுகிற ஒரு சமுதாயத்தை வழி நடத்துவதற்காக, சில கொடுமையான மின்னல்கள் வீச ஆரம்பித்தன.

அகக் கண்ணையும் - புறக்கண்ணையும் சேர்த்து, அவை குருடாக்கி விட்டன.

நெறிகள் சில நேரத்தில் விழியை ஊதி அணைக்கும் மின்னல்களாகக் கூடத் தோன்றலாம்.

அவர் காலத்தில், ஒன்றிரண்டு இப்படி வழி காட்டத் தமிழ்ச் சமுதாயத்தின் முன்னே வந்தன!

எந்த மார்க்கங்கள் அவை? எந்தச் சமயங்கள் அவை? என்பதை, எந்த ஒரு குறளிலும், திருவள்ளுவர் எங்குமே குறிப்பிடவில்லை.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண

நன்னயம் செய்து விடல்"

என்ற குறளை அவரே எழுதிவிட்டு, அந்த சமயக் கொடுமை

களைச் செய்தவர்களையும் குறிப்பிடுவது நல்லதல்ல என்பதை எண்ணியே அவர் அதை எழுதாமல் விட்டு வட்டார்.

அறிவின் நாயகரான அய்யன் திருவள்ளுவர் எண்ணியத் தமிழ்ச் சமுதாயம், ஏன் ஒரே உலகச் சமுதாயம், அவர் எழுதிய 1330 குறட்பாக்களிலும், அது எப்படி இருக்க வேண்டும் - எவ்வாறு இயங்க வேண்டும் என்பதையும் ஓவியங்களாக வழங்கியுள்ளார்.

குழந்தை வளர்ப்பு முதல் - குடியாட்சித் தத்துவங்கள் வரை, காதல் முதல் - சாதல் வரை, தொழுதல் முதல் - தேற்றுதல் வரை, அவர் குறட்பாக்களிலே தோற்றமளிப்பதை நம்மால் காண முடிகின்றது.

'காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்தப் பையடா, - 'தோலெலும்பு செந்நீரும் - வெண்ணீரும் நாறும் ஊத்தைத் தேகம்' என்று குறிப்பிட்டு மனித சமுதாய ஊற்றிலே நஞ்சைக் கலக்காத அவரின் நயத்தகு நாகரிகத்திற்குத் தமிழ்ச் சமுதாயம் என்றும் நன்றிக் காட்டத் தயங்காது!

அய்யன் திருவள்ளுவரை அடையாளம் கண்டு கொள்ள - பலர், பல வண்ணக் கண்ணாடிகளால் நோக்கினர்!

மனோரஞ்சித மலர் போல - நினைத்தவரது மனநிலைக்கேற்ப, மணத்தை விரவி - குறட்பாக்களை எழுதியுள்ளார் அவர்.

அதனால், சிலர் அவரை சைவர் என்றனர்! கொட்டை கட்டினர்! பட்டை தீட்டினர்! பூணூலைப் போட்டுப் பூரித்து மகிழ்ந்தனர்!

மற்றொருவர் ஜைனர் என்றார்! 'ஆதிபகவ'னுக்கு விளக்கம் தந்தார்! 'மலர்மிசை ஏகினான்' என்ற அவரது வியன் மிகு சொற்றொடர்க்கு, மத அற்புதத்தைக் கொண்டு கூட்டித் தத்துவம் பேசிப் பார்த்தார்.

வேறொருவர், அவரை வைணவர் என்றார்! அதற்காக அவரது 'தாமரைக் கண்ணான் உலகு' என்ற குறளின் அடிகளிலே தெண்டனிட்டார்.

'வாலறிவன்' என்ற அவரது குறட்பா சொல்லுக்கு, வாலுடைய அனுமாரை ஓவியம் தீட்டி, தனது வீட்டிலே

தொங்கவிட்டு - விளக்கம் கூறி வீழ்ந்தே போனார்!

இடையிலே ஒருவர் பௌத்தர் என்றார்! பன்றிக் கறியைத் தின்று பேதியாகிச் செத்தார் புத்தர் என்பர் மேனாட்டார்!

தனது மதத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினருக்கு, செத்த இறைச்சியைத் தின்றிட அவர் உரிமையும் தந்தார்! அதனால், புத்தர் என்று கூறியவரும், பாவம் வீழ்ந்தார்!

இசுலாமியத்தைச் சேர்ந்தவர் அவரை முஸ்லிம் என்றார். திருக்குறள் என்ற பெயரிலே உள்ள 'ள்' என்ற எழுத்தை நீக்கி, 'ன்' என்ற எழுத்தைக் கூட்டிச் சிலருக்கு விளக்கம் உரைத்து," திருக்குரான்தான் திருக்குறள்" என்று தோள் தட்டி ஆடினார்!

மேலை நாட்டு மேதைகள், திருவள்ளுவர் கருத்தைப் படித்து மெய் சிலிர்த்து, அவரை ஒரு கிறித்துவர் என்றே கூறலாம், என மன நிறைவு மட்டுமே அடைந்தனர்!

ஆனால், கிறித்துவ மத வெறியர்கள் சிலர், 'திருவள்ளுவர் கிறித்துவரா?' என்ற வினாவைத் தொடுத்து, தமிழ் அறிஞர்கள் முப்பத்தெட்டு பேரை அழைத்து, சென்னை மாநகரிலே, கருத்தாய்வு விவாதப் போட்டி மாநாட்டு விழா ஒன்றை மே, 3, 4, 1962ம் ஆண்டு நடத்தினார்கள்!

அந்த விழாவிற்குத் தலைமை வகித்த பெரும்புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் என்ற சிரம் பழுத்த கிறித்துவர், திருவள்ளுவர் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என்று கூறி, விழா எடுத்தவர்களின் முகத்தைத் தொங்க வைத்தார்!

மத வெறி பிடித்த ஒவ்வொருவரும், அய்யன் திருவள்ளுவரை அவரவர் மதக் கோட்பாட்டிற்குள்ளே அடக்கிட பெரு முயற்சி எடுத்துத் தோற்றார்கள் - இந்த இருபதாம் நூற்றாண்டில்!

எந்த நூற்றாண்டானாலும் சரி, தமிழ்ச் சமுதாயம், ஒன்றை மட்டும் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பொருள், ஏதாவது ஒன்றினுள் அடங்கி விட்டால், அது இன்னொரு பொருளில் அடங்காது.

அய்யன் திருவள்ளுவர், சைவ எல்லையுள் சிக்கிக் கொண்டு விட்டால், வைணவ எல்லையில் அவரைப் பார்க்க முடியாது.

பௌத்தத்தில் அவர் அடங்கி விட்டால், - பைபிள் பக்கம்கூட அவர் நிற்க மாட்டார்.

எல்லோருக்கும் அடங்கியவராகவும் - அடங்காதவராகவும் இருக்கின்ற காரணத்தால், மக்கள் அவரை என்றென்றைக்கும் கவனம் வைத்துக் கொள்ள வேண்டும்.

அய்யன் திருவள்ளுவர், பாதை - தனிப் பாதை! பொதுவான பாதை! யாரையும் எவரையும் வாழ்க்கைப் பயணத்திற்கு அழைத்துச் செல்லும் அறம் சார்ந்த பாதை!

மனிதன் என்பவன் எவனும் - அந்தப் பாதையை நம்பி, தனது வாழ்க்கைப் பயணம் போகலாம்.

அவருடைய பாதையில் - எல்லாருடைய மதச் சுவடுகளும் வந்து கலப்பதால், அவரை - அவரவர் மத உரிமையோடு கொண்டாடுகிறார்கள்!

அய்யன் திருவள்ளுவரது கருத்துக்கள் - எந்த நிலத்திலும் முளைக்கும் தரம் படைத்தவை - உரமுடையவை!

அவருடைய உருவம், எல்லாருடைய மனக் கோயிலிலும் குடியேறிடும் தகுதி பெற்றது! தனியாக அதற்கோர் கோட்டம் தேவையில்லை - வணங்க - வாழ்த்த!

மறதியுடையவர் மக்கள் என்பதால், கலைஞர் அவருக்கு ஓர் எழுத்துக் கோட்டம் எழுப்பினார். அதைத் தமிழர் என்றும் மறவாரல்லவா?

தமிழ் மக்கள், அப் பெருமகனைத் தமிழனாக எண்ணிய பிறகே - அவர் அய்யன் திருவள்ளுவரானார்!

தமிழ்ச் சாதியிலே ஒருவராகப் பிறந்துவிட்ட அவரை, தரணி இன்று அடையாளம் கண்டு கொண்டது!

உலக - மக்கட் சமுதாயத்திற்காக, அழியாத் திருக்குறட் புதையலை வழங்கியவர் அய்யன் திருவள்ளுவர் பெருமான்!

தமிழ்ப் பண்பாட்டின் உயிர் மூச்சை, திருக்குறளிலே வைத்துப் பூட்டி, பொதுமறைப் பேழையாக மக்களிடம் அவர் வழங்கி விட்டார்!

அந்தக் காலக் கருவூலத்தை, பண்பாட்டுப் புதையலை, அறிவுச்

சுரங்கத்தை, தமிழ் மக்கள் எப்படியெல்லாம் அனுபவிப் பார்களோ, அது அவரவரது அறிவுக்கு உட்பட்ட கடமையாகும் - உரிமையாகும்!

ஆனால், அந்த மனிதகுல மேதையின் காலடிக்கு, அறம் பழுத்த அவரது குறட்பாவைப் படித்துப் பயன்பெற்று, சிரம் பழுத்த மனிதர்களாக நாம் நடமாடுவதும் ஒன்றுதான்- தமிழினம், அய்யன் திருவள்ளுவருக்கு காட்டும் நன்றியாகும்.

வான் கோள்களைத் துளைக்கும் உலக அறிவு, கலைஞர் அய்யன் என்று பெயர் சூட்டிய திருவள்ளுவனாரின் வாழ்வியல் விஞ்ஞான அறிவை, திருக்குறளை, இந்தியத் தேசிய நூலாக்குமா?

கலைஞர் கருணாநிதி அவர்கள் அந்த வேண்டுகோளை தில்லி மத்திய அரசு முன்பு வைத்துள்ளார். கண் திறக்குமா - காலம்?

மத்திய அரசு மதிக்குமா? - பார்ப்போமே!



# மனிதப் புனிதன் காந்தியண்ணல்!



அன்பில் கவர்ச்சி,

உண்மையில் பற்று,

பண்பில் நேர்மை,

ஒழுக்கத்தில் கட்டுப்பாடு,

இன்றைய சரித்திர உலகம் - இத்தகைய ஒரு மாமனிதரைக் காந்தியடிகள் என்று இயம்புகிறது.

மனித வர்க்கம், எப்படியோ பிறந்து, எப்படியோ வளர்ந்து, இயற்கையின் விளைவுகளால் தேய்வுற்று, அணுக்களாகப் போகட்டுமே என்று எண்ணுகின்ற நெஞ்சத்தின் பெயர் கயமையாகும்.

ஆனால், இனி பிறக்கும் கருவிற்கு மனித வர்க்கம் நீங்காத் துணையாக நிற்க வேண்டுமென்று, ஓங்கிய எண்ணத்தினால் கடனாற்றப் புறப்பட்ட சில புனிதர்கள், கல்லறைக்குப் பின், சடங்காக அல்ல - சத்தியமாக நிற்கிறார்கள்.

அரசியலில் அடிமைப்பட்ட இந்தியா - கலாச்சாரத்தால் கண் திறந்து, ஒருமைப் பாட்டால் உணர்வைப் பெற்று நாகரிகத்தால் நடமாடிடும் சக்தி இருந்தும், எண்ணெயில் போட்ட கரிவேப்பி லையாகச் சுருங்கி இருப்பது - ஏன், என்று காந்தி அடிகள் கண்டார் - கேட்டார்!

தோலின் நிறத்தைக் கொண்டுள்ள ஒரு மனிதனுடைய ஆத்மத்தை எடை போடுகின்ற கீழான பண்பு - வெள்ளை யனிடம் இருந்தது.

முள்ளம்பன்றியைப் போன்றிருக்கும் பலாப்பழம் - நல்ல சுவை மிக்க சுளைகளை உள்ளே கொண்டிருக்கிறது.

கரிய நிறமும் – வெள்ளை நிறமும் – மஞ்சள் நிறமும், பேரொளி யின் சிதறல்களே தவிர, வேற்றுமைக்கென்றே விதைக்கப்பட்ட வண்ணங்கள் அல்ல.

முப்பட்டைக் கண்ணாடியின் வழியாக சூரியனை பார்க் காமல் இருந்தால், சூரியன் நிறம் வெள்ளைதான். பெருக் கெடுத்து ஓடி வருகின்ற பேரொளி, தட்ப – வெட்ப நிலையினால் உயிரினத்தைப் பாதுகாக்கும் தோலை நிறமாக்கி மகிழ்கிறது.

எல்லா மலர்களும் – ஒரே நிறமாக இருந்தால் – பூக்களின் பலவீனம் தெரியும்.

மஞ்சள் நிறம் மட்டும் இல்லையென்றால் – கண்நோய் தீருவது கிடையாது.

பச்சை நிறம் மட்டும் இல்லையென்றால் – இரத்தச் சுரப்பிகள் வேலை செய்யாது.

சிவப்பு நிறம் எப்போதுமே இருந்தால் மிரட்சி எப்போதுமே இருந்து கொண்டே இருக்கும்.

ஊதா நிறம் ஒன்றாலேதான் – இந்த உலகம் வாழ்கிறது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

கருமை நிறம் – மிகத் தேவையானது என்று – வைதீகன் சொல்லுகிறான் – பார்வையுடன், நேர்க்குத்தலை ஒடுக்கி மடக்குவதற்காக.

ஆகவே, நிறத்துக்குள் இருக்கின்ற நிரந்தரமான வரலாற்றை விஞ்ஞானத்தோடு விளையாடுகின்ற வெள்ளைக்காரனின், கந்தலான இதயத்தைக் கொண்டு கணக்கிடும்போது – கறுப் பர்கள், சாத்தானின் படைப்பாக அவன் கண்கட்குத் தெரிந் தார்கள்.

காந்தியடிகளின் ஞான விழி, வெள்ளையனை அக்கக்காய் ஆராய ஆரம்பித்தது.

ஒரு கோடி முத்தத்தால் உருவான ஓர் உயிரை, துப்பாக்கி யால் துளைத்து ஆளலாம் என்று நினைத்தான்– வெள்ளைக் காரன்.

முத்தம் – பயங்கரமான ஒலியல்ல. மென்மையான அந்த மெல்லோசையால் – பைபிளை அருள் வீழ்ச்சியால் பொழிந்த – இயேசுவே உருவானார்.

வெள்ளையன் பக்கத்திலே இருக்கின்ற சொர்க்கம் - அவன் கண்கட்கு இலையுதிர் காலமாகவே தெரிந்தது.

கீழை நாட்டுத் தத்துவத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட காந்தியடிகள், மேலைநாட்டுத் தத்துவத்தில் புதைந்திருக்கும் பூதாகார உருவத்தைக் கற்பனை செய்ய முடியாத ஒரு குழந்தையைப் போலப் பார்த்துக் களித்தார்.

அதனால், தென்னாப்பிரிக்காவில் அவர் மனித உரிமைக் காகத் தன்னுடைய போராட்டத்தைத் துவக்கினார்.

கருப்பு மனிதனுக்கு வீரமுண்டா? இது வெள்ளையன் அன்று கேட்ட அகந்தைக் கேள்வி.

வீரமுண்டு என்பதனை காந்தி பெருமான், தமது அறம் சார்ந்த அகிம்சை செயல்களால் நிலை நிறுத்திக் காட்டினார்.

இல்லையென்றால், தென்னாப்பிரிக்காவிலும், இந்தியா விலும் பதினொன்று முறை சிறை சென்று, ஆறு ஆண்டுகள் பத்துத் திங்கள்கள் சிறையில் இருந்திருக்க முடியுமா?

காராக்கிரகத்தில் காலம் தள்ளிய அவரது சிறை வாழ்வுக்கு என்ன பொருள்?

சிறையில் இருந்தாலும், வெளியே நடமாடினாலும், நான் நாட்டுக்கும் மக்களுக்கும் எப்போதும் எறும்பாகவே உழைப்பேன் என்பதல்லவா?

காந்தியடிகள் 'நைடதம்' என்ற நூலில் வரும் மன்னன் நளனைப் போல சமையல் பணியாளராக இருந்தார்.

இத்தாலி நாட்டு, நோயாளிகளது சிகைகளை காந்தியண்ணல் சிங்காரம் செய்தார்.

தனக்குத் தானே முடி வெட்டிக் கொண்டார். சிறையிலே தன்னுடன் இருந்தவர்களுக்கும் முடி வெட்டினார்.

கூலி வாங்கும் அளவும் நில்லாய் நெடுஞ்சுவரே என்று பாடிய கம்பர் பெருமானைப் போல, கூலிக்காரனாகவும் வேலை செய்தார்.

'ஒரு கடப்பாரையைக் கொடுங்கள் உலகக் கோலத்தின் இருசை மாற்றிக் காட்டுகிறேன் என்று, உலகப் போர் மூலம்

உலகை உலுக்கிக் குலுக்கிய மாவீரன் இட்லரைப் போல, செருப்புத் தைக்கும் தொழிலையும் செய்தார். ஓவியப் புலவனாகவும் இருந்தார்.

மாண்பு பெறப் போகும் மாணவர்கள் மனதின் ஆசுகளை அகற்றிய டாக்டர் ராதா கிருஷ்ணனைப் போல ஆசிரியராகவும் பணியாற்றினார்.

வீராங்கனை ப்ளாரன்ஸ் நைட்டிங்கேலைப் போல, நலிந்த நோயாளிகளுக்கு உரிய பணிவிடைகளைச் செய்யும் நர்ஸாக வும், செவிலியாகவும் - பணிபுரிந்தார்.

தனது துணைவியான அன்னை கஸ்தூரிபாயின் துணி களைத் தைத்துத் தந்தார். அதே போல சர்தார் வல்லப பாய் படேலுக்கும் - இந்திய சுதந்திரத்துக்கும் - எதிரியான வெள்ளை இனத்தைச் சேர்ந்து ஜெனரல் ஸ்மட்ஸுக்கும் செருப்புகளைத் தைத்துக் கொடுத்தார்.

இத்துடனா இருந்தார்? தான் செய்த காலணிகளுக்கு 'அகிம்சா காலணிகள்' என்று பெயர் சூட்டி - விற்பனைக்கும் அனுப்பினார் காந்தியடிகள்.

பள்ளிகளின் பாடத் திட்டத்தில், சமையல் செய்வதை, கழிவறைகளைக் கழுவுவதை, டாய்லெட் சுத்தம் செய்வதைப் பாடமாகச் சேர்ப்பதுடன், பிள்ளைகளுக்குப் பயிற்சியும் தர வேண்டும் என்று வாதாடினார்.

ஏனென்றால், பரிசுத்தம் இறைத் தொண்டுக்கு ஈடானது என்று நம்பினார். அதனால், தென்னாப்பிரிக்காவிலே இருந்து காங்கிரஸ் மாநாட்டிற்கு வந்த காந்தியடிகள், மாநாட்டின் கழிவறைகளை எல்லாம் சுத்தம் செய்தார்.

காந்தியடிகளின் இந்தத் தொண்டு, செயல், மாநாட்டை மட்டும் அல்ல, இந்தியாவையே, ஏன், உலகத்தையே பரபரப்பாக்கி விட்டது.

கழிவறைகளை ஏன் சுத்தம் செய்கிறேன் தெரியுமா? செருப்புகளைத் தைக்கிறேனே, ஏன் புரியுமா? முடிவெட்டியாகப் பணி செய்தேனே - எதற்கென அறிவீரா? சமையல் வேலைகளைச் செய்தது வேலையற்றவன் என்பதற்காகவா? சிந்தனை செய்தால் எனது உண்மை புரியும் - என்றார் காந்தியடிகள்.

சுயராஜ்ஜியம் பெறுவதற்கு என்னை நான் தகுதியாக்கிக் கொள்கிறேன் என்பதற்காகத்தான்!

ஒவ்வொரு சுயராஜ்ஜியக் குடிமகனுக்கும் தன் கையே தனக்குதவியாக இருக்க வேண்டும் என்பதற்குச் சான்றாக, நான் அந்தப் பணிகளை எல்லாம் செய்கிறேன்! புரிகிறதா இப்போது? என்று காந்தியண்ணல் விளக்கினார்.

இந்தியத் திருநாட்டில் ஒரு தூய்மையான, சுத்தமான, சமுதாயம் உருவாக வேண்டும் என்பது என் ஆசை ! அதற்குக் கழிவறைச் சுத்தம் ஓர் ஆரம்பப் பாடம் என்று கருதுகிறேன் என்றார்!

பத்திரிகை நிருபர் ஒருவர், ஒருமுறை காந்தியடிகளை,"இந்தியாவின் வைஸ்யராயாக நீங்கள் ஆக்கப்பட்டால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்

அதற்கு அந்தப் பெருமான், "நான் தோட்டி வேலை செய்வேன்" என்று நறுக்கென்று பதில் அளித்தார்.

என்ன காரணத்தாலோ மருத்துவராக வேண்டிய மகாத்மா, வழக்கறிஞராக ஆகிவிட்டார்.

காந்தியடிகளாருக்கு அருகிலேயே ஒருவன் இருக்க விரும்பினால், அவனுக்கு ஏதாவது ஒரு நோய் வர வேண்டும் என்று அவரது சபர்மதி நண்பர்கள் பேசிக் கொள்வார்களாம்!

தென்னாப்பிரிக்காவில் காந்தி இருந்தபோது, ஒரு கர்ப்பிணிப் பெண் பிரசவ வேதனைப் பட்டாள்.

இங்கே நர்சு யாருமில்லை. வெள்ளைக்கார நர்சு ஒருத்தி கறுப்பு நிற கர்ப்பிணிக்கு மருத்துவம் பார்க்க மறுத்தாள்.

இப்போது என்ன செய்தார் கருணாமூர்த்தி காந்தி?

தன்னிடமுள்ள ஒரு பிரசவம் பார்ப்பது பற்றிய நூலகப் புத்தகத்தை மீண்டும் படித்துவிட்டு, அந்தப் பெண்ணுக்கு காந்தியடிகளே பிரசவம் பார்த்தார் -தாயும் ஆனவரைப் போல!

காந்தியடிகளுக்கு தன்னம்பிக்கை அதிகம். அதனால்தான் எல்லாவிதமான சோதனைகளையும் ஏற்கும் உள்ள உரமும் மனத் திறமும் இயற்கையாகவே அவரிடம் அமைந்து விட்டது.

ஜோகன்ஸ் பர்க்கிலிருந்து அவர் டர்பன் நகர் சென்ற போது மார்டிஜ் பர்க் நகர் நிலையத்தின் ரயிலிலிருந்த காந்தியடிகள், வெள்ளையர்களால் வெளியே தூக்கி எறியப்பட்டார்.

'இந்த அவமானத்தை அப்போது எப்படி தாங்கிக் கொண்டிருந்தீர்கள்?' என்று ஒரு நிருபர் அவரைக் கேட்டார்.

'எதையும் தாங்கும் இதயம் எனக்கு இல்லையென்றால், நான் அப்போதே தற்கொலை செய்து கொண்டிருப்பேன்' என்று பதில் கூறிச் சிரித்தார் காந்தியடிகள்!

காந்தியடிகளார், அரசியல் துறைக்குக் கற்றுத் தந்த நாகரிகங்களிலே ஒன்று, என்ன தெரியுமா?

காந்தியடிகளின் கால்களை மக்கள் யாரும் தொட்டுக் கும்பிடக் கூடாது என்பது ஆகும்.

அதுபோலவே, காந்தியடிகளது படத்தை ஒரு மனிதன் கழுத்தில் அல்லது கரத்தில் அணிந்து கொள்வதை அவர் அறவே வெறுத்தார்!

வடலூர் வள்ளல் பெருமான் உயிருடன் உலா வந்தபோது, அவரது மாணவர் தொழுவூர் வேலாயுத முதலியார், இராமலிங்க சுவாமிகளது திருவுருவத்தை மண்ணால் செய்து வந்து அவரிடம் காட்டினார் - சிலை அமைப்பைப் பற்றிக் கருத்துக் கேட்க !

வள்ளல் பெருமானுக்கு வாராது சினம்! அன்று என்னமோ குன்றேறி நின்றார்!

"வேலாயுதம், இந்த நாட்டிலே இருக்கும் சிலைகள் போதாதோ, இதில் என்னையும் ஒரு சிலையாக்கி விட்டீரே," என்று சிவந்த கண்களோடு அவரை நோக்கி, சிலையை வாங்கி கீழே போட்டு உடைத்தாராம்.

காந்தி பெருமானும் வள்ளல் பெருமானைப் போல, தனது படத்தை வணங்க, அது நினைவுச் சின்னமாக ஆவதை வெறுத் தார். இன்று, அவரது படம் கேவலம் ஓட்டு வேட்டை சுனங்கட்கே பயன்படுகிறது - பாவம்!

கல்கத்தாவிலே இருந்து வந்த ஒருவர், காந்தியடிகளது படத்தைக் கழுத்திலே மாட்டிக் கொண்டு, அவரது பெயரை

நூற்றெட்டு முறை உச்சாடனம் செய்து முடித்தார்.

அடிகளாரைப் பார்த்து,"உமது பெயரை உச்சரித்ததால் தான் எனது முடக்குவாத நோய் போயிற்று" என்று வந்தவர் அவரிடம் விளக்கிக் கூறினார்.

"இறைவன்தான் உங்களுக்கு சுகம் தந்தார்! காந்தி இல்லை" என்று கூறிய காந்தியார், 'தயவு செய்து உங்களுடைய கழுத்திலே தொங்கும் எனது படத்தை அகற்றி விடுங்கள்' என்றார்.

காங்கிரஸ்காரர்கள், இன்று இந்தியாவின் மாநிலங்களிலே எல்லாம் காந்தியின் கொள்கைகளைக் காற்றிலே பறக்க விட்டு விட்டார்கள்.

ஆனால், கேவலம் ஓட்டு வேட்டைக்காக ஒரு மனிதப் புனிதனின் பெயரை கூறிக் கெடுத்து வாழ்கிறார்கள்.

தேர்தல் என்று ஒன்று இல்லையானால், காந்தியார் படத்தை அறவே கை விட்டு விட்டிருப்பார்கள்! அல்லது மறந்து விட்டிருப்பார்கள்! எல்லாம் காலம் காட்டும் கோலம்!

- The unknown

"The Hindustan Times" 1.10.1998

இத்தகைய ஒரு வெள்ளுவாவை, அதாவது மனித இனப் பண்பின் முழு நிலாவை, வெள்ளையன் அரை நிர்வாணப் பக்கிரி என்றான்! அது மட்டுமா? அடிகளாரை சட்டத்தால் மிரட்டிச் சதிராடினான்!

காந்தியடிகளுக்கு சத்தியம்தான் தாய்! தந்தை! - ஞானம்! உடன் பிறப்பு -அறம்! கருணைதான் நண்பர்கள், சாந்திதான் மனைவி! பொறுமைதான் மக்கள்.

இந்த உறவுகளைப் பெற்ற ஒரு மனிதனை, புனிதனை, தூயனை, மக்கள் நேயனை, ஒழுக்கசீலனை, தொழுத கையுள்ளும் பகை ஒடுங்கும் என்ற ஒரு துப்பாக்கிதான் கொல்ல முடியுமே தவிர, ஆணவ, அகம்பாவ, அதிகார துப்பாக்கிகளால் கொல்ல முடியுமா?

அதனைத் தடுக்க அவரிடம் தான் 'அகிம்சை' என்ற கேடயம் இருக்கிறதே. ஆனாலும் ஆங்கிலேயன் சட்டங்களைக் காட்டி ஆர்ப்பரித்தான்

துப்பாக்கி குண்டுகள் - இந்த அரை நிர்வாணப் பக்கிரியைத் துளைத்துவிடும். இது வெள்ளையனின் ஆதிக்க வெறி, நிறத் திமிர்ப் பேச்சு.

காந்திபிரான் இதயம் - கண்ணாடிப் பாறையல்ல, நான் - மரத்தின் வைரம் என்று கூறி, அவர் பிறரை ஏமாற்றவும் தயாராக இல்லை. வைரம் வீழ்ந்தால் பொடிப்பொடியாகி விடும் அல்லவா, அதனால்?

காந்தியடிகளின் நெஞ்சம், இயல்பாக வளர்ந்ததல்ல! மாற்றார் தாக்குதலைத் தாய்ப் பாலாகக் குடித்து வளர்ந்த சக்தி பெற்றது.

காந்தியடிகள், தாக்காமல் விடப்பட்டால், அவர் குழந்தை! தாக்கப்பட்டால், அந்த இதயம் வீரனின் வன்மையைப் பெறும்!

'என்னை ஏற்றுக் கொண்டவன் இருளில் நடப்பதில்லை. ஏனெனில், நானே சத்தியமும் - ஜீவனுமாய் இருக்கிறேன்' என்றார் இயேசு.

இதிலே இருக்கின்ற 'என்னை' என்ற சொல்லின் பொருள் என்ன?

அந்த 'என்னை' என்பது, துப்பாக்கி... துந்துபி முழங்கத் துவங்குவதற்கு முன்னால், வெடிகுண்டு கண்டுபிடிப்பதற்கு முன்னால் - தொடங்கிய ஒன்று!

அதனை - இயேசுவும் தேடினார் - பெற்றார். காந்தியடிகளும் தேடினார் - பெற்றார்.

மனிதனால் கொடுத்துப் பெறாத சக்தியை, ஞானத் திரைக்கு அப்பால் கண்டெடுத்த காரணத்தால், வெள்ளையனின் பிடிவாதத்தைப் பள்ளத்தாக்கில் போட்டுப் புதைத்தார் - வார்தா முனிவர்!

அவரது தென்னாப்பிரிக்காவின் எரிமலை நிறப் புரட்சி, இந்தியாவிலே இருக்கிற எண்ணற்ற இதயங்களைத் தொடர ஆரம்பித்தது.

கருத்தவன் கர்த்தாவானான்! சிறுத்தவன் பெருத்தவனானான் காந்தியடிகளை அவன் தேடிக் கொண்டான்.

இங்கிலாந்து நாடு, இந்தக் கோடைக் காலத்தின் காரணமாய், இறகுகள் உதிர்ந்துபோன இந்தியக் கிளியைப் பார்த்து கிண்டல் செய்தது.

காராக்கிரகம் என்ற காரமான மிளகாயை, இங்கிலாந்து அதற்குக் கொடுக்க ஆரம்பித்தது.

அது அக்கக்கா என்று பேசுகிறதா? அல்லது, வெள்ளையனை அக்கக்காய் பிய்க்கிறதா என்று அவனுக்கே புரியவில்லை !

'சுக்கா, மிளகா சுதந்திரம்? சுதந்திரம் என்பது எனது பிறப்புரிமை - இது எனது தாய் நாடு என்றது , விடுதலையின் புரட்சிக் குரல்! அதே குரலோடு கிளியும் பேச ஆரம்பித்தது.

காந்தியடிகள், தென் ஆப்பிரிக்காவில் முதலில் செய்த பூகம்ப பிரச்சாரங்கள் - கருப்பனை இந்தியனாக்கியது. பிறகு - அவனை மனிதனாக்கியது.

வெள்ளையனை எதிர்த்தபோது - இந்தியன், இந்தியனாக எதிர்த்தான். போராட்டத்தில், மென்மையை - அகிம்சையைக் கட்டுப்பாட்டைக் கண்ணியத்தைக் - கடமையைக் கடைபிடிக்க வேண்டும் என்று காந்தியடிகள் கூறியபோது இந்தியன் மனிதனான்.

இவ்வாறு, கறுப்பனை இந்தியனாக்கி, இந்தியனை மனிதனாக்கியப் பெருமை அந்த பல்லில்லாத கிழவனையே சாரும்.

காந்தியடிகள்-தியாக வயலின் முதல் விதை. மக்கள் நெஞ்சத்தில், அன்பை- அகிம்சையை நளினத்தோடு கொளுத்திய முதல் தீ என்றும் கூறலாம்!

எளிமை பிறந்த இடம் எங்கோ - நமக்குத் தெரியாது, காந்தியடிகளைப் பார்த்தப் பிறகு அது இங்குதான் பிறந்தது என்பதை நாம் உறுதி செய்து கொண்டோம்.

உலகம் உலகம் என்று கூறுகின்றோமே, இது அழியாமல் இருப்பதற்குரிய காரணமே, தொடர் கதையாகச் சில தலைவர் கள் தோன்றுவதால்தான் என்ற அய்யன் திருவள்ளுவன் கருத்தை நாம் சிந்தித்துப் பார்க்கின்றோம். அந்தப் புனிதத் தலைவர்கள் வேளை வரும் போது மண்ணில் கால் எடுத்து வைக்கிறார்கள்.

தன்னலமற்றத் தன்மையில் நாள் பார்த்துத் திரும்பி விடுகிறார்கள்.

சூடு பிடித்த அரசியலைத் துவங்குவதற்குரிய அரசியல் வாதிகள் நம் நாட்டில் குப்பைகளாகக் குவிந்து கிடப்பதைக் காண்கிறோம்.

அந்த அரசியல் மீது அன்பைக் காட்டி, பண்பை வளர்க்கும் தலைவர்கள், அறிஞர்கள், விலை மதிப்பிலாச் சொல்லழகன் கவிஞர் வோர்ட்ஸ் வொர்த் கூறுவதைப் போல, மலையடி வாரத்தை விட்டு வெகுதூரம் வந்துவிட்ட ஒரு பாராங்கல்லின் அருகிலே முளைக்கின்ற பூவாக - அந்தப் புனிதர்கள் இருப்பார்கள்.

அவர்களைப் பற்றிப் பாடிய கவிதைகள் - இன்னும் சாக வில்லை என்பதற்கேற்ப - ஒரு சிலர்தான் வருவார்கள் போவார் கள்.

காந்தியடிகளின் இந்தப் பண்பு, வெள்ளைக்காரனுக்கு பிற்காலத்தில் ஒரு பயங்கர அரசியலாக மாறும் என்று அவனுக்கு அன்று தெரியவில்லை.

அவர் இறந்த பிறகு, இந்த வெள்ளையனே விக்கி விக்கி அழும் அளவிற்குக் கண்ணீரை வரவழைக்கும் கதாநாயகனாகி விட்டார் காந்தியடிகள்..

தலைவர்கள், தங்களது தொடக்கக் காலத்தை ஒரு கட்சியையோ - ஓர் இயக்கத்தையோ பற்றுக் கோடாகக் கொண்டே உழைக்கிறார்கள்.

இறுதிக் கட்டத்தில் அவர்கள் கட்சிக்கு அப்பாற்பட்ட தலைவர்களாக மாறி - தலை உள்ளவர்களுக்கு எல்லாம் ஆசி கூறுகிறார்கள். வாழ்த்துகிறார்கள்.

காந்தியடிகள், அந்தக் கட்டத்துக்கு தனது இறுதிக் காலத்தை ஓட்டிக் கொண்டு சென்றார்.

அவர் எண்ணிய சுதந்திர உணர்ச்சி - ஓயாமல் பாடுகின்ற வீணையாக இன்றுவரைக் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

சங்கீதத்தில் நம்பிக்கை உண்டானவன் - ஒப்பாரியையும், மடைப் புனலோசையையும், நல்ல கலைஞரின் இசையையும் -

ஒன்றாகவே எடை போடுகிறான்.

படித்தவனின் உணர்ச்சியையும் - பாமரனின் திகிலையும் ஒரே ஓசையில் இழைத்துக் கேட்டு காந்தியடிகள் பழகினார்.

இந்த இருவர் உடைகளை, இவர்கள் இரண்டு பேர்களில் எவன் ஒருவன் தயாரித்தானோ, அவனாலேயே அதைப் பறிக்க முடியாது என்ற ஆவேசம், காந்தியடிகளின் பரம்பரைச் சொத்தாக இருந்தது.

நான் தனித்துப் பிறந்தேன்.

என் உயிர் தானாகவே போகிறது.

ஆனால், உரிமை மட்டும் எனக்குப் பிச்சையாக வரக் கூடாது. காற்றைத் தடை செய்ய முடியாது.

ஒளியை வழி மறிக்க இயலாது. ஆனால், உரிமையின் குறுக்கே மட்டும் செங்கோல் நிற்பதா?

எனது சுதந்திர ஆசைகள் ஒழுக்கத்தின் வேலிக்குள் இருப்பதா?

எனது உணர்ச்சிகள் கட்டுக்குள் அடங்கிக் காலம் எல்லாம் வாழ்வதா?

எனது உரிமைகளும் ஆசைகளும் உணர்வுகளும் என் வாழ்க்கையில் இருக்க வேண்டாமா?

வாழ மட்டும் எனக்கு அனுமதி அளித்த ஆண்டவன் உரிமையை மட்டும் இங்கிலாந்து நோக்கி அனுப்பிட அவன் என்ன முட்டாளா?

அதோ, வேலி ஓரம் பூத்திருக்கும் பூ என் வீட்டுக்குள்ளேயே இருக்கிறது.

அதோ, ஏற்றமடித்துப் பாடுகிறானே பாட்டு -அது என் காதுக்கு அருகேயே கேட்கிறது.

அதோ, ஏற்றம் இறைக்கும் சாலில் அள்ளி மொண்டு கீழே சாய்த்தானே தண்ணீர், அது என் விழி வாசலுக்கு முன்னா லேயே ஓடுகின்றது.

ஆனால், எனது உரிமையை எவனோ கொடுத்து வாங்குகின்ற, கிடைக்க முடியாத பொருளாகப் படைத்துவிட்டு-

கோயிலுக்குள் தூங்குபவன் யார்? எவன்?

இந்தச் சிந்தனைச் சுழல்கள் அத்தனையும், காந்தியடிகளின் உள்ளத்திலே ரங்க ராட்டினமாகச் சுழன்று கொண்டேயிருந்தன.

கருப்பனுக்கு இவ்வளவு தெளிவு ஏற்பட்டு விட்டதே என்று 1947 -லேயும், அதற்கு முன்பும், வெள்ளையன், சிந்திக்க ஆரம்பித்தான்.

இந்தியர்களை இனி ஏமாற்ற முடியாது. அவர்கள் தங்கள் உயிர்களை, இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றத்தில் அலட்சியமாக வைத்துவிட்டு விளையாடுகிறார்கள்"

"நமது பூட்சு காலால் அந்த உயிர்களை நசுக்கும் போது கூட அவர்களுடைய உணர்ச்சி புதுத் தண்ணீரினால் வந்த ஜுரத்தால் பாதிக்கப்படுவானே மனிதன், அதனைப் போலக் கூடப் பாதிக்கப்படவில்லை"

வெள்ளையனுடைய ராஜதந்திரங்கள் - சாகசங்கள் - பிரித்தாலும் சூழ்ச்சிகள் - அடக்குமுறைகள் - துப்பாக்கித் துந்துபிகள் - இவையத்தனையும் கருப்பனுடைய கண்கள் முன்னால், மிகச் சிறியனவைகளாகவே தெரிந்தன.

இறுதியில், சாசனம் எழுதுவதற்காக - அதுவும் விடுதலை சாசனம் எழுதுவதற்காக - வெள்ளையனே துணிந்தான்.

"சுதந்திரத்தைத் தருகிறேன்" என்று வெள்ளையன் கூறினான்

"தராதே. நானே எடுத்துக் கொள்கிறேன்" என்று இந்தியன் சொன்னான்.

பிறப்பின் கட்டம், காந்தியடிகளைப் பொறுத்தவரை சிறிது சிறிதாக நெருங்கிக் கொண்டே இருந்தது. பிரச்சனைகளும் அதற்கேற்ப விளையாடின..

மணம் வீசிய பிறகு மலருக்கு வேலையில்லை, சுதந்திரம் வந்த பிறகு காந்தியடிகளுக்கும் இந்த மண்ணில் என்ன வேலை?

எப்படிக் காந்தியடிகளைக் கொடுத்ததோ - அப்படியே நாட்டு விடுதலைக்காக வாழ்வாங்கு வாழ்ந்து போராடிய அந்த மனித குல மாமேதையை எடுத்துக் கொண்டது - காலம்.

ஆனால், காந்தியடிகளின் தத்துவங்கள் - இந்த நூற்றாண்டில் எத்தனை உள்ளனவோ - அத்தனை ஆண்டுகளிலும் காற்றோட்டமான ஒரு மாளிகையாகவே இன்றும் இருக்கின்றது.

அந்த விடுதலைப் போராட்ட தத்துவ மண்டபத்தில், சில இடங்கள்- அவரவர் விருப்பு - வெறுப்புகளுக்கு ஏற்ப, சிலருக்குப் பிடிக்காமலும் இருக்கலாம்.

ஆனால், சுதந்திர வாயில், எந்த நாட்டுக்கும் - யார் வந்தாலும் திறந்தே காத்துக் கொண்டிருக்கும் சங்கப் பலகையொத்த தாகும்!

காந்தியடிகள் என்பவர் யார்?

கேள்விக் குறியாக விளங்கிய

அந்தச் சத்திய மனிதர்,

இப்போது பிறக்கின்ற குழந்தைகளுக்குப்

போதனையாகவும் -

பிறக்காதவனுக்கு வேதனையாகவும்-

வாழ்பவனுக்குச் சாதனையாகவும்- இருக்கின்றார்!

கடந்த தலைமுறையில் தலைவர்களைப் பயிரிட்டவர் -

தற்காலத் தலைமுறையில் விதைகளுக்காக விடப்பட்டவர் -

அடுத்த தலைமுறைக்கு யாரும் கேட்காமலேயே

முளைக்கக் கூடியவர் காந்தியடிகள்!

இந்திய நாடு - அவரை இப்போது பார்த்தது -

சாக்காடு பிறகு பார்த்தது -

மனித உரிமை என்ற கொள்கை நாடு,

எப்போதும் அவரைப் பார்த்துக் கொண்டே இருக்கின்றது!

அவர் சிந்தித்து தீண்டிய ஒவ்வொன்றும்

துலங்காமல் போனதில்லை.

அன்பால் முகம் பார்த்தார் -

அகிம்சையால் அகம் பார்த்தார் -

ஒழுக்கத்தால் அறத்தை ஓம்பினார் –

ஏழ்மைக்கே அமுதார் ! அடிமைக்கே கூற்றமானார்!

ஏற்றத்திற்காகவே இறைவனைத் தொழுதார்.

அவர் ஒரு பேருரு!

உருவத்திற்கு நிழல் வேண்டாமா?

நிழலிலே உருவம் வேண்டாமா?

ஒரு செடியினுடைய வேர், பூமியிலே எங்கெங்கு ஓடுகின்றது என்று யாருக்குத் தெரியும்?

பிறகு அந்த வேரே, மற்றொரு செடிக்கும்

விதையாக மாறுகிறது அல்லவா?

காந்தியடிகளுடைய அன்பு, பண்பு, அடக்கம், அகிம்சை, எளிமை, தெளிவு, மனிதத் தன்மை, மாண்பு, சிந்தனை, சீரிய செயற்றிறம் அத்தனையும் உலகத்தில் விதைகளாகச் சிதறியிருக்கின்றன.

பண்பட்ட மண்ணில் விழுந்தவை முளைக்க ஆரம்பித்தன. அதுதானே இயற்கையின் இயல்பு! காலத்தின் சுரப்பு!

அவரை நாம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே – மற்றொருவர் அவரைப் போலவே பிறக்க ஆரம்பிக்கின்றார்! இனமான விருத்தியுள்ள விதைகள் இவர்கள்.

தன்னைப் போலவே, ஓர் இனத்தையே படைக்க – விதைகளாகவே விளங்குபவர்கள்.

அவரைப் போல பிறந்தவர்கள் – அவரைப் போலவே இருக்கிறார்கள்.

அவரைப் போலவே மனித நேயத்தில் நடப்பவர்கள் - மண்ணாக மறைந்தபின் – எல்லாருடைய கால்களிலும் அடிபடுகிறார்கள்.

ஏற்கனவே, 1948-ல் மறைந்து ஒளிவிடும் விண்மீனோடு, அதோ, புதிதாக ஒரு விண்மீன் 1969-ல் வானத்தில் கைகோர்த்து உலா வருகின்றது.

*அதனுடைய கூடு புதைக்கப்பட்ட இடம் வங்க கடற்கரை சதுக்கம்!*

*அந்த இரண்டு விண்மீன்களும் -*

*எழுத்தால், பேச்சால்,*

*சிந்தனையால், எண்ணத்தால்,*

*உழைப்பால், உரிமை பெறலால்,*

*இனத்தால், பண்பால்,*

*அன்பால், செயலால்;*

*மக்களிடையே சேகரித்துக்*

*கொண்ட செல்வாக்கால்*

*வருங்கால மக்களை*

*உருவாக்கும் விதையால் ஒன்றே என்பது -*

*நாடு அறிந்த ஒன்று.*

*அந்த நட்சத்திரங்கள் ஒளியுதறி நடமாடும் இடம் வானம்!*

*மனிதம் வென்றிட - அவை*

*புரட்சிக்கொடி ஏந்திய ஒளிச்சுடர்கள்!*

*அதோ - அந்த மீன்கள் மின்னலிடுகின்றன நோக்குக !*



## பாவேந்தர் பாரதிதாசனார்

நீலை பெற்ற சிலையாகி, நெடும் புகழை
நிலை நிறுத்தி, அலை போன்ற
தமிழ் மக்கள் நெஞ்சங்களிலெல்லாம்
இடம் பெற்ற பாவேந்தே ! புரட்சிக் கவியே !

நின் நாக்கு- ஞானத் தகடு!
நின் எழுதுகோல்- வைரக் கோல்!
நின் ஏடு - தமிழ்நாடு!

சந்தனத்தில் உளிபட்டு, சந்திரனில் வதனம் தீட்டி,
கரு நாவற் கனியெடுத்துக் கண்ணாக்கி,
தத்தும் கிளி நடையை - நடையாக்கி,
சங்கத்தைக் கண்டமாக்கி,
கவிதையிலே தமிழ்க் கன்னியை,
உருவாக்கிய கவி மா மன்னா !
தமிழர் தம் மொழி விளக்கே!
காலத்தின் அணுக்களிலே - நின்
கை வண்ணம் காணுதய்யா!

ஓடியத் தமிழ்க் குருதி
இடையிலே இறுகி,
பனிப் பாறையாகி,
சங்கை கெட்ட நிலையிலே,
சங்கங்களை வளர்த்தத் தமிழகம்,
பொங்கும் வாரிக்கு முன்னாலே -
புலம்பி நின்றது.

மின்னலை இழுத்து
மலை பிளக்கும் மேகம் போல்,

கன்னல் தமிழ் இழுத்து,
தமிழை நீர் — நிமிரவைக்கப்
பாட்டெழுதிய - குயில் புள்ளே !
வரலாறு மறவா வடிவமே !

நிலவைத் திறந்துவிட - வானம் வரும் !
மலரைத் திறந்துவிட - தென்றல் வரும்!
பகலைத் திறந்துவிட - பரிதி வரும்! எமது
உணர்வைத் திறந்துவிட - நீ வருவாய்

சாப்பறவை, இந்தியை,
சந்தனத் தமிழெடுத்து, தமிழ்த் தீயில்,
இந்தனமாக்கிய இலக்கியக் குரவ,
உன்னோடு நாள் போயிற்றா?
இனிவரும் நாளெல்லாம்
தமிழ் இல்லா நொடிச் சினையா?

பார்த்திருந்த ஓவியத்தை,
பதம் குலையச் செய்ததெல்லாம்,
காலமெனில் -
அக்காலம் எமக்கு வேண்டாம்!
நடப்பதற்கே தெரியாத குழந்தைகள் - நாங்கள்!
நல்ல தமிழ் நடை கற்பித்த நயமான - ஆசான் நீ!

இடையன் கோலெடுத்தால் - அது, குத்துக்கோல்!
மன்னன் கோலெடுத்தால் - செங்கோல்!
குருடன் கோலெடுத்தால் - வழிக்கோல்! ஆனால்,
மக்களுக்காக நீரெடுத்தக் கோல் - 'பா'க் கோல்!

பாவேந்தே - நீர்
அடுக்கிய எழுத்துக்களில் இருந்த மிடுக்கென்ன
கொடுத்த உவமையில் இருந்த உணர்வென்ன !
இனி, யார் எமக்கு அது போலத்
தரப் போகிறார்கள்? யார் இருக்கிறார்கள்?

தோகை விரித்த தொகைக் கூட்டம்,
வெட்டுக்கிளிபோல் துள்ளி வந்த
வீரச் சொற்கள்! விநோத விளக்கங்கள்!

அரிமா போல் அறையும் -
நின் அறை கூவல்கள்!
வேங்கைபோல் பாயும்
முன்னேற்றப் பாய்ச்சல்!
மதம் பொழியும் - தமிழ்த் திமிர் -
கவிதைச் செருக்கு!
இத்தனையும் உன்றன் ஒரு பாடலிலே
குடி புரியக் கண்டோம்!
இனி அந்த ஞான மதத்தை
யாரிடம் காண்போம் - ஐயா !

பொங்கும் தமிழ் உணர்வில்
பூரித்த தன்மானப் பூக்களைத்
தங்களது கவிதையெனும்
நறு மலர்த் தோட்டத்திலே கண்டோமே !

ஏறு போல நீ..."எடா தம்பி, எடடா பேனா"
என்று எமை எழுத ஏவிய போது,
வந்து விழுந்த உமது வாத வரிகளில் எல்லாம்
வரிப் புலியின் நடையைப் பார்த்தோமே !

வெல்லத் தமிழ் மட்டும் உம்முடைய
கவிதைகளில் வீச்சாக நிற்கவில்லை,
கொல்லும் தமிழ்வேல், வாள், ஈட்டிகளும்
ஓசை நயம் செய்தன ! ஓங்காரக் கூச்சலிட்டன.
மின்னல் வரிகளாக மின்னி மின்னி - எமக்கு
இருளில் நீர் காட்டிய வழியை -
எப்படி ஐயா மறப்போம்!

வேங்கையின் வாகார்ந்த உமது
வீர நடையிலே - கவிதைக் கர்ச்சனையிலே -
வெண்டைக் கவிதை எழுதிடும் சில
வெள்ளாடுகள் குறை கண்டன !
மேய்ந்த நுனிப் புல் மேடபுத்தி அவற்றுக்கு!

ஆத்திகத்திற்குப் பாதம் தூக்கும்
அந்த அடிமைகள் - உமை எதிர்த்து,
"இல்லை என்பான் யாரடா,

தில்லையைப் போய் பாரடா" என்று
ஆவர்த்தனமாடின!
'இல்லை என்பேன் நானடா,
அத் தில்லை கண்டு தானடா, என - நீர்
எதிரிடி குமுக்கமிட்டதைக் கண்டு,
'கவி'கள் எல்லாம் கிடைத்த கிளைகளை
இறுகப் பற்றித் தலைகீழாய்த் தொங்கி
ஊஞ்சலாடியதைத் தமிழ் நாடே
கண்டு விலா நோகச் சிரித்ததே!

'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற விடுதலை முழக்கக் கவிதைகள் வீதியுலா வந்தன!

சமுதாய விரோதிகளை வீதியிலே நிறுத்த,
'கொலை வாளினை எடடா, மிகு -
கொடியோர் செயல் அறவே,
குகை வாழ் ஒரு புலியே உயர் - குணமேவிய தமிழா' - என்ற
வீர அணிவகுப்பு நடைப் பாடலைப் பாடி,
எமது நாடி நரம்புகட் கெலாம் நீர் முறுக்கேற்றியதை,
புரட்சிக் கவிஞரே, மறப்போமா யாம்?

அரசியல் விடுதலைக்குப் பாரதியார்
கவிதை எழுதினார்! சமுதாய விடுதலைக்கு
உம்மைப்போல் எழுதினவர் யார்? எவருளர்?
உதாரணத்துக்காக ஒரு விரலை மடக்க உண்டா ஆள்?
ஆயிரக் கணக்கான கவிதைகளால்
இராமயண இராமனைப் பாட
ஆயிரம் கவிஞர்கள் பிறந்தார்கள்.
இராவணன் மறத்தை, திறத்தை, மாண்பைப் பாட,
ஒரு கவிஞன் இன்றுவரைப் பிறந்தானா? -
முதன் முதலில், உம்மைத் தவிர!

'தென் திசையைப் பார்க்கின்றேன்
என் சொல்வேன் - என்றன்
சிந்தையெல்லாம் - தோள்களெல்லாம்
பூரிக்கு தடடா!
'குன்றெடுக்கும் பெருந்தோளான்,

கொடை கொடுக்கும் கையான்,
குள்ளநரிக் கூட்டத்தின் கூற்றம்.
என் தமிழர் மூதாதை.
என் தமிழர் பெருமான், இராவணன் காண்' -
-என்ற ஓர் இனமானப் பாடலைப் பாடி
வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சியைப் பெறச்
செய்த பாவலர் அல்லவா நீர்?

தன்னந்தனியராக, இந்திர சித்தனாக -
ஆத்திகத்தின் சூதுக் கவிதைக் களத்திலே -
சுயமரியாதை வாளேந்தி நின்றவர் யார்?
எம் புரட்சிக் கவிஞர் அன்றோ?
எதிரிகளுக்கு வேல் வடித்துக் கொடுத்த
இலக்கிய வீடணர்கள் முகத் திரையைக் கிழித்து,
வெற்றி வாகை சூடிய ஓர் இன மானக்
கவிஞரல்லவா நம் பாவேந்தர்?

தமிழால் கரு நனைந்தவர்கள் எல்லாம்
தமிழுக்கே பகையாகி
உமிழ்ந்த அவர்தம் கவிதைகளைக் கண்டு
உலகம் சிரித்தபோது,
"இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம்?
நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே !
செந்தமிழுக்குத் தீமை வந்த பின்னும்
இந்தத் தேகம் இருந்தொரு லாபமுண்டோ?" -
என்று, உலக வரலாற்றிலேயே - முதன் முறையாக
மொழிப் போருக்குப் புறப்பாட்டு
நடைப் பாடலை எழுதி செங்களம் காண
தமிழ் மக்களை கட்சி பேதமின்றி அழைத்த,
முதல் புரட்சிக் கவிஞர் - பாரதிதாசனாரைத்
தவிர வேறு யார்? இந்த தமிழ்ப்பற்று
எக் கவிஞனுக்குக் கிட்டியது?

பூ கிள்ளும் நகத்தாலே - புலி உடம்பைக் கீறி,
சூடான இரத்தத்தில் - சந்தக் கவிதைகளை,
சித்திரக் கவிதைகளை, உருவகக் கவிதைகளை,

பனையோலைப் பள்ளத்தில்
படிக்குங்கால் கற்கண்டாகி, முக்கனிச் சாறாகி,
கேட்குங்கால், அவை பூச்செண்டாகி,
காதுகளிலே வீழ்ந்து - நின்று நிலைத்த தமிழகத்தில்,
தமிழுக்கும் - பண்பாட்டுக்கும் வந்தேறிய பகை -
ஆட்சித் திமிருடன் வழக்காட நினைத்தபோது,
பாவேந்தர் எப்படி 'பா' இயற்றினார் தெரியுமா?

கிழக்கைக் கீறி எழுந்த - செங்கதிர்போல -
எழுத்துக்களை எழுச்சியாக்கி,
அசையை அரிமாவாக்கி,
ஒலிக் குடும்பம் தனை ஒழுங்காக நிரவி,
பாட்டால் தன்னையே பரவ வைத்து,
பழங்காலம், நிகழ்காலம், எதிர்காலம்
என்ற காலக் கணக்கைக் கடந்து,
உடலில்லாமல் போனாலும் உலவி,
உயிர்ப்பாய் நின்ற பழம் புலவர்களைப் போல -
புரட்சிப் பாடல்களை எழுதி, நமக்குப்
புத்துணர்வை ஊட்டியவர் பாவேந்தர்.

வெடிக்கும் எரிமலையை
வெங்காயத் தோல் போல் உரித்த,
நெடியால் - அந்த நொடிப் பொழுதில்-
ஓரின எதிர்ப்பை அடி, முடி ஆடிட -
அதிர்ந்திட, விழி நீரை வீழ்த்தும்
ஆற்றல் படைத்தவர் கவிக்கோ !

பிளந்த பூகம்பத்தைத் தனது பின்னி வரும்
சந்தத்தால் தைத்துப் பழக்கப்பட்ட
விந்தைக் கவிஞர் பாவேந்தர் !

புயற்காற்றை எடுத்து, அதற்கு
முயற் பொறுமை தந்து,
பாட்டு வயலிலே விளையாடவிட்டு
வேகவேடிக்கையைப் பார்த்த
புதுவை அரிமா அவர் !

காலையிலே கதிர் முளைக்கத் தவறி விட்டால்,
கனல் போர்த்திக் கிடக்கும் கவிதை ஒன்றைப்
பாவேந்தர் கட்டளையிட்டால் -
அது ககன பவனி வந்தால் - போதாதா?
கடும் கோடையைக் கொட்டிட !

கோல நிலா கொஞ்சம் காலம் கடந்து
வருவதாகத் தகவல் கிடைத்தால்,
சந்தனத்துச் சந்தத்தால் -
சந்திரனை உருவாக்கி
நிலா வருகின்ற வரையில்
நீ, நின்று - சந்தன ஒளி தா ! என்று,
அம்புலிக்கே ஆணையிட்ட
காலக் கவிஞன் பாரதிதாசன் !

மேகம் முரண்பட்டு,
முத்து இறைத்தன போல்
கொட்டிக் கிடக்கும் மீன்கள்,
குறு விழி தன்னை மறைக்குமானால்,
பாவேந்தர் - தனது எழுத்துக்களை
வாரி வாரி இறைத்து, அவற்றை
விண் மீன்களாய் எரிய வைப்பார்.

விடியல், சற்றுக் களைப்பால் விழி மூடி,
தூக்கக் கலக்கத்தில் துவண்டு தூங்கி விட்டால்,
மேதினியின், மேன்மையான
காலைக் கபாடத்தைத் திறப்பது யார்?

நித்திரைச் சுகத்தில் - மோன உலகம் - சற்றே
நிம்மதியாகக் கிடக்குமானால்,
சத்தான காரியங்கள்
சமயத்தில் நடக்காதே - என்றஞ்சி,
வைகறை வரத் தவறுகின்ற
நேரத்திலே எல்லாம்,
கை-கறையுடைந்த தனது கவிதையால்
பாரைத் தட்டி எழுப்பும் திறனும் - உரனும்
பாவேந்தர் கவிதைக்கு இருந்ததை
பல நிகழ்வுகளிலே பார்த்திருக்கின்றோமே !

*பாவேந்தர் கவிதையிலே -*
*இலக்கணப் பிழைகள் உள்ளன*
*என்று, அழுக்காற்றுப் பிறவிகள் சில,*
*புறம் பேசித் திரிந்தன.*
*எதிரிகள் விரித்த, அந்த வஞ்சக*
*இலக்கண வியூகச் சூதுக் களத்தை*
*பாரதிதாசன் கண்டார்.*

*இலக்கணப் பாசறை குவிந்த*
*கருவிகளாய் எழுச்சி பெற்றார்!*
*காய்வரும் இடத்தைக் கவிதையில் காட்டி,*
*கனிவரும் அசைக் கிளைகளைச் சுட்டி,*
*குற்றியலுகரம் புணரும் இடங்களில்*
*ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் எல்லாம்*
*இசையால் ஏற்பட்ட இன்னலல்ல*
*என்று கடாவி, விளக்கம் தந்தார்! -*
*வீழ்ந்தனர் விரோதிகள் -*

*மோனை முத்திரைகள் இல்லையே -*
*என்று மோதியவர்களின்*
*முகத்திலறைந்தாற்போல!*
*'காரிகை' உமிழுமாறு!*
*பெரும் புலவன் கபிலர் காட்டிய*
*கைவரிசைகளை*
*வேல்களாக்கி வீசிச்*
*சாய்த்தார் - சழக்கத்தை !*

*இலக்கணப் பாதையில் வழுக்கி விழாமல்,*
*எப்போதும் - எச்சரிக்கையோடும், விழிப்போடும்*
*எழுதும் முதிர்ந்த கவிஞரை, புரட்சி வித்தகரை*
*வேண்டுமென்றே குறை கூற முற்பட்டார்கள் - சிலர்!*
*காரணம், அவர் பெரியார் பாதையிலே நடந்து,*
*ஆதிக்கத்தை ஆணி வேரறச் சாய்க்கின்றாரே என்ற காழ்ப்பு!*
*அதனால்தான், அவர் கவிதையை எடுத்துக் கொண்டு,*
*இச்சொல் எதற்கு? அச்சொல் ஏனில்லை?*
*சமத்கிருதம் வருகின்ற நேரத்தில்*
*தற்பவம் தேவையா?"*

என்று கேட்டு, அவர் பெயருக்கு
இழிவு தேடினார்கள் - அழுக்காறாளர்கள்!
அத்தனை பேரையும் பாவேந்தர்,
இலக்கணக் களத்தில்
தன்னந் தனியராக எதிர்த்தே நின்றார்!
எனவே, பாவேந்தர் பாரதிதாசனாரை
வெளிச்சம் என்று நினைத்து,
ஆத்திகத் தேசிய விட்டில்கள்
குவிந்து வந்து விழுந்தன!
ஒளிக்கத் தெரியாதச் சூட்டால்
அவர்களைச் சாம்பலாக்கி விட்டார்.

தமிழின் மொத்தத்தில் குத்தகை எடுத்தக்
கவிதைக் காப்பியங்கள் பலவற்றை,
அறிவுச் சமுதாயத்திற்கு
அறிமுகப் படுத்தியவர் பாவேந்தர்.

கோடையில்கூட ஓடையில்
தண்ணீர் இருக்காது: ஆனால்,
புரட்சிக் கவியின் கவிதை ஓடையில்,
கோடை கூடக் கவிதை குடித்ததாக
உண்டு வரலாறு!

பருவத்தில் பூக்கும் பூக்கள் உண்டு. ஆனால்,
பாவேந்தர் காலம் கடந்து எப்போதும்
பூக்கும் உவமைப் பூக்காடு!
சுதந்திரம் என்பதைப் பாரதி செய்தார்.
அந்தச் சுதந்திரத்தில் வாழும் மக்களைப்
படைத்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்!

பொலிவற்ற கீழ் மேல் புரட்டுக்களை
நலிவு செய்வதில், அவர் பாண்டியன் வாள்!
ஓய்வெடுத்த வாழ்க்கையில் - ஒடுங்கும் மயிலாய்,
கைம்பெண் வாழ்வு கசந்து நிற்க,
நிலா முகத்தாளை வேர் பலா என்று கூறி,
பூரிக்கும் சுவை மகிழ்ச்சியால்
இளைஞர்களுக்கு

இன்பத்தை நினைவூட்டி, அதே
பூரிப்பால் கோரிக்கை எழுப்பிடத் தூண்டிய-
புதிய மறுமலர்ச்சி சமுதாயச் சிற்பி அவர் !

இளமையின் அந்தியில் இருக்கும் கிழத்திடம்,
கிளியை ஒப்படைப்பது திருமணமல்ல !
சடங்கின் சட்டத்தில் பெண்ணை மாட்டுதல்,
கண்ணை இழந்தவன் செயலென்று
சொன்னவர் புதுவைக் கவிஞர்!

வீழ்ச்சியுற்ற தமிழகம் எழுச்சி கொள்ள -
அதன் மடமையைப் பிளக்கும்
பாறை வெடிகுண்டானார்!
பிறமொழி ஆதிக்கம் சிறகெடுத்துப் பறந்தால்-
வேலென எழும்பிய அவருடைய
வெம்மைச் சொற்கள்-
வளைத்த வானத்தை
நிமிர்த்தும் வாக்கியங்கள்!
படுத்த நிலத்தை எழுப்பும் யாப்பு,

அன்புக்கு அவர் தந்த விளக்கம்-
அருளுக்கும் - அது பொருந்தும்.
நல்ல குடும்பத்தைச் சொல் விளக்கேற்றி,
கல்லாமை கழித்து, கல்வி நட்டு,
அறிவைத் திறக்கும் திறவுகோல்
புதுவைக் குயில்!

வந்துபோகும் நிலவல்ல - கவிஞரது பாடல்!
வரம்போடு வீசும் தென்றல்! - வெள்ளுவா பொழிவு!
பாரதியாரைப் பற்றி, அவர்
பாடியதைப் போல -எவரும்
இனி பாட முடியாது!
அவ்வளவு புகழாரங்களையும் -
புதுப்புதுச் சொற்களால் ஆட்சி செய்து,
ஆசானுக்கு ஆரமணிந்தவர்!

தமிழ்ப்பண்புகள் - சிந்தும் தேன்மலர்கள்-
அவர் எழுதிக் குவித்த நூல்கள்! -
காலமெலாம் நாறும் மனோ ரஞ்சிதங்கள்!

சந்தத்திற்கு அடிமையாகும் சந்தக் கவியா?
செந்தமிழுக்குப் பாரதிதாசனாரே சான்று!
உருகும் வெள்ளியை ஒழுங்காகச் சொல்லாக்கி,
பெருகும் தமிழுணர்வை, பொற்குழம்பை
வாரிப் பூசிச் சமைத்தக் கவிதைகள்
தமிழர்க்கு ஊன்று கோல்கள்.

"வாழும் வகை செய்யும் "பா", மருந்து -
இருட்டுக்கு விளக்கு! சமுதாயத்திற்கு நெறி! -
அவரது கவிதைகள்!
தமிழியக்கம் தலை தூக்கி நிமிர -
அமுதைக் கடந்து அள்ளித் தந்த சொற்கோ !
கனல் பட்டெரியும் கற்பூரம்போல், அவர் தமிழின் -
அனல் பட்டு எதிரிகள் தீய்ந்தனர்.

காற்றைக் கட்டளையிட்டு,
கடலை வேலை வாங்கி,
மலையைத் தொழச்செய்து,
தென்றலைக் கவரி வீசவைத்து,
அருவியை ஆராரோ பாடச் செய்த - அற்புதமான
இயற்கைக் கவிஞர் - புரட்சிக் கவிஞர்!

பாவேந்தர் புகழை - நாவேந்தர் ஒருவர்
சிலையாக்கி, இனம் மறவா வடிவமாக்கி,
அலையாடும் கடலோரம்
அழகாக வைத்தவர் அறிஞர் அண்ணா !

மூச்சுள்ள வரையிலும்
முத்தமிழைப் பாடினார் பாரதிதாசன்! அந்த
மூச்சைத் தன் மூச்சாகக் கொண்டு,
கவிப் பெருமையைப் புவி போற்ற
நிலைநாட்டிய, அந்த
அறிஞர் குல அறிஞரை - நம்மால்
நினையாமல் இருக்க முடியவில்லை.

சிந்துக்குத் தந்தையே !
சிங்காரச் சந்தமே !
நீர் தந்த தெங்கிள
நீர் சுவைப் பாடல்கள்
எமைவிட்டுப் போனாலும்,
உமை விட்டு நீங்காத
உள்ளங்கள் கோடி உண்டு!

பாவேந்தே ! உம்மால் உருவானோம் -
தமிழ் உணர்வு பெற !
உமை நினைத்து உருகுகின்றோம் -
கண்ணாரம் சுழலக் - சுழல !
குயில் பாடும் இடத்தில் -
கோழிகளும் வந்ததுண்டோ !
தமிழ் பாடும் உமது இடத்தில்
தமிழ்த் துரோகிகளும் வரலாமோ!
விபத்துக்கு இதை விட ஒரு
விளக்கம் தேவையா?

உருண்ட சந்திரனின் உருவத் திரள் கண்டு -
மருண்ட மனிதர்கள், பாவேந்தர் காலத்திலேயே
நடமாடிய வடமொழி வருடிகள்!
எட்டிக் கொட்டையிலே இறக்கிய சாறு
அவர்களது பேச்சுக்கள் - எண்ணங்கள்!

அந்தக் கந்தல் துணிகள் எல்லாம், இன்று -
கன்னித் தமிழுக்கு நானென்று,
அரசியல் பேன் பிடித்த
தலைகளுடன் பேசுகின்றனவே - ஐயா !

பாரதிதாசனே !
'பா' திறந்து ஆசானே !
சீர்பூத்த தமிழே !
தமிழ்க் கரும்பே !
கவிதைத் தேனே !
இலக்கியப் பாகே !
கவிஞர் குலத் தலைவா !

கூர் பூத்த பாடல் மொட்டே !
தமிழ் மலர்க் கையே !
பேர் பூத்த புகழே !
தமிழ்ப் பேழையே !
உனது வாழ்நாள்
பரிதியில் எழுதப்பட்ட
ஒளிர்க்கற்றை !

நீர் வடித்த நெருப்புக் கவிதைகளை
உலகத்தின் இருப்பாக வைத்துள்ளீர்!
ஆண்டுகள் வரும்!
ஒவ்வொரு ஆண்டும்
உமை நினைந்து ஓடும் !
நகரும் அந்த நாட்களில் – எங்கள்
தமிழ் நெஞ்சங்கள் –
உம் நினைவோடு நகரும்.

ஐயா ! கவிஞரய்யா !, நீர் –
ஒரே தடவையாகப் பிறந்தவர்!
அதனால் ஒரே தடவையாக இறந்தவர்!
தமிழ்த் துரோகிகள் சிலர்,
இங்கே பல முறைகள் இறந்து – பிறந்து
கொள்ளிச் சட்டிக்குப் பின்னாலே
பல தடவை போகிறார்கள்!

அவர்களை எல்லாம் நினைக்கும்போது,
பாவேந்தர் இன்னும் வாழ்ந்திருக்க வேண்டாமோ!
காலத்தின் அவசரத்தால்
கரை கடந்து சென்று விட்டாரே !
காட்டிய கோலம் போதுமென்று,
பூட்டிய சிறைக்குள் போய் ஒடுங்கி விட்டாரோ !

இந்த நாளில், உமை நினைந்து
நினைந்துக் கூவியழ,
எனது கட்டுரை ஒன்றால்தான் முடியும்!
எனது கண்ணீர் அருவி யாகின்றது!
இயற்கையின் செறிவெல்லாம்
இனிதாக நிறைந்தவரே !
'பா' புரட்சிக்குப் பர பிரம்மமே !
கெஞ்சுகின்ற என் நெஞ்சப் புலம்பலுக்கு,
ஏதோ ஒரு கவிதைக் கொடு!



# அமெரிக்கக் காந்தி-
# மார்ட்டின் லூதர் கிங்

இரக்கம் குடி கொண்ட எந்த இருதயமும் இறப்புக்கு இரையாகி விடுகின்றது.

காலம், நீண்ட நெடியதோர் வரலாற்றைத் தீட்டி வருகின்றது.

கணக்கிறந்த பொன்னேடுகளாக, மேதினி போற்றும் மேதைகளிற் சிலர் - அவ்வப்போது அதற்குப் பாத்திரமாகி வருகின்றனர்.

மனசாட்சிக்கு எப்போதும் துரோகம் செய்யாதவர்கள், வசந்தக் காலக் குயிலின் ஓசையைப்போல, தங்களது கருத்துக்களை மிதந்து வரும் காற்றினிலே கலந்து விடுகின்றனர்.

ஞானத்தின் திருப்பம், அந்தப் பெரிய மனிதர்களுடைய ஒழுக்கச் சீலத்திலே இருக்கின்றது.

எவனொருவன் தனது உயிரணுக்களைக் கவனமாகப் பாதுகாப்பது போல் - பிறரது உயிரணுக்களையும் பாதுகாக்கின்றானோ, அவன் உயரப் பறக்கின்ற சமாதானப் புறாவாக மாறுகின்றான்.

கரு நீல வானத்தில் நிலவு இருப்பதைக் கண்டிக்கவில்லை - மனித சாதி!

கருங்கடலில் முத்து இருப்பதை எவரும் எடுக்காமல் இருப்பதில்லை !

கருங் கூந்தலிலே அழகு தவழ்வதைக் கோபிக்கவில்லை - மனித சாதி!

கரிய மனிதனில் உயிர் இருப்பதை மட்டும் - ஏன் கோபிக்கின்றதோ தெரியவில்லை?

ஒருவனுடைய உயிரை மற்றொருவன் எடுக்கும்போது -

மனிதன் தாழ்ந்து போகின்றான்.

ஏனெனில், கொலைகாரனுக்கு, அவனுடைய உயிரின் மதிப்பே அவனுக்குத் தெரியவில்லை என்பதுதான்!

சந்தனம், சந்தனத்தோடு கலக்கவேண்டுமே தவிர, அதே சந்தனம், வேறொரு சந்தனத்தை விழுங்குவதில்லை.

இயற்கையோடு பேசக் கற்றுக் கொண்ட மனிதன், தத்துவங்களைத் தன் தாய் மொழியில் வடிக்கின்றான்.

அந்தத் தத்துவங்கள், கோயிலுக்கு முன்னாலே வேதமாகப் படைக்கப்படுகின்றன.

படிக்கப் படிக்க இனிக்கின்ற எழுத்துக்கள் உலகத்தில் இருக்கின்றதென்றால் - கருணை நெஞ்சத்தோடு ஒருவன் எழுதியவைகளே அவை.

எவனொருவன், சுதந்திரமாகத் தனது மனசாட்சியைப் பேச அனுமதிக்கின்றானோ, அவனுக்குப் புகழ் ஓய்வு நேரத்தில் கால் அமுக்குகின்றது - சாமரம் வீசுகின்றது - தேரிலே குந்த வைத்து வடத்தை இழுக்கின்றது.

எவனொருவன், தன் மனசாட்சியைப் பொய்யானத் தோற்றத்தால் கட்டிப் போடுகின்றானோ, அவனை, அவனுடைய மரியாதையே மதிப்பதில்லை.

முழுமையான ஞானம் பெற்ற ஒரு சித்தாந்த வடிவம் கொண்ட ஓர் உத்தமனை உருவாக்குவதற்கு, மனிதன் சூரியனில் காய்ந்து - மழையில் நனைந்து - குளிரில் வாடி - மிகவும் வேதனைப்பட்ட பிறகுதான் - சின்மயத்தில் இரண்டறக் கலக்கக் கூடிய ஒரு மனிதனை, அது உலகுக்குப் படைக்கிறது.

அத்தகைய நிலவினும் குளிர்ந்த படைப்புதான் டாக்டர் மார்டின் லூதர் கிங் என்ற அமெரிக்க காந்தி!

அவரது தந்தையும், தனயனும், வாழ்க்கை முழுவதும் சீர்திருத்தத்திற்காகவே போராடியவர்கள்! அதனால், மார்ட்டின் லூதர் என்ற சொல்லைச் சேர்த்துச் சூட்டிக் கொண்டார்கள். அவ்வாறு பெற்ற பெயர்தான் மார்டின் லூதர்கிங் என்ற பெயர்.

அவருடைய வாழ்நாளின் அடையாளம் - கடிகாரம் காட்டிய

மணித் துளியுமல்ல - காலண்டர் காட்டிய நாட் துளியுமல்ல!

மனித மூளையில் நினைவுச் சக்தி இருக்கின்ற வரையில், அவருடைய திருப்பெயர் எல்லோரா ஓவியம்போல் வண்ணம் கலையாமல் இருக்கின்றதென்றால், அதுவே மார்ட்டின் லூதர்கிங் அவர்களின் வாழ்நாள் அடையாளமாகும்.

பூண்டைவிடச் செடி உயரமானது! செடியைவிட மரம் உயரமானது. மரத்திற்குப் பக்கத்தில் மனிதன் ஒருவன்கூட உயரமாக இருக்கலாம். ஆனால், ஒவ்வொன்றும் தனது வேரைப் பூமியில் நட்டு, வானத்தைப் பார்த்தாக வேண்டும்.

மரத்தினுடைய உயரத்துக்குப் பக்கத்தில் ஒரு பூண்டினுடைய உயரம் குட்டையென்று பெயராலே வந்தாலும் கூட - இரண்டும் வானத்தைத்தான் பார்த்தாக வேண்டும்.

உலகத்தில், எல்லாம் நிமிர்ந்து நிற்கவே - வேரைப் பூமியில் வைத்தான் - உச்சியை ஆகாயத்தில் வைத்தான் இயற்கை யோன்!

ஆனால், மனிதன் மட்டும் தனக்கு அருகில் இருப்பவனை, வேரை வானத்தில் வைத்து - நுனியைப் பூமி நோக்கச் செல்ல விடுவானேயானால், இயற்கைக்கு விரோதமாக நினைக் கின்றான். நடக்கின்றான் என்றே பொருள்.

ஒரு நீக்ரோ, பாதாளத்தில் விழ வேண்டிய கல்லும் அல்லன் - ஒரு வெள்ளைக்காரன் வானத்தில் பறக்க வேண்டிய புறாவுமல்லன்.

இதற்கு எடுத்துக்காட்டான சம்பவம் தான், அமெரிக்க மாண்ட் கோமரியில் நடைபெற்ற ரோசா பர்க் என்ற கறுப்பின பெண் கைது செய்யப்பட்ட வரலாறு!

கறுப்பு இன மக்கள் பேருந்திலே பயணம் செய்தனர்! வெள்ளையர் ஏறி உள்ளே வந்தார்கள்!

எழுங்கள்! அமர இடம் கொடுங்கள் வெள்ளையர்களுக்கு! கட்டளையிட்டான் ஓட்டுநன் - வெள்ளையன்.

வீராங்கனை ரோசா பர்க் மறுத்தாள்! கைது செய்தது அவளை - வெள்ளை ஆட்சி!

அபராதம் பத்து டாலர் என்றது சட்டம். இந்த நிகழ்ச்சி கறுப்பர் இனத்தை விழிக்க வைத்தது. அணி திரண்டு எதிர்த்தது கறுப்பர் இனம்.

இந்த கறுப்பர் சங்கத்துக்குத்தான் தலைவர் பொறுப்பை ஏற்றுப் போராடினார் மார்ட்டின் லூதர்கிங்!

இவ்வாறு, கருப்பான ஒன்று கட்டாயம் அவமதிக்கப்பட வேண்டிய ஒன்று என்றால், அழிக்கப்பட வேண்டியது என்றால், எத்தனை வெள்ளைக்காரர்கள் தங்களது கண்களிலுள்ள கருமணியை அழிக்கத் தயாராக இருக்கிறார்களோ?

சூரிய வெளிச்சத்தால் சுடர் விடுகின்ற மனித முகத்திற்குப் பொலிவைத் தருவது, கடுமையான இருளில் நொடிக்கு நொடி துடித்துக் கொண்டிருக்கின்ற இதயம்தான் ரத்தத்தைக் கொடுக்கின்றது.

இருளிலே வாடுகின்ற இதயம் இல்லாவிட்டால், வெளிச் சத்திலே இருக்கின்ற தேகம், அழகோடு தன்னை விளம்பரப் படுத்திக் கொள்ள முடியாது.

கருப்பையின் இருளிலே உதயமான வெள்ளைக்காரன் - எப்படி இருளை வெறுக்கின்றான்? நம்மாலே அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்த வினாக்கள் அத்தனையும் - மார்ட்டின் லூதர் கிங்கின் கேள்விகளாகும். சிந்தனைகளின் சுழற்சியாகும்!

என்றைய தினம் கிங் நீக்ரோ இனத்திற்குத் தொண்டாற்றப் புறப்பட்டாரோ, அன்றைய தினம் முதலே -மரணம் அவரைப் பின் தொடர்ந்து கொண்டே வந்தது.

காற்றின் அழுத்தம் குறைந்த இடத்தில், காற்று எப்படி ஓடி வந்து அந்த இடத்தை நிரப்புகின்றதோ - அதனைப் போல, கறுப்பர்கள் என்ற காரணம் காட்டி அவர்கள் வேதனைப் படுகின்ற நேரத்தில், மார்ட்டின் லூதர் கிங் விரைந்தோடி வந்தார்.

அவர் இரக்கத்தின் சாட்சியாக, நின்றபோதெல்லாம் - அறியாமை இருளில், பண்பாடற்ற கருமையில் வாடியிருக்கின்ற அமெரிக்க வெள்ளைக்காரர்கள், அவரை எதிர்க்க ஆரம்பித்

தார்கள். வெள்ளையர்கள் தோல் எவ்வளவு வெள்ளையாக இருக்கின்றதோ - அவ்வளவு வெள்ளையாக அவர்கள் மனம் இருப்பதில்லை.

ஒரு வெள்ளைக்காரன் இசை வல்லுனனாக இருப்பானேயானால், அவன் சுருதி மீட்டாமல் இசைக் கருவியை இயக்க முடியாது!

ஆனால், அதே வெள்ளைக்காரன் ஒரு கருப்பனைப் பார்த்தவுடன், ஆதாரச் சுருதி கலைந்துபோன ஒரு யாழாகவே - மிகக் கடுமையாகக் குரல் கொடுத்து - கருப்பனைத் தாக்க ஆரம்பிக்கிறான்.

பைபிள் வரிகளில் வருகின்ற கருணைக் கடல் மடைத் திவலைகள், அதே வெள்ளைக்காரனைப் புனலாட்டிச் சுத்தப் படுத்தியதாகத் தெரியவில்லை.

இந்தக் கொடுமைகள், மார்ட்டின் லூதர் கிங்கின் இதயத்தில் கருந்தேளாகக் கொட்டின.

அந்த வேதனையால் - குடைச்சலால் அவர் தன்னையே உணர்ந்து, தன்னையே பிறர்க்களித்தார்! தன்னிலே பிறரைக் கண்டு - பிறரிலே தன்னை வைத்தார்!

அன்பாய், அருளாய், அருட் பிழம்பாய் அருள் மனமாய், நிர்மலமாய், நிதானமாய், தானமாய், தவமாய், இயேசு பெருமான், மாறியது ஏன்?

வெள்ளைக்காரன் ஒருவனின் மனதை, எதிர்காலம் பக்குவப்படுத்தாதா என்ற ஆசையால்தானே !

பாரச் சிலுவையில், ஆணி முளையிட, முள் முடி தரித்து, உயிர்வதைப் பட்டு, உயரிய கருத்தைச் சொல்லி ஊழிக்கே தலைவனாய் இருந்து இயேசு பெருமான் மறைந்து போனார்.

அத்தகைய கடுமையிலா ஒரு மனிதரைப் பின் தொடர்ந்து அவரின் சீரிய கருத்துக்களை - சிந்திய முத்துக்களை - வழங்கிய பவழத்தை - அளித்த நன்கொடையை - உலகுக்கு விளக்கிடும் பணியில் மார்டின் லூதர் கிங்கும் திகழ்ந்தார்.

அப்படிப்பட்ட அவரது நெஞ்சில், பலி பீடத்தின் முன்னால் கழுத்தறுக்கப்படும் ஆடு, கோழிகளைப் போல, நீக்ரோ மக்கள்

வேதனைப் படுவதைக் கண்டு தீராத துன்பம் அவருக்கு எழுந்தது.

வானத்தைப் பார்த்து வழி என்ன என்று மார்ட்டின் லூதர் கிங் கேட்டார்!

ஞானத்தைப் பார்த்து நியாம் எது என்று தனக்குத்தானே வினா தொடுத்தார்.

ஒழுக்கம் தவழும் திக்கை நோக்கி ஓடியோடி - இதற்கென்ன நீதி என்று கேட்டார்.

முடிவு, திருந்தாத மனித குலத்தைத் திருத்தும் பொருட்டு - அறப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

உலக உத்தமர் காந்தியடிகளின் அறப்போர் தத்துவத்தை - அகிம்சைக் கருத்தைத் தனது பொது வாழ்க்கைப் பாடமாக ஏற்றுக் கொண்டார். அதனால் அவர் அமெரிக்க காந்தி என்ற புகழைப் பெற்றார்!

அவருடைய அருளற அகிம்சைப் போராட்ட முறையால் விஞ்ஞான முரட்டுத்தனத்தில் இருப்பவரையும் மெய்ஞ்ஞான வழிக்குக் கொண்டு வர முடியும் என்று நம்பினார்.

சுழலும் மனமும் - சுழலும் துப்பாக்கியும் கொண்ட ஓர் அமெரிக்கன், அமைதியிலே பூக்கும் ஆனந்த மலராக என்றைய தினம் மலருவான் என்று - அவர் மனக் கோட்டை கட்டினார்.

மார்டின் லூதர் கிங் பேச ஆரம்பித்தால், சொலல்வல்லன் - சோர்விலன் என்பதை மெய்ப்பிப்பார்.

அவரது வாய் சிதறிய முத்துக்களைப் பொறுக்கி எடுக்க - ஆன்மிகச் சீர்திருத்த அறிவுடைய எவரும் வெட்கப்பட மாட்டார்கள்!

அன்பிலே வேரோடி, அருளிலே கிளையிட்ட அவரது பேச்சுக்கள் - துன்பிலே இருந்த நீக்ரோக்களைத் தென்பிலே கொண்டு திணித்தன.

அமெரிக்கக் கூன் முதுகுகள் அத்தனையும், அவரது சொற்பொழிவை, செயற்றிறனைக் கண்டு நிமிர்ந்தன.

வெள்ளைக்காரனும் - கருப்பனும், தனது தாய்க் கருவிலே இருக்கும் போது, மாதம் பத்துதான்.

காதல் அனுபவம் ஒன்றுதான்!

கல்லறை இருளும் ஒன்றுதான்!

உயிரின் எடையும் ஒன்றுதான்!

இருப்பினும் என்னை, ஏன் அடிமை

என்று அவன் அழைக்கவேண்டும்?

அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன். 1862 -ம் ஆண்டிலேயே அடிமைகளுக்கு விடுதலை அளித்துப் பிரகடனம் செய்தார்.

1927-ம் ஆண்டில், ஆப்பிரிக்கக் கண்டத்தின் சியர்ராலி யோனில் என்ற ஊரில், அடிமை முறை ஒழிக்கப்பட்டது.

நீக்ரோ, இனத்தின் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்ட பிறகுமா நான் அடிமை? என்ன நியாயம் இது?

நான் ஏன் வெள்ளையனை, எசமான் என்று கை கூப்ப வேண்டும்? இது தன்னையறிந்த இதயம் தந்த பாடம் - கிங்குக்கு!

அதனால் அறப்போர்க் களம் கண்டார். வேகமான நீக்ரோ மக்கள் திரள் திரளாய் அவரைப் பின் தொடரலாயினர்.

வெற்றி பல கண்டார்! வெள்ளையனின் நிமிர்ந்த தலை, குனிய ஆரம்பித்தது. நீக்ரோ இனம் விழித்தது.

நிறவெறி, இனி நேரடிப் போராட்டத்தில் இயங்கத் தயக்கப்பட்டது- வெட்கப்பட்டது!

அதன் எதிரொலி, சதித்திட்டம் என்ற சிலந்திக் கூட்டைப் பின்ன ஆரம்பித்தது.

இது போன்ற சிலந்திக்கூடுகள் - முன்பொரு தடவை அமெரிக்கக் குடியரசுத் தலைவர்களாக இருந்த ஆபிரகாம் லிங்கனுக்கும் - இராபர்ட் கென்னடிக்கும் பின்னப்பட்டன.

இப்போது மார்டின் லூதர் கிங்குக்கும் அதே சிலந்தி வலை விரிக்கப்பட்டது.

நகர சுத்தித் தொழிலாளர்கள் நடத்தும் அறப்போரைத் தலைமையேற்று நடத்திய மார்டின் லூதர் கிங் சுட்டுக் கொல்லப் பட்டார்.

அவர் சாவதற்குச் சில நொடிகளுக்கு முன்னால் கூட, தன்னைச் சந்திக்க வந்த பாதிரிமார்களை, 'தெய்வமப் பாசுரம் பாடுங்கள்' என்று இதயம் கனியக் கனியக் கேட்டுக் கொண்டார்.

ஆபிரகாம் லிங்கன் இதயத்தைப் பிளந்த துப்பாக்கி - கென்னடியைச் சின்னா பின்னமாக்கிய துப்பாக்கி, அதோ, கிங்குக்கும் பின்னாலே நீட்டிக் கொண்டிருந்தது.

உலக சமாதானத்திற்காகவும் - எடுப்பாரற்ற பிள்ளைகளாக இருப்பவர்களுக்காகவும் - எந்த நேரமும் சிந்திக்கும் சிந்தனைக் கூடமாக விளங்கும் - அவரது தலைப்பகுதியை நோக்கி, துப்பாக்கிக் குண்டுகள் ஓடி வந்தன.

உறுதியான லட்சியங்களால், கொள்கைகளால் உரமேறிய அவரது தலையை நம்பி - உன்மத்தன் ஒருவன் உருவிவிட்ட குண்டு மேலே செல்ல முடியாமல் தங்கி விடுகின்றது.

பசி தீர்க்கும் வாழைக் குலை

கீழே சாய்வதைப் போல,

பனி மலர் அவிழ்ந்த மணக்கும்

கருத்துடையான் மார்ட்டின் லூதர் கிங் என்ற

மனித நேய மேதை, நிலமிசை துவண்டு வீழ்ந்தார்.

நிலா நழுவிற்றோ!

நித்திலம் உதிர்ந்ததோ?

மான் ஒன்று கீழே மாய்ந்ததோ?

மாணிக்கம் சிதறிற்றோ?

தேன்குடம் சாய்ந்ததோ?

தென் பாங்கு சோர்ந்ததோ?

என்ற, நிலையில், அமெரிக்கக் காந்தி என்று போற்றப்பட்ட மார்ட்டின் லூதர் கிங் மக்களை விட்டுக் காலத்தோடு கலந்தார்.

வளைந்து கொண்டே தேம்பி அழும் வானம், இனி நிமிர்ந்து நிற்க எத்தனை காலம் ஆகுமோ?

உலக உத்தமர்கள் இப்படி அடிக்கடித் துப்பாக்கிக் குண்டுகளால் இறப்பதால்தான், வளைந்தது போன்ற இந்த வானம் இன்றுவரை நிமிராமல் போயிற்றோ?

பாசி பிடித்த சமுதாயம் - பதம் குலைந்த சோற்றைப் போல யாருக்கும் பயன்படாமல் போவதற்குக் காரணம் என்ன? மக்கள் தொண்டர்கள் பலியாவதால்தானோ?

அறிஞர்களைக் கொல்லுவதால், உத்தமர்கள் உயிர்களைப் பறிப்பதால் - நல்லவர்களை நசுக்குவதால்தான்! என்பது இப்போது புரிகிறது.

துப்பாக்கி ஏந்திய இந்தக் குணங்கெட்ட பாவிகள், குழந்தையிலே எப்படிச் சிரித்தார்கள்? எவ்வாறெல்லாம் நடித்தார்கள்?

அந்த மனித நேய துரோகிகள் பேசிய மொழியைக்கூட மழலை என்று கூறுகின்றார்களே சில மேதைகள்.

பிற்காலத்தில் கொலைகாரனாக மாறக்கூடியவன்-

ஆபிரகாம் லிங்கனைக் கொல்லக்கூடியவன் -

இராபர்ட் கென்னடியை வீழ்த்தக் கூடியவன் -

மார்டின் லூதர் கிங்கைச் சாகடிக்கக் கூடியவன் -

மகாத்மா காந்தியைச் சுட்டு மாய்க்கக் கூடியவன் --

இந்திரா காந்தியை துப்பாக்கியால் படுகொலை புரியக் கூடியவன் -

இராஜீவ் காந்தியை மனித வெடி குண்டால் குலைக்கக் கூடியவள் -

சிறு வயதில் வெட்டுக் கிளியைப் போலத்தான் தத்தித் தத்தி ஓடியிருப்பார்களோ ! அடப் பாவிகளே!

அவரவர்கள் நடையழகைப் பார்த்து- அவரவர்களைப் பெற்ற தாய்ப் பால் சுரக்கப் பூரித்திருப்பாள் அல்லவா?

ஆனால், அவர்கள்தான் பிற்காலத்தில் அறிஞர்குலத் துரோகிகள்! அறிவின் கொலைகாரர்கள்! அவனியின் கரும் புள்ளிகளாக! - ஆனார்கள்! இல்லையா?

மாசு மருவற்ற அந்த இளம் பிஞ்சுகள், பிற்காலத்தில் கொலை காரர்களாக மாறுவதை - எந்தக் காலத்தினோடு சேர்ப்பது? எந்த வினைகளில் ஏற்று மன்னிப்பது?

எந்தத் தெய்வத்திடம் போய் மாரடிப்பது? எந்தத் தத்துவம் இதற்குப் பதில்கூறும்?

அமெரிக்கக் குடியரசுத் தலைவரான ஆபிரகாம் லிங்கன் இருந்த இடத்தையாவது கென்னடி நிரப்பினார் - ஒருவாறு ஆறுதலுற்றோம்!

இராபர்ட் கென்னடி இருந்த இடத்தையாவது மார்ட்டின் லூதர் கிங் நிரப்பினார் - எப்படியோ தேறுதலுற்றோம்!

ஆனால், மக்கள் தொண்டன் கிங் இருந்த இடத்தை நிரப்ப - ஆள் யார்? உலகம் தேம்பி அழுகின்றது, விக்கி விதிர்ப் படைகின்றது.

அதனைப் போலவே, ஆபிரகாம் லிங்கனைக் கொன்ற கொலைக்காரன் ஜான் வில்கியூஸ் பூத் இடத்தை கென்னடி யைக் கொன்ற ஆஸ்வால்டு நிரப்பினான்!

ஆஸ்வால்டு இடத்தை, மார்டின் லூதர் கிங்கைக் கொன்ற ஜேம்ஸ் எர்ல்ரே என்ற கயவனொருவன் நிரப்பினான் - இல்லையா?

நல்லவர்கள் இருந்த இடத்தை நிரப்புவதற்கு - நல்லவர்களும் வருகின்றனர். கெட்டவர்கள் இருந்த இடத்தை நிரப்ப - கெட்டவர்களும் வருகின்றனர்.

காலம் இந்த இரு பிரிவையும் கவனம் வைத்துக் கொண்டு தான் வருகின்றது. இதற்கு முடிவுதான் என்ன?

நல்லவர்களை நாசமாக்குவதற்குத் தீயவர்கள் வருவது இயல்பு - இயற்கை என்றால்....

இந்த உலகம், ஒரு பரிபூரண - களங்கமற்ற - எல்லாம் வல்ல ஓர் இறைவனால் படைக்கப் பட்டது என்பது உண்மைதானா?

மார்டின் லூதர் கிங் இறப்பால் - கலங்கிய கண்களோடு - மனித நேய மாண்போடு - இதை நாம் எப்படி நம்புவது?

என்னுடைய உயர்ந்த சக்தி, பஞ்ச பூத வேரில் கட்டப்

பட்டிருப்பது உண்மையானால்,

அந்தச் சக்தியின் பெயரால் வெட்ட வெளியில் விரிவாக இருக்கின்ற இறைவனை,

மாலையிலே மவுனமாக இருக்கின்ற இறைவனை - நான் ஒரு கேள்வி கேட்பேன்

அதற்கு அவன் பதில் கூறியே ஆகவேண்டும் - அல்லவா? இல்லை என்றால் என்ன பணி பகுத்தறிவுக்கு - அல்லது ஆன்மிகத்துக்கு?

மார்ட்டின் லூதர் கிங்கை இழந்து உலகம் மழையாகத் தேம்புகின்றது! மின்னலாக வெம்புகின்றது! - உத்தமர்கள் இறந்து கொண்டே போகின்றார்கள் என்பதால்!

உதவாக்கரைகள் - ஊர் கெடுப்பவர்கள் -மோசடிக்காரர்கள் - திடீர்க் கோடீஸ்வரர்கள் உயிரோடு உலா வருகின்றார்கள்! ஜால்ரா தட்டிகளும் அதற்கு உண்டு!

ஏன் தெரியுமா? எப்படியும் வாழலாம் என்ற இந்த ஈன மலக் குடலைக் கழுவும் கயமைச் சூழ்நிலையால் அல்லவா?

சனியன் பூமியிலே இருக்கும் - சந்நிதானம் சாவுக்குப் பின்னாலே இருக்கும்.

முப்பத்தொன்பது வயதிலே உலகப் புகழை அள்ளிக் கொண்டு சென்று விட்ட பூத் இருந்த உலகத்தில், அவருக்கு எதிராக துப்பாக்கி நீட்டிய கயவனும் இருக்கின்றானே! இதுதானே, காலத்தின் மறம்?

“முற்பகல் செயின் பிற்பகல் விளையும்” என்ற ஔவை அறிவுரை பலித்து விட்டதே - பார்த்தீர்களா?

மார்ட்டின் லூதர் கிங்கை 1968- ஆம் ஆண்டு அமெரிக்கா மெம்பீஸ் நகரில் ஜேம்ஸ் எர்ல் ரே என்பவன் கொலைக்காகத் துப்பாக்கியை தூக்கினான். ‘வாளெடுத்தவன் வாளாலே சாவான்” என்ற இயேசு வாயுரைக்கு சான்றாவோமே என்பதைச் சிந்திக்கவே மறந்து விட்டானே!

சாவு என்பது உத்தமர்களுக்கு அராஜகமாக வருகின்ற காரணத்தினால்தான், இந்த உலகம் பெருமை அடைகின்றது

என்பதை ஒருவாறு உணர்கிறோம்.

மாமனிதர் மார்ட்டின் லூதர் கிங், நெஞ்சிருக்கும் வரை - நெஞ்சிலே நினைவிருக்கும் வரை - நினைவிலே நேர்மைக் கரு இருக்கின்ற வரை அவர் இருப்பார்.

மனிதாபிமானி கென்னடிக்காக ஒருமுறை அழுது புலம்பிய அமெரிக்கா, மார்ட்டின் லூதர் கிங்குக்காகவும் அழுது கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறது. இது காலத்தின் பரிணாமக் கோலம்.

"தீமையை எதிர்க்க வேண்டும் என்ற உணர்ச்சியை இயேசுவிடமிருந்து கற்றேன்"

என்று மனம் திறந்து கூறிய மார்ட்டின் லூதர் கிங் என்ற அந்த அகிம்சை நிலா - அமெரிக்க 'வெள்ளுவா' மண்ணிலே சாய்ந்து, சாய்ந்து விட்டது.

மார்ட்டின் லூதர் கிங், நீக்ரோ மக்கள் உரிமைக்காக பதினான்கு முறை சிறை சென்றவர் - தியாகத்தின் வைரத்திற்கு வேறு என்ன வேண்டும் சான்று?

ஒருமுறை மார்பில் கத்திக்குத்துக் காயத்தை கிங் ஏந்தினார். மூன்றுமுறை - படுகாயங்களோடு தாக்கப் பட்டும் பிழைத்துக் கொண்டார்.

மார்டின் லூதர் கிங் குடியிருந்து வாழ்ந்த வீடு - கோயில், மூன்று முறை குண்டுகள் வீச்சுக்கு இலக்காகியது என்றால் - அவரது, இன, சமத்துவ, இயக்கம் அங்கே எப்படி வலிமையோடு வேரூன்றியிருந்தது என்பதையே உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றது!

அண்ணல் காந்தியடிகளின் அடியொற்றி நடந்து, அமெரிக்க நீக்ரோக்களுக்கு இன, சமத்துவம் கிடைக்கப் போராடிய இந்தச் சமாதானப் புறா, உலகின் தலை சிறந்த நோபல் பரிசையும் பெற்றது!

"எனது உயிர் போவதன் மூலம் - ஒரு நாட்டின் ஆன்மா காப்பாற்றப்படுமானால், மரணத்தைக் காட்டிலும் நான் விரும்புவது வேறொன்றுமில்லை' என்று கூறிய அந்த மனிதாபிமானி கிங் மறைந்தார்!

சாகாப் புகழ் எய்திவிட்ட அந்தச் சரித்திர வீரனுக்கு, இனமான

எழுச்சி இயக்கத் தலைவனுக்கு – நாம் தலை வணங்குவோமாக!

ஏன் தெரியுமா? உலகிலே இனமான விடுதலை எழுச்சிக்காக போராடிடும், இன இயக்கம் இரண்டு உள அதற்காக! ஒன்று, தமிழகத்திலே உள்ள் திராவிடர் இன இயக்க எழுச்சி, அதாவது, டிரவிடியன் மூவ்மெண்ட்.

மற்றொன்று அமெரிக்காவிலே இயங்கும் மார்டின் லூதர் கிங்கின் கறுப்பர் இன இயக்கம்! அதாவது, நீக்ரோ மூவ்மெண்ட்.

மக்கள் உரிமைக்காக, உலக அமைதிக்காகப் போராடிய அந்த மாவீரனை அளித்த -நீக்ரோ இனத்தை – வாழ்த்துவோமாக!

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்

பெருமை உடைத்து இவ்வுலகு (குறள்)

-என்ற, அய்யன் திருவள்ளுவர் பெருமான் வாழ்க்கைப் புகழ் தத்துவ இலக்கண மாண்பை அருமையோடு பின்பற்றிப் பெருமையோடு வாழ்வோமாக!



# கவியரசு "கண்ணதாச"னின் "நான் நினைத்துப் பார்க்கிறேன்!"

*கவிஞர் கண்ணதாசன் அவர்கள், "கண்ணதாசன்" என்ற, தனது திங்கள் இதழில், "நான் நினைத்துப் பார்க்கிறேன்" என்று தலைப்பிட்டு, தனது நெஞ்சுக்குத் தானே நீதி வழங்கிக் கொண்டார்.*

*தி.மு.கழகத்திலிருந்து சொல்லின் செல்வர் ஈ.வெ.கி. சம்பத்து அவர்களுடன் வெளியேறி, தமிழ் தேசிய கட்சியைத் துவங்கி, பிறகு, காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்து, மீண்டும் தி.மு.கழகத்திற்கே திரும்பி வருவதற்காக, தனது கடந்த கால அரசியல் பொது வாழ்க்கையை, "நான் நினைத்துப் பார்க்கிறேன்" என்று கண்ணதாசன், மாத ஏட்டில் எழுதியிருந்தார்.*

*இன்று, நான்காவது முறையாகத் தமிழக முதல்வராக இருக்கும் கலைஞர் அவர்கள், 1969-ம் ஆண்டின்போது 'மாலை மணி' நாளேட்டில் துணை ஆசிரியராக இருந்த என்னைத் தொலைபேசியில் அழைத்து, கவிஞர் கண்ணதாசன் மனக்கோட்டம் பெறும் நிலையில், தவறாக ஏதும் எழுத வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.*

*அதற்கேற்ப, கலைஞர் கட்டளையை ஏற்று, கந்தலான கவிஞருடைய இதயத்திற்குக் கொடுக்கப்படும் கனிவான ஒத்தடங்களாக - 'மாலைமணி' நாளேட்டில் கவிஞர் கண்ணதாசன் அவர்களை வரவேற்றிட அன்று எழுதிய எனது அனுதாப வரவேற்பு - இந்தக் கட்டுரை!*

கரையேறிய பிறகு மீண்டும் கடலிலே விழக்கூடாது என்று அந்தக் கவிதை நெஞ்சு நினைக்கின்றது.

இறந்த காலத்தில், அது பறந்திருந்த வானத்தில் உதிர்ந்து

போன சிறகுகள், இன்னும் இடந்தேடி அலைந்து கொண்டு இருந்தன.

அந்தப் பறவையின் சொந்தக்காரன் வங்கக் கடலோரக் கல்லறையிலே நீடு துயில் கொண்டிருக்கின்றான்.

"பறவை மிக உயர்ந்தது" இந்த விமரிசனம், அந்தப் பறவைக்கு இறந்துபோன அவரது அண்ணா அவர்கள் தந்த இலக்கியப் பாராட்டு!

கழகத்தை விட்டுக் கை நழுவி விட்ட அந்தப் பறவை - காணாமற் போன போது, வளர்த்தவனுடைய விழிகள் - வானை அண்ணாந்து பார்த்தன.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, அந்தப் பறவை எங்கோ போவதாக அவர் கேள்விப் பட்டார்.

திராவிடர் கூட்டிலிருந்து தேசிய மரத்திற்கு, கேட்பார் பேச்சைக் கேட்டு, முன் கோபத்தோடு, தனது சிறகுகளைப் படபடவென்று அடித்துக் கொண்டு - பறந்து போன கவிதைப் பறவை அது.

அதற்கு அரசியல் சுருதி உண்டு - ஆனால், தாளம் தான் ஒழுங்காக இல்லை! காரணம், குழந்தை மனம்!

அது குந்திப் பாடுவதற்காக விரிக்கப்பட்ட பாயில் - ஊதைக் காற்று உட்கார்ந்திருப்பதாகவே - வளர்த்தவர் நினைத்தார்!

அந்தப் பறவை - ஒரு கவிதை! அதனுடைய வேர், பாதாளத் தில் இருந்தது. குருத்து மட்டும் கருகி - மொட்டாகி விட்டது!

ஆனால், அது பாடிய பாட்டுக்கள் - இன்றும் பசுமைப் புரட்சிகளை இலக்கிய வயலிலே முப்போகமாக விளைவிக் கின்றன.

அது, சூடிய "பா" மாலைகள், இலக்கிய மலர்கள் அத்தனையும் இன்று வரைச் செத்துப் போனதில்லை. நாற்றத்தை நாட்டிலே பரப்புகின்றன!

வீணையாய் இருந்த பறவை - எடுப்பார் கைகட்கு மாறி மாறி - வீணாகி விட்டது! "முகநக நட்பு" என்போர் அடுப்புக்கு அந்த கவித்துவ வீணை விறகாகிவிட்டது!

காரணம், முன்பின் என்று கட்சித் தொண்டுகளின் பருவ காழ்ப்புத் தேள்கள். அக்கட்சிக்குள்ளேயே ஒன்றுக்கு ஒன்று கொட்டிக் கொண்டிருந்த அழுக்காற்றுக் குடைச்சல்கள் தான்.

உனக்கு முன்னால் விரிந்திருக்கின்ற வானம் - உனக்குச் சொந்தமில்லையா?

அந்த வானத்தில், சாகாத அன்பை உன்னை வளர்த்தவன் எழுதி வைக்கவில்லையா?

நீர் கைவிடப்பட்ட குமாரன் இல்லையே! உன்னை மேய்த்தவனுடைய இதயம் உனக்குப் புல்வெளியாகத் தோன்றவில்லையா?

நீர் பெற்ற புதிய கட்சியின் அரசியல் அனுபவங்களை, அவனுக்கு முத்தமிழ் விருந்தாகப் படையலிடும்!

அவனுடைய புல்லாங்குழல் ஓசைக்கு முன்னால் - உனது காதுகளை நிமிர்த்திக் கேள் !

எதையும் அவன் காலடியிலே வைத்துவிட்டு, உனது இதயத்தை மறுபடியும் உனக்கே சொந்தமாக்கிக் கொள்!

இலையுதிர்ந்த மரமல்ல நீர்! இன்னும் சுருண்டு கிடக்கின்ற இளந்தளிர்கள் அவிழாத கிளைகளை - நீர் வைத்திருக்கின்றீர்!

போகக் கூடாத இடத்திற்கு நீர் போகவில்லை - ஆனால், வரக்கூடாத நேரத்தில்தான் வர நினைக்கின்றீர்.

இதற்கிடையில், நீர் பாடிய சத்தங் கெட்டப் 'பா'க்களை நான் விமர்சிக்க விரும்பவில்லை !

திராவிடரியக்கத் தோட்டத்திலே மலர்ந்து மணம் பரப்பிய மல்லிகை அல்லவா நீர்?

நீர் பிறந்த அரசியல் கருப்பை - அசோகா ஓட்டலுக்குள்ளே இருக்காது! ஏனென்றால், கழகத்தை விட்டுப் பிரிந்துபோக அங்கேதானே உமது நெஞ்சமென்ற நிலத்திலே வித்திடப்பட்டது.

அது, அண்ணா என்ற அன்னையின் குடல்! அது, நீரும் - சகதியுமாகத்தானே இருக்கும்!

அதில் இன்னும் வடியாத அன்பு மட்டும் - எந்த இடத்திலும் இருக்காத அளவு உன் மீது குடி கொண்டிருக்கிறது.

தாயின் முகத்தில் காலத்தின் கீறல்தான் இருக்கும் - இளம் வெட்டு அதில் இருக்காது.

ஆனால் முழுமை பெற்ற இதயம் மட்டும் அங்கே எப்போதும் உண்டு.

அதோ, உன்னை வளர்த்தவன் ஆகாயத்தைப் பார்த்து - உனக்காக வேண்டிக் கொண்டிருக்கின்றான்.

செத்த பிறகும் - உனக்காக அவன் பல தடவை அழுதிருக் கிறான் - நான் அதைக் கேட்டிருக்கிறேன்.

ஏன் தெரியுமா? மரணக் கூற்றத்துடன் அந்தத் தமிழ் நாட்டு மாமன்னர் பலநாள் போராடிக் கொண்டிருந்தார் அல்லவா?

அப்போது, "சொர்க்கத்தில் அண்ணா" என்று நீர் யெழுதியெழுதி விக்கி விக்கித் தேம்பித் தேம்பி வசன நடைப் பாடலில் பாடிக் கொண்டிருந்தீரே !

மரணப் போராட்டத்தில் இருந்த அந்த மன்னர் - உனது புலம்பலோசையைச் செவியாரக் கேட்டுக் கேட்டுக் கண்ணீர் உகுத்தவர் - அதனால்தான்!

"எப்போது போகும், ஏன் இன்னும் போகவில்லை"என்று கூறிக் கொண்டே - பதவிக்காகக் கிளிசரின் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தவர்கள் இடையே, நீர் தானே உமது இறக்கை களைப் படபடவென்று அடித்துக் கொண்டு சில நாட்கள் தினந்தோறும் "கடிதத்தில் " எழுதி எழுதிக் கண்ணீர் விட்டீர்!

தேசிய மரத்தடியிலிருந்த படியே, தன்னந் தனிப் பறவையாக - பாசத்தோடு பரிந்து அழுத - முதல் பறவையே - நீர் தானே!

"அறிவு" உம்மைக் குறை கூறும் போதெல்லாம் - நீர் அதனை மீறிச் சென்றிருக்கிறீர்!

அதனால்தான், மனித நேயப் பண்புக்கு - நாட்டு நேய அன்புக்கு முதலிடம் தந்து, "மரத்தறிவைப்" புறக்கணித்து - அண்ணாவுக்காக அழுதபடியே இருந்தீர்!

இதனை எல்லாம் மறந்த நீர் - இப்போது கூறுகிறீர் - 'கழுவப்படாத பாத்திரத்தில் - வேகப்படாத சோற்றை உண்டதாக !"

யாருக்காக நீர், கதறிக் கண்ணீர் விட்டீரோ - அந்தத் தாய் மனத்தவர் உமக்கு இலைபோட்டு இப்படியா பறிமாறினார்?

வீட்டுச் சோறு வேண்டாமென்று, நீர் மாற்றார் விருந்துக்குச் சென்றவர்தானே?

அங்கே உமது மரியாதை பறிபோனது பற்றி - உம்மை வளர்த்தவர் மரணமான பிறகுதானா சொல்ல வேண்டும்?

ஜீவனற்ற கண்ணீரைச் சிந்துகின்ற பாட்டுப் பறவையே! காலமும் ஓலமிடுகின்றதே - உமது எழுத்தைப் படித்து!

உம்முடைய வரவு எப்போதும் அதிகம்தான்! ஆனால், செலவை அதிகமாக்கிக் கொள்ள நீர்தானே துள்ளித் துடித்தீர்?

உமது சொந்தப் புத்திகள் தவறு செய்யலாம்! ஆனால், உமது தந்தையின் புத்தி இனியாவது காப்பாற்றட்டும்!

நீர் ஒரு "கோப்பை !" அதை, நீரே பல தடவை கூறியிருக் கிறீர்! 'கோப்பையிலே என் குடியிருப்பு' என்று!

குழந்தை உள்ளத்தோடு பலர் அறிய அதைத் திரைப் படத்திலே பாடியும் தொலைத்து விட்டீர்!

உள்ளதை உள்ளபடியே உரைப்பவனால்தான் - உண்மை யான உரிமை வரலாற்றை உலகுக்கு எழுதமுடியும் என்பதை, காந்தியடிகளுக்குப் பிறகு உணர்த்திய பறவை நீர்.

அந்தக் கோப்பையிலே உமது தந்தைதான் குடியிருக்கிறார் - திராட்சை ரசமாக !

அவரும் இப்போது வற்றிவிட்டார், சாறு இருந்த இடத்தை - நீர் முகர்ந்து பாரும்.

உமது பாசத் தலைவர், விலை மதிக்கமுடியாத வாசத்தை வீசிக் கொண்டிருப்பார்!

கூடு கட்டத் தெரியாத குயில் நீர்! காக்கையை நம்பி யாக்கையை வளர்த்தீர்!

நீர், செல்லாக் காசல்ல! உம்முடைய சந்தை காஞ்சி புரத்திலேஇருக்கின்றது!

தன்னம்பிக்கை வையும்! பொன்னான எதிர்காலம் உமக்குப் பூரித்து நிற்கிறது.

உமது அண்ணன்தான் - உமக்கு இரு கண்களாக இருந்தார்! அவருடைய ஈரலை உமது எழுத்தால் எண்ணற்ற முறை நீர் வதைத்தீர்!

அந்தத் தலைவன், வைதாரையும் வாழ வைப்பவர்! பதமான சொற்களால், இதமாகப், பகையைக் கூட நெருங்கிப் பார்த்துப் பாசம் ஊட்டியவர்!

அவர் விடுத்த சாபம்தான், உம்மைப் பாதாளத்தில் பயிராக்கிக் கொண்டிருந்தது!

விமானத்தில் இருந்து விழுந்தவரல்ல நீர் - பொது வாழ்விலிருந்து விலகி - பிரிந்து, எடுப்பார் பொருளாய் வீதியிலே போய் விழுந்தவர்!

கடலில் நீர் மிதக்கவில்லை - கண்ணீரில் மிதக்கின்றீர்! யாரையும் பிடித்துக் கொண்டு நீந்த வேண்டிய அவசியமில்லை உமக்கு!

அதோ பார்! ஒரு கரும் படகு வருகின்றது. அதிலே, உமக்கு அறிமுகமானவர் அமர்ந்திருக்கின்றார்.

அவருக்கு சீவாத தலை! - சரி பொருத்தமில்லாத சொக்காய்! - காவிப் படர்ந்த பற்கள் - கருத்து ஒளியூட்டும் கண்களும் உண்டு.

நீர், அதிலே ஏறிக் கொள்ளும்! அவர் உம்மைக் கரை சேர்ப்பார்! அதே நேரத்தில் - உமது கறையையும் கழுவுவார்!

உமது நெஞ்ச நெருப்பு குளிருகின்ற இமயம் அது. அறுந்துபோன உமது வீணையை வாசிக்கும் பல்கலை வித்தக வித்வான் அவர்!

நீர் ஓர் அறிவிலியல்ல - காரணம், உன்னை வளர்த்தவர் அறிஞர்! திரு நாவுக்கரசர் - செஞ்சொல் வித்தகர்!

நீர், குழந்தை - குழி விழுந்த, உம் கன்னத்தில் முத்தமிட - அவர் அதோ... உதடுகளை அருகில் கொண்டு வருகிறார்.

உமது கன்னம் முத்தத்தால் நிரம்பி வழியட்டும்! அவர் கன்னத்துக்கு நீ தாசனாக இரு! - கண்ணுக்கும் தாசனாக மாறு!

வீணையே பாடு! கவிதையே எழுது!

*நெஞ்சே நினை ! வஞ்சனையற்ற உள்ளமடா*

*உனது உள்ளம்!*

*காயும்போது பிறரை நீர் நன்றாகவே காய்கிறீர்!*

*உம்மையே குத்திக் கொள்ளும்போது, அதைவிட வேகமாகவே நீர் குத்திக் கொள்கிறீர்! இதுதான் தன் நிலை !*

*வாழத் தெரியாதவன் பட்டியலிலே வந்து விட்ட வரிகளாகி விட்டீரே!*

*சமாதிக்கு வா! சாந்தமடை! உமது சரித்திரம் முடிந்து விடவில்லை!*

*சந்தனப் பெட்டியிலே நமது சந்ததி உறங்குகின்றது - எதையும் தாங்கும் இதயத்தோடு!*

*சிந்தனைப் பெட்டியிலே உமது உறுதி இன்னும் சிதையாமல் இருக்குமென்று நம்புகிறேன்.*

*சிந்தனைக் குயிலே!*

*சீர்குலையாப் பொதிகைக் காற்றே !*

*சிந்தி! சிந்தி!! பிறகு சில்லென்று வீசுக, தாய்க் கழகம் நோக்கி!*



# விடுதலைக் குயில் பாரதியார்

கங்கு கரை இல்லாமல் கரை புரண்டு ஓடிவரும் மங்காத தமிழுணர்வில், மக்களின் அணுவெல்லாம் தேனினிக்கச் செய்யும் தொண்டு - தெய்வத் திருத் தொண்டு!

கூனிக் குறுகி இருந்தவர் நெஞ்சம் பொதிகையாய் நிமிர்ந்து, வான் படைத்த புகழை வாரி எதிர்காலத்தின் முகத்தில் எறிய வேண்டும்.

விடுதலை உரிமைக்கு வேக்காடு ஏற்பட்ட நேரத்தில், அதைப் பூக்காடாக்கப் புறப்பட்டவர் விடுதலைக் குயில் பாரதியார்!

குன்றிய உயர்வு - கடமையாற்றக் கூசிய நெஞ்சம் - அடிமைத் தனத்தின் காலடியில் வீழ்கின்ற பொருட்கள்!

மங்கியதைத் துவக்கி, துவண்டதை நிறுத்தி, மாறியதைப் புதுப்பித்து, பூரணப் பொலிவோடு தோற்றம் அளிக்கும் பணியில் ஈடுபட்டவர் மா கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்!

தமிழ் படித்த புலமை என்பதாலே - தரித்திரம் அவரைத் தலைகீழாகக் புரட்டி எடுத்ததோ! - என்னவோ!

"காசு இல்லாதவன் கடவுளே ஆனாலும் - கதவை இழுத்து சாத்தடி" என்பதைப் போல, காசு இல்லாதவன் அறிஞனாக இருந்தாலென்ன? கவிஞனாக இருந்தால் என்ன?

உற்றமும் - சுற்றமும், பாரதியாரைப் பார்த்தவுடனே தங்களது கதவுக்கு இரட்டைத் தாளைப் போட்டன.

வா என்று அவரை வரவேற்கும் கைகள் மிகக் குறைவாகவே இருந்தன.

சமுதாயம், பொருளாதாரத் துறையில் கவிஞனைக் கேவலமாக மதித்த கடை கெட்ட காலம் அது!

பாட்டெழுத ஆரம்பித்தவனை நோட்டம் சொன்னவர்கள் - தமிழ் நாட்டில் ஏராளம் பேர் இருந்தார்கள் - இருக்கிறார்கள்!

அவ்ர்களுக்கு என்ன தெரியும்! - பாரதியாரது எட்டைய புரத்து வாழ்க்கையைப் பற்றி?

அவரது தந்தையார் கணக்கிலே வல்லவர் - வட நாட்டு திலகரின் தந்தையாரைப்போல!

திலகர்கூடக் கணக்கிலே எதிரியைத் திணறடிக்கும் திண்மை பெற்றவர்! பாரதியாருக்குக் கணக்கு என்றாலே எட்டிக்காய்!

அவர் தந்தை, 'கணக்கென்று' வாயெடுத்தாலே போதும். உடனே பாரதியார், தந்தையின் சிந்தனை ஓட்டத்தைச் சிதறடிக்க, கணக்கு, பிணக்கு, மணக்கு, ஆமணக்கு என்பார்!

'ஏன் விழிக்கிறாய்? என்று, கோவைக் கண்ணோடு பாரதியார் தந்தை நெருப்புதறக் கேட்பார்.

உடனே, தாழ்ந்த குரலோடு, "விழி, கழி, சுழி, வழி, குழி, பழி, இழி, பிழி'' என்று பாரதியார் வார்த்தைகளை அடுக்கிக் கொண்டே பேசுவார்!

அவரை அடிப்பதா - அணைப்பதா என்று அவரது தந்தை திணறுவார்˙ சில வேளைகளில் அவர் போக்கு கண்டும் சிரித்தும் விடுவார்!

கவிதைக்குச் சொல்லடுக்குவது - பாரதியாரது இளமைக் காலப் பைத்தியம்! அறிவின் அலைச்சல்!

இந்த ஞானக் கிறுக்குதான் பிற்காலத்திலே அவரை விடுதலைக் குயில் பாரதியாராக மாற்றியது!

'செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று அவர் எழுதிய பாடலுக்கு - அப்போது எவ்வளவு எதிர்ப்பு தெரியுமா?

காதிலே தேன் பாய்ந்தால், ஈ எறும்பெல்லாம் உள்ளே புகுந்து மொய்க்காதா? பிறகு அறுவை சிகிச்சைதானே செய்ய வேண்டும்?

ஞான ஆணவங்கள் சில, இப்படியும் இடித்துக் கேட்டன.

இதற்கெலாம் பதில் கூற ஆரம்பித்தால். அவரால் பாட்டெழுத முடியுமா?

பாரதியாரைப் பொறுத்தவரை, எழிலான புதுக் கருத்துக்கள் பூக்கின்ற செடிகளை - அவர், சிந்தனையிலே பாத்திக் கட்டி வளர்த்தவர்.

கவிதை மலர்கள் பூக்கும் பூந்தோட்டமாகத் திகழ்ந்தவர்!

புதுமை என்றால் போதும், பழமையிலே ஊறியவர்கள், பவனியே வந்தார்கள்- அவர் மீது போர் தொடுத்திட !

'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும்

ஓர் நிறை' என்று சமுதாயத்தை - அவர் எடை போட்டார்.

மலைக்குப் பக்கத்தில் மடு இருக்கும்போது, இறைவன் படைப்பில் ஏற்றத் தாழ்வு இயற்கை என்று - அவருக்கு எதிர்ப்பாட்டு பாட ஆரம்பித்தார்கள் - பலர் !

'ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்!' என்று, பாரதியார் குன்றேறி நின்று மீசையை முறுக்கிக் கொண்டே கூவிக் கூவிப் பாடினார்!

கோழையானால் கூடப் பரவாயில்லை, கொடுமையான கொள்கைகளைப் பெற்றிருந்தவரெல்லாம் - நெடுமலை போல நிமிர்ந்து அவரை எதிர்க்க ஆரம்பித்தார்கள்!

புதிய காற்றை மூக்கிலே இழுக்கின்ற மனிதா-

புதிய உணவைச் சுவைக்கின்ற மனிதா-

புதிய நாதத்தைக் கேட்க விரும்புகின்ற மனிதா -

புதிய உடைகளை உடுத்தி அழகு பார்க்கின்ற மனிதா-

புது வாழ்வைத் தேட கால் கடுக்க ஓடுகின்ற மனிதா -

ஒரு புதிய கருத்தை - ஒரு புதிய திருப்பத்தை -

ஒரு புதிய உலகத்தை ஏற்றுக் கொள்ள - ஏனடா

மறுக்கின்றாய்? கேட்டார் பாரதியார் தனிமனிதனை - தமிழ்ச் சமுதாயத்தை!

எவரும் பதில் கூறாமல் நாணத் தீயால் சூடுபட்ட

ஊமையாக - ஆமையாக - நத்தையாக -

நகர்ந்து கொண்டே இருந்தார்கள்!

பழமையில் மனிதனுக்கு இனிமையென்றால், இறந்த காலத்தில் ஐக்கியமாகிவிட்ட ஒரு பிணத்தை - நாறுவதற்கு முன்னாலே ஏன் தூக்கிக் கொண்டு ஓடுகிறான் அவன்?

பழமை மீது உனக்குத் தணியாத காதல் இருப்பதில் தவறில்லை. ஆனால், உன் வீட்டைப் புதுப்பிக்கின்றாயே - ஏன்?

வீட்டைப் புதுப்பிக்க மனம் உடைய மனிதனே!

நாட்டைப் புதுப்பிக்க மறுப்பது நியாயமோ!

புதுமைக் கண் கண்டு அந்த நாட்டின் இலக்கியத்தை நோக்கல் புன்மையோ? - கேட்டார் பாரதியார் தலைப் பாகையை வரிந்து கட்டிக் கொண்டே ! கேளாக் காதினராயினர் கேலி பேசியோர்!

தமிழ் இலக்கிய உலகில் "பாஞ்சாலி சபதம்" போன்ற புதிய முயற்சியில் ஈடுபட்ட அவரை, அன்றைய தினம் ஊக்குவிக்கத் தமிழகம் தவறி விட்டது.

தமிழனே - தமிழ்ச் சிந்தனைக்கு பகையானான். பிள்ளையே - தாய்க்குப் பகையானது! தனயனே அலட்சியக் குழி வெட்டினான் தனது தந்தைக்கு!

வானத்தில் எரியும் நெருப்புபோல - சுடர்வீசி நிற்கும் நாட்டுணர்வுக்கு, காற்றிலே கலந்த மோன கீதமாய், தூபமாய் - அமைந்தது பாரதியாருடைய தேசிய பாடல்கள் என்ற விடுதலை கீதங்கள்!

அடக்கு முறையால் அவரை அடக்கிட நினைத்தவர்கள் - சாக்காடு போகும்மட்டும் எதிர்க் கரம் தூக்கினார்கள். அதனால், தனது விடுதலை உழைப்புக்குத் தோழமை கிடைக்காதா என்று அவர் ஏங்கினார்!

விடுதலை வேட்கை மூலம் பைந்தமிழ்த் தேரை வழி நடத்திச் செல்லும் பொறுப்பு - பாரதியாருக்கு ஏற்பட்டது.

அன்று அலர்ந்த அழகுத் தமிழில் - தீவிர நாட்டுப் பற்றெனும் தமிழ்த்தேனை உண்ணும் வண்டானார் பாரதியார்!

அடிமை மடிமை என்ற ஊஞ்சலில் துயில் கொண்ட தேச பக்தர்களுக்கு - அவர், விழிப்புணர்ச்சியை ஊட்டிடும் விடுதலை முரசமானார்!

கற்பனைக் காட்டாற்றில் சொற்பயனை மிதக்கவிட்டு, சாதியைக் கழுத்தறுத்து, நீதியை நிலை நாட்டினார் பாரதி!

அவர் உள்ளுணர்ச்சியை ஊதியணைக்கப் புறப்பட்ட புயல் வெள்ளையன் சட்டத்திலேயிருந்து பிறந்தது!

கவிதையால் அறப்போர் ஆற்றத் தொடங்கிய அவரை - அடக்கு முறையெனும் மறப்போரால் வென்றிட முயன்றது ஆங்கில ஆட்சி!

ஆனாலும், அவரது பாட்டெழுதும் உணர்வு ஓட்டம் மட்டும் நின்றபாடில்லை, தளர்ந்த பாடில்லை. பாரதியார் நாடி ஏற்றுக் கொண்ட கொள்கை, குறிக்கோள், மக்கள் நெஞ்சமெனும் வெற்றித் திருநகரில் காலடி வைக்கின்ற வரையில், அவர் சொத்தையாக - சோடையாக - சோரம் போனவராக - சோர்வுடையவராக மாறாமலே பாடிப்பாடி போராடினார்!

அதனாலே, அவரது பாட்டுக்கள், மென்மேலும் நெய் பெய்யப்பட்ட நெருப்புப்போல - உணர்வுத் தீயை ஊர் ஊராகக் கொளுத்தின - பரப்பின!

அவரது கீதங்கள் - சிலருக்கு வழிகாட்டிகளாக அமைந்தன! தேச பக்த நல்வழியிலே தேக்கமற்று நடந்தார்கள் - மக்கள்!

பாரதியார் பாடல்கள், சிலருக்குச் செவியைக் கொடுத்தன. அவர்கள் - உணர்ச்சியைக் கேட்க ஆரம்பித்தார்கள்!

சிலருக்கு நாவைக் கொடுத்தன. அவர்கள் - தமிழ்ச் சுவையை வீரமாகச் சுவைக்க ஆரம்பித்தனர்.

சில கவிதைகள் - சிலருக்குப் புதிய பிறப்பையே தந்தன. அவர்கள் தங்களது பழைய பிறவியினையே மறந்தார்கள்!

ஆங்கில வேட்டாட்சிக் காட்டுத் தர்பார்

காலூன்றி இருந்த இந்தியாவை, விடுதலைக்கு

இலக்காக்க, அவர் மட்டுமல்ல, பாரதியின்

உயிர்த் தோழர்களான வ.உ.சிதம்பரம் பிள்ளை,

சுப்பிரமணிய சிவா, திரு.வி.க. மற்றும் பலரும் -

பால கங்காதரத் திலகர் பாதையிலே நடந்தார்கள்.

கப்பலோட்டிய - வெள்ளையனை எதிர்த்தார் வ.உ.சி.!

வெஞ்சிறை ஏகியே, சுப்பிரமணிய சிவா -

தொழு நோயாளராக மாறினார்.

பாரதியார் கவிதைகளோ - தேசிய மறவர்களுக்குப்

படைக்கலன்களாகவே மாறின !

பாரதியார் எழுத்துக்கள், பாடல்கள் - தமிழ்நாடு முழுவதும் விடுதலை உணர்வுகளுக்குரிய வெடிகுண்டுகளாக உரு வெடுத்தன !

அவருடைய உணர்ச்சிகள் - எதேச்சாதிகாரத்திற்கு அடங் காத அடங்காப் பிடாரிகளாக ஆவேச நடை பயின்றன. ஆறு உடைபட்ட வெள்ளமாக உருண்டோடின!

பாரதியாரின் சந்தக் கவிதைகள் - விந்தையானவை, மலடாக இருக்கின்ற மான உணர்ச்சியைக் கூட - அவை சூலாக்கி விட்டன!

வ.உ.சியின் தேசிய உணர்ச்சி, சிவாவின் உயிர் மூச்சு எழுச்சி - பாரதியாரின் தமிழ் - மூன்றும் முப்பெரும் படைகளாக விளங்கி, நாடெங்கும் விடுதலைக் களத்திற்கு வீரர்களைத் திரட்டின.

உண்டு உறங்கிச் சாவதற்காக பிறக்காத மனிதன் - பின் எதற் காகப் பிறந்தான்? இவ் வினா ஒவ்வொருவரின் நெஞ்சையும் உலுக்கிக் குலுக்கியது.

இலட்சியத்தின் அடிப்படையில் - கொள்கை வழியில் நடக்க வேண்டிய மனிதன் - இயற்கையால் நிர்ப்பந்திக்கப் படுகிறான்.

அவனது உரிமைகள் - அவனுடைய பரம்பரைச் சொத்துக்கள் - மனித வாழ்க்கைக் குரிய சான்றேடுகள்!

உயிரின் மீது கையை வைக்கின்ற மரணம், உரிமையின் மீது கை வைக்கப் பயப்படுகின்றதே - ஏன்?

எங்கோ இருந்து ஆட்டுத் தோலுக்கு இடம் கேட்டு வந்த வெள்ளை வியாபாரிகள் - இங்குள்ள தமிழர்களை - இந்திய சோதரர்களை - வீணர்களாக - விலங்குகளாக - நடத்துவதை எனது ஊனக் கண்ணால் பார்க்கின்றேன். ஆனால், எனது கண்

அதைக் கண்டு வாளாவிருக்குமோ?

அவன் வணங்கும் மதக் கோட்பாட்டிற்கே, அவன் செயல்கள் ஒவ்வாததென்றால், என் இனக் கோட்பாடுகள் ஏங்குமோ அவற்றை?

எழுச்சியோடு எப்போதும் இணங்கி இருக்கும் ஒரு மனசாட்சி, ஒரு சர்வாதிகாரத்தைத் தாங்குமோ?

-என்று, கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டவர் பாரதியார்! அந்தச் சிந்தைகளிலே மிதந்து மிதந்து நொந்து களைத்துப் போனார்.

இவ்வினாக்கள் என்ற படைக்கலன்களால், உருவாக்கப்பட்ட அவரது கவிதைகள் வேகம் , வெள்ளையனைச் சற்று திரும்பிப் பார்க்க வைத்தது.

'கொக்கு பறக்குதடி பாப்பா' என்று பாடி விடுதலை உணர்ச்சியை நாடக அரங்கிலே உருவாக்கிய எஸ்.எஸ் விசுவநாதாசுக்குப் போட்டியாக, பாரதியார் கவிதைகள் மனோ வேகத்தை மக்களிடையே பீறிட்டெழச் செய்தன.

'சிறைச்சாலை என்ன செய்யும் - தேசாபிமானிகளை? என்று வினா தொடுத்துப் பாடிய எஸ். ஜி. கிட்டப்பா, கே.பி. சுந்தராம்பாள் தேசிய உணர்ச்சிகளைவிட, ' வந்தே மாதரம் என்போம்' என்ற பாரதியாரின் தமிழாக்கப் பாடல் - ஒரு தேசிய புரட்சிக்கே வித்திட்டது.

வெள்ளையனிடத்திலே இருந்த முப்படைகளின் சக்தியை விட, பாரதியார் கவிதைப் படைகளின் பலம் மிருகத்தனமான தேசாவேசமாக உருவெடுத்து, காட்டாற்று வெள்ளம் போல மக்களிடையே பெருக்கெடுத்தது.

பாரதியார் விடுதலை உணர்வு, ஆங்கில ஆட்சிக்குப் பயங்கரக் கூற்றாக மாறுவதைக் கண்ட வெள்ளையன், நாடு கடத்தினான் - பாரதியாரை !

ஓரிடத்திலே இருந்து வேறோர் இடத்திற்கு உடலை மாற்றச் சட்டத்தால் முடியும் ! ஆனால் - உணர்வை?

இலட்சிய உணர்வு, எந்தக் குறிக்கோளை நோக்கி பாய விரும்புகின்றதோ - அங்கேயே அது மொய்த்துக் கிடக்கும்

என்பதை உணர மறந்தான் ஆங்கிலேயன்!

பாரதியாரது உணர்வுகள் - நாள்தோறும் விடுதலை பிரச்னைகளோடே விளையாடிக் கொண்டிருந்தன.

அடிமைப்பட்ட நம் மக்களுக்காக அவர் கொடுத்த அரிய செல்வங்கள், அவருடைய உழைப்பு, கடமை, நெஞ்சுரம், நேர்மையான லட்சியம், தன்னலமற்ற தேச பக்தி என்ற உணர்ச்சிகளேயாகும்.

"பாருக்குள்ளே நல்ல நாடு - இந்த பாரத நாடு" என்று, அவர் மீசையை முறுக்கிக் கொண்டு மறவனைப் போலப் பாடியபோது, கோழைகளும், ஏழைகளும் கொடி ஏந்தி ஓடோடி வந்தனர் - 'வந்தேமாதரம்' என்று!

பெருநெருப்புச் சுடரலைகளைக் கண்டு பயப்படும் மக்களைப் போல, பாரதியார் பாடிய கவிதைச் சிறு வரிகளைக் கண்டு கொதித்தான். கொந்தளித்தான் - வெள்ளையன்.

போராட்டங்களை ஒழித்து விடலாம்! - அறப்போர் மறியல் செய்வோரைத் தடுத்து விடலாம்!

ஆனால், உணர்ச்சியின் பிடரியைப் பிடித்துக் குலுக்கிக் கொப்பளித்து எழுதும் கவிஞனுடைய கவிதை வேகத்தை, சீற்றத்தை, புரட்சியை - யாரால் தடுக்க முடியும்?

காந்தியடிகளை மதித்தவர் பாரதி! "வாழ்க நீ எம்மான்" என்று பாராட்டும், வாழ்த்தும் கலந்து அவரைப் பாடிக் களித்தவர்.

அதே காந்தி, விதவை, மறுமண வாழ்வுக்கு மாறுபட்ட கருத்துடையவராக இருந்தபோது, கொந்தளித்து எழுந்த அதே பாரதி, "ஸ்ரீமான் காந்தி பிதற்றலுக்கு என்ன அர்த்தம்?" என்று ஆவேசமாகக் கேட்டார்!

சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கு எதிரி போல காந்தி இருந்தாலும் தணல்பட்ட கந்தகம் போல் காய்ந்து பொறிந்து வெடித்தவர் பாரதியார்.

இத்தகைய மக்கள் கவிஞன் சில வேளைகளில் குயிலாகவும் பாடிக் கொண்டிருந்தார்!

சில நேரங்களில் கந்தகக் கவிஞனாகவும் திகழ்ந்தார்! அவரது

நாக்கும், வாக்கும் இரண்டுமே சமுதாய விடுதலை உண்மைக்காக, நன்மைக்காகவே உழைத்தன !

குயிலை வைத்துக் கொண்டு - அதன் இசையைக் கேட்பதைப் போல - தனக்கு எதிரியாக இருக்கும் கவிஞனை வைத்துக் கொண்டு - அவனது பாட்டைக் கேட்க முடியாது.

எங்கோ இருந்து காற்றிலே மிதந்து வருகின்ற இசை, நச்சுக் கருத்துகளை ஏந்தி வருமானால் - அதனைத் தடை செய்வது முடியாத செயல் அல்லவா?

எனவே, தேச பக்தி நாட்டுப் பாடல்களைப் பாடிடும் பாரதியைச் சட்டத்தால் ஓட ஓட விரட்டினான் வெள்ளையன். ஓடினார்! ஓடினார்! பாரதி ஓடியபடியே இருந்தார் - புதுவையை நோக்கி!

ஆங்கிலேயனை மீறி, விடுதலைப் பாதையில் ஏறுபோல நடக்கவே - பாரதியார், பிரெஞ்சு நாட்டின் அதிகாரத்திலுள்ள புதுவையை நோக்கி - புது வேகத்தோடு நடந்தார்!

அங்கே, வ.வெ.சு. ஐயர், அரவிந்தர், கனக சுப்புரத்தினம் என்ற பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் தொடர்பும் பாரதியாருக்கு ஏற்பட்டது.

புதுவைக்கு வந்த பின்பு - புது வாழ்வா அவர் பெற்றார்? புதுப்புது திருப்பங்களைத் தமிழுக்கு உருவாக்கப் புதிய புதிய சிந்தனைகளெனும் தேரேறி உலா வந்தார்!

பாரதியார் கவிதா மண்டலத்தை அவர் புதிதாக உருவாக் கினார்! கனக சுப்புரத்தினம் என்ற பாரதிதாசனை தனது வாரிசாகப் பிரகடனப் படுத்தினார்.

தனக்குப் பிறகு - தமிழுக்குப் புதிய மொழியுணர்வு என்ற ரத்த ஓட்டத்தைப் பாய்ச்சினார்! பாரதியார் கவிதா மண்டலத்தை 'சுதேசமித்திரன்' என்ற நாளேட்டிலே உருவாக்கினார்.

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்காக

'கலம்பகத்தில்' - புதிய முயற்சி -

'இரட்டை மணி' மாலையில் - புதுப்பாங்கு

அந்தாதியில் - ஒரு புது திருப்பம் - 'பஃறொடையில்' - ஒரு புதுமெருகு!

உரைநடைக் கவிதை என்ற புதிய ஓர் உத்தி -

'பாஞ்சாலி சபதம்' என்ற புதுக் கருத்தைச் சுமந்து வந்த பழைய கருத்து - இவ்வாறெல்லாம் - சிந்தனைச் சிகரமேறி, கவிதைச் சீமானாக பன்முக வித்தகத்தோடு - அவர் தமிழ்த் தொண்டாற்றினார்.

எழுத்தில் - அரிமா குரலை எதிரொலித்து, "நெற்றி சுருக்கிடேல், நினைப்பதை முடி, நன்று கருது குன்றென நிமிர்ந்து நில்," என்ற புதிய 'ஆத்தி சூடி'யை இளைஞருக்கு ஈந்து மறு ஔவையாரானார்!

'முனையில் முகத்து நில்' என்று முழங்கி, முளைத்த வெள்ளைப் பகையைக் குலைத்து அழிக்க, விடுதலை அறம் பாடிய மறவராக விளங்கினார் - பாரதியார்!

புதுவை நகர் புகுந்தும், அவரது விடுதலை வேட்கை காய்ந்து புல்லாகவில்லை! உதிர்ந்த சருகாகவில்லை? பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து - அங்கேயும் நெருப்பை கக்கினார் - பாடலாக - போர் முரசாக!

வெள்ளையனுடைய வேகம், அதற்குப் பிறகு சற்றுத் தணிந்தது - பாரதியார் மீண்டும் சென்னை வந்தார்!

'சுதேச மித்திரன்' நாளேட்டில் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்! எழுத்துலகில் கதிரவனாக நடமாடினார்! மக்களுக்குள்ள பொறுப்பைத் தூண்டி - ஏகாதிபத்தியத்தைக் காய்ந்தார்!

விடுதலை வானத்தில் அடிமைத் தளையை அறுத்தெறியக் கவிதை பாடிப் பறந்த விடுதலைக் குயிலை, திருவல்லிக்கேணி கோயில் வேழம் ஒன்று தூக்கிப் போட்டது! 1921 - ஆம் ஆண்டு - அவர் காலத்தோடு கலந்தார்!

வீரனின் வாள்போல வளைந்த மீசையும்,

ஒளி படைத்த கண்ணும், உணர்ச்சி கொண்ட நெஞ்சமும், நிமிர்ந்த உடலும், குனியாத கொள்கையும் கொண்ட சுப்பிரமணிய பாரதியார், காலமெல்லாம் வறுமையோடு போராடி, சகாப் புகழ்பெற்று, தமிழ்ச் சரித்திர நிகழ்ச்சிகளில் ஒரு வீர காவியத்தின் பொன்னேடாகப் புகழ் பூத்துப் பொலிந்து விட்டார்.

வாழ்க பாரதியார் தேசிய உணர்வுகள்

வளர்க அவரது தமிழ் உணர்ச்சிகள்!



# இமை மூடா இரவுகள் சில!

வரினமே....!

உனது வாயிலைத் திறந்து விட்டாய் அல்லவா? எங்கே உனது பரிவாரங்கள்?

மக்கள் சந்தைக்கு நடுவில், விலை போகக் கூடிய சரக்குகள் எத்தனையோ இருக்கும்போது, விலை போகின்ற அற்பத்தனங் களைப் பார்த்திருக்கின்றாயா?

சட்டத்தை மீறுகிறவன் - சமுதாயத்தில் பஞ்ச கல்யாணி குதிரை மீது சவாரி செய்கின்றான்.

அவனுக்குப் பின்னாலே வருகின்ற பரிவாரங்கள், இறைவன் படைத்த ஜீவன்களாக இருக்கும் என்று நீ நம்புகின்றாயா?

மூளை முளைத்த மிருகம் மனிதன்! அவன் கையில் வேதாந்தம்!

அவனுடைய வாழ்தொலிகள் முழுவதும், அற்பத்தனத்தின் செவிக்கே விருந்தாக அமைகின்றன.

உனது பரிவாரமும் - அப்படிப்பட்ட இனத்தைச் சேர்ந்ததா என்றால், நான் அதைப் பார்க்க விரும்பவில்லை.இருண்டு போன தனது வீட்டை ஒளி மயமாக்கி, கடன் வாங்கி எண்ணெய் யைக் கொளுத்துகின்ற ஓர் ஏழையைப் போல, அந்த வெள்ளி வெளியே தெரிகின்றது. இதயத்தில் இரக்கம் இருக்கின்றதா என்று தேடிப் பார்ப்பதற்காக, 'மனிதன் எத்தனை நூல்களைப் படிக்கின்றான் தெரியுமா?

புத்தகத்தைப் படித்து முடித்தவுடன், அவன் வித்வானாகி விடுகின்றான்! - புலவனாகி விடுகின்றான்!

எதற்காக இதழைத் திறந்தானோ, அது அவன் கையில் கிடைப்பதில்லை.

ஆசார விளக்கங்களை ஆற்றுகின்றான். ஆனந்த பூர்த்திக்கு வழி காட்டுகின்றான். ஆனால், இரக்கத்தை மட்டும் அவனால் இன்னும் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அந்த வெள்ளி மீன் கூட, எதையோ தேடுவதற்காகத் தன்னைக் கொளுத்திக் கொண்டது. ஆனால், இதுவரை அது கண்டுபிடித்தது ஒன்றுமில்லை.

இரக்கத்தைத் தேடிய அந்த மனிதனும் – எதையோ தேடுகின்ற இந்த வெள்ளி மீனும், இடம் மாறி இருக்கின்றனவே தவிர, தகுதியில் ஒன்றுதான்!

இப்படி, விண்மீன்களை நீ வாரி இறைக்கின்ற காரணத்தால், உனக்கு மிகத் தாராள மனது இருக்கின்றது என்று உலகம் நம்புமென நினைத்துக் கொள்கின்றாயா?

தீவுக்கு அந்தப்புறம் தீய வழியில் சம்பாதித்தவர்கள் – இப்படித் தான் வாரி இறைக்கின்றார்கள்.

நல்ல நாணயமாக இருந்தால் பரவாயில்லை. மக்கள் பணத்தைக் கொள்ளையடித்த செல்லாக் காசுகள் அவை!

வள்ளல் தன்மை, வெளிப்படையாக உன்னைப் போல் காட்டுவதில்லை.

அறவிலை பகர்வோர் பூமியல் இருக்கின்றார்கள் என்ற – யாரோ ஒருவர் பாடி விட்டார்.

அவர்கள் வானத்திலேயும் இருப்பது, அந்தக் கவிஞனுக்குத் தெரியவில்லை போலும்! போ! அவன் சிந்தனைக்கு புலப்படாத வரையில் நீயும் நல்லதுதான்.

ஏ, வானே! அந்த நிலா உன்னை என்ன செய்தது?

இருண்டுபோன உனது முகத்தைத் தெளிவாக்கி வெளியே தெரிய வைத்ததே, அதற்குத்தான் இந்த பரிசா?

எந்த வாளால் அதை இப்படி வெட்டிச் சித்தரவதைச் செய்தாய்?

பாவம்! பிறையாக அதைத் தொங்க வைத்தாய்?

சிதைத்தவனுக்கும் சிரித்த முகத்தைக் காட்டுகின்ற ஓர்

உத்தமனை, அந்தப் பிறையின் முகத்திலே காண்கின்றேன் !

"கடல் உன்னிலிருந்து வந்ததா? நீ, அதிலிருந்து வந்தாயா? திருப்பி என்னைக் கேட்டு விடாதே!"

'நானி'லிருந்து 'என்' வந்ததா? 'என்'னிலிருந்து 'நான்' வந்ததா?

மண்ணோரம் இருக்கின்ற இந்தப் பெருங்கடல் வாயெல்லாம் சிரிப்பு!

விண்ணோரம் இருக்கின்ற உன் வாயெல்லாம் - தீப்பிழம்பு!

என்னுடைய கடந்த கால வாழ்க்கையில், மண்ணிலே இருப்பவன் நாள்தோறும் சிரித்துக் கொண்டே மற்றவனை அடிக்கின்றான் - அழிக்கின்றான்!

ஆனால், கடல் மட்டும் சிரித்துக் கொண்டே யாரையும் அழிப்பதில்லை ! அதற்குக் கோபம் - ஊழிக்கொரு முறை தான் வரும்! அப்போது பொங்கும்! பிரளயமாகும்!

நீருக்கு இருக்கின்ற இந்த நிலை - மனித நெஞ்சுக்கு ஏன் இல்லை? நீரின் ஒழுக்குக்குக் கரை! மனிதன் வாழ்க்கைக்கு வரம்பு? விண்ணுக்குள் இருக்கின்ற இறைவனை, ஒரு சிறிய வடிவத்தில் அடக்குகின்றான் மனிதன்!

சிறிய மனித உருவத்தில் இருக்கின்ற இறைவனை, ஏன் வரிவாக்க முடியவில்லை?

வானே !

வையத்தின் குடையே !

நீ, மண்ணைப் போர்த்துகின்றாய்!

மண், என்னைப் போர்த்துகின்றது!

நான், யாரைப் போர்த்துகின்றேன்!

இந்த கேள்விகளுக்கு தத்துவஞானிகள் விடையளிக்க வேண்டும்.

பொழுது விடிந்துவிட்டது.

## இரண்டாம் இரவு

*நிலவே !*

*விண் மண்ணைப் போர்த்துகின்றது !*

*மண் என்னைப் போர்த்துகின்றது!*

*நான் யாரைப் போர்த்துகின்றேன்?*

*நேற்று இந்தக் கேள்வியை வானத்துக்கு விடுத்தேன்!*

*வான் வளைந்து படுத்துக் கொண்டு தண்டால் எடுக்கின்றது!*

*இன்று, நீ பதில் கூற வேண்டும் - நிலாவே?*

*உனது முகம் இன்று வளர்ந்திருக்கின்றது.*

*முகம் வளருமா?*

*சிலருக்கு முகம் தேயும்போது, உனக்கு ஏன் வளரக் கூடாது?*

*அல்லது, திருக்குறளார் எழுதிய பல முகங்களா?*

*அது பெரிய இடத்து விஷயம்! அய்யன் திருவள்ளுவனிடத்திலே ஞானம் தெரிந்தவர்கள்தான் முகத்தை வகைபடுத்த முடியும்!*

*ஆனால், நான் உன்னிடத்திலேயே கேள்வியைக் கேட்கின்றேன்.*

*நேற்று ஏன் குறைந்தாய்?*

*இன்று ஏன் வளர்கின்றாய்?*

*நேற்று குறைந்தது -*

*இன்று வளருமானால்,*

*நேற்று இறந்தது - இன்று*

*வளர்ந்திருக்க வேண்டுமே !*

*நேற்று இறந்த மனிதன் - புழுக்களால் குறைந்து போகின்றான்.*

*புழுக்கத்தால் உருகிப் போகின்றான்!*

இதென்ன வேடிக்கை!

நேற்று வளர்கின்றது, - அது விண்ணில்!

நேற்று குறைகின்றது - அது மண்ணில்!

விண் - மண்ணைப் போர்த்துகின்றது!

அதுதான் கோப்பையைப் போல் கவிழ்ந்திருப்பது!

மண்-என்னைப் போர்த்துகின்றது.

அதுதான் கல்லறை!

எனக்குக் கீழே என்ன இருக்கின்றது?

இருக்கின்ற சக்தியெல்லாம் மேலே !

சக்கைகள் எல்லாம் கீழே !

நான் எதைப் போர்த்துகின்றேன், என்னையே போர்வையாக்கி, குளிராலே வாடும் ஒன்றுக்கு நான் பயன்பட்டால்!

அப்போது எது குளிரால் வாடுகின்றது?

பொழுது விடிந்துவிட்டது!

## மூன்றாம் இரவு

காலம் பலருக்கும் பொதுவானது என்று கூறுகின்றார்கள்!

என்னை நாடி வந்த காலம், என்னை இறப்புக்கு ஆளாக்கிய பின்பு ஓர் அங்குலம் கூட - அது என்னை விட்டு நகருவதில்லை.

குழந்தையினிடம் சென்ற காலம், அது வளர வளர - கூடவே செல்கின்றது. இங்கே காலம் பொதுவா?

என்னிலே வந்த காலத்தின் பெயர், நேற்று! எனக்கு அது நேற்று. குழந்தைக்கு அது, நிகழ் - எதிர் காலங்கள்!

எது என்னை அழித்ததோ, அது என்னோடேயே அழிகின்றது.

எது குழந்தையை வளர வைக்கின்றதோ, அது குழந்தை யோடவே வளர்கின்றது.

என்னை அழித்த காலம், பிறரை அழிக்க ஓடுவதில்லை!

குழந்தையை வெளியில் கொண்டு வந்த காலம், என்னை மீண்டும் உயிரெழுப்பாது.

பத்து மணிக்கு ஒருவர் பிறக்கின்றார்! அதே நேரத்தில் ஒருவர் இறக்கின்றார்!

இறந்தவனோடு இருந்த காலம் செத்து விடுகின்றது! பிறந்தவனோடு இருந்த காலம் வளர்கின்றது!

பத்து மணி, பல இடத்தில் பிறந்தும் - இறந்தும் - வளர்ந்தும் - வளருகின்றது.

உயிரை அழித்த காலம், ஓட முடியாமல் தவிக்கின்ற நேரத்தில், சாவின் குளிர் - அதனையும் கவ்விக் கொள்கின்றது.

அந்தக் காலத்தைத்தான், நான் போர்த்திக் கொண்டிருக்கின்றேன்.

ஏனென்றால், என்னிடத்தில் அடைக்கலம் புகுந்த அந்தக் காலம் - தப்பித்து ஓடுமானால், நான் இறந்த தேதியே மக்களுக்குத் தெரியாது.

நான் போர்த்திக் கொண்டிருந்தேன் என்று கூறினேன்.

நான் இரண்டு காரியங்களைச் செய்கின்றேன் - நான் தாங்கவும் செய்கின்றேன்.

செத்துப்போன மரம் தூலங்களைத் தாங்குவதுபோல, செத்துப் போன மனிதன் பூமிக்குள்ளிருந்து - பூமியைத் தாங்குகிறான்.

நிலம் யாரையும் சும்மா விடுவதில்லை. 'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல' என்ற தத்துவத்தை விட்டு நான் சிறிது விலகியே செல்கின்றேன்.

பூமி, எல்லோரையும் தாங்குவதற்காகவே மட்டும் பிறக்கவில்லை.

இன்றைக்கு அது யார் யாரைத் தாங்குகின்றதோ, நாளை அதே மனிதர்கள் - தன்னைத் தாங்குவதற்காகவே அழைத்துக் கொள்கின்றது!

வெறும் ஏமாளித்தனத்தால், ஏமாந்து போவதற்காக, - இந்தப் பூமி இவ்வளவு அழகாகப் படைக்கப்படவில்லை.

நேற்று வரையில் பூமியைக் காலால் உதைத்துக் கொண்டு திமிரோடு பேசியவன் இன்றைய தினம் உள்ளே புகுந்து கொண்டு அதைத் தாங்கிக் கொண்டிருக்கின்றான்.

சுமக்க வேண்டிய கட்டத்தில் எதையும் சுமந்தே தீர வேண்டும்.

'வாழ்நாள், தறியின் பாகைப் போல மிக வேகமாக ஓடுகின்றது.' என்று பைபிள் கூறுகிறது.

தறியின் பாகாக அது ஓடுகின்ற காரணத்தால், துணி நெய்யப் பட்டிருக்க வேண்டும்.

யார் உடுத்துகிறார்கள் அந்தத் துணியை?

ஒரு மனிதனுடைய வாழ்க்கை.

அனுபவம் என்ற துணியை நெய்து விட்டு -ஓடி ஒளிகின்றது.

உடையற்ற மனிதனாக, மனிதன் புதை காட்டுக்குள் போவதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

அப்படியென்றால், அவனது அனுபவத் துகில் எங்கே மடித்து

வைக்கப்பட்டிருக்கின்றது?

அந்தக் கலிங்கத்தின் விலைதான் என்ன?

இப்படிப்பட்ட துணி மூட்டைகள் வெளியே இருக்கும் போது மனிதன் நாகரிகமற்ற மிருகமாய் உடையின்றித் திரிகின்றானே - ஏன்?

இந்தக் கேள்விக்கு - கவிஞர்கள் கற்பனையில் பதில் கூறலாம்.

கதாசிரியர்கள், கதையின் வடிவத்தில் காட்டலாம்.

நிலவே! நீ என்ன சொல்கின்றாய்?

பொழுது விடிந்து விட்டது.

## நான்காம் இரவு

### விண்மீன்

ஒரு மனிதனுடைய வாழ்க்கை, அனுபவம் என்ற துணியை நெய்துவிட்டு ஓடி ஒளிகின்றது.

அவனுடைய அனுபவத் துகில், எங்கே மடித்து வைக்கப்பட்டு இருக்கின்றது?

இப்படிப்பட்ட துணி மூட்டைகள் வெளியே இருக்கும் போது, நாகரிகமற்ற மிருகமாய் மனிதன் திரிகின்றானே, ஏன்?

தாயின் இடுப்பை நழுவிக் கீழே விழுந்த சண்டித்தனம் பிடித்த குழந்தையைப் போல், ஒரு விண்மீன் வானை விட்டுப் பூமிக்கு இறங்கியது.

நெய்யற்ற விளக்கு சுடருதறி அடங்குவது போல், விண்மீன் எரிந்து அடங்கிற்று.

எனக்கும் அந்த விண்மீனுக்கும், பேச்சு வார்த்தை, நடந்தது ஒரு நொடி என்றாலும், பேசியது அதிக நேரம். அதை அப்படியே எழுதுகின்றேன்.

அவசரக்காரன் ஒருவன் - ஆதாரமற்ற செய்தியைச் சொல்லும் போது, - அடித்துப் பேசுகின்றான்.

அவன் வார்த்தைகள், உண்மையால் உருவாக்கப் பட்டவை.

உள்ளத்திற்குப் படைக்கப்படும் படையலைப் போலிருந்தன.

ஆனால், உண்ட மறுநொடியே அது அஜீரணத்திற்கு அடிப்படையாக மாறுகின்றது.

வாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நேரம், நீ வானத் திலிருந்து பூமிக்கு வரும்போது, எடுத்துக் கொள்ளப்பட்ட நேரமாகும்.

செயலாற்ற வேண்டிய எதையும் - சிந்தனையாளன் சிந்திக் கும் போது, அவனுடைய நாடி நரம்புகள் அத்தனையும் சூடேறிய பிறகு மூளை பக்குவப்படுகின்றது.

இந்தக் கருத்தை மெக்காலே போன்ற மேதைகள் கூறினார் கள்.

தீர்க்கமான முடிவுகள் வெளியே வருகின்ற நேரத்தில், அடக்க முடியாத நம்பிக்கை, வட திசையில் இருக்கின்ற துருவ நட்சத் திரத்தைப் போல இருக்கின்றது.

நான் இந்தத் தரைத் திட்டிலிருந்து உன்னைப் பார்க்கின்ற நேரத்தில் நீ விழுந்த நிலை, ஒரு பணக்காரன் ஏழைக்குப் போடுகின்ற பிச்சைக் காசைப் போல - நழுவிக் கீழே விழுந்தது தெரிந்தது.

ஏ, விண்மீனே, மனிதனுடைய அனுபவத் துளிகள், அவன் இறந்த பிறகு வெளியே மடித்து வைக்கப்படுகின்றது.

அதை, உயிரோடு இருக்கின்ற எந்த மனிதனும் உடுத்துவ தில்லை.

உலகம் தோன்றியது முதல் இன்று வரையில் இதுபோன்ற அனுபவங்கள் வெளியே முட்டை முட்டையாகக் கட்டி வைக்கப்பட்டிருக்கின்ற போது, மனிதன் தவறுகளைச் செய்து ஏன் எரி நட்சத்திரம் போல் அழிந்து விடுகின்றான்?

சுய சிந்தனை இருக்கின்ற மனிதன், மற்றவருடைய சிந்த னையை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தினாலா?

விளங்காத ஆசைக்கு விடியும் வரை காத்திருந்த ஒருவன், கிடைக்காத காரணத்தால், கலங்கிப் போகின்றான்.

அந்தக் கலக்கத்தோடு காலத்தின் கணக்கை முடித்துக் கொள்கின்றான்.

இப்போது அவனுடைய அனுபவத் துணி வெளியே கிடக்கின்றது - அனாதையாக!

பின்னால் வருகின்ற ஒருவன், இது யாருடைய துணி என்று கூடப் பார்க்காமல், அதன் மீதே நடந்து செல்கிறான்.

புதிய அனுபவங்கள் அவனுக்குக் கிட்டுகின்றன. பழைய அனுபவங்கள் கீழே கிடக்கின்றன.

மாறி, மாறி, - மரணத்தின் ராட்டினத்தில் குந்தித் தலை சுற்றிக் கீழே சாய்கின்றான்.

எந்த அனுபவமாக இருந்தாலும் சரி, அது பதினெட்டு வயது முதல் இருபத்தைந்து வரை - காதல் அனுபவமாகவே இருக்கும்.

இருபத்தைந்துக்கு மேல், நாற்பதுக்குள், அது பணம் சேர்க்கின்ற அனுபவமாகவே இருக்கும். நாற்பதுக்கு மேல் மனித மூளை சிந்திப்பதில்லை.

உலகத்திலே உள்ள எல்லா மனிதர்களுடைய வாழ்க்கை அனுபவமும் இந்தப் பட்டியலிலே வந்து விடும்!

காதல் அனுபவத்தின் கோணங்கள் மாறலாம்!

பணம் சேர்க்கின்ற முறைகள் மாறலாம்!

சிந்தனைகள் வளராததற்குக் காரணங்கள் இருக்கலாம்!

ஆனால், எந்த வகையிலும், எல்லா வகையிலும் - எந்த மனிதனுக்கும், வாழ்க்கை அனுபவம் மட்டும் கிடைத்து விடுகின்றது.

வானின் நீளத்தையும் -

கடலின் ஆழத்தையும் -

மலைகளின் நிலையையும் -

சூரிய சந்திரர்களுடைய

கதிர் வேகத்தையும், துருவி

நோக்குகின்ற விஞ்ஞானி -

தன் அனுபவத்தை மட்டும் அறியாதபோது -

அவன்அஞ்ஞானியாகின்றான்.

நிலத்தில் விதைத்த வித்து - மறு உருப் பெறும்போது- விளைவுகள் தோன்றுவது போல, மனிதன் தனது அனுபவத்தைச் சோதனை செய்கின்ற போது, அவனது வாழ்க்கையில் புது அனுபவத்தைப் பெற்று - பொலிவு பெறுகின்றான்.

பொழுது விடிந்து விட்டது.



# நினைவுகள் சில....

தமிழ் என்றால், புறநானூறு! தமிழ் என்றால், அகநானூறு! தமிழ் என்றால், திருத் தொண்டர் மாக் கதை! தமிழ் என்றால், தொன்மொழி!

தமிழ் என்ற சொல்லுக்கு வீரம் என்று ஒரு பொருள்! அதுதான் புறநானூறு!

தமிழ் என்ற வார்த்தைக்கு காதல் என்று ஒரு பொருள்! - அதுதான் அகநானூறு!

தமிழ் என்ற பதத்திற்குப் பக்தி என்று ஒரு பொருள்! -அதுதான் திருத் தொண்டர் மாக் கதை எனப்படும் பெரிய புராணம்.

தமிழ் என்ற சொல்லுக்கு, அழுது கொண்டே பிறக்கின்ற குழந்தை - உலக நாகரிகத் தொட்டிலிலே ஊஞ்சலாடி, 'பிள்ளைத் தமிழ்'ப் பண்பாடுகள் பாடி, சிரித்துக் கொண்டே அது சாகின்ற வரை, பண்டைய சிந்து வெளி - வெமுரிய நாகரிக இனம் பேசுகின்ற - ஒரு தொன் மொழி என்றும் பொருளாகும்.

எனவே, தமிழ் என்ற சொல் - வீரம் - காதல் - பக்தி - இனிமை -நீர்மை, நனி நாகரிக மொழி என்ற பல்பொருள் வழங்கும், ஓர் அற்புதச் சொல்லாகும்!

வீரத்தால், வியனுலகில் எதனையும் விளைவிக்கலாம்! ஆனால், அது இயற்கை ஆற்றல்களை எப்பொழுதும் வீழ்த்திட இயலாது.

காதலால், எங்கும் - எதனையும் கை கொள்ளலாம்! ஆனால், எல்லா இடங்களிலும் அது வெற்றி பெறாது.

அறிவும் - அன்பும்- உணர்வும் - இணைந்து, அவை பக்தியாக, அனுபவம் பெற்ற ஆற்றலாக வழிபடும் போது, மனநிறைவு என்ற

ஆன்ம விடுதலை கிடைக்கின்றது.

வீரமும் காதலும், அதனதன் அனுபவங்களை ஓர் எல்லைக்குள்ளேயே வளர்த்து, பிறகு உரு மாற்றங்களைப் பெறுகின்றன.

ஆனால், பக்தி என்ற அனுபவம் மட்டும், ஆன்ம விடுதலை கிடைக்கும் வரை, இறப்புக்குப் பின் பிறப்பறுக்கும் வரை, என்புருக. ஊனுருக.

வழிபாட்டு ஒழுக்கங்களை ஓம்பி, இறைஞான முக்தியில் இரண்டறக் கலக்கும்வரை, எல்லையின்றி வளர்ந்து கொண்டே போகும் சக்தி படைத்தது.

ஆன்மாவை - இறை என்று பார்க்கும் நிலையும், ஆன்மாவே - இறை என்று நம்பும் நிலையும் - அதனால் வளரும். அந்த இரு நிலைகளின் விடை என்ன தெரியுமா? இறையருள் முடிவிலாதது, பேரின்பம் பயப்பது - என்ற விளக்கமே ஆகும்.

முதலிடை கடைச் சங்கங்கள் முகிழ்த்த அவ்வக் காலங்களின் பாவாணர்களும், புலமை தவழ்ந்த சான்றாண்மை யாளர்களும், கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் சைவ நாயன்மார்களும் - வைணவ ஆழ்வார்களும் - அதனதன் தொடர்பான இக்காலம் வரையுள்ள ஆன்மிக வளர்ச்சிகளால் பக்தி இயக்கங்கள் பெருகி வளர்ந்து, தமிழ் மொழியைப் பசுந்தமிழாக, கன்னித் தமிழாக வளர்த்து வந்தன.

பக்தி இயக்கங்கள் என்றால் என்ன? ஆன்ம விடுதலைக்கும், மொழி விடுதலைக்கும், நாட்டு விடுதலைக்கும் போராடிப் பெறும் பயிற்சிப் பாசறைகளே - மன உறுதிகளை பக்தி இயக்கங்களாகும்.

அதனால்தான், நமது மொழியைத் தாய்மொழி என்றும், நாட்டைத் தாய் நாடு என்றும் தாய்மை மாண்போடும் பண்போடும் போற்றி அழைக்கின்றோம்! - ஏன்?

தாயிடம் தான், ஊற்றுக் கண் போல் அன்பு சுரக்கும், பாச வேட்கைக்குரிய உண்ணீர் ஊறும்.

தாயிடம் தான், இன்பம் பெருகும்! ஈரம் அலைமோதும். தியாகம், அன்றலர்ந்த பூப் போல பொலிவுறும். அவள் மாண்பால் அவனி அக மகிழும்!

தமிழ் மக்களை, மொழியால், ஈன்றளித்த அவளது மான வாழ்வுக்கு ஆபத்துக்கள் நேர்ந்தால், நாம் கனி தரும் வாழை மரங்களாக மாறி நம்மை நாமே - அழித்துக் கொள்வோம்!

ஒளி தரும் மெழுகுவர்த்தியாகி, ஆட்சி வன்மை என்ற எதிர்ப்பு இருளை விரட்டியடித்து, மொழி ஒளி என்ற உரிமைகளை நிலை நாட்டுவோம்.

புகழ் என்ற சாம்பலைப் பூமிக்கு மேலே உதிர்த்து விட்ட ஊதுவத்திகளாக - நாட்டின் மொழிக்காக மணம் பரப்பி மறைவோம்.

இத்தகைய அருந்தமிழ், உலகின் ஆதி ஒரு மொழியாக இருந்த நிலை மாறி, தமிழ் - சமஸ்கிருதம் என்ற இரு மொழிகளுள் ஒன்றாகி, தற்போது பத்தொன்பது மொழிகளுள் ஒன்றாக ஒன்றி, மொழி ஆதிக்க ஆட்சிக்குள் ஆட்பட்டு அல்லல் படுகின்றது.

சமஸ்கிருதக் கலப்பின் ஆதிக்கத்தால் மணிப்பிரவாளம் என்ற மதமேறிய தமிழ் மொழி, இஸ்லாமியர் படையெடுப்புகளால் உருதுமொழிக் கலப்பின நோய்கட்கு இரையாகிப் பொலிவிழந்துள்ளது.

மராட்டியர், நாயக்கர் ஆட்சிகளின் மொழிப் பலாத் காரங்களுக்குப் பணியாமல், தமிழ் - தனது சீரிளமைச் சுய மரியாதைகளை இழக்காமல் - இன்னலுறுகின்றது.

ஆங்கிலேயரின் முன்னூறு ஆண்டு கால வர்த்தக ஆட்சியின் குமாஸ்தா கல்வி திணிக்கப்பட்ட போதும்கூட, ஆங்கில மோகத்துக்கு அலட்சிய அன்பிடமளித்து அவதிப்பட்டு வருகின் றது.

இறுதியாக, 1947-ஆம் ஆண்டுக்குப் பிறகு வட நாட்டினரின் ஆதிக்க இந்தி மொழியை, நாடாளுமன்றத் தர்பாரிலே மும்மொழித்திட்டம் என்ற சட்ட வடிவமாக்கி, இந்தியம் என்ற பெயரிலே மக்கள் மீது வடவர்கள் திணித்தார்கள்.

1937 - ஆம் ஆண்டில், முதன் முதலாக இந்தி மொழியை; ஆட்சி மொழி என்ற ஆதிக்க முள் முடி சூட்டி, மூதறிஞர் இராஜாஜி அவர்களால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டது.

'தமிழ்த் தாயின் தாள் மீது - கால் வைப்போர் தலைமீது என் கால் வைப்பேன்' என்ற நாவலர் சோமசுந்தர பாரதியார், மறைமலை அடிகளார், தந்தை பெரியார், தளபதி அண்ணா உட்பட்ட பல்லாயிரவர், ஆதிக்க இந்தியை அன்று எதிர்த்தார்கள்! இதுதான் முதல் கட்ட இந்தி எதிர்ப்புப் போர்!

தாளமுத்து - நடராசன் போன்ற மொழிப் போர் தமிழத் தன்மானிகள், தங்களது தாய் மொழிக்காக வீர மரணமடைந்து அறப் போர் தியாக வரலாறு தீட்டினார்கள்!

இரண்டாம் கட்ட இந்தி எதிர்ப்பு போர், மீண்டும் 1965 - ஆம் ஆண்டில் உருவாயிற்று.

தமிழக மாணவர் தளபதிகளான ம. நடராசன் எம். ஏ., நாவளவன், இரவிச்சந்திரன், பெ. சீனிவாசன், இன்று அரசு பணிகளில் பணியாற்றி வரும் மற்றும் பல மாணவ மணிகள் அனைவரும் எல்.கணேசன் தலைமையை ஏற்று, இந்தியைத் திணிக்கும் இரு ஆட்சிகளையும் எதிர்த்து, வியூகம் வகுத்துப் போராடினர்!

சென்னை மாநகர், இந்தி எதிர்ப்புப் போர் செங்களமானது! தஞ்சை மாநகர், வெங்களமானது.

செந்நீரைச் சிந்தும் செருமுனைந் சிங்கங்களானார்கள் - இந்தியை எதிர்த்துப் போரிட்ட தமிழக மாணவர்கள்!

செம்மாந்த தமிழர் தம் மறம், வீர வரலாற்றுச் சம்பவங்களைப் படைத்தது!

இந்த, இந்தி எதிர்ப்புப் போர்ப் பரணி, பத்து உயிர்களை நெருப்பாலும் - நஞ்சாலும் பலி கொண்டது!

பன்னூறு மக்களைத் துப்பாக்கித் துந்துபியால் துவம்சம் செய்து, நடை பாவாடை விரித்து, ஆட்சி அலங்கோலங்களால் அராஜகச் சதிராட்டமாடியது அன்றைய ஆட்சி!

அறிஞர் அண்ணா அவர்கள், 1967 - ஆம் ஆண்டு சென்னை கோட்டையிலே முதலமைச்சராகக் கொலுவீற்ற பிறகுதான், வடவர் மொழியாதிக்க உணர்வுகளான மும்மொழித் திட்டத்திற்கு அவரால் கல்லறை கட்ட முடிந்தது!

தமிழ் - ஆங்கிலம் என்ற இரு மொழித் திட்டத்தைச் சட்ட

வடிவமாக்கி, இந்தி எதிர்ப்புப் போருக்கு அறிஞர் அண்ணா அவர்கள் இறுதி முற்றுப் புள்ளியை வைத்தார்!

கோயில்களுக்குச் செல்லும் பக்தர்கள், கிழக்குத் திசை நோக்கிக் கடவுளை வழிபடுவார்கள். காரணம், சுகபோகங்கள் பெருகி மகிழ்வோடு வாழ வேண்டும் என்பதற்காக!

மேற்கு நோக்கிச் சிலர் வழிபடுவர், காரணம் - பொருளும் - சொர்ணமும் உலகம் போற்றுமளவிற்குப் பெற்று வாழ வேண்டும் என்பதற்காக !

துறவிகள், இறைவனைத் தெற்கு நோக்கி வணங்குவார்கள்! காரணம், உலகம் உவந்து வியக்கும் ஞானம் பெறுவதற்காக!

வடக்கு நோக்கி வழிபடுபவர்களும் உண்டு ! காரணம், புத்தம் சித்த சுத்திப் பெற்றுச் சித்தர் - நிலையை அடைவதற்காக!

அதனைப் போல தமிழர்களான நாம், அண்ணா சதுக்கமுள்ள திசை நோக்க்கி வணங்கல் வேண்டும். ஏன்? தமிழன்னைக்கு எந்த மொழித் திணிப்பாதிக்கத்தாலும் தீமைகள் வராதிருப்பதற் காக ! வந்தால், தொண்டு புரியும் மனம் பெறுவதற்காக !

'மலையினும் எது பெரியது' என்று சோழ மாமன்னன் சேக்கிழார் பெருமானைக் கேட்டபோது, 'நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்' என்றார்!

'கடலில் பெரியது எது' என்ற போது, 'பயன் தூக்கார் செய்த உதவி' என்றார்!

உலகில் பெரியது எது? என்று பாவேந்தனைக் கோவேந்தன் விளித்தபோது, 'காலத்தினால் செய்த உதவி' என்றார் சேக்கிழார் பெருமான்.

இடைக்கால ஔவை பிராட்டியைப் பார்த்து, 'எது பெரியது?' என்றபோது, 'இறைவன் தொண்டருள் ஒடுக்கம்' தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்றார்!

அதனைப் போல, 'தமிழ் மொழிக்காகப் போராடியவர்கள், அதற்காக உயிர் நீத்த தொண்டர்கள் பெருமை சொல்லவும் பெரிதே' என்ற நோக்கில், தமிழுக்காக அரும்பாடுபட்ட தமிழ்த் தொண்டர்களின் மொழிபக்தியை முறையாகத் தொகுத்து, எதிர்கால அரசியல், இலக்கிய, மொழி, சமுதாய உலகுக்குத்

தமிழ்த் தொண்டர் மாக்கதை போன்றதோர் வீர வரலாறு தேவை.

அந்த வீர வரலாறு போரில், நெருப்போடு நெருப்பாக போட்டியிட்டு, எந்த ஓரினத்து மகனும், தனது தாய் மொழிக் காகத் தீயாடிக் கருகியதாகத், தமிழ் நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும் வீர வரலாறில்லை !

வேண்டுமானால், ஐரீஷ் நாட்டின் சின்பின் இயக்கத் தலைவர் டிவேலரா இத்தாலி விடுதலை வீரன் கரிபால்டி போன்றவர்கள் மொழி உரிமைக்காகப் பேசியிருக்கலாம் - போராடியிருக்கலாம். அவ்வளவுதான்!

அனால், அவர்கள் அறிஞர் அண்ணாவைப் போன்றதோர், கடுமையான ஒரு - மொழி வரலாறு படைக்கப் பட்டவர்கள் அல்லர்!

பாம்பன் சுவாமிகள், தமிழ்க் கடவுளான குறிஞ்சி நில அழகு முருகனை, 6666 பாடல்களால் பாடி, தெய்வீக வீர வரலாறு படைத்துள்ளார்! அவற்றுள் ஒரு காண்டம் செக்கர்வேள் செம்மாப்பு! - செக்கர்வேள் இறுமாப்பு, என்பது! செக்கர்வேள் என்றால், தமிழ்க் குமரன் முருகன், செம்மாப்பு என்றால் முழுமுதல் சிறப்புகளைக் கூறும் நூல் என்று பொருள்!

செக்கர்வேள் இறுமாப்பு என்றால், அந்தத் தமிழ் தெய்வத்தைத் தவிர வேறு எந்தக் கடவுளையும் பாட மனமில்லாத கடவுள் பக்தியினால் பழுத்த இறுமாப்பின் உயர்வு!

தமிழ் அன்னையின் எதிர்ப்புப் பகைகளை, அதன் வியத்தகு வியூகங்களை, பரணி பாடிடும் அனைத்துச் சிறப்புக்களோடும், விருப்பு வெறுப்பின்றித் சம்பவச் சிந்தனைகளைத் தொகுத்து, செம்மாந்தும், இறுமாந்தும் தமக்கே உரிய நேரிய நெஞ்சத்தோடும், எவருக்கும் அஞ்சா வீரத்தோடும் - தமிழ் மொழிப் பக்தியோடும் வீர வரலாறு எழுதப்பட வேண்டும்! இது சில தமிழ் நெஞ்சங்களின் மன நினைவுகளில் ஒன்று.

அந்தச் சுமைகளைத் தாங்கி வாழும் - வளரும் தலைமுறைகள் - தமிழ்ப் பரம்பரைகள்!

## திரை இசைப் பாடல்கள்

## ஓர் ஆய்வு

திராவிடர் இயக்கக் கவிதா மண்டலத்து நவமணிகளில் ஒன்றாக முத்துப் போன்று மிளிர்ந்து கொண்டிருப்பவர் கவிஞர் முத்துலிங்கம்.

அவரது பெயரின் பகுதியாக விளங்கும் முத்து எங்கெங்கே பிறக்கின்றதோ, அதற்கேற்பத் தகுதியும் தரமும் உண்டு.

இப்பி, உடும்பு, கடல்மீன், கதலி, கழுகு, கமலம், கரும்பு, சங்கு, செந்நெல், திங்கள், நத்து, நாகம், மூங்கில், மேகம், யானை, மருப்பு, போன்ற இடங்கள் எல்லாம் முத்துமணி பிறக்கிற இடங்களாகும்.

அவரது திருப் பெயரின் விகுதியான 'லிங்கம்' என்ற சொல், அவனி வாழ் மக்கள் தியானித்து வழிபடுதற்குரிய தெய்வீகக் குறியாகும்.

மேதினி வாழ் மக்கள் மேம்பட முத்தொத்த இலட்சிய முத்தி பெற பிறவிக் கடலில் மூழ்கி உய்வுற, வாழ்க்கையிலே மக்கள் அவரவர் ஓர் அடையாளத்தைப் பதித்து மறைவது உலகியல் மரபு! அதுதான் பிறப்புக்குரிய சான்று!

கவிஞர் முத்துலிங்கம், தனது திரையுலக எழுத்துத் துறையில் பதித்துள்ள அறிவின் சான்றே அவரது திரையிசைப் பாடல்களாகும்.

கவி மாமன்னன் ஒட்டக்கூத்தர் பெருமான், முதல் குலோத்துங்கன், அவன் மகன் இரண்டாம் குலோத்துங்கன், அவன் மகன் இரண்டாம் ராசராச சோழன் அவையிலும் ஆஸ்தானக் கவிஞராக - மேதமைப் பெற்றவர் ஆவார்!

சோழர் பேரரசில், தாத்தா, தந்தை, பேரன் என்ற மூவர் அவைகளிலும், 'விக்கிரமன் சோழன் உலா' பிள்ளைத்தமிழ், தக்கயாகப்பரணி, ராசராசன் உலா, போன்ற அறிவு தாலாட்டும் அற்புத நூல்களை இயற்றிய பெருமான் ஒட்டக்கூத்தனார்!

கவிஞர் முத்துலிங்கம், திராவிட இயக்க ஆட்சியிலே,

பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆரின் தமிழக அரசிலே, மூன்றாவ தான முறையிலே, அரசவைக் கவிஞராக அமர்ந்து, புகலோச்சிய வர் ஆவார்.

கவிஞர் முத்துலிங்கம், மக்கள் திலகம் மீது பிள்ளைத் தமிழ் பாடியவர். திரை இசைப் பாடல்கள் என்ற நூலையும் யாத்தவர்.

சிந்தனையாளர் இளங்கோ, தான் தீட்டிய சிலப்பதிகாரம் என்ற தமிழர் பண்பாட்டு நூலிலே, நவமணிகளுள் இரண்டான முத்தையும் - மாணிக்கத்தையும் பாத்திரங்களாக மாற்றி, பாண்டிய மாமன்னன் நெடுஞ்செழியன் அவையிலே மோத விட்டார்.

பொற்கொல்லனின் வஞ்சகமாக உலா வந்த முத்து, மன்னி கோப்பெருந்தேவி காற்சிலம்புப் பரல்களாகத் திகழ்ந்து கோவலன் தலையை வீழ்த்தியது.

கண்ணகி தேவியின் மாணிக்கப் பரல்களான சிலம்பிலே கொந்தளித்த கோபம், சாயாத பாண்டியன் செங்கோலைச் சாய்த்தது.

மன்னன் மாண்டான். நீதியின் கோலை நிமிர்த்தினான். மதுரை எரிந்தது. மன்னி, கோப்பெருந்தேவியும் மாண்டாள். சிலம்பிலே இரண்டு மணிகள் சிரித்த சிரிப்பு இக்காட்சிகள்.

கிரேக்க நாட்டு மன்னன் ஒருவன், சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட பொற் கிரீடத்தை தான் சூடிக் கொள்ள விரும்பி னான்.

அதற்காக அரண்மனைப் பொற்கொல்லனிடம் எடை போட்டு பொற் கட்டிகளைக் கொடுத்தான் மன்னன்.

எள் மூக்களவுகூடக் குறையாமல், மன்னன் அளித்த பொன் னின் எடையளவோடு, கிரீடத்தைச் செய்து கொடுத்தான் - கிரேக்க அரண்மனைப் பொற்கொல்லன்.

அறிவியல் உலகுக்கு அறைகூவல் விடுத்தான், உண்மை எடையை அறிந்து அவனிக்குக் கூறுமாறு மன்னன் ஆக்ஞை யிட்டான்.

அற்புத சிற்ப வடிவங்களைச் செதுக்கி அழகாகச்

செய்யப்பட்ட அக்கிரீடம் எப்படி எள்ளளவும் சிதறாமல் குறையாமல் கொடுத்த எடையளவு பொன்னோடு அப்படியே இருக்கும்? - சிந்தித்தான் கிரேக்க வேந்தன்.

சிந்தனையாளன் ஆர்க்கிமிடீஸ் என்ற அறிவியல் விஞ்ஞானியான கணித மேதையிடம் கிரீடத்தைக் கொடுத்து எடையளவின் உண்மையைக் கண்டு கூறிடக் கேட்டுக் கொண்டான்.

அந்தக் கணித வித்தகன், தான் நீராடும் தொட்டியின் நிறைய நீரை நிரப்பி, கிரீடத்தை மூழ்க வைத்து, வழிந்து வெளியே வந்த தண்ணீரை எடை போட்டு, அதன் உண்மை எடையை ஆர்க்கிமிடீஸ் என்ற அறிவியல் வித்தகன் கண்டு பிடித்துக் கூறினான்.

வழிந்த அந்தத் தண்ணீரின் எடைதான் டூ பை ஆர் ஸ்கொயர்டு என்ற மதிப்புச் சூத்திரத்தை மன்னனிடம் விளக்கினான்.

அந்தக் கணிதத் தத்துவம் இன்றும் கணித உலகில் உலா வரும் சூத்திரமாக உள்ளது. இன்றைய மாணவர்களும் அதைக் கற்று கணிதம் போட்டு வருகிறார்கள்.

இளங்கோவடிகள், ஆர்க்கிமிடீஸ் சிந்தனையாளர்களைப் போல, திரை உலகச் சிந்தனையாளர் கவிஞர் முத்துலிங்கம். 224 திரை இசைப் பாடல்களும், கற்றார் போற்றும் கலித்தொகையின் 133வது பாடலாக தமிழர்தம் நவமணிக் கொத்துக்களாக, மெய்ப்பாட்டின் ஒன்பது பண்புகளை விளக்கி உரைக்கும் அறிவுரைச் சொத்துக்களாக இன்றும் உலா வருகின்றன என்றால் மிகையாகா.

கற்றார் போற்றும் அந்த 9 பண்புகள் யாவை?

அவற்றில் அரும் தத்துவங்கள் என்னென்ன? இதோ அவை-

'போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை' என்ற பொருளுக்கேற்ப 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' என்ற படப் பாடலில் ஒரு பண்பாக அதைப் புனைந்துள்ளார் கவிஞர்.

'பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்' என்ற பண்புடைமைக்கு எடுத்துக் காட்டாக உள்ளது 'ஊருக்கு

உழைப்பவன்' என்ற படத்தின் ஒரு பாடல்.

'காமம்' என்றால் விருப்பம். அதை ஆட்சி செய்பவள் காமாட்சி!

கமலத்தில் வீற்றிருந்து உள்ளத்தை ஆள்பவள் கமலாட்சி!

விரிந்த வியனுலகை ஆள்பவள் விசாலாட்சி!

தண்ணீரில் தூங்காத மீன்போல தரணியை ஆள்பவள் மீனாட்சி!

அதனைப் போல, என் வீட்டு ராஜாங்கம் உன் கையிலே - தெய்வங்கள் பேசாதோ உன் சொல்லிலே முத்தாரமே' என்று ஆற்றுதல் என்பது அலந்தார்க்கு உதவுதல்' என்ற தத்துவத்தை 'ஆயிரம் கண்ணுடையாள்' படத்திலே பாடித் தாலாட்டியுள்ளார் கவிஞர்.

'காம சாஸ்திரம்' என்ற படத்திலே 'அன்பு' என்பது தன் கிளை செறா அமை என்ற உயர்ந்த பாசத்திலே, திருக்குறள், பாரதி, காமராஜர், அறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் போன்றவர் பண்புகளை எடுத்துக் காட்டாகக் காட்டி, மக்களைப் பின்பற்ற வைத்துள்ளார் கவிஞர்.

'மீனவ நண்பன்' என்ற படப் பாடலிலே, 'அறிவு என்பது பேதையர் சொல் நோன்றல்' என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தியுள்ளார் கவிஞர்.

'செறிவு என்பது கூறியது மாறா அமை' என்ற வாழ்க்கை நலத்தின் செறிவான கருத்துக்களைக் 'காதல்கிளிகள்.' என்ற படப் பாடலிலே கவிஞர் செப்புகின்றார்.

தமிழக அரசின் தங்கப்பதக்கம் பெற்ற 'கிழக்கே போகும் ரயில்' என்ற படத்தின் ஒரு பாடல், நீரோடை போலவே சிரித்தாடி ஓடி, சிந்துபாடி நம்மைக் களியூட்டுகிறது.

'நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை' என்ற மாண்புக்கு முரசு கொட்டி, காஞ்சி பட்டு, கஸ்தூரி பொட்டு, திருமகள், தென்குமரி, திருக்குற்றாலம், பூம்புகார், கண்ணகி, போன்றவற்றின் உட்பொருள் உணர்வுகளை 'வயசுப் பொண்ணு' என்ற படத்தில் விளங்க வைத்துள்ளார் கவிஞர்.

இந்தப்பாடல் 1978 - 79 ஆம் ஆண்டின் சிறந்த பாடல் ஆசிரியருக்கான தமிழக அரசின் விருதைக் கவிஞருக்குப் பெற்றுத் தந்துள்ளது.

'கண்ணோடாது உயிர் வெளவல் என்பதே முறை' என்ற பண்பைத் 'தூங்காத கண்ணின்று ஒன்று' படத்தின் பாடலிலே பளிச்சிடுகின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக, 'பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்' என்று அகழ்வாரைத் தாங்கும் நிலமாக, தாய்க்குலமே வருக' என்ற படத்தின் பாடலாக ஒலித் துள்ளது.

தமிழ்ச் சமுதாயத்தின் தலையாய இந்த ஒன்பது பண்புகளும், வான மண்டலக் கதிரவனைப் போல தலைமை தாங்கி, பிற கோள்கள் தன்னைச் சுற்றியே சுழன்று வருமாறு வகுத்துக்கொண்ட நீள் வட்டக் கோள்கள் பாதைக்கேற்ப வலம் வந்து, பருவ மாற்றத்தை உருவாக்கிடும் தட்ப வெட்பமான உயிர்ச்சக்தியைப் படங்களுக்கு வழங்கியுள்ளன.

காகுத்தன் மனைவியைக் கவர்ந்து சென்ற ராவணனை எதிர்த்து, சடாயு என்ற கழுகு போரிட்டபோது, தளர்ந்து போன இலங்கை வேந்தன், 'உன் உயிர் எங்கே உள்ளது?' என்று பறவை வேந்தனைக் கேட்டான்.

உண்மையை மறைக்கும் உள்ளமற்ற கழுகு சடாயு, எனது உயிர் இறக்கைகளில் உள்ளது" என்று உரைக்க, அதற்கு மறு கேள்வியாக, 'உன் உயிர் எங்கே உள்ளது?' என்று இலங்காதிபனை பட்சியினத் தலைவன் வினவ, "கால் கட்டை விரலில் இருக்கிறது" என்றான் ராவணேஸ்வரன்.

உடனே சடாயு, கால் கட்டை விரலைத் தனது அலகால் குத்திக் கொல்லக் குனிந்தபோது, இலங்கேஸ்வரன் தனது வாளால் சடாயுவின் இறக்கைகளை வெட்டி வீழ்த்தினான். கழுகும் துடிதுடித்து வீழ்ந்தது தரையில்!

சில படத்தின் பாடல்கள் சடாயுவைப் போல உண்மையாக எழுதப்பட்டதாகவே உள்ளன.

ஆனால், படச் சம்பவங்கள் சில, ராவணனாக மாறிப் பாடல்

களின் உணர்வுகளைத் தலைதூக்க முடியாமல் சாய்த்து விட்டிருக்கின்றன.

இந்த அரக்கப் போர், கவிஞருக்குரிய கருத்து வீழ்ச்சி அல்ல, படத்தின் வசூலுக்குரிய தாழ்ச்சியே. கவிஞர் முத்துலிங்கம் பாடல், சில இடங்களில் இருளை விரட்டிடும் நிலவாக ஒளியுமிழ்கின்றன.

வேறு சில படப் பாடல்கள், சொற்போர் நடத்துவோர் வாதங்களாகவும், மற்றும் சில பாடல்கள், அருவி போல சலசலக்கும் பேச்சுக்களின் விவாதங்களாகவும் விளங்குகின்றன.

பாவேந்தரின், "கொலை வாளினை எடடா" என்ற பாடலைப் போல, கொடியோரின் சமுகக் கொடுமைகளை வேரருக்கும் கோடாரி வீச்சுக்களாக சில பாடல்கள் உள்ளன.

திராவிடரியக்கக் கவிஞர்களது உணர்வுகளை ஆங்காங்கே கோலாகலமாகக் கொடிகட்டிப் பறக்கவிட்டுள்ள காட்சி களையும் கவிஞர் முத்துலிங்கம் ஆற்றியுள்ளார்.

திரையுலக ரசிகர்கள் மட்டும் அல்லர், இலக்கிய சிந்தனையுள்ள தேனீக்களும் இந்த இசைமலர் தேன்துளிகளை உண்டு மகிழ வேண்டிய ஒரு பனுவல் பூந்தோட்டமே கவிஞருடைய திரைஇசைப் பாடல்கள் என்ற இந்நூல்!

## சந்தனப் பேழையுள் மூன்று வரிகள்!

மா மன்னன் ஹூமாயூன், மொகாலயப் பேரரசிலே அறிவு வேட்டைக்காக அலை பாய்ந்த தஞ்சை சரபோஜி மன்னன்.

சரஸ்வதி மஹாலைப் போன்ற ஒரு நூலகத்தை ஆக்ராவிலே நிறுவியவன்.

ஒருநாள் ஓர் அராபிய மன்னரது வரலாற்றைப் படித்துக் கொண்டிருந்தான்.

அவன் வாசித்தது என்ன? படியுங்கள்.

"உலகில் உள்ள நாடுகளில் ஆங்காங்கு நடை பெற்ற, சம்பவங்களைக் காலவாரியாகத் தொகுக்குமாறு அராபிய மன்னன் ஒருவன் ஓர் உத்தரவிட்டானாம்.

ஒவ்வொரு நாடுகளிலேயும் நடமாடிய மக்கள், எப்படி வாழ்ந்தார்கள்? இப்போது அவர்கள் எப்படி வாழ்கிறார்கள்?

எதெதற்காக அவர்கள் போர் செய்தார்கள்? ஏன் போரிட்டார்கள்? முடிவுகள் என்னென்ன?

அந்தந்த நாடுகளின் கலை, பண்பாடு, நாகரிகங்கள் காலப் போக்கிற்கு ஏற்ப எவ்வாறு வளர்ச்சியுற்றன?

இவற்றையெல்லாம் உடனடியாகத் திரட்டித்தர வேண்டும்.

ஐந்தாண்டுகள் அதற்குக் காலக் கெடு. தவறினால், மரண தண்டனை என்று தனது அமைச்சர்களுக்கும் - அரசவை அறிஞர்களுக்கும் ஆணையிட்டானாம் அந்த அராபி அரசன்.

எழுத்துலக வரலாற்றிலேயே, இன்று வரை, இத்தகைய தொரு பரபரப்பூட்டும் எந்த சம்பவமும் - எங்கும் நடை பெற்றதாகத் தெரியவில்லையே!

அரசு அலுவலர்கள் எல்லாம் ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டபடியே மனம் கலங்கி நின்றார்கள்.

வேந்தன் கட்டளையை எவ்வாறு நிறைவேற்றுவது என்று பல இரவுகளும், பகல்களும் மனம் நொந்து அலைமோதி,

ஒவ்வொருவரிடமும் அவரவர் யோசனைகளைக் கேட்டுக் கொண்டார்கள்.

திசைக்கு ஒரு குழுவாக அறிஞர்கள் திரண்டு சென்றார்கள்.

நாடுகள்தோறும் நடமாடினார்கள். விடைகளைத் தேடி வித்தகர்களை நாடினார்கள். பலன்தான் இல்லை - பாவம்!

ஒருநாள் கரிகளும், பரிகளும், கோவேறு கழுதைகளும் - ஒட்டகங்களும் சுமை சுமையாய் புத்தகங்களையும், ஓலைச் சுவடிகளையும் நாணல் இதழ்களிலே எழுதப்பட்ட ஏடுகளையும் பை பையாகச் சுமந்தவாறு அராபி மன்னன் முன்பு நின்றன.

நீண்ட நெடுந் தூரம் வரிசைகளாக நிற்கும் அந்த விலங்கினச் சுமைகளைக் கண்டு, மன்னன் வியப்படைந்தான்.

புருவங்களை மேலேற்றியபடியே, கண்களைக் கசக்கிக் கொண்டு மறுமுறையும் அவன் அந்த வரிசையை நோக்கினான்.

இவ்வளவு புத்தகங்களையும் படித்திட, எனக்கு ஆயுளுண்டா? இவற்றைச் சுருக்கமாக எழுதிட, மேலும் எவ்வளவு காலம் ஆகும்? கனல் பட்ட கந்தகமாய் காவலன் வெடித்தான்.

'நாளை ! நாளை ! நாளையே முடிக்கின்றோம்' என்று, அந்த அவை அதிர்ச்சியோடு இறைஞ்சி ஒலித்தது.

மறுநாள் கூடியது மன்றம்! மன்னவனும் மற்றோரும், மனக்கோட்டங்களோடும், மருட்சியோடும் அமர்ந்திருந்தார்கள்.

அமைதியும், அடக்கமுமான அறிவோடு, ஒரு சிறு சந்தனப் பெட்டியை இரு கைகளிலும், ஏந்தியவாறே, பயபக்தியுடன் அவையுள் நுழைந்தான் ஓர் ஞானி.

"கொற்றவா ! எல்லாக் காலங்களிலும், எல்லா நாடுகளிலும் நடைபெற்ற அரிய சம்பவங்களடங்கிய சரித்திரம், இதோ இந்த சந்தனப் பெட்டியின் உள்ளே உள்ளது" என்றான் அந்த ஞானி.

பார்த்தான் பாராள்வோன். திறந்தான் பேழையை !

இளம் மான் தோலின் மேல், மென்மயிராலான மெத்தையிலே, மூன்று வரிகள் எழுதப்பட்ட சிறு காகிதத் துண்டு ஒன்று பளபளத்தது.

*மன்னனால் விபரம் கேட்கப்பட்டபோது, "அவர்கள் பிறந்தார்கள், வாழ்ந்தார்கள்! இறந்தார்கள்!" என்று எழுதப் பட்ட மூன்று வரிகள்தான் அந்தப் பேழையில் இருந்தன.*

*வெட்கத்தால் வேந்தன் வியர்த்துப் போனான். ஊமையாய் அந்த ஞானியின் இரு கைகளையும் பற்றி, மாறி மாறி முத்த மாரி பொழிந்தான்.*

*அந்த அரசவையே அகம் சிலிர்த்து, மெய் மறந்து கையொலி எழுப்பியது!*

*அரிய இந்த அற்புத அறிவுச் சம்பவத்தைப் படித்த கருணையே உருவான உமாயுன், களி கொண்டான். தன்னையே மறந்த உணர்வால், அறிவால், நூலகத்தை விட்டு இறங்கி வரும்போது, படிக்கட்டுகளிலே அவன் கால்கள் இடறி விட்டன.*

*தடுமாறித் தடுக்கி விழுந்தான். மாமன்னன் உமாயூன் "அல்லா" என்றபடியே, பாவம்!*

## ஹெராக்ளிட்டஸ்
## பிதாகொரஸ்
## சிந்தனைகள்

எரிசக்தி என்றால் என்ன? எத்தனை வகை? எப்படி அது உருவாகின்றது? உலகுக்கு அது ஏன் தேவை?

எரிசக்தியன் தன்மை என்ன? நன்மை என்ன? வன்மை என்ன? அதன் பிரிவாக்க சக்திகள் என்னென்ன?

"எரி என்ற ஏராளன்", சக்தி என்ற நிலத்தை விவசாயம் புரிகின்ற போது, அதன் சந்ததிகளாக - பிற சக்திகள் சிற்சில பயிரினங்களாகப் பிறப்பெடுக்கின்றன.

'தாய் - எரி - சக்தி - தந்தை இருபாலரும் இணைகின்ற சந்ததிகள்தான், பல சக்திகளாக, பரம்பரைகளாக, தலைமுலைகளாக நடமாடுகின்றன ! - உலகியலில்!

பரன் + பரை, தானே = பரம்பரை? அதாவது, தலைவனும் தலைவியும் சேர்ந்து, ஏன், ஆண் - பெண் என்ற இரு சக்திகளும் ஐக்கியமாகி, பிறப்பதுதானே பரம்பரை?

ஒரு துளி கண்ணீரைச் சோதிக்கின்ற விஞ்ஞானி, அதில் எவ்வளவு நீர், எவ்வளவு உப்பு அழுக்கு எவ்வளவு? என்ற கணக்கைக் கொடுப்பான்?

கண்ணீர் வருவது எப்படி? என்ற வினாவிற்கு விரிவுரை கூறுவான் உடற்கூறு மேதை!

நல்லதா கெட்டதா கண்ணீர் வருவது? என்ற ஆய்வுரையை ஆற்றுவான் மருத்துவ வித்தகன்!

எப்போதெல்லாம் ஒருவனுக்குக் கண்ணீர் வரும்? என்றே சிந்திப்பான் மனோ தத்துவ ஞானி!

கண்ணீர் வருவதற்குக் காரணம் என்ன? என்ற எண்ணி விடை காண்பான் தத்துவஞானி!

கண்களால் காண முடியாதவற்றை, அறிவியல் நம்பாது கண்களால் காணமுடியாதவற்றைப் பற்றிய ஆய்வும் -

தேடுதலும்தான், அறிவியலுக்கான அலாவுதின் அற்புத விளக்காகும்.

அதனைப் போல 'எரிசக்தி'க்கான ஆய்வும் தேடுதலும், அறிவியல் வித்துக்களாக விதைக்கப்பட்டிருக்கின்றன.

அவனியின் நாகரிக வளர்ச்சியில், நீருக்கும் - காற்றுக்கும் அமைந்துள்ள சக்திகளைவிட நெருப்புக்குத்தான் மிக அதிக சக்தியாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள், வரலாறுகள், எல்லாம், தீயின் தேவைகளை - எரியின் நெறிகளை - பெருமைகளை - அருமைகளை - சிறுமைகளை - வழிபாடுகளை அழகாக வரையறுத்துள்ளன.

எரி, அழிக்கும் சக்தியுடையதல்ல - ஆக்கம் தருகின்ற சக்தி! இது உலகம் ஏற்றுக் கொண்ட உண்மை - அறிவியல்!

"எதுவும் ஒன்றல்ல எல்லாம் இரண்டே!" என்றான், கிரேக்க அறிஞன் பிதாகொரஸ்!

"எதுவும் இரண்டல்ல, எல்லாம் ஒன்றுதான்" என்ற, வாதப் போரிட்டான் - அதே கிரேக்கத்தில் பிறந்திட்ட ஹெராக் ளிட்டஸ் என்ற மேதை!

"காலம் நிலையான ஒன்றல்ல, மாறுதலுக்கு உட்பட்டது மட்டுமல்ல - மாறுதலேதான்" என்று, அறியாமைக்கு ஆணி யறைந்தான் அவன்.

"மாறுதல் என்பது, இயற்கையின் நியதி, மாறுபடாத ஒன்றும் உலகில் இல்லை. எதுவும் மாறவில்லை என்று கூற முடியாது" என்றான்.

எனவே, மேதினியின் மேன்மையான தோற்றம் ஒவ்வொன் றும் மாறுதல்தான் என்பது, அசைக்க முடியாத அறிவு!

"அவ்வாறு , மாறுதலுக்குரிய காரணம் என்ன? அதுதான் எரிசக்தி! அவனிக்கு நேரிடையான பொருள் எரிசக்திதான்!

**"Ever Living fire is world meaning"**- என்று வரையறுத்து வாதிட்டான்!

அதற்கு என்னென்ன காரணங்களைக் காட்டினான் தெரியுமா? ஹெராக்ளிடஸ்?

எந்த உடலிலும், உணவு செரிமானமாவது எப்படி? எரிசக்தியால்தான் என்றான்.

குன்றேறி நின்றார் முதல், குணக்கேடன் வரையுள்ள வனுக்குக் கோபம் வந்தால்,கண்கள் கோவையாவது ஏன்? எரிசக்திதான்.

பூமியிலிருந்து குறிப்பிட்ட அளவிற்கு மேலேயும் - கீழேயும் சென்றால், வெப்பம் வேக வைக்கிறதே -ஏன்? எரிசக்திதான்!

குடம்பையில் உயிர் வாழும்வரை சூடு இருக்கிறது. புள் பறப்பது போல அது பறந்து விட்டால், உடல் குளிர்ந்து விடுகிறதே அது ஏன்? எரிசக்தி இல்லை என்பதால் அல்லவா!

பகல் இரவாகின்றது, இரவு பகலாகின்றதே, ஏன்? எரிசக்தி இழப்பால் ஏற்படும் குளுமை! தட்பத்தைத் தவிர்த்த வெம்மையால்தானே?

வினாக்களை இவ்வாறு தொகுத்து விடை கண்டவன் ஹெராக்ளீட்டஸ் என்ற அற்புத அறிஞன்!

அதனால் கிடைத்த விடைகள்தான், எரிசக்தியின் பெயரால் பிறப்பெடுத்துள்ள பிற சக்திகள் எல்லாம் என்பதை அறியலாம்.

இன்றைய அறிவியல் உலகம், அறிந்து, - புரிந்து -உணர வேண்டிய ஆழ்கடல் முத்து - எரிசக்தி!



# காஞ்சி ஒரு சிற்றாய்வு

உலகம் ஏன் தோன்றியது, என்ற வினாவை முதன்முதலாகக் கேட்டவன் மெய் ஞானியானான்!

எப்படித் தோன்றியது இந்த மேதினி, என்ற கேள்வியை எழுப்பியவன், விஞ்ஞானியானான்!

இந்தப் பார் தோன்றியது எதற்காக, என்ற ஆய்வைப் புரிந்தவன் பகுத்தறிவாளன் ஆனான்!

இந்த மூன்று வினாக்களையும் முழுமையாகக் கூர்ந்து, ஓர்ந்து, புரிந்து, உணர்ந்து செயல்பட்டவர் - அறிவுலக - அற்புதர் ஆதிசங்கரர்!

அந்த ஞானச் சிற்பியின் அவதார அற்புதங்களை, அன்றாடம் பயிராக்கும் விளைநிலம்தான், காஞ்சி சங்கரர் மடம்.

காஞ்சி என்று அழைக்கப்படும் இன்றைய காஞ்சிபுரம் மாநகர், பன்னூறு ஆண்டுகட்கு முன்னர், உலக வரலாற்றுப் பொன் னேடுகளின் ஒரு பக்கமாகத் திகழ்ந்து, புகழ் பூத்த கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் - மாநகராகப் பொலிவு பெற்றிருந்தது.

ஏதென்ஸ் நகரிலே தோன்றிய அறிவுலக ஞானி சாக்ரடீசைப் போல அரசியல் வரலாற்றுக்குப் பொருளாதார அரிச்சுவடியாக விளங்கும் அர்த்த சாஸ்திரம் என்ற அரசியல் முதல் பொருள் நூலை, உலகில் முதல் முதல் எழுதிய சாணக்கியன் பிறந்த ஊரும் இதே காஞ்சிபுரம்தான் என்ற சரித்திரச் சான்றுமுள்ளது.

காலத்தால் அழிக்க முடியாத கவின்மிகு கற்கோயில்களை எழுப்பிய பல்லவப் பேரரசுகளுக்குத் தலைநகரமாக விளங்கிப் புகழ் பெற்ற நகரமே இன்றைய நமது காஞ்சிபுரம் மாநகர்.உலக நாடுகளுக்குச் சகல கலா வல்லுனர்களை வழங்கிய ஹர்ஷன்

என்ற பேரரசன், நாளந்தா பல்கலைக் கழகத்தை வட நாட்டிலே உருவாக்கினான்.

இந்த அற்புத அறிவுக் கழகத்திற்கு காஞ்சிபுரத்திலே இருந்து சென்ற தர்மபாலர்தான், தலைமை ஆசானாக அமர்ந்து அறிவுதானம் வழங்கியதாக வரலாறு சுட்டுகின்றது.

குறிப்பாகக் கூறுவதானால், சீனநாட்டுப் பயணிகளாக இந்தியாவிற்கு வருகை தந்த யுவான் சுவாங், பாஹியான், இத்சிங் போன்றவர்கள் எழுதிய வரலாறுகள், தர்மபாலரிடம் நாளந்தாவிலே போதனை பெற்ற ஞானச் சுடர் குறிப்புகளே என்றால் மிகையாகா !

"காஞ்சிக் கடிகை" என்ற சமஸ்கிருத வேதாகமக் கல்லூரி ஒன்று, முதன் முதலாக அமைந்த மாநகரமும் காஞ்சிபுரம்தான்.

இன்றைய இந்திய அரசின் தேசியக் கொடியிலே பொறிக் கப்பட்டுள்ள அசோகச் சக்கரத்தின் அதிபதியான சாம்ராட் அசோகனின் மகள் சங்கமித்திரையும், அவள் சகோதரன் மகேந்திரனும், பௌத்தத்தைப் பரப்பிட இலங்கைத் தீவிற்குப் போகும் வழியில் காஞ்சிபுரத்திலே தங்கி அசோகனின் எண்ணங் களைப் பரப்பியதாகச் சரித்திரம் சாற்றுகின்றது.

சிலப்பதிகார மாதவியின் மகள் மணிமேகலை, காஞ்சிபுரம் வீதிகளிலே அட்சயப் பாத்திரம் ஏந்தி, ஏழை மக்கள் பசிப் பிணியைப் போக்கி, அறமுரைத்ததாகச் சாத்தனாரின் மணிமேகலைக் காப்பியம் கழறுகிறது.

அய்யன் திருவள்ளுவர் பெருமான் எழுதிய திருக்குறள் மறைக்கு பத்துப் பேர் உரை வரைந்துள்ளார்கள்.

அவற்றுள் மிகச் சிறந்த, சீரிய உரையாக இன்றும் நின்று நிலவுவது, காஞ்சிபுரம் உலகலந்தப் பெருமாள் கோயில் அர்ச்சகராகப் பணியாற்றிய பரிமேலழகர் உரைதான் என்பது அறிவுலக முடிவாக அமைந்துள்ளது.

ஏறத்தாழ ஐந்நூற்றுக்கும் மேலுள்ள திருக்கோயில்களையும், எண்ணற்ற மன்னர்களது படையெடுப்புகளின் வெற்றி தோல்விகளையும் கண்ட வரலாற்றுப் புகழ்மிக்க பெருநகரம் - இன்றைய காஞ்சிபுரம்.

'நா'வால் நாட்டை ஆளலாம், தமிழ்ப் பண்பாட்டின் நனி நாகரிகத்திற்கு மனிதமாக நடமாடலாம், எழுத்துக்கும் பேச்சுக்கும் செயலுக்கும் அறிவு ஊற்றுக் கண்களாகத் திகழலாம். ஈரமும் - வீரமுமுடைய நல்லாட்சியை நடத்தலாம் என்பதற்கு, இலக்கிய -இலக்கணமாய் வாழ்ந்திட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த இடமும் இதே காஞ்சிபுரம்தான், என்று எண்ணுகிற போது, அடடாவோ .... காஞ்சி மாநகர் பெற்ற பேருதான் என்னே என்று என் போன்றோர் உள்ளங்கள் எல்லாம் சிலிர்க்கின்றனவே !

இந்திய அரசியலில் புகழ்பெற்ற அரசியல்வாதிகளாகவும் இராஜதந்திரிகளாகவும், தத்துவ ஞானிகளாகவும், விளங்கிய வர்கள், காஞ்சியில் வாழ்ந்த வள்ளல் பச்சையப்பர் அவர் களின்கல்விக் கோட்டத்திலே பயின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய அருமை பெருமைகளைப் பெற்ற திருநகரமாம் காஞ்சிபுரத்திலே அமைந்துள்ள சங்கரர் மடத்திலேதான், அருட்திரு, ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் உள்ளத் தாமரையில், வேதாந்த - சித்தாந்த ஞானக் கல்வி, இயற்கை யாகவே மலர்ந்து மணம் பரப்பி வருவதைக் கண்டு ஆன்மீக உலகமே ஆனந்தமடைகின்றது.

தெய்விக வேட்கையுள்ளவர் வேறெதையும் நாடாது, ஞானத்தையே நாடுவார் போல ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் முற்பிறவியின் தொடர்பு தொடர, இப்பிறவியிலும் சிந்தை அவிழ்ந்து சின்மயமாகச் சிறந்து சீரருளையே நாடிச் சிறப்பெய்தி வருகின்றார் எனலாம்.

வெந்து வெடிக்கின்ற வெய்யவனின் வெட்பம் வெட்கப்படுமாறு, ஞானமகான் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் சீரடிகள், தமிழகத்தின் வீதிகளிலே பன்முறை பவனி வந்து, மக்களுக்கு அருளாட்சி வழங்கும் போது, இந்த ஆன்மிகக் காட்சியை யான் ஒருமுறை நேரில் கண்டு வியந்து வியர்ந்து அயர்ந்ததுமுண்டு.

அப்ப்பா... இந்த மாமுனிவரின் பின்னே, வந்து பொழிகின்ற மாமழை போன்ற மக்கள் வெள்ளத்தின் பிரவாகத்தைப் பார்த்து - சிந்தை சிலிர்த்தேன்.

இந்த ஆன்மிக நடைப் பயணத்தில், அவரது அருளாட்சிக்கு மங்கிய மக்கட் புலன்கள், ஞானப்பித்தேறிச் சுழன்றன.

அருள் அவா பெருக்கெடுத்தோர், அந்த ஞானச்சுடர் பின்னே அணிவகுத்தனர். அன்று அவர், ஓர் ஆன்ம வீரரைப் போலச் சேவார்த்திகளுக்குக் காட்சி தந்தார்.

தியான மோனத்தின் பயிற்சி, அந்த ஞானியின் திரேகத்தில் மின்னலென மின்னியது.

மக்கள் மனக்கடலிலே மறைந்துள்ள அஞ்ஞானப் பாசிகளைத் தமது ஞானப் பொலிவால் மறக்கடித்தார்.

அன்பெனும் நீரைப் பாய்ச்சினார். அருளெனும் அறுவடையை அளித்தார்.

அரசியல்வாதிகளைப் போல சொன்மாரிகளைப் பொழிந்தா அந்த அருள் விளைவை ஆற்றினார். இல்லை !

மனமும் வாக்கும் மௌனமுற, உடல் மோனத்தைக் கடந்து, மனோ மோனத்திலே மிதந்து, இறை மோனத்திலே ஒன்றிய அவர், அறிவுச் சுடராக ஒளி வழங்கினார்.

அத்தகைய ஞான நாயகரான ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் ஆன்மிக நடைப் பயணத்தை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

செருக்கும் - சினமும் - சிறுமையும் இன்றி, தமிழக வீதிகளிலே இன்றும் ஞான உலா வரும் அற்புத வாணி அருளாளர் ஜெயேந்திரர் அவர்கள்.

அற்றம் என்றால் அழிவு - கேடு என்றும் பொருள், பெருமையை அறுத்துச் சிறுமையை விளைவிப்பது அற்றம்.

ஞானத்தின் பெயரால், உருவால் அற்றம் விளைவிப் பவர்களும் உண்டு. அவர்களில் ஒருசிலரைப் பத்திரிகைகள் இன்றும் அடையாளம் காட்டுகின்றன.

ஆனால், அருட்திரு.ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மதத்தின் பெயரால் பிற மதத்தினருக்குள் தோன்றும் அந்த அற்றத்தை அறுத்து, சேவார்த்திகள் சுற்றத்தை நாளும் பெருக்கி, கற்றவரையும் மற்றவரையும் கண்ணாகக் கை தழுவி - அருளாட்சி புரியும் அற அன்பாளர் அவர்.

அந்த மாமுனிவரின் கருணைக்காகக் காத்திருக்கும் பக்த கோடிகளின் கணப்பொழுதையும் பழுதாக்காமல், விழி யூகத்தால் அவர்களை அருள்பாலித்து, ஆன்மிக நெறிகளை வளர்க்கும் அருளாட்சி வித்தகர் அவர்.

வண்டியில் பூட்டிய மாடுகளைக் கவனித்து ஓட்டினால், வண்டிக்குப் பழுதல்ல - ஓட்டிக்கும் அழிவல்ல.

அதை நன்குணர்ந்த ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தமது ஆன்மிக வண்டியில் ஞான மக்களை ஏற்றிச் செல்லும் பாங்கு, அருமை ஒழுக்கம், அவர்களின் இம்மைக்கும் - மறுமைக்கும் நற்பாதைகளை வகுக்கும் வழித் தடங்களாக அமைந்துள்ளன.

தமிழ் எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தெய்விக அற்புத சக்திகள் உண்டு.

எடுத்துக்காட்டாக - 'அன்' என்ற விகுதி ஆண்பாலுக்கும், 'அள்' என்ற விகுதி பெண்பாலுக்கும் சுட்டும் இலக்கண விதிகளாகும்.

ஆனால். 'இ' என்ற விகுதி, பெண்பாலுக்குச் சிறப்பாகவே அமைவதுமுண்டு என்று கருதுகிறேன்.

இராமன், விக்கிரமன், பகவன், முருகன், வில்லாளன், நடராசன், முருகேசன் என்ற பெயர்களில் வரும் விகுதியான 'அன்' என்ற அசையை நோக்குங்கள். ஆண்பால் பெயர்களைச் சுட்டுகிறதல்லவா?

சுந்தரி, காவிரி, பொன்னி, இலட்சுமி, மீனாட்சி, காமாட்சி, அங்கையர்க்கண்ணி, பார்வதி, வள்ளி, கயல்விழி, தமிழரசி, மலர்விழி, என்ற பெயர்களின் விகுதியான 'இ' என்ற எழுத்தும் பெண்பாலைக் குறிக்கின்றனவா? - இல்லையா?

மதுரை மாநகரிலே தடாதகைப் பிராட்டி, பெண்ணரசியாய் வீற்றிருந்து, இந்தப் பரந்த வியனுலகை ஆட்சி செய்வதைப் போல நமது ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் பெயரில், இறுதி எழுத்தாக 'இ' இகரமாக அமைந்திருப்பதால், அந்த மகான், காஞ்சி சங்கரர் மடத்திலே தடாதகைப் பிராட்டியைப் போல, தெய்வச் சக்தியுடன் வீற்றிருந்து ஆன்மிக உலகை ஆட்சி செய்து வருகிறார் என்று எண்ணுகிறேன்.

"No virtu is higher than to love all men, and there no loftier aim in divine than to profit all men."

“எல்லோரும் இன்பமாய் வாழ, அன்பு புரிவதே தருமம். மனித சமுதாயத்திற்கு இனிதாக உதவி செய்வதைக் காட்டிலும், தெய்வீகத்தின் உயர்ந்த குறிக்கோள் வேறு யாதும் இல்லை” என்று பன்னூறு ஆண்டுகட்கு முன்பே சீன நாட்டு மதாபிமானி கன்ஃபூசியஸ் குறிப்பிட்டார்.

அந்தத் தத்துவத்தின் சாயலை, இன்று நான், நமது அருட்திரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளிடம் காண்கின்றேன்.

மக்களாகப் பிறந்த எல்லோரும் இன்பமாய் வாழ்ந்திட, ஜன்மோர்ச்சா ஜன்கல்யாண், என்ற சங்கங்களை, அவர் நிறுவி, அவற்றின் வாயிலாக மக்களுக்கு நற்றொண்டு நாட்டி வருகிறார்.

எல்லார்க்கும், எல்லாம் நிகழ்பவற்றை அறியும் ஆண்டவனை நோக்கி, வடலூர் வள்ளல் பெருமான் “அம்மையே அப்பா” என்று உருகி உருகிப் பாடினார்.

இறையடிகளார்களுக்குத் தாயும் தந்தையும் கடவுளே என்று, கண்ணீர் மல்க மல்கக் கூறி அவர் உருகினார்.

அந்தத் தத்துவக் காட்சியிலே எழுந்த அவ்வுத்தம ஞானியின் உள்ளத்து உருக்கத்தை உணர்ந்த அருளாளர்கள் பலருண்டு.

நமது மாமுனிவர் அவர்களும், பக்த கோடிகளுக்கு ஆற்றி வரும் உள்ளம் உருக்கும் அறிவுரைகள், ஞான ஒழுக்கங்கள், தாய் ஊட்டிப் போற்றிடும் சேய்களொத்த காட்சிகளாக அமைந்துள்ளன.

அந்தத் தெய்வத்தின் அருட்குரலை நாடு பின்பற்றுவதை இன்றும் பார்க்கின்றோம்.

இதைத்தான் பிளேட்டோ என்ற கிரேக்க ஞானி, "The people need the guidance of divine philosphers as desires need the enliehtenment of knowledge" என்றார்.

“மனவிருப்பங்களுக்கு அறிவு விளக்கம் போல், அவனி வாழ் மக்களுக்குத் தெய்வீக ஞானிகளுடைய ஆதரவும் அவசியமாயுள்ளது” என்று அறிவு ஒளி பரப்பினார்.

அந்த அரசியல் மெய்ஞானியின் குரல், நமது நாட்டு ஞான மகானின் திருநாவால், மணிவாசகங்களாக எதிரொலிப்பதைப் பார்க்கின்றோம்.

ஏனென்றால், ஒரு நாட்டில் எல்லொரும் மன்னராக இருக்க முடியாது. மனித சமுதாயத்தில் சீலமுள்ள மகான்கள் ஓரிருவர் கள் உலா வருவதே நல்லது. உயர்ந்தது, நன்மை பயப்பதுமாகும்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு பெய்யும் மழை" எல்லாருக்கும் நலம்தானே?

அந்த நல்ல ஞான மகான்களிலே ஒருவராக ஓம்பப் படுபவர் நமது அருளாட்சி புரியும் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளாவார்.

அதனால்தான் ஆன்மிக நிலமான இந்திய பூபாகத்தை அவர் ஆள்கிறார்.

"தூங்காமை, கல்வி, துணிவுடமை, - இம்மூன்றும் நீங்கா நிலனாள்பவற்கு" என்றார் திருவள்ளுவர்.

இந்தக் குறட்பா, நாட்டை ஆள்பவர்களுக்கு மட்டும்தான் பொருந்துமோ? ஆன்மிக மனங்கள் வாழ்கின்ற பூபாகத்தை ஆட்சி புரியும் அருளாளர்கட்குப் பொருந்தாவோ?

கல்வி அறிவு, காரிய நோக்கு, உள்ளத்துணிவு, - இம் மூன்றும், மதநெறிகளைப் பரப்பும் மெய்ஞானிகளுக்கும் தேவைதானே?

**"Dull content is unworthy of a Man"**

"மந்தமான மனக்களிப்பு மனிதனை எந்த வகையிலும் இழிந்தவனாக்குகின்றது" என்ற தத்துவம் சமுதாய மக்களைச் சஞ்சலப்படுத்த வில்லையா?

அந்தத் தனி மனிதனின் மந்தமான மனக் களிப்பைப் போக்கிட - ஓர் அருளாளர், ஒரு ஞானத் தேவன் மக்களுக்கு வேண்டாமா?

அந்த ஞான மாமுனிவர் தான் நமது சுவாமிகள் எனறால், மிகையாமோ?

அறியாமை சூழ்ந்த மனித சமுதாயத்தை, குறைகள் குவிந்த குடும்ப மக்கள், ஞானக் கோலால் ஆளப் பிறந்த அருளாளராகத் தோன்றிய ஆதி சங்கரர் வாரிசுதான் - நமது ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

அய்யன் திருவள்ளுவப் பெருந்தகையார் குறட்பாவிலே வந்துள்ள "தூங்காமை" என்ற சொல்லுக்கு, சிலர், உறங்கக் கூடாது என்று பொருள் கொள்ளுகின்றார்கள். தவறான வாதம் அது.

"தூங்குதல்" என்றால், சோம்பியிருத்தல் என்றும் பொருள் படும். தூங்காமை என்றால், எடுத்த பணியை விரைவாகக் கருத்தூன்றி, விழிப்போடு பணியாற்றல் என்பதே, அந்தச் சொல்லுக்குரிய அறிவாட்சியாகும்.

ஏனென்றால், மடி மிடியை விளைவிக்கும். அதனால் குடி கெடும். அடியோடு அதனை அகற்றினால் சிந்தனை சிறக்கும். - அறிவு சுரக்கும். ஞானம் முகிழ்க்கும் - ஞாலம் உய்யுமல்லவா?

வானம் வரவேற்கும் வாயிலுக்கு மக்களை அழைத்துச் செல்லும் கடமைகளை ஆற்றும் நமது சுவாமிகளுக்குத் தூங்காமை இல்லை. கடலளவு ஞானக் கல்வியும் உண்டு.

எண்ணத் துணிவுகளால் சில வேளைகளில் அரசுக்கும் கூட அவர் அருட்பாலித்து அறிவுறுத்துவதை நாம் பார்க்கின்றோம்.

எனவே அந்த மகான் மன்னுயிர்க்கு மனநலம் ஊட்டுகிறார். 'சித்தமே மனிதனது சத்து' என்று தாயாக அரவணைத்துப் பேசுகின்றார். பணியாற்றுகின்றார்.

அறிவாலே சிலர் ஒழுக்கம் வளர்வதாக நம்பலாம். மனம்தானே ஒழுக்கத்தின் விளைநிலம்?

அதனால், இனிய மனதை மக்கட்கு வழங்கிட, அரும்பாடு படுகின்றவர் நமது மாமுனிவர் அருட்திரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆவார்.

1967 -ல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் தலைமையுரை ஆற்றிப் பேசும்போது, பேரறிஞர் அண்ணா அவர்கள், "மயங்காதே தமிழா, தயங்காதே தமிழா" என்று குறிப்பிட்டார். ஏன்?

"காலம் கடந்து விட்டது என்றோ, வசதிக் குறைவுகள் என்றோ, எதையும் செய்திட மனம் மருகி மயங்காதே! எண்ணியதைத் திண்ணியதாக்கித் தயங்காமல் துணிந்து செய்" என்றார்.

"உலக வாழ்வு செல்வத்தால் உயர்கின்றது. வினையாண்மையால் செல்வம் விளைகின்றது. அதே செல்வம்தான் வாழ்க்கையையும் வளமாக்குகின்றது"

"ஜப்பான் நாட்டு மக்களைப் போலப் பொருளாதார வாழ்க்கையில் மேம்பட, "செய்க பொருளை" அதற்கான பணிகளை ஆற்றிட மயங்காதே தமிழா ! தயங்காதே தமிழா! அதனால்தான் "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று திருவள்ளுவர் நமக்கு கட்டளையிட்டார்" என்றார் அறிஞர் அண்ணா.

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற திருவள்ளுவர் பெருமான் கட்டளையை முழக்கமிட்ட அறிஞர் அண்ணா அவர்கள், "அருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற அந்தப் பாதிக் குறட்பாலை விளக்காமல் விட்டுவிட்டார் - ஏன்?

ஆன்மிக வாழ்க்கையின் நுட்பங்களை, அதன் பெருமை அருமைகளை, அதனால் விளையும் மேலுலக அற்புதங்களை விளக்கும் வைதீக மதப்பணி, நமது அருளாளர் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளைப் போன்ற பிற ஞானமகான்களின் தொண்டு என்பதனால், "அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை" என்ற பாதிக் குறட்பாலை அவர் தொடாமல் விட்டுவிட்டார்.

"Time is a precious gift "

-என்பது மாவீரன் நெப்போலியனுடைய வாக்கு. "காலம் அரிய தெய்வக் கொடை" என்பதைப் புரிந்து சுவாமிகள் அருந்தொண்டு புரிகின்றார்.

இளமை ஒரு நீர்க்குமிழி, நீரில் சுருளும் அலைகள், வந்து வந்து போகும் செல்வங்கள், நீர் மேல் எழுதும் எழுத்து - மக்கள் வாழ்க்கை.

நிலையற்ற இந்த மூன்றையும் நீக்கி, நிலையுற்ற இறைவனின் பேரின்பம் பெறுவது பிறப்பின் தத்துவம் என்று நாள்தோறும் மக்களிடையே உலா வந்து, பொழியும் மேகம் போன்றவர் நமது ஞானச்சுடர் ஜெயேந்திரர் அவர்கள்.

நீரால் வாய் புனிதப்படாது, புகழப்படாது, ஆன்மிகக் கல்வியின் ஞானம் மட்டுமே அருள் வாய்ப் பட்டுப் புனிதப்படும்

- புகழப்படும் என்பதற்கு எடுத்துக் காட்டாக வாழ்பவர் நமது ஞானமகான்.

மோனம் என்பதே மௌனம்தான். அது, அக மவுனம், புற மவுனம் என இருவகைப்படும்.

அக மவுனத்தை மன மவுனம் எனலாம். உடலுறுப்புகள் தத்தம் நிலை திரியாமல் அடங்கலே புற மவுனமாகும்.

இந்த இரு மோன நிலைகளால், திரு. ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் - காட்சிக்கு எளியராய் - கடுஞ் சொல்லற்றராய், அழுக்கறுத்த மௌனியராய் நாட்டில் பவனி வருவதை நாள்தோறும், நகர்தோறும் பார்க்கின்றோம்.

ஞானம் மூவகைப்படும். விண்மீன்களது ஒளியைப் போல அவ்வப்போது ஒளிரும் உயிர் அறிவை உபாய ஞானம் என்பர்.

நிலவொளி போலக் குளிர்ந்து தோன்றி அறியும் ஆன்ம அறிவு உண்மை ஞானம் எனப்படும்.

அனைத்தையும் அறிந்து அனுபவிக்கச் செய்கின்ற ஆதவன் ஒளி போன்ற இறையறிவே அனுபவ ஞானம்.

இந்த மூவகை ஞானங்களும் கைவரப்பட்ட ஞானக் கலைஞர் நமது ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

அதனால்தான், மோரில் மிதக்கும் வெண்ணைத் திரள் மீண்டும் மோரில் ஒன்றாததுபோல, ஓர் அங்குலம் கூடத் தமது ஞானப் பாதையை விட்டு அவர் மறந்தும் பிறழாத வைர ஞானியாகத் திகழ்கின்றார்.

இல்லறத்தார், தத்தம் இல்லங்களிலே இறை உருவங்களைக் கிழக்குத் திக்கை நோக்கி வைத்தே வணங்குகிறார்கள். அதுபோலவே, கோயிலுக்குச் சென்றாலும் நாம் கிழக்கு நோக்கியே வணங்குகிறோம். ஏன்?

துறவறத்தார் தெற்கு நோக்கி வணங்கினால் ஞானம் கைகூடுமாம். அவர்கள் வடக்குப் பார்த்து வணங்கினால் சித்த சுத்தி உருவாகும் என்பது மரபு.

இந்துக்களாகிய நாம், காஞ்சிபுரம் இருக்கும் திக்கை நோக்கியே வணங்குவோமாக! காரணம், காஞ்சிபுரம் நமது

*அறிஞர் அண்ணா என்ற நமது ஞானச்சுடரையும், காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் ஞானத்தையும் ஞாலத்துக்கு ஊட்டும் தாய்மண் என்பதால்!*

*உடற் கூறுகளை ஆய்ந்தவன், ஒன்று போகியாவான் அல்லது யோகியாவான்! சித்தனாவான், இல்லை புத்தனாவான்!*

*உயிர்கூறுகளை உணர்ந்தவன், ஒன்று விஞ்ஞானியாவான் அல்லது மெய்ஞ்ஞானியாவான். இல்லை, தேவார நால்வர் களைப் போல அருள் விஞ்ஞானிகளாகவும் மாறலாம் அல்லவா?*



# அய்யன் திருவள்ளுவர் கிறித்துவரா?

***கிறித்துவர்கள் நடத்திய***
***திருக்குறள் ஆய்வு மாநாடு***
***வரவேற்புரை!***

பேரன்பு கொண்ட தமிழகப் பேரறிஞர்களே!

செந்தமிழ் பால் உயிர் நாட்டங் கொண்ட சான்றோரே!

எதிர்ப்பனைத்தும் எரி நெருப்பில் சுட்டு,

தமிழ் காக்கும் படையாய், கடமை வீரராய்,

தமிழகத்தில் உலாவரும் பேரறிவாளர்களே,

முனைவர்களே, பெரும் புலவர்களே, பேராசிரியப் பெருமக்களே ! வணக்கம்.

கிறிஸ்தவத் தத்துவத்தின் வாயிலாகத் தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும்,இன்று வரை கடனாற்றித் தன்னை உயர்த்திக் கொண்டு உயர்ந்தோரே,

கவிதையின் வாயிலாய், இயற்கையை மக்களிடையே எடுத்து வைக்கும் பேராற்றல் படைத்த கவிஞர்களே!

ஆய்வுரையைக் கேட்டுத் தெளிவு பெறவந்த எம் தமிழ்ப் பெருங்குடி மக்களே! சிந்தனையாளர்களே!

உங்களை எல்லாம் திருக்குறள் ஆய்வரங்கத்தின் சார்பாக வருக, வருகவென வரவேற்கிறேன்.

சென்னை எல்டாம்சு சாலையில் இயங்கும் கிறித்துவக் கலைத் தொடர்பு நிலையத்தின் சார்பாக - இரண்டு நாட் களுக்குரிய திருக்குறள் ஆய்வு மாநாடு இங்கே நடை பெறுகின்றது.

மொழி நூலறிஞரும் திருக்குறளுக்கு மரபுரை கண்டவரும், தனித் தமிழ் இயக்கத் தந்தையெனத் தமிழர்களால் போற்றிப் பாராட்டப்பட்டவருமான தமிழ்க்கடல் மறைமலையடி

களாருக்குப் பிறகு, தனித் தமிழ் இயக்கத்தின் தலைவராக விளங்கி வருபவரும், திராவிட மொழி நூல் புலமையில் தனக்கு ஒப்பரும் மிக்காருமின்றித் திகழ்பவருமான, மூதறிஞர் பண்டித ஞா.தேவ நேயப்பாவணர் எம். ஏ. அவர்கள், இந்த மாநாட்டுக்குச் சிறப்புத் தலைவராக அமர்ந்துள்ளார்.

அவர் ஒரு கிறித்துவர்தான் - என்றாலும், தமிழ் மக்களுக்கு நியாயமான - நேர்மையான - கடமையான நீதியை - தீர்ப்பை வழங்குவார் என்பதிலே, நம்மைப் பொறுத்தவரை நம்பிக்கை இருக்கின்றது.

புலவர் தெய்வ நாயகம் என்பவர், "அய்யன் திருவள்ளுவரைக் கிறித்துவர்" என்கிறார்.

அதற்காக, "திருவள்ளுவர் கிறித்துவரா? ஐந்தவித்தான் யார்? வான் எது? நீத்தார் யார்? எழு பிறப்பு, சான்றோர் யார்? " என்ற ஆறு, ஆய்வு நூல்களை எழுதியிருக்கின்றார்.

ஒவ்வொரு நூலுக்கும் அறுவரைக் கொண்ட ஒவ்வோர் அணியாக, ஆறு நூற்களுக்கும் 36 பேரறிஞர்கள் இங்கே வருகை தந்துள்ளீர்கள்!

அணி உறுப்பினர் ஐவரும், அவரவர் அணி நூலை நன்கு படித்து, அதனை ஆய்வு செய்து, அவருடைய கருத்தை எழுதித் தந்துள்ளார்கள்.

அவ்வாறு அவர்களால் தரப்பட்ட ஆய்வுக் கருத்துக்களை அணித் தலைவர்கள் படித்து, அவற்றின் மேல் அவரவரது ஆய்வையும் வழங்க வேண்டியுள்ளார்கள்.

வழங்கப்பட்ட அந்த அறுவரணியின் ஆய்வுகளை - நகல்கள் எடுத்து, இங்கே அமர்ந்துள்ள மற்ற அணிகளின்அறிஞர் பெருந்தகைகளுக்கும், சான்றோர்களுக்கும் அந்தந்த அணிகளின் நகல்களை எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு அணியினர் அனைவரும், அவரவர் ஆய்வுப் பொருளுக்கு ஏற்ப, தடை விடைகளுடன் இங்கே உங்கள் முன்பு தத்துமது கருத்துக்களை நாட்டி, வழக்காடி வாதமிடுவர்.

அந்த ஆய்வாளர்கள் கருத்துக்கள் மீது, இந்த ஆய்வு மாநாட்டின் தலைவர் மொழி ஞாயிறு ஞா. தேவநேயப்

பாவாணர் அவர்கள் தீர்ப்பு கூறுவார்.

திருவள்ளுவர் கிறித்தவரா? இல்லையா? என்ற தீர்ப்புக்காக, தமிழ்நாடு காத்திருக்கிறது.

இந்த மாநாட்டில் உங்களுடைய திருக்குறள் அறுவை சிகிச்சையால் விளைந்த அனுபவத்தைக் கேட்க, ஆய்வை அறிய ஏறக்குறைய ஆயிரத்திற்கும் மேலான அறிஞர் பெருமக்கள் கூடியிருக்கின்றார்கள். இதற்கான விளம்பரங்கள் "முரசொலி" "தினமணி " நாளேட்டில் வந்துள்ளதை அறிவீர்கள்.

'திருக்குறள் ஆய்வு மாநாடு'க்காக அச்சடிக்கப்பட்டு வெளி வந்த அழைப்பு இதழ் நிகழ்வுகளைப் படிக்கின்றேன்.

'ஐந்தவித்தான் யார்?' என்ற ஆய்வு நூலுக்கு, திருக்குறள் பீடம் அழகரடிகள் அவர்கள் அணித் தலைவராகவும், டாக்டர் சி.பாலசுப்பிரமணியம்,எம்.ஏ.எம்.லிட், பிஹெச்.டி., பண்ணா ராய்ச்சி வித்தகர் பேராசிரியர் பி.சுந்தரேசனார், சமண மதத் தைச் சேர்ந்த ஜீவபந்து டி.எஸ்.ஸ்ரீபால், பேராசிரியர் வி.பா.க. சுந்தரம் எம்.ஏ., பேராசிரியை ப. தமிழ்ச்செல்வி எம்.ஏ., ஆகியவர்கள் அணி உறுப்பினர்களாக அமைந்து - ஐந்தவித்தான் யார்? என்ற நூலை ஆய்வு செய்திருக்கின்றார்கள்.

'வான் எது?' என்ற ஆய்வு நூலுக்கு, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் எம்.ஏ., எல்.டி, விசாரத் (இந்தி ) அவர்கள் - அணித்தலைவராகவும், டாக்டர் என்.சுப்பு ரெட்டியார் எம்.ஏ., பி.எச்.டி, டாக்டர் ஞானப்பிரகாசம் எம்.ஏ., பி.எச்.டி, பேராசிரியர் லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார், பேராசிரியர் கே.எஸ். மகாதேவன் எம்.ஏ., தத்துவக் கவிஞர் குடியரசு ஆகியோர் அணி உறுப்பினர்களாகக் கூடி, 'வான் எது?' என்ற நூலை ஆய்வு செய்திருக்கின்றார்கள்.

'நீத்தார் யார்?' என்ற ஆய்வு நூலுக்கு, அணித் தலைவராக டாக்டர் வ.சுப. மாணிக்கம் எம்.ஏ., எம்.ஓ.எல். பி.எச்.டி, அவர்களும் உறுப்பினர்களாக, டாக்டர் மு.கோவிந்தசாமி எம்.ஏ., எம்.லிட், பி.எச்.டி. புலவர் மு. சண்முகம் பிள்ளை, பேராசியர் பொன்.ஆ. சத்தியசாட்சி எம்.ஏ.,எம்.ஓ.எல்., பேராசிரியர் சரசுவ இராம்நாதன் எம்.ஏ., பேராசிரியர் இ.சு.முத்துசாமி எம்.ஏ., பி.டி. ஆகியோர் கூடி, "நீத்தார் யார்?" என்பது பற்று ஆய்வு செய்துள்ளார்கள்.

"எழு பிறப்பு" என்ற ஆய்வு நூலுக்கு, அணித் தலைவராகத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி அவர்களும், டாக்டர் இரா. சாரங்கபாணி எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி, வித்வான் வை.இரத்தினசபாபதி பி.ஓ.எல்., எம்.ஏ., மகாவித்வான் ச.தண்டபாணி தேசிகர், ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி - வேங்கடசாமி, வித்வான் வி.பி.நடராசன் ஆகியோர் உறுப்பினர்களாக இணைந்து 'எழுபிறப்பு' பற்றி ஆய்வு நடத்தியிருக்கின்றார்கள். இவ் விழாவில் அடிகளார் ஒருவர்தான் வரத் தவறிவிட்டார்.

"சான்றோர் யார்?" என்ற ஆய்வு நூலுக்கு, 'இராவண காவியம்' ஆசிரியர் புலவர் குழந்தை அவர்கள் - அணித் தலைவராகவும், பேராசிரியர் புலவர் ம.நன்னன் எம்.ஏ., பேராசிரியர் மோசசு பொன்னையா எம்.ஏ., காவல் துறையைச் சார்ந்த சு.மி. டயசு ஐ.பி.எஸ்., டி.ஐ.ஜி., பேராசிரியை சாரதா நம்பியாரூரான் எம்.ஏ., சோம. இளவரசு ஆகியோர் அணி உறுப்பினர்களாக சேர்ந்து, 'சான்றோர் யார்?' என்பது பற்றி ஆய்வு செய்திருக்கின்றார்கள்.

"திருவள்ளுவர் கிறித்துவரா?" என்ற ஆய்வு நூலுக்கு அணித்தலைவராக டாக்டர் மெ. சுந்தரம் எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி, அவர்களும், பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு எம்.ஏ., (தமிழ்) எம்.ஏ., (வரலாறு) எம்.லிட்., டாக்டர் இராம.பெரிய கருப்பன் எம்.ஏ., (வரலாறு) எம்.லிட்., டாக்டர் இஸ்ரவேல் எம்.ஏ., பி.எச்.டி, புலவர் க. வெள்ளை வாரணனார், பேராசிரியர் எழில் முதல்வன் எம்.ஏ., ஆகியோர் அணி உறுப்பினராக அமர்ந்து, 'திருவள்ளுவர் கிறித்துவரா?' என்ற நூல் பற்றி ஆய்வு நடத்தியிருக்கின்றார்கள்.

இறுதியாக இரண்டு நாட்களிலும் திருக்குறளார் வீ.முனுசாமி பி.ஏ.பி.எல்., சிறப்பு விருந்து ஆற்ற இருக்கின்றார்கள்.

இந்த மாநாடு, 1962, மே-3, 4ஆம் நாட்களில், எண் 3 எல்டாம்சு சாலையிலே உள்ள கிறித்துவ கலை - தொடர்பு நிலையத்தின் அரங்கத்தில், அரங்கத் தலைவர் அருட்திரு. சா. சுவிசேஷ முத்து பி.டி., எம்.டி.எச், அவர்கள் மேற்பார்வையில் நடைபெறுகின்றது.

திரு. புலவர் தெய்வநாயகம் அவர்கள், அய்யன் திருவள்ளு வரைக் கிறித்துவர் என்கிறார்.

அதற்கு ஆதாரமாக ஆறு ஆய்வு நூல்களைத் தீட்டியுள்ளார். அதற்காக நடைபெறுவதே இந்த ஆய்வு மாநாடு!

முத்தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் வித்தகருமான, இந்த திருக்குறள் ஆய்வு மாநாடு வெற்றிகரமாக நடைபெற, என்னுடன் இணைந்து அல்லும் பகலும் அயராது உழைத்த எனது அருமை குடும்ப நண்பர், கவிஞர் முருகு வண்ணன் அவர்களுக்கு எனது நன்றியைக் கூறிக் கொண்டு எனது வரவேற்புரையை இங்கே ஆற்றுகின்றேன்.

இந்த ஆய்வரங்கம், திருக்குறளுக்கு ஏற்பட்ட சோதனை என்றோ அல்லது வேதனை என்றோ - எவரும் எண்ண வேண்டாம்.

திருக்குறளை யாத்த நமது திருவள்ளுவர் பெருமானுக்கு ஈராயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டு காலத்தில், இத்தகைய தொரு வேற்று மதச்சவால், இன்று வரை ஏற்பட்டதில்லை.

புலவர் தெய்வ நாயகத்தாலும், கிறித்துவ மதப் பிற பிரிவு களாலும் ஓர் இக்கட்டான சூழ்நிலை சூழ்ந்துள்ளது. அந்த சவாலை ஏற்று இங்கே நாம் கூடியுள்ளோம்.

திருக்குறளைத் தொட்டு பொருள் கொண்ட மனம், இந்தப் நொடிப் பொழுது வரை உலகில் பிறக்கவில்லை.

திருக்குறள் ஒரு மத நூலாயின், அந்நூலின் பொருள் உணர்ந்து, வரிக்கு வரி விளங்காமல் போனாலும் - நம்பிக்கைக் கொண்டு இப்பிறவி தப்பித்தால் போதும், வேறோர் பிறவி கிட்டாதா என்று ஏங்கித் தவிப்போர்போல் இருந்துவிடலாம்!

திருக்குறள், வாழ்க்கையில் ஏற்படும் சலனங்கள் அத்தனைக் கும் எப்படி வளைத்துப் பொருள் காண்பது என்பதற்குரிய ஓர் அகராதி!

குறள் பிறந்த நாள் முதல் - இன்று வரை, அதன் உள்ளே சென்றவன், தன் கருத்து, தன் தெய்வம், தன் மதம் இருக்கின்றதா என்று பார்க்கிறானே தவிர, அதன் உண்மையை உணர்ந்து பார்த்தது இல்லை. எந்த உரையாசிரியருடைய நூலை எடுத்துப் பார்த்தாலும், அதில் அவரவர் விருப்பு, வெறுப்பு, தன்னலம்,

தன்மதம் தாண்டவமாடுகின்றதே அன்றி எந்நாட்டவருக்கும், எம் மதத்தினருக்கும், எக்காலத்தவருக்கும் பொருந்துமாறு எழுதப் பட்டதாகப் புலப்படவில்லை.

திருக்குறளுக்கு உள்ளே சென்றவரின் பாவ மூட்டை எவ்வளவு கனமாக இருக்கின்றதோ, அவ்வளவுக்கு அவ்வளவு மதத்தின் புண்ணியத்தையும் அதிலிருந்து தேடிக் கொண் டார்கள்.

கடவுளாலேயே நேரிடையாகச் சொல்லப்பட்டு, இரண்டா வது ஆட்களாலே "Second hand person" எழுதப் பெற்ற பகவத் கீதை, பைபிள், திருக்குரான் போன்றவை கூட, நேரிடையான பொருளை ஓர் இனத்திற்கோ, ஒரு மதத்திற்கோ கொடுத்து விடுகின்றது.

ஆனால் திருக்குறள் தமிழ்தான்! அதிலுள்ள எழுத்துக்களும் தமிழ் எழுத்துக்களும் தமிழ் எழுத்துக்கள்தான். உலகத்திலுள்ள தத்துவங்கள் அத்தனையும் - மதத் தத்துவங்கள் அனைத்தும் - தங்களுடைய அடிப்படைகளுக்கு ஏதாவது கிடக்காதா என்று, குறளை மட்டும் தூண்டில் போட்டுக் கொண்டிருக்கின்றன என்றால் - திருக்குறளின் பெருமை என்னே !

தமிழ்நாட்டில், ஒவ்வொரு காலக் கட்டத்தில் தோன்றிய உரையாசிரியர்கள் அத்தனைபேரும், அவரவர் மதக் கண்ணோட் டத்தோடு குறளைப் பார்த்த பிறகும், இதற்குள்ளே இன்னும் வேறு ஏதோ பொருள் பொதிந்திருக்க வேண்டுமென்று, மேல் நாட்டுத் தத்துவவாதிகளும் பேராசிரியர்களும், அறிவு வெறி கொண்டு இங்கே பறந்து வருகிறார்கள் என்றால், குறளை ஒருவன் எழுதினான் என்பதற்குப் பதில், குறள் - இயற்கையாகவே தோன்றிய ஒன்று என்றுகூடச் சொல்லி விடலாம்.

காலத்தைக் கடந்த ஒரு மத நூல் இதுவரையில் இல்லை. ஏனென்றால், அந்த மதத் தலைவரின் பிறப்பும் - இறப்பும் காலண்டரில் தெரிகிறது.

குறளாசிரியரின் எப்போது பிறந்தான் - எப்போது இறந்தான் என்று கூட இதுவரைத் தெரியவில்லை.

அதன் உரையாசிரியர்களும் - ஆய்வாளர்களும் அவரவர்

முடிவுக்குக் கிட்டிய மதிப்பீட்டை வைத்துக் கொண்டுதான் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இப்படி, உட்பொருளைக் கொண்டு, புதைபொருள் ஆராய்ச்சிக்கு இலக்கண நூல் - உலகத்திலேயே ஒன்றுகூட இல்லை - திருக்குறள் தவிர !

இந்தக் குறளுக்கு இதுதான் பொருள் என்று வாய்மூடுமுன், ஏன் - இதுவாக இருக்கக்கூடாது என்ற கேள்வியே எழுகின்றது.

வியப்பிற்குரிய பிறப்பை எடுக்காமல், சாதாரண அரச குடும்பத்திலே பிறந்த புத்தன் கூறிய தத்துவத்தை ஏற்றுக் கொண்ட பௌத்தர்கள்கூட, அதற்கு முன்னாலே இருந்த சமணர்கள்கூட, திருக்குறளைப் பார்த்து, இதில் எங்கள் கருத்தும் இருக்கிறது என்று வாதிடுவதைப் பார்க்கும்போது,

திருக்குறள், சமண, பௌத்த மதக் காலங்களையும் தாண்டி ஓடுகின்றது என்பதை வியப்போடு கவனிக்க வேண்டியதாக இருக்கின்றது.

திருக்குறள் உருவான காலத்தை யாராவது அவசரப்பட்டுக் கூறிவிட்டால், அந்தக் கால கட்டத்தில் வந்து சேர்ந்த மதத்தவர்கள், இது எங்கள் நூல் என்று கூறிக்கொள்ள இப்போதும் தயாராக இருக்கின்றார்கள்.

அந்தந்தக் காலத்தில் உரை எழுதிய ஆசிரியர்கள், அவரவர் மதக் காலத்தை வைத்தே திருக்குறளின் காலத்தை நிர்ண யித்தார்கள். அதனால்தான், குறளுக்கு உரையாசிரியர்கள் இவ்வளவு வேகமாகப் பெருகலானார்கள்.

திருக்குறளின் காலம் இதுவரை தெரியவில்லை என்றே வைத்துக் கொள்வோம். அப்போது அது எந்த மதத்துக்குச் சொந்தம்?

உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ள காலம்தானா திருவள்ளுவர் காலம்? அந்த அறிவுக்கு திட்டவட்டமான கால வரம்பு கண்டதுண்டா?

திருக்குறளைப் பொறுத்தவரை காலம் கடந்த ஒன்றாக இருக்கும்போது, காலச் சக்கரத்தில் மதங்கள் அடிபடுகின்ற போது, தமிழன் என்ற முறையில் - எனக்கு மகிழ்ச்சி என்றாலும்,

ஆராய்ச்சி என்ற முறையில் அது வெறுப்பைத் தான் அளிக்கின்றது.

எனது திருக்குறளை யாரும் பாராட்டலாம் என்பது வேறு! எவனும் என்னுடையது என்று உரிமை கொண்டாடுவது வேறு!

பொதுச் சொத்தை எவனும் உரிமையாக்கிக் கொள்ளலாம் என்பது சமுதாயத் துரோகமும் - விரோதமும் ஆகாதா?

தெரியாது என்பதை, தெரியாது என்று கூறுவதில் யாரும் வெட்கப் பட வேண்டியதில்லை !

தெரியாத ஒன்றை, தெரிந்த ஒன்றோடு உவமைப் படுத்தும் போதுதான், ஆராய்ச்சியாளனுக்கு எரிச்சலும், கவிஞனுக்கு மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது.

இந்த நிலையில், திரு. புலவர் தெய்வநாயகம் அவர்கள் எழுதிய "திருவள்ளுவர் கிறித்துவரா? ஐந்தவித்தான் யார்? நீத்தார் யார்? வான் எது? எழு பிறப்பு, சான்றோர் யார்?" என்று கிறித்துவ அடிப்படையில் எழுதப்பட்ட ஆறு நூல்களை ஆய்வதற்காக - அறிஞர்கள், பெரும் புலவர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மொழி ஆய்வாளர்கள், டாக்டர் பட்டம் பெற்றவர்கள் அத்தனை பேரும் இங்கே வந்து கூடியிருக்கின்றீர்கள்.

உங்களுடைய வாய்வழியே வந்து தெறிக்கும் கருத்துக்கள் அத்தனையையும், பொது நோக்காக வைக்கப் போகின்றீர்களா? அல்லது குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் நிறுத்தப் போகின்றீர்களா?

அது உங்களுடைய விருப்பம்!

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் கூறினார். ஆனால், ஒரு மதத்திற்கே தந்து என்று அவர் கூறவில்லை என்பதைக் கவனத்திலிருத்த வேண்டுகின்றேன்.

இந்தக் காலத்தில் ஒரு பூஞ்செடியைக் கூட, ஒருவன் தனி உரிமை கொண்டாட முடியாது. ஏனென்றால், இயற்கை முன்னே அது பொதுச் சொத்து.

மிருகத்தைவிட - உயர்ந்தவன் மனிதன் என்பது உண்மை

யானால், புழு பூச்சிகளைக் கொத்தித் தின்னும் பறவைகளைவிட - அவன் உயர்ந்தவன் என்பது உண்மையானால்,

தெய்வ லட்சணத்தை நிர்மாணிக்கும் பொறுப்பு - எனக்கே உரியது என்பது உண்மையானால்,

மனிதன் ஒரு கிளிஞ்சலைக்கூடத் தனது சொத்தாக உரிமை பாராட்ட முடியாது.

எவனுடைய விரல்களிலிருந்து எழுத்தாணி அசைந்தாலும் சரி, அவன் எழுதுகின்ற எழுத்து அவனது அடுக்களைக்குச் சொந்தமல்ல என்பதை - நீங்கள் உணர வேண்டும்.

அது, கட்டளையில்லாமல் வருகின்ற, காற்றில் கலக்க வேண்டிய பொதுச் சொத்தாகும்.

நேரிடையாகவே நான் கேட்கிறேன். உங்களுடைய மதங்கள் கடவுளால் நேரிடையாகப் படைத்ததுதானே?

அதே கடவுளுடைய பொதுத் தன்மையில் ஓர் அணுகூட இருக்காதா மனிதனுக்கு?

ஆகவே, இங்கே ஆய்வுக்காக வந்திருக்கின்ற முப்பத்தெட்டுப் புலமையாளர்களையும் நான் தாள் பணிந்து கேட்கின்றேன்.

உங்களுடைய மதத்தைக் கடந்து, இனத்தைக் கடந்து - வெளி வருகின்ற ஆற்றல் படைத்த சிறகுகள், உங்களுக்கு முளைக்க வேண்டுமென்று நான் நினைக்கின்றேன்.

அப்படி முளைக்காவிட்டால், உங்களுடைய முட்டைகளை நீங்கள் சோதனையிடுங்கள். மனிதன் சரி பார்க்க முடியாத மிருகமல்ல. அத்தகைய நிலையிருந்தால், அவனைக் கடவுள் படைக்கவில்லை !

சிந்தனைகள் மிருகத்திற்கு இல்லாதபோது, மனிதனுக்கு மட்டும் இருக்கும்போது, உரிமைகள் - வேட்கைகள் இவற்றைத் தாண்டிச் சிந்திக்கின்ற அவனுக்கு, அந்த ஆற்றல் இல்லையென்றால், நீங்கள் வருத்தப்படக் கூடாது - அவனைக் கடவுள் படைக்கவில்லை.

திருக்குறள் என்பது - கையில் கிடைத்த பலகாரமல்ல, உங்களது விருப்பம் போல - பங்கீடு செய்து உண்பதற்கு.

மாந்தரின் வாழ்க்கைக்கு அது ஒரு மா மருந்து! நோய்க்கு ஏற்றபடி நீங்கள் அதை உட்கொள்ள வேண்டும்.

திருக்குறள் தொடங்கிய காலத்திலிருந்து, விளம்பரத்திற்காக உரையெழுதுகின்ற ஆசிரியர்கள் வரை, அதன் நுணுக்கம், முடியாத மர்மக் கதையாகவே இருக்கின்றது - நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?

சூழ்நிலையின் காரணமாக நீங்கள் மாறி விட்டால், பிறக்கப் போகும் தொட்டில்கள், உங்களை மறந்து விடும்! எனவே, எச்சரிக்கையாக இருங்கள்.

ஏனென்றால், இனிமேல் பிறப்பவர்கள் உங்களைத் தூக்கி எறிபவர்களாகக் கூட இருக்கலாம் அல்லவா?

எவன் எந்தக் கோணத்திலே பிறந்து, புலவர் தெய்வ நாயகம் மறுத்ததைப் போல விதண்டாவாதமாக மறுப்பானோ என்பதை, யார் அறிவார்?

எனவே, காலம் கடந்து சிந்தியுங்கள் - (without time) தொட்டில் குழந்தைகள் உங்களைத் தொடர்வதற்கேற்ப - சிந்தியுங்கள்.

1972 - மே-3,4 தேதிகளோடு - திருக்குறளின் விதி நிர்ண யிக்கப் படுவதல்ல.

உங்களுடைய விவாதங்கள் அனைத்தையும், அய்யன் திருவள்ளுவரது உயிர்ச் சொல்லோட்டக் குறள் நாதங்கள், காற்றிலேயிருந்து கவனித்துக் கொண்டு இருக்கின்றன.

அய்யன் திருவள்ளுவர் முன்னாலே - நீங்கள் சிறுபிள்ளைத் தனமாக இருக்கக் கூடாது. அவர் எதிர்பார்த்த - முதிர்ச்சியடைந்த - முழு மனிதனை உங்களுடைய ஆய்விலே உருவாக்கிக் காட்டுங்கள்.

திருக்குறளாராய்ச்சியைப் பொறுத்தவரை, இந்த ஆய்வு மாநாடு, அண்ட அளவில் வைத்து மறந்த சிறுபுள்ளியாகவே கருதுகின்றேன்.

ஏனென்றால், அய்யன் திரு வள்ளுவன் அண்டத்தைவிட விரிந்தவன் என்பது பொதுமக்கள் கருத்து.

இந்தியாவிலே இருக்கின்ற ஏழெட்டு மதங்களுக்குச் சொந்தக்காரனாகவோ அல்லது பெத்தலகேமிலிருந்து புறப்பட்ட ஒரு மதத்துக்குச் சொந்தக் காரனாகவோ, அய்யன் திருவள்ளுவரை 1962 - ஆம் ஆண்டில் நீங்கள் நிர்ணயித்து விட்டால் கி.பி. மூன்றாயிரத்தில் என்ன சொல்லப் போகின்றீர் கள்?

அப்போது என்ன மதம் வருகின்றதோ - எந்த இனம் வருகின்றதோ, யாருக்கு என்ன தெரியும்?

இதுவரையில் எழுதிய குறள் உரையாசிரியர்கள், தங்களது பாடையைப் பார்த்துக் கொண்டு எழுதினார்கள். அவர்களுக்குப் பின் யார் வருவார்கள் என்று அவர்களுக்கே தெரியாது.

தன் கருத்தே எதிர் காலக் கருத்தென்று நினைப்பது, பொருள் மாற்ற விஞ்ஞானத்தை அறியாதவர்களின் செயல்.

பொருள் பீறிட்டு வேகமாக மாறுகின்ற போது - மனிதன் மட்டும் மாற மாட்டானா? காலச் சுழற்சி அல்லவா அது?

நேற்றைய கருத்தே இன்றைய கருத்து என்று கூறுவதற்குப் புது வருடம் எதற்காக? காலண்டர் ஏன்?

உங்களைத் தமிழ்நாடு கேட்பதாகவே நினைக்க வேண்டும். மணல் வீடு கட்டிக் கொண்டு, திருமணமே என்னவென்று தெரியாத குழந்தைகள் கேட்கின்றன.

அவர்களது தமிழ்நாடு முக்கடலையும் கடந்து, அமெரிக் காவையும் கடந்து செல்லலாம்.

ஏன், குறிப்பாகச் சற்றுத் தாண்டிச் சொல்கிறேன். அவர்களின் தமிழ்நாடு, இராக்கெட்டின் துணையால் கோள் வட்டங்கள் வரை ஊடுருவலாம்.

பிறக்கின்ற செடிகளுக்கு நீங்கள் விதைகள் போகின்றவர்கள். இந்த நல்ல காரியத்தில் விதைகளாகச் சாகுங்கள்.

இனம் புரியாமல், அநீதியை நோக்குகின்ற குழந்தைகள், திருவள்ளுவரை நோக்கட்டும்.

புலவர் தெய்வநாயகம், தனது பெரு முயற்சியை, சிலுவை வழியாகத் திருக்குறளைப் பார்க்கச் செலவிட்டிருக்கிறார்.

இது தேவையா - தேவையில்லையா என்பதை - மதம் பிடிக்காதவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்து நோக்கின் தத்துவத்தில் நாம் வளர்ந்தவர்கள்.

நமது திருக்குறள், எல்லோருக்கும் சொந்தமாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் ஒருவருக்கே அது உரிமை யாகாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

சைவத்தின் கருத்து, வைணவத்தின் கருந்து, சமணத்தின் கருத்து, பௌதத்தின் கருத்து இசுலாமியத்தின் கருத்து, கிறித்துவர்களின் திருக்குறளிலே இருக்கின்றதா என்று பார்த்துக் கொள்ளலாமே தவிர, ஒவ்வொரு மதத்திற்கும் அது சொந்தம் என்று கூறும் துணிவுடையோர் இன்னும் பிறக்கவில்லை என்பதை உணர வேண்டும்.

ஏனென்றால், திருவள்ளுவரது சிந்தனை - கருத்து வண்ணங்கள் - இதுவரையில் ஆய்வு நிறக் கலையில் தேர்ந்தவனுக்கே தடுமாற்றத்தைத் தருகின்றது.

திருக்குறள் என்பது ஒரு வண்ண ஜாலம்! நாத மர்மம்! கருத்துச் சூழல்! சிந்தனை மயக்கம்! அறிவின் சோதனை தேர்வு பெற முடியாத தேர்தல்! குறி பார்த்தடிக்க முடியாத குறி.

விஞ்ஞான ஆய்வுக்கே ஏற்பட்ட பெரலட்டிக் - அதாவது பாரிச வாய்வு!

மேலும், ஒரு படி தாண்டிச் சொல்லப் போனால், மனிதன் உரை எழுதித் தெளிவு பெற வேண்டிய நூலல்ல - திருக்குறள்!

மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒருவன் - இனி பிறந்தால் பரவாயில்லை என்று நினைக்கின்றேன்! ஏனென்றால், உரைகள் கலவரத்தில் முடிகின்ற காரணத்தை வைத்து,

அய்யன் திருவள்ளுவருக்குப் பின் வந்த ஆராய்ச்சி நூல்கள், பொருள் விசாரணை நூல்கள், மனோதத்துவ நூல்கள், விஞ்ஞான நூல்கள் அனைத்தையும் கரைத்துக் குடித்த ஒருவன் கூட - திருக்குறளுக்கு நேரிடையாகப் பொருள் கூற முடிய வில்லையே - ஏன்?

ஏனென்றால், தமிழுக்கு உயிர் நூல்களை எழுதிய

தன்னேரிலா அறிவு அரிமாக்கள் அனைவரும் - சூத்ர வடிவில் யாப்பு செய்யுள் வடிவில் நுட்பம் செறிந்த செஞ் சொற்களைப் பெய்து, மந்திரம் - மறை போன்ற பொருளாட்சிகளைப் புதையல் போல் வைத்துள்ளார்கள்.

எடுத்துக்காட்டாக, தொல்காப்பிய நூற்பா ஒன்றை எண்ணிப் பார்த்தாலே இந்த உண்மை புரியும். அதன் பொருட் சிக்கல் பேரறிஞர்களையே திணறடித்துள்ளது!

தன்னேரிலாத் தமிழில் சொல்லுக்கு, முதலில் வரும் எழுத்து என்றும், இறுதியில் வரும் எழுத்து என்றும் இரு வகை உண்டு. ந் + உ = நு, ந் + ஊ = நூ, வ் + உ = வு, வ் + ஊ = வூ என்ற நான்கு எழத்துக்களும் சொல்லின் இறுதியில் வாரா என்று காப்பிய சூத்திரம் செப்புகின்றது.

"உ, ஊ, காரம் ந, வ, வோடு நவிலா" என்பது தொல்காப்பிய நூற்பா, இதற்கு உரை மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

உரையாசிரியர்களுக்குள்ளேயே எழுந்த இந்த விடை - தடை நோக்கில், கதவு, களவு, உணவு, உளவு, புணர்வு, உணர்வு போன்ற சொற்களில் 'வு' என்ற எழுத்து சொல் இறுதியில் வந்துள்ளதே ஏன் - எப்படி என்ற கேள்விகளைச் சிலர் எழுப்பினர்!

அத்தகைய சான்றோர் சிலர் எழுப்பிய இந்தத் தடைக்கு விடையாக, 'நவிலா' என்ற சொல்லால் மேற்கண்டவாறு பொருள் கொள்ளலாம் என்றார்கள் - உரையாசிரியர்கள்!

ஆனால், இந்த நூற்பாவில் ஏதோ ஒரு பொருட் சிக்கல் உள்ளது போல தோன்றுகிறது என்ற ஐயம் இலக்கிய உலகில் இருந்தது. தொல்காப்பியம் இலக்கண நூலை எழுத்தெண்ணி படித்தவர்களை, எக்காலத்திலும் விரல் விட்டு எண்ணிவிடலாம்!

தொல்காப்பிய வித்தகக் குறைவு என்பதால், சர்ச்சை ஏதும் அந்நூற்பாவுக்கு அன்று எழவில்லை - அறிஞர்களிடையே !

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்கள், ஒரு தமிழ் இலக்கிய மேதை! அவர் இந்த நூற்பாவின் சிக்கலை நீண்ட நாட்களாகவே உணர்ந்திருந்தார்.

அக்காலை, மதுரை தமிழ்ச் சங்கத்தின் பெரும்புலவரான சோழவந்தான் அரசன் சண்முகனாரை - வ.உ.சி. அடிக்கடி

மதுரை மாநகரில் சந்தித்து இலக்கிய விளக்கம் கேட்டார். வ.உ.சி.

அதற்குப் பதில் கூறிய சண்முகனார், 'எந்த ஒரு நூற் பாவையும் 'நிரல் நிறை'யாகக் கொள்ள வேண்டும்' என்றார்.

"உ, ஊ என்ற இரண்டும் ந, வு என்ற இரண்டோடும் சேராது"

"உ, என்பது, 'ந்' வோடு மட்டும் சேர்ந்து, 'நு' என்று மட்டும் சொல்லின் இறுதியிலே வராது என்றார் சண்முகனார்!

'ஊ' என்பது, 'வ' வோடு சேர்ந்து 'வூ' என்று மட்டும் சொல்லின் இறுதியில் வராது.

"அதனால், கதவு, பணர்வு. உணர்வு, தளர்வு" என்ற சொற்களிலே உள்ள 'வு' சொல்லின் இறுதியில் வரலாம் என்றே தொல்காப்பியர் அனுமதித்துள்ளார். 'களவு' என்பது சங்க கால இலக்கிய வழக்காறுகளையும் தாண்டி, தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே உள்ள ஒரு சொல்.

"எனவே, இவ்வாறே பொருள் காணவேண்டும் என்று வித்தகர்கள் எழுப்பிய தடைகளுக்கு விடை விளம்பி உடைத்தெறிந்தார் - சண்முகனார்.

எனவே, மனிதன் என்பவன் எந்த நூலை எழுதினாலும், படித்தாலும், கேட்டாலும், மாசிலா மனமுடையவனாக இருந்தால் தான், எதை அவன் கேட்கிறானோ, அதன் உண்மைப் பொருளைக் காண முடியும்.

இவ்வாறான மறை பொருட்கள் திருக்குறளிலும் உண்டு!

அவற்றை ஆழ்ந்து கூர்ந்து, ஓர்ந்து படிக்க வேண்டிய பொறுப்பு தமிழறிவுடையார் கடமை அல்ல - உரிமை !

தமிழ்மொழியில் அத்தகைய சங்க கால நான்மறைகளும், தமிழ் மறைகளும், திருமந்திரங்களும், பாசுரங்களும், அறச் சொற்களும் ஏராளமாக உள்ளன. அவற்றின் உண்மைப் பொருளை அறிய வேண்டுமானால், அதாவது, மனிதன் மனம், முழுக் முழுக்க ஒன்றும் இல்லாமல் மாறினாலொழிய, தன் நெஞ்சில் ஒரு துளியும் மதக் கருத்து, சாதிக்கருத்து, நாகரீகக் கருத்து, பண்பாட்டுக் கருத்து இல்லாமல் மாறினாலொழிய, திருக்குறளுக்கு உண்மைப் பொருளைக் காண முடியாது.

ஏனென்றால், திருவள்ளுவர் ஒரு திறந்த வெளி! ஒன்று மில்லாத நிலையில் ("Status of nothingness and total negation without identification, secured by full freedom based on emptyness") இருந்து எழுதியவர்.

எழுதிய அய்யன் திருவள்ளுவன் இல்லாத நிலையிலிருந்தால், உரையாசிரியன் இருக்கின்ற நிலையிலிருந்தால் – குறள் உரை தெளிவாக இருக்க முடியுமா?

அந்த நிலையில் எழுதப் பட்ட உரைகளையே புலவர் தெய்வ நாயகம் மறுத்திருக்கின்றார். அவர்களின் கூற்று சரியா? தவறா? என்பதைவிட, திருவள்ளுவம் என்றால் என்ன என்பதை நீங்கள் கூற வேண்டும். உங்களது எல்லையிலே இருந்து அது வராமல், உலக எல்லையிலே இருந்து வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

இந்த பெரு முயற்சியை, அய்யன் திருவள்ளுவர்பால் நாட்டங் கொண்ட கிறித்துவ அன்பர்கள், புலவர் தெய்வ நாயகத்தின் புத்தக சந்தர்ப்பத்தின் வாயிலாகத் தமிழகத்திற்கு அறிமுகப் படுத்தி இருக்கின்றார்கள்! அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, கிறித்துவக் கலை – தொடர்பு நிலையத்தின் இயக்குநர் – அருட்திரு சுவிசேஷ முத்து அவர்கள், இந்த அறிவு விளக்கப் போட்டிக்குப் பொருளைத் துச்சமாக மதித்து எடுத்த முயற்சிக்குத் தமிழகம் கடமைப் பட்டிருக்கின்றது!

இருப்பினும், அய்யன் திருவள்ளுவரை கிறித்துவராக்க அவருக்கும் ஒரு பேராசை! கிறித்துவத்தின் ஊழியரல்லவா அவர்?

இல்லாவிட்டால், சர்ச் ஆஃப் சவுத் இண்டியா, திருவள்ளுவ ரைக் கிறித்துவராக்க – நூல் எழுத, ரோமன் கத்தோலிக்க சென்னை திருச்சபைத் தலைமை அதை வெளியிட – தொகை உதவி செய்ய, பிராட்டஸ்டண்டு பிரிவு பல்லாயிரம் ரூபாயைச் செலவு செய்து இந்த மாநாட்டை நடத்துமா?

மதமே இல்லாத மனிதனால் எழுதப்பட்ட ஒரு நூலை, சக்தி வாய்ந்த ஒரு மதத்தின் முப்பிரிவுகள், அய்யன் திருவள்ளுவரைக் குறிப்பிட்ட ஒரு மதவாதியாக்க, அதுவும் – இயேசு நாதருக்குச்

சீடராக்கி மகிழ்ந்திட அமெரிக்கப் பணமழையின் ஒருமைப் பாட்டோடு பணிகளாற்றுமா?

திருக்குறளுக்கு உரை கண்ட தொல்லாசிரியர்களான காளிங்கருக்கோ, மணக்குடவருக்கோ, பரிமேலழகருக்கோ, பிறருக்கோ இப்படிப்பட்ட விவாத மன்றங்கள் இன்று வரை கூடினவா?

பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், மொழி நூலறிஞர் பண்டித தேவ நேயப் பாவாணர், திருக்குறள் பீடம் அழகரடிகள், திருக்குறளார் வீ. முனிசாமி, கப்பலோட்டிய வ.உ.சிதம்பரம் பிள்ளை, தமிழ்த்தென்றல் திரு.வி.க., பாவேந்தர் பாரதிதாசனார், நாமக்கல் கவிஞர் இராமலிங்க பிள்ளை, புலவர் குழந்தை, சாமி சிதம்பரனார், டாக்டர் மு. வரதராசனார் ஆகியோரது குறட் புலமைக்குக் கூட இத்தகைய ஆய்வரங்கம் இன்றுவரை ஏற்பட்டதில்லையே !

புலவர் தெய்வநாயகம் அவர்களுடைய ஆறு புத்தகங்களுக்கு ஏற்பட்ட இந்தப் பெரும் வாய்ப்பைக் காணுகின்ற நேரத்தில், மத ஒற்றுமை எவ்வளவு பலமாக, ஒருமைப் பாட்டுணர்வோடு, தனது மதத்தைப் பரப்பப் பணியாற்றுகின்றது என்பதுதான் தெரிகிறது.

இருந்தாலும் - இந்த நேரத்தில் இதே கிறித்துவ அன்பர்களும் தமிழ் அடிமைகளே - கால்டுவெல்லைப் போல - ஜி.யூ. போப்பைப் போல - வீரமாமுனிவரைப் போல !

கிறித்துவக் கண்ணோட்டம் திருக்குறளைப் பார்ப்பதினால் வேறொரு கோணத்தில் நோக்கும் போது, தமிழுக்கு உயர்வே கிட்டுகின்றது - அதை நாம் மறக்க முடியாது.

காலத்துக்குக் காலம் முப்பட்டை கண்ணாடி வழியாக ஊடுருவும் சூரியனைப் போல, ஒளிக்கற்றைகளை வீசுகின்ற திருக்குறளுக்கு, இருபதாம் நூற்றாண்டில் தெய்வநாயகம் ஒரு பிரச்சினையாக வந்தாரே தவிர, குறளால் வாழ்பவர்கள் - புது உரைகளை - விளக்கங்களை - மத சார்பற்றுக் காணவில்லை - காணாததற்கு அவரவர் மதம் தான் தடுக்கின்றதா?

இப்படிப்பட்ட ஐயப்பாடுகளுக்கு இந்த மாநாடு ஒரு தீர்வு காண வேண்டும்! முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

வானொலி, தொலைக் காட்சிகள் வந்த பிறகு, மனித சமுதாயம் மாறியிருக்கின்றது என்றால், அதற்கேற்றபடி திருக்குறள் எப்படி இருக்கின்றது? - விளக்கம் தேவை.

இராக்கெட், சந்திர மண்டலத்தை அடைந்த பிறகு, உலகச் சமுதாயம் மாறியிருக்கின்றது என்பதை ஒப்புவீர்கள் என்று நம்புகிறேன். அதற்கேற்றபடி திருக்குறள் எப்படி மாறியிருக்கின்றது? விளக்கம் தேவை !

நிலவைக் கடவுளாக இதுவரை நினைத்தவர்கள் மனதுக்கு முன்னால் திருக்குறள் எப்படித் தெரிந்தது! தற்போது நிலவிலே மண் கொண்டு வந்த பிறகு, குறள் எப்படித் தெரிகின்றது? விளக்கம் தேவை !

இத்தகைய கோணங்கள் எல்லாம் உங்களது அறிவுக் கதிர்கள் சந்தித்து, புலவர் தெய்வநாயகத்தின் ஆறு நூற்களையும் விசாரணை செய்தாக வேண்டும் என்று தமிழகம் விரும்புவதில் வியப்பில்லை அல்லவா?

மடியிலே நமக்குக் கனமில்லை - வழியிலே திருடர்களைக் கண்டு பயப்பட ! திருக்குறள் மத நூல் அல்ல, வாழ்க்கைக்குரிய சட்ட நூல்! வள்ளுவம் கூறும் நீதிநூல்!

வேண்டுமானால் இவ்வாறு கூறலாம், அய்யன் திருவள்ளுவர் காலத்திலே ஆதிக்கம் பெற்றிருந்த வைதீக மத கருத்துக்களை ஏற்று, அவற்றை மறுத்து, மதச்சார்பற்ற தமிழர் நெறிகட்கு தனித்துவம் தந்துள்ளார் என்று. நீங்கள் தான் அதற்கு காட்ட வேண்டும் நியாய வரம்பு!

மதநூல் என்றால், அதிலே மாயம் இருக்கும். அற்புதம் கூத்தாடும். அறிவு நம்பாத ஆச்சரியங்கள் இருக்கும்! விஞ்ஞான வளர்ச்சிகள் அதைக் கண்டு விலா நோகச் சிரிக்கும்! திருக்குறள் அத்தகைய ஒரு நூலல்லவே!

வள்ளுவத்தின் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டுமென்ற நிலையில் வந்துள்ள நீங்கள், உங்கள் தலைவிதியை நிர்ணயிக்கத் திருக்குறள் வந்திருக்கிறது என்பதை உணர்ந்தீர்களா?

இதுவரையில், நீங்கள் தமிழகத்திற்குச் செய்த சேவையில் துளிர்த்த வியர்வையின் சாட்சியாகக் கேட்கின்றேன். அரசியல்

மேடைகளைவிட - இது ஆபத்தான கருத்தரங்கம் என்பதைப் புரிந்தீர்களா?

மதமே கூடாது, என்பவனும், மதமே தேவை என்பவனும் திருவள்ளுவன் அல்லன். இவன் இரண்டுக்கும் இடையே, மலைக்கு நடுவே ஓடுகின்ற அருவி.

பொதுவாகப் பார்ப்பவன் மனிதனானான் - குறிப்பாகப் பார்ப்பவன் மதவாதியானான்.

'செரிக்காத ஆசைகளை வைத்திருந்தவன் சொர்க்கத்தை நாடுவது வாடிக்கை" என்றான் கார்ல் மார்க்ஸ்!

"தேவையான ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்பவன், திராணியுள்ள மனிதன் என்றான் - ஏஞ்சல்ஸ். ஆனால், அய்யன் திருவள்ளுவர் - மனக் கலவரத்திலே ஈடுபட்டு தன்னைத் தாக்குப் பிடிக்காதவர்களுக்கே திருக்குறள் செய்தார்.

மனம், என்ன என்பதை விளக்குவதற்குப் பதில், திருவள்ளுவர் அதிலிருந்து தப்பிப்பதற்குரிய வழிகளைச் சொன்னார். "மனத்தின் கண் மாசிலனாதல்" என்ற நிலையை உருவாக்க நினைத்தார்!

மனம் என்றால் என்ன என்பதைக் கூறிய பிரான்ஸ் நாட்டுத் தத்துவவாதிகளான ஆல்ஃபிரைட் கேமு வைவிட, ஜீன்பால் சாத்தேயைவிட, தப்பிக்க முடியா மனத்திலிருந்து, தப்பிக்க வழி கூறிய ஒரே ஒரு தத்துவவாதி - அய்யன் திருவள்ளுவரே!

வெறும் டைலக்ட்டிகல் அனாலிசஸ் என்று சொல்வார்களே, அதைத் அய்யன் திருவள்ளுவர் செய்யவில்லை.

அப்படிச் செய்திருந்தால், அவன் பாமர மக்களிடையே வந்து சேர்ந்திருக்கமாட்டான் - படித்தவர்களிடையே சென்று குவிந்திருப்பான்.

மனம் உள்ளவரை மாச்சர்யங்கள் உண்டு. அதன் அடிப் படையில் ஒழுக்கங்களைக் கற்பிப்பது இமாலயப் பிரச்சினை.

'நீங்கள் வெறுமனே இருங்கள்' ( "Be in nothingness" ) என்று கூறுவதற்குப் பிரெஞ்சு நாடு காத்திருக்கிறது.

ஆனால், 'எண்ணங்கள் உள்ளவரைதான் மனிதன்', என்ற

தத்துவத்தை 1962 - ஆம் ஆண்டுக்கு முன்பேயே சிந்தித்து விட்டான் திருவள்ளுவன்.

இவனுக்கு வால் நட்சத்திரம் முளைக்கவில்லை -மாட்டுக் கொட்டகை ஏதும் இல்லை.

என்ன இருந்தாலும், நம் நாட்டவர்கள் ஒரு மனிதனை தெய்வமாக்குவது இல்லை, அறிவிலே நுட்ப ஞானத்தைப் பாராட்டினர். அதற்கு வைதீகன் ஆன்மீக சாயம் பூசி விட்டான் அவ்வளவுதான்.

இப்படிப்பட்ட ஒப்பற்ற ஒரு தத்துவ விதையிலே இருந்து, உலக மூலச் சக்தியிலே பிறந்து, விளக்க முடியாத ஒருவராகி, தமிழ் எழுத்துக்களால் வாழ்வறிவு வண்ண மாயங்களைச் செய்த ஒரு மனிதரை புலவர் தெய்வநாயகம் மத விசாரணை விசாரிக்க வந்திருக்கிறார்.

இந்த விசாரணையில், நீங்கள் பெற்ற பட்டங்களை அடகு வைப்பீர்களோ ! - மீட்டுக் கொள்வீர்களோ ! - அது எனக்குத் தெரியாது.

மனித இனம் இருக்கின்றதே, இந்தியாவைப் பொறுத்தவரை ஏழாயிரம் - எண்ணாயிரம் ஆண்டுகளின் சரக்கு!

அதற்கு மேல் சரித்திரமில்லை - அதனால், இவனுக்குப் புரிந்து கொள்ள முடியவில்லை.

தங்களது வீட்டிலிருக்கின்ற குழந்தை, நேரடியாக ஒரு குருவைப் பார்த்து பொருள் புரிந்து கொள்வதைப் போல, தந்தையாக இருப்பவன் புரிந்து கொள்வதில்லை.

குழந்தையின் சிரிப்பைப் பார்த்து இவன் சிரித்தானே ஒழிய, அந்தக் குழந்தை ஏன் சிரித்தது என்று இவனுக்குத் தெரியாது.

இப்படிப்பட்ட சமுதாயக் குடும்ப அடிப்படையில் பிறந்த நாம், திருக்குறளைச் சந்திக்க வந்திருக்கின்றோம்.

திருக்குறளின் எழுத்துக்கள் - வைதீக அடிப்படையில், வானத்திலிருந்து வந்ததவையென்று புளுக எனக்கு விருப்ப மில்லை - என்னால் முடியாது.

மிருகத்தைவிட - ஒரு மனிதன், மனிதத்தில் ஒரு மனிதன் - இவ்வளவுதான் சிந்தித்திருப்பான் என்பது எனக்குத் தெரியும்.

ஆனால், திருக்குறளின் எழுத்துக்களில், நீண்ட காலச் சரித்திரமோ, குறுகிய கால இலக்கியமோ தெரிவதற்குப் பதில், இனி முட்டைக்குள் முட்டையாக இருந்து முகிழ்ப்பதற்குக் காலம் பார்த்துக் கொண்டிருக்கின்ற மனித வர்க்கத்தை, நீ இப்படித்தான், இருப்பாயென்று, அறுதியிட்டு உறுதியாகச் சொல்லுகின்ற ஆற்றல் - அந்த நெசவாளிக்கு மட்டும் எப்படி முடிந்தது?

அவருக்கென்று ஒரு மதம் இல்லை, அவ்வளவுதானே ஒழிய, வேறு என்னவாக இருக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்?

இத்தகைய அய்யன் திருவள்ளுவரை இந்த ஆய்வு மாநாடு என்ற போர்க்களத்தில் நீங்களும் சந்திக்கின்றீர்கள் - புலவர் தெய்வநாயகமும் சந்திக்கின்றார்.

நீங்கள் இருவரும், காலமாகிக் காணாமல், கலந்த காற்றிலே அய்யன் திருவள்ளுவரைத் தேடுவதற்காக முனைகின்றீர்கள்.

பார்வை ஒழுங்காக இருப்பவர்களுக்கு பாதாளம் தெரியும்' என்றான் அரிஸ்டாட்டில்.

திருக்குறள் ஆழத்தை நோக்கி இறங்குவதற்கு வந்திருக்கின்ற தண்டமிழ்ச் சான்றோர்களே !

உங்கள் முன்னால் விரிக்கப்பட்ட ஆறு கிறித்துவப் புத்தகங் கள் வழியாக, நீங்கள் உதிர்க்கின்ற கருத்துக்கள், இருபதாம் நூற்றாண்டுத் திருவள்ளுவரைக் காட்டுவதற்காகவாவது அமைய வேண்டும் என்பது என் போன்றோரின் ஆசையாகும்.

பல நூற்றாண்டுகட்கு ஒரு வள்ளுவராகப் பிறப்பவர் தான் திருவள்ளுவர்!

இது வரையில், கடவுள் தான் நினைவில் நிற்பவன் என்று தத்துவங்கள் கூறுகின்றன.

வேதங்களையும் - அதற்குச் சாட்சியாகக் கோயிலையும் - பூசையையும் காட்டுகின்றனர் வேதாந்திகள்!

அருள் கூர்ந்து, நீங்கள் அய்யன் திருவள்ளுவரைக் கோயிலில் இல்லா இறைவனாக, பூசையில்லா இறைவனாக, மனித நேய மனிதத்தில் மணக்கும் மனமாகக் காட்ட வேண்டுமென்று விரும்புகின்றேன்.

புலவர் தெய்வ நாயகத்தின் ஆய்வுக் கண்ணோட்டங்கள், அவரின் மதத்தைச் சார்ந்ததுதான் என்பதைத் தெளிவாக உணர்ந்த நீங்கள், அரசியலால் வாய்ப்பு பெற்ற மதத்திற்கு அடிமையாக நினைக்கப் போகின்றீர்களா? அல்லது தென்றலைப் போலப் பொதுவாக்கப் போகின்றீர்களா? என்பது எனக்குத் தெரியாது.

ஆனால், இறுதியாக ஒன்றைமட்டும் கூறி எனது வரவேற்புரையை முடித்துக் கொள்கிறேன்.

படைப்புக் கதைகளில் மிகப் பழமையானது பாபிலோனிய, சுமேரிய கதைகள். இதன் கருத்து; யூதர்களின் யெகோவா படைப்புக் கதையாகும். (Creative litreature) இதைப் பின் பற்றியதுதான் கிறித்;தவர்களின் பைபிள்.

இதே நேரத்தில், புருஷ சூக்தம், விஷ்ணு புராணத்தில் நாராய ணன் படைப்புக் கதை. இவற்றோடு, கால நிர்ணயமில்லாத தாந்திரி நூல்களில் காணப்படும் படைப்புக் கருத்தையும் குறிப்பிட்டாக வேண்டும்.

வரலாற்றுக் காலத்துக்கு முன்னதாக, (Pre historic period) இவைகளை வைத்துக்கொண்டு, மனித நாகரிக வளர்ச்சியை ஒருவாறு அனுமானிக்க முடிகின்றதே தவிர, நிருபிப்பதே கடினம்.

ஆனால், எந்த விதத்திலும், மனித நாகரிக வளர்ச்சி, இப்படித் தான் இருந்திருக்க வேண்டுமென்பதில், அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை கிடையாது.

1.கீழ்நிலை வேட்டைச் சமுதாயம்

2. மேல்நிலை வேட்டைச் சமுதாயம்

3. மேய்த்தல்

4. விவசாயம்

இவற்றில் முதல் தொழிலாக உணவு சேகரித்தல், அதாவது விவசாயமும், இரண்டாவதாக வேட்டையாடுதலும் - மீன் பிடித்தலும், மூன்றாவதாக, ஆடு, மாடுகளைப் பிடித்து வளர்த்தலும், இறுதியாக விவசாயமும் - மனித நாகரிகத்தின் வளர்ச்சிகளாகப் பங்கேற்கின்றன.

அதிலும், விவசாயம் - கலப்பையற்ற விவசாயம் என்றும் - கலப்பை விவசாயம் என்றும், ஆடு, மாடுகளுடன் விவசாயம் என்றும் பிரித்து வைக்கப் பட்டிருகின்றது.

மேற்கூறப்பட்ட மனித நாகரிக வளர்ச்சி, உலகின் எல்லாப் பகுதிகளிலும் நடந்து வந்திருக்கின்றன.

இருவகை வேட்டைச் சமுதாயங்களில் மனிதன் சிந்தித்துப் பகுத்தறிய வேண்டியதாக எதுவுமில்லை.

பெண்களும் - ஆண்களும் ஒரு வகையில் சரி சமமாக வாழ்ந்து வந்தார்கள்! குழந்தைகளைப் பெற்றுத் தரும் பெண்தான் - பெரியவள் என்ற கருத்தும் நிலவி இருக்கிறது.

அறிவு முதிர்ச்சியில்லா அக்கூட்டம், ஒரு பெண் கருவுற ஆண் தேவையில்லை என்றுதான் கருதியிருக்கிறது.

இந்த அடிப்படையில், கிரேக்க காலத்தில் யூரினோம் என்ற பெண் கடவுளானாள்! இதன்பின், கலப்பை விவசாயக் காலத்தில், ஆண்களின் பலம் உணரப்பட்டது.

பின்னர், பெண் கடவுள் இனம் பிரிக்க முடியாத ஆண்பால், பெண்பால் என்று இனம் பிரிக்க முடியாத யெகோவா ஆனது.

இங்கே ஒன்றை, விருப்பு வெறுப்பு இல்லாமல் கவனிக்க வேண்டும். ரிக் வேதத்தில் வருகின்ற சுலோககங்கள், பாபிலோனிய கிரேக்க படைப்புக் கவிதைகளை நினைவு கூர்கின்றன என்பதை, நாம் அறிய வேண்டியிருக்கின்றது.

கிரேக்கத்திலுள்ள மும்மைக் ( Trinity ) கொள்கையும் நமக்குத் தெரிந்ததே ! எனவே, ரிக் வேதத்தில் வரும் மும்மைக் கொள்கை, அது ஏற்றுக் கொள்ளத் தக்கதோ - அல்லாததோ, அந்தச் சார்பு கொண்டிருப்பதில் வியப்பில்லை.

அதே நேரத்தில், ரிக் வேதக் கடவுள் கொள்கைக்குக் கிடைத்திருக்கின்ற பலத்த எதிர்ப்பை நாம் மறந்துவிடக் கூடாது.

வேதங்களின் ஆரண்யப் பகுதிகளாக விளங்கும் உபநிடதம், “பொருள் எப்போதும் பூரணமாக இருக்கும். ஆரம்பம் என்று ஒன்றுமில்லை”. - என்றெல்லாம் கூறியிருப்பதை நோக்க வேண்டும்.

ரிக் வேதக் கடவுள் கொள்கையை எதிர்க்கும் - இந்த வேதக்

கொள்கையை யார் கூறியிருக்க முடியும்?

கடவுள் தேவையில்லை என்று கருதிய மக்கள் யாராக இருந்திருப்பார்கள்? தாங்கள் சிந்தித்ததைப் பயமின்றிக் கூறியவர் யார்?

அவர்கள், அக்காலத்தில், உலகின் மற்றைய பாகங்களில் நிலவி இருக்கின்ற எல்லா நாகரிகங்களையும் விட உச்ச நிலை பெற்றவர்கள் ஆவார்கள்.

அக்கால நாகரிகச் சமுதாயத்தில், அவர்கள், விவசாயத்தைக் கொண்டு, ஒரு நிலை பெற்ற வாழ்க்கையை அமைத்து - உலகைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கி இருந்தார்கள.

இவ்வாறு வாழ்ந்த சிந்தனையாளர்களைத்தான் - “ஹரப்பா, மொகஞ்சதாரோ நாகரிகத்தை உடையவர்கள்” என்று சிந்துவெளி நாகரிகம் கூறுகிறது.

இந்த சமுதாய அம்சத்தில் உருவான அய்யன் திருவள்ளுவர், எப்படி ஏற்கனவே அறிந்து தேய்ந்து போன மும்மைக் கொள்கையை, வரவேற்றிருப்பார் என்பதை - தமிழறிஞர்க ளாகிய நீங்கள் உங்களது ஆய்வுரையில் சிந்தித்து, எமது சிந்தனைக்கும் விடை கூறிட வேண்டுகின்றேன்.

பேரன்பு படைத்த தமிழ்ப் பேரறிஞர் பெருமக்களே! திருக்குறள் ஆய்வு மாநாட்டில் குழுமியிருக்கின்ற அறிவாளர் களே, உங்களை இவ்வளவு நேரமாக எதையெதையே கூறி, காலத்தை வீணாக்கி விட்டேனோ என்று அஞ்சுகின்றேன்.

வரவேற்பாளனாக இருக்கின்ற நான் - என் கடமையைச் செய்ய வேண்டாமா? அதைத்தான் என் அறிவுக்குப் புலப்பட்ட கருத்துக்களைத் தங்கள் முன்பு படைத்தேன்.

திருக்குறள் ஆய்வு மாநாட்டிற்கு வருகை தந்துள்ள பேரறிஞர்கள் அனைவரும் இனி அவரவர் ஆய்வுக் கருத்துக்களை குற்றாலச் சாரல் பூ மழைபோல திரண்டுள்ள நம்மீது பொழிவார்கள் என்று கூறி உங்களையெல்லாம் வருக வருக என இரு கைகூப்பி வரவேற்கின்றேன் - வணக்கம்.



## பாரதிதாசன் பேசுகிறேன்.....

சுடர்விழிக் கதிரவன் படரும் உலகத்தீர்!

கட்டுக் குலைந்த காரிருள். பட்டொளியால் பதுங்கிற்று.

எங்கும் இளமை – எங்கும் புதுமை – புரட்சியால் பூத்தப் புது மலர்கள் கோடி!

மிரட்சியால் ஓடும் மான்கள் இல்லை. தமிழகத்தின் வீதி களிலே புலிநிகர் மாந்தர் கூட்டம் உலா வந்தன.

நான், விடுதலைக் கவிஞன் பாரதியாரால் உருவாக்கப் பட்டவன்.

எனது தொழில் பாடுவது –
புதிமையை நாடுவது –
சீர்திருத்தத்தோடு கூடுவது –
தமிழின்பம் தேடுவது –
அதை உண்டு ஆடுவது –
எதிர்ப்பு வந்தால் வாளெடுத்துப்
போருக்கு ஓடுவது –
வென்ற பிறகு வெற்றியை
நாட்டுக்குக் கூறுவது –
வெற்றியைப் பழித்த என்னைச் சீறுவது –
எதிரிக்கும் இறங்கி ஆறுவது –
கொண்ட கொள்கையை விட்டு
மாறுவது எனக்கு இல்லை!

சுப்பிரமணிய பாரதிக்குப் பிறகு பைந்தமிழ்த்

தேரை ஓட்ட ஒரு சாரதி தேவைப்பட்டான்!

அந்த சாரதி இடத்திலே நான் உட்கார்ந்தேன்!

சழக்கர்கள் வெட்டி வைத்த பள்ளம் -

கயவர்களைத் தடுப்பதற்காகப் போடப்பட்ட வேலி -

இதைத் தாண்டி நான் தமிழ்த் தேரை ஓட்டிச் செல்ல வேண்டும்.

பாரதியார், தமது கவிதையின் ஆயுதமாக, நிலவைத்தான் அதிக நேரம் வைத்துக் கொண்டிருந்தார்.

அவர் எனக்கு ஆயுதமாகத் தந்துவிட்டுச் சென்றது எதைத் தெரியுமா?

நெருப்பை!

கொதிக்கும் செம்பரப்பை!

வெடிக்கும் எரிமலையை!

சீறும் அம்பை!

பாயும் புலியை!

சாய்க்கும் புயலை!

கொந்தளிக்கும் கடலை!

இவற்றை வைத்துக் கொண்டு விளையாடு -

என்று என்னிடம் சொல்லிவிட்டு

அவர் காற்றைப் போல கடுகிப் பறந்து விட்டார்.

பாரதியாரோடு முரண்பட்டவர்கள், என்னிடம் வந்து சரண் பட்டார்கள்

"கொலை வாளினை எடடா" என்று நான் கூறியதுதான் தாமதம். நிலை மாறிற்று. "எலி வளைக்குள் நுழையடா" என்று எதிரிகள் நுழைந்தனர்.

தமிழ் என்றால் என்ன என்று கேட்டார்கள்.

அடுத்த நிமிடம் 'தமிழுக்கு அமுதென்று பேர், அது எனது உயிருக்கு நேர்' என்று குறிப்பிட்டேன்.

தமிழ் எதிரிகள் தலையற்று வீழ்ந்து துடிதுடித்தனர்.

"தமிழர் என்று சொல்லுவோம் - தமிழ்ப் பகைதனை நடுங்க வைப்போம்"

"இமய வெற்றியின் முடிவில் தமிழ் கொடியை ஏற வைத்த நாங்கள்" - என்று எழுதியதுதான் தாமதம், உடனே மூளையில் குத்திற்று பின்னேற்றக் கும்பல்.

"எமை நத்துவாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்"

'தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத் தாலும் விடேன்'

- என்று கூறியவுடனே வாலையாட்டிக் கொண்டு எதிரிலே வந்த வேற்றுமொழி, கால் பிடறிபட ஓடிற்று.

வான்

மண்

கால்

எரி

வளி

எழுந்த ஓர் அசைவினாலே - வானோடு வெண்ணிலவும் - விரிகதிர் வானும் - எண்ணிலாதனவும் எழுந்தன.

எனது தொழிலை நோக்கி, நான் தொழ ஆரம்பித்ததும் - வழி வந்த பணத் திமிர் - பணக் கொழுப்பு - கவிதைச் சூட்டிலே உருக ஆரம்பித்தது.

கந்தையை அணிந்தாலும் - இரு கைகளைக் காட்டி -

மொந்தையின் கூழை மொய்த்துக் குடித்தோம்.

காடு களைந்தோம். கழனிகள் திருத்தி

நாடு நகரங்கள் ஆக்கினோம்.

'பொற்றுக்களை, மணிக்குலத்தைப் போய் எடுக்க அடக்கிய

மூச்சு எவரின் மூச்சு? எங்கள் மூச்சு என்று நான் வினா விளித்துக் கவிதைக் குரலின் கண்டத்தை உயர்த்தியதும், அதிகார போதை அந்தந்த இடத்திலேயே பொட்டென்று விழுந்தது.

எங்கும் புலமை - எங்கும் விடுதலை - எங்கும் புதுமை கண்டாய் நீதான்.

'அங்கு தமிழன் திறம் கண்டாய் - அங்கு தமிழன் தோளே கண்டாய்" என்று நான் தமிழரைத் துயில் நீக்கியபோது தமிழ்ப் பகைவர்கள் வைக்கோல் போர்போலக் குடை கவிழ்ந்தார்கள்.

"பாடாத தேனீக்கள் - உலவாத் தென்றல் - பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ?"

"மணவாளன் இறந்த பின் மங்கை நல்லாள் மணமுடித்தல் தீதோ?" என்று கருத்துப்பட நான் உரைத்தபின் வைதீகத்தின் விலா எலும்பு நொறுங்கியது!

"காட்டை அழிப்பதும் கூடும் - அலை

கடலைத் தூர்ப்பதும் கூடும் -

பேட்டை அகழ்வதும் கூடும் - விரி

விண்ணை அளப்பதும் கூடும் -

ஏட்டையும் நூலையும் தடுப்பதும் கூடும்!

உரிமை எண்ணத்தை மாற்றுதல் எப்படிக் கூடும்?

"கோட்டை நாற்காலி இன்றுண்டு நாளை,

கொண்டுபோய் விடுவான் திராவிடக் காளை"

-என்று கூறியவுடனேயே, தமிழ்ப் பகைவனுக்குக் குற்றவேல் செய்து வந்த இழி மக்கள் அந்த இடத்திலேயே இற்று விழுந்தனர்.

கடலினும் வானிலும், கவினுறு நிலத்திலும் -

வாழ் உயிர் அனைத்தும் மக்கட் கூட்டமும் வாழுமாறு - அன்பு மணிக்குடையின் கீழ் உலகினை ஆண்டார் உயர்வுற நம்மவர் - புலவர்கள் உலகப் பொன் இலக்கியமாக்கினர் - மறவரோ, அறியாமையை அறிவு தாக்குமாறு - அமைதியைத் தாழாது காக்க -

கண்கள் ஊடாமல், எண்டிசைவைத்தும் - வன் கையை இடப்புற வானில் வைத்தும் - அறம் புரிந்து இன்ப அறிவு சூடினார்.

இந்த உலகில் எண்ணிலா மதங்கள் - கந்தக வீட்டின் கனலின் கொள்ளிகள்.

'சாதிக்குச் சாவு மணியடிக்கப் பழம் நீகர்த் தமிழகம் வையத் தலையாய் அமையத் தொடங்குக அறம்' என்றேன்.

அறத்தை மறந்தவர்கள் இதைக் கேட்டதும், வாள் கண்ட கோழைகளைப் போல் நடுங்க ஆரம்பித்தனர்.

தமிழர்களின் எழுதுகோலுக்குச் சில அறிவுரைகளைச் சொன்னேன்.

பொதுமக்கள் நலம் நாடி புதுக் கருத்தைச் சொல்க.

புன்கருத்தைச் சொல்வதில் ஆயிரம் வந்தாலும், அதற்கு ஒப்ப வேண்டாம்.

'அந்தமிழர் மேன்மை அழிப்பாரைப் போற்றுதற்கும் ஏடு பல வாழ்ந்தால், எதிர்ப்பதொன்றே தமிழன் எழுதுகோல் வேலை.

இதனைக் கேட்டதும் எழுத்தாளர்கள் சிலர் என் மீது சீறி விழுந்தனர். - சிலர் என்னையும் மீறினர் -இறுதியில் தோற்றனர்.

புரட்சியால் உலகம் புது விழி கொண்டு - வரட்சியான அறிவைப் பார்த்துக் கிண்டல் செய்ய ஆரம்பித்தது.

வைதீக வாய்க்கால் ஓரம் சில பூண்டுகள் முளைத்தன.

அவற்றைப் பார்த்து சீர்திருத்தக் கருத்துக்கள் சிரித்தன.

புரட்சிக் கருத்துக்கும் சீர்திருத்தக் கருத்துக்கும் நான்தான் மூலம் என்று தெரிந்தவுடன், பாரதியார் மேல் பாய்ந்த அம்பு என் மீதும் பாய ஆரம்பித்தது.

ஈரோட்டுப் பாதை எடுப்பான பாதை. நேர் வழியில் செல்பவனுக்கு அப்பாதை சீர்வழி காட்டுகிறது.

அந்தப் பாதையில் விளைந்திருக்கும் அற்புதச் சக்திகள் மனிதனைச் சிறை பிடிக்கிறது.

விரைவான முன்னேற்றத்திற்கு அது வித்து.

நல்ல வாழ்க்கைக்கு அது பலம் தரும் சத்து.

இதுவரையில் இப்படி எவனும் சொல்லாத கருத்து முத்து.

அந்த முத்துக்களை நான் பொறுக்க ஆரம்பித்தேன் ஆரமாகக் கோர்த்தேன். அதை என் அன்னைத் தமிழுக்கே சூட்டினேன்.

தமிழின் வேரிலே வீழ்ந்த நச்சு நீரை அகற்ற ஆரம்பித்தேன்.

பழமையான - தூயக் கருத்துக்களை நீராகப் பாய்ச்சினேன்.

அது இலக்கிய உலகத்தில் மாபெரும் திட்பத்தை உண்டாக்கியது.

எனது எல்லா யாப்புகளிலும் சிக்கிய பாடல்கள் - தமிழுக்கு அணியாக விளங்குகின்றன.

புதிய கற்பனைகள் -

பதிய கவிதைகள் -

கவிதையில் புது பாணி!

செந்தமிழ்ச் சொல் ஆராய்ச்சி !

திருக்குறளுக்கு உரை!

சிற்றிலக்கிய விருந்துகள்!

பேரியக்கியப் படைப்புகள்!

இவை எல்லாம் என்னிடமிருந்து வரிசை வரிசையாகப் புறப்பட்டன.

தமிழன் உயர்வுக்காக ஆக்கப்பட்ட அறிவு நூல்கள் அத்தனையையும் - தமிழகத்திலேயே விட்டுவிட்டு வந்திருக் கிறேன்.

மொழி ஆதிக்கம் மேலோங்கி நின்று, தமிழின் விழி வரையில் கை நீட்டுகின்ற அளவுக்கு நம்மை வளமாக வளர்த்தது.

எதிரிகளின் விதண்டாவாதங்கள் - குறுகிய சோகங்கள் - தமிழைக் குப்புறக் கவிழ்ப்பதற்காகப் படையெடுத்து வந்தன.பொய்த்தது கோபம்! பூட்டிய இரும்புப் கூட்டின் கதவு திறக்கப்பட்டது.

"சிறுத்தையே வெளியே வா" என்று நான் அழைத்தேன். சிங்க இளைஞன் முகம் திருப்பி விழித்தான்.

"இங்குள்ள நாட்டுக்கு இழி கழுதைக் ஆட்சியா?" என்ற கேள்வியைக் கேட்டேன்.

"தமிழ் ஒரு பூங்கா - நான் அதில் ஒரு தும்பி" என்று அவன் பதில் கூறினான்.

"நீரோடை நிலங்கீழ்க்க நெடுமரங்கள் பெரும் காடாக்க, பருக்கைக் கல்லின் பிலம் சேர, பாம்புக்கூட்டம் போராடிய பாழ் நிலத்தைப் புதுக்கியவன்" போருக்கே புறப்பட்டான்.

"இந்திக்கு தமிழ்நாட்டில் ஆதிக்கமா?' நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே' என்ற குரலைக் கொடுத்துக் கொண்டே - தமிழன் தொடுத்தான் மொழிப் போராட்டத்தை!

'புலியெனச் செயல் செயப் புறப்பட்டதால், எலியென இகழ்ந்தவர் நடுநடுங்கிச் செத்தார்.

தமிழக மண்ணிலே புதியதோர் கலிங்கத்துப் பரணி பாட வேண்டிய அளவுக்குப் புறநானூற்றுப் போர்ப்பறை முழங்கிற்று.

எதிரிகள் அடங்கினர். தமிழ் - தமிழ் என்ற இதயங்கள் தடந்தோள் தட்டி, அன்று முதல் இன்று வரை சூறாவளி போல் ஒலித்துக் கொண்டு வருகின்றன.

பிஞ்சுக் குழந்தைகள் முதல் வாழ்க்கையின் கிளையிலே பிய்ந்து விழ வேண்டிய நிலையிலே உள்ள கனியொத்தக் கிழவர்கள் வரை பொதிகை மலைத் தோளோடு, வடவரது மொழி ஆதிக்கத்தை முறியடித்து வருகின்றனர்.

பிழைத்தது தமிழ். அப்போது செஞ்சோற்றுக் கடனாற்ற எதிரியினிடம் சேவகம் புரிபவர்கள், வெஞ்சொல்லால் என்னை அளவுக்கு மீறித் தாக்கினர்.

விழி மடங்கா வீரனாய் - பகை கண்டு மருளா செம்போத்துப் புலியாய் மாறினேன் நான்.

பாய்கின்ற ஈட்டியையே என் நெஞ்சம் பதம் பார்க்கும்.

நான் வைரக் கண்ணன் - எனது நாக்கு ஒரு நெருப்பு.

என்னுடைய எழுத்துக்கள் தமிழ்த் துரோகிகளுக்கு வெடி குண்டுகள்.

எனவே, இந்தி ஆதிக்க வெறியர்கள் என்னிடம் ஆட்டிய வாலை சுருக்கி மடக்கிக் கொண்டனர்.

திருக்குறளை மேலோங்க வைக்க அந்த நாளில் பலர் தயங்கினர். பாசுரப் பக்திக்குப் பலியாகித் திணறினர்.

அதிகாரம் இருந்த காரணத்தால் சிலர் அடிமைத் தனத்தோடு ஆமையாகிக் கிடந்தனர்.

திருக்குறள் ஒரு நூலா? அதனைப் போற்றுவதா? உரிய நூல்களே போதும் - சீரிய தமிழ் வேண்டாம்.என்ற குறுகிய நோக்கத்தில் சிலர் போராட முன்வந்தார்கள்.

அவர்களின் குறுக்கெலும்பை நான் எனது கவிதை களாலேயே உடைத்தேன்.

இப்போதாவது என்னை யார் என்று புரிகிறதா?

எனது இயற்பெயர் கனக சுப்புரத்தினம்.

என்னுடைய ஆசிரியர் பெயரைச் சேர்த்து பாரதி தாசனாகவே திகழ்ந்தேன்.

எனது தாய்மொழிக்கு என்னால் இயன்ற சேவைகளைக் கவிதைகளாலும் - நூல்களாலும் - ஆராய்ச்சிகளாலும் - செய்து போர் முழக்கமிட்டேன்.

என்னைப் பின்பற்றுகின்ற தமிழகத்து சிங்கங்களே, நீங்கள் என்ன செய்தீர்கள்?

நான் மறைந்ததற்குப் பிறகும் இந்திப் போராட்டம் நடைபெறுகிறதா? அதை என்னைப் போலவே எதிர்க் கிறீர்களா?

வாழ்க ! வளம் பெறுக !

# இயேசு ஒரு சீர்திருத்தவாதி



*(சென்னையில் உள்ள கிறிஸ்துவக் கலை - தொடர்பு நிலையத்தின் இயக்குனராகப் பணிபுரியும் தமிழ் சான்றோர் அருட்டிரு. சுவிசேச முத்து அவர்கள், இயேசு பிரானைப் பற்றி கவியரங்கம் ஒன்றை நடத்தினார். அக் கவியரங்கத்திற்கு, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் அவர்களின் செல்வரும், 'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்' என்ற ஏட்டின் பொறுப் பாசிரியருமான வ.உ.சி.சுப்பிரமணியம் அவர்கள் தலைமை ஏற்றார். அவ்வமயம் பன்னிரு கவிஞர் பெருமக்கள் இயேசுவுக்குப் பாமாலை சூட்டினர். அவற்றுள் சவுக்கடி ஆசிரியரான, 'எரியீட்டி' என்.வி. கலைமணி அவர்கள் சூட்டிய பாமாலை இது.)*

## தமிழ்த்தாய் வாழ்த்து

கண்ணேறு படுமென்று தமிழே ! உன்னைக்
கண்ணாக நான்சுமந்தேன் தாயே ! நெஞ்சப்
பண்ணென்று சொல்கின்ற உயிர்த்து டிப்பில்
பலகாலம் உன்சதங்கை ஒலியைக் கேட்டேன்.
மண்ணின்மேல் முதன்முதலாய் சப்த மிட்ட
மணிகண்டம் உன்கண்டம் நீயெ னக்குக்
கண்நாடி வருகின்ற காட்சி யானாய்
கைக்குழந்தை நானம்மா காப்பாய் தாயே !

## அறிஞர் அண்ணா வணக்கம்

அண்ணாவே ! நீ வளர்த்த தமிழை, அந்த
அருந்தமிழில் புதைந்திருந்த கண்ணி யத்தை
மண்கவர்ந்த மாசற்ற அன்பைக் கண்டு

மயங்கியதால் எழுத்தாளன் ஆன என்னைக்
கொண்டுவந்து கவியரங்கில் நிறுத்தி விட்டார்
கூவாயோ குயிலேநீ என்றும் கேட்டார்
அண்ணாவே, உன் அறிவின் துளிஎ னக்கு
அருளாயோ பொருளோடு பாடு தற்கு!

உனைவிற்றுக் காசாக்கத் தெரிய வில்லை
ஓரத்தில் நிற்கவைத்தார் பொறுத்துக் கொண்டேன்
தனைவிற்றுத் தன்மானம் விற்று உள்ளச்
சாட்சியினைக் கடைத்தெருவில் விற்றுப் பல்லோர்
எனைபோல இங்குண்டோ என்று கேட்கும்
இழிநிலையைப் பார்த்தாலே விழிபா ழாகும்
அனைத்தாகி நீயிருக்க எனக்கேன் அச்சம்?
அடிவைத்தேன் கவிதையிலே வாழ்த்தாய் அண்ணா!

வேறு — கவியரங்கத் தலைவருக்கு வணக்கம்

கொழித்தெழில் தமிழைத் தின்று
கொஞ்சிடும் கிளியின் பேச்சை
விழுங்கிடும் செவிகள் கொண்ட
வ.உ.சி. குறளை நோக்கி
முழுமையை நயந்து நின்றார்
சந்தனம் வழிய நாறும்
எழுதிய உரையால் நாட்டை
எனதென எடுத்துக் கொண்டார்.

ஒழுகியத் தேனை உண்டு
இன்னிசை உளறும் தும்பி
விழுந்தபின் அங்கோர் பக்கம்
விழியினைக் குவித்துத் தூங்கும்
வழக்கத்தை இவரும் கொண்டார்
வ.உ.சி. வடித்த தேனை
குழையவே குடித்த வாயான் இளந்தமிழ்ச் சிறகுத் தும்பி.

நெடும்புனல் வீங்கி வீங்கி
நெகிழ்ந்துபின் நீராய் பொங்கிப்
படுக்கிற பான்மை போல
பைந்தமிழ்க் குமிழை நெஞ்சில்
தொடுக்கிற சுப்பிரமண்யம்
தொடுகிற பண்பைக் கொண்டார்
வடுவிலா அன்பைப் பூக்கும்
வனப்புள வனத்தான் வாழி.

அருட்டிரு சுவிசேச முத்து
அவர்கட்கு வணக்கம்

கவிஞர்கள் விரவி வைத்த
கவிதையில் இயேசு நாதர்
குவியேழிற் பிழம்பில் சிக்கிக்
களித்திட நினைத்து ஞான
சுவிசேச முத்து இந்த
சுடர்க்கவி அரங்கம் கூட்டி
புவியினை வளைத்துக் கொண்ட
புதுமையே புதுமை யென்பேன்.

அவையோர்க்கு வேண்டுகோள்

அஞ்சுகம் புலம்பும் ஓசை
அடுத்துள மலர்த்தூக் கத்தைக்
கொஞ்சமாய் நெகிழ்ந்து நாத
கூட்டிலே கிடக்க வைக்க
செஞ்சதைப் போல நானும்
செய்யவே கவிதை மீட்டி
கொஞ்சிட வந்தேன் நீங்கள்
குவிமலர், விழிப்பாய்க் கேளீர்

வேறு

இயேசு ஒரு சீர்திருத்தவாதி

இயேசுஓர் சீர்திருத்தச் செம்மல் என்ற
இலக்கணத்தின் இலக்கியமாய் பாட வந்தேன்

கூசுகின்ற கீழ்நிலைகள் இருக்கு மானால்
 கோணலினை நிமிர்த்தாமல் விடுதல் தீது!
நீசநிலை நெருக்கடியில் நெருங்கிச் சாகும்
 நிலத்திற்கு விடிவெள்ளி தேவை யன்றோ?
ஆசைநோய் குடிகொண்ட நெஞ்சை நாட்டில்
 ஆற்றுகின்ற மருந்தின் பேர் சீர்தி ருத்தம்!

சீர்த்திருத்தம் வார்த்தையல்ல ! உயிரோட் டத்தால்
 சீறிவரும் செயலின்பேர்! கருத்தைச் சொல்ல
யார்வேண்டு மானாலும் வருவர்! ஆனால்,
 கடனாற்ற யார்வருவர்? இதுதான் கேள்வி!
நீரெதிர்க்கும் புயலைப்போல் இருந்தால் தானே
 நேற்றிருந்த கொள்கைகளை இன்று வீழ்த்தும்!
கார்பொத்தல் ஆக்குகின்ற மின்ன லைப்போல்
 கடனாற்ற வந்தவர்தான் இயேசு அண்ணல்!

வேசியினைப் பாவியென்று குற்றஞ் சாட்டி
 வீசவந்தார் கல்லாலே! அதனைக் கண்டு
இயேசுமனம் புழுங்கிற்று! கூட்டத் தாரை
 ஏறெடுத்துப் பார்த்துஒரு கேள்வி கேட்டார்.
“வேசியினைப் பாவியெனும் உங்க ளுக்குள்
 விதிவிலக்காய் இதுவரையில் பாவம் செய்யா
மாசற்றோர் முதற்கல்லை எறிக” என்றார்.
 மனமாற்றும் சீர்த்திருத்தம் இதுதான் அன்றோ!

மீன்பிடிக்கும் பேதுருவைக் கடலோ ரத்தில்
 தேவசுதன் வலைவீசக் கண்டார்! நீங்கள்
நான்செல்லும் பாதையிலே வருவீ ரானால்
 மனிதரினைப் பிடிப்போராய் செய்வேன் என்றார்.
தேன்மொழிகள் தித்திப்பைத் தருவ தோடு
 திசைதிரும்பிப் போகாது! உடனே நெஞ்சக்
கூன்நிமிர்த்தும் ஆற்றலோடு வேலை செய்யும்
 குனியாத சீர்திருத்தம் இதுதான் என்பேன்

"என்நிமித்தம் நீங்களெல்லாம் துன்பப் பட்டால்
என்நிமித்தம் நீங்களெல்லாம் பழிசு மந்தால்
புண்பட்டுப் போகாதீர் களிகூ றுங்கள்
பொல்லாதோர், உங்களுக்கு முன்பிருந்த
நன்மைசெய் ஞானவானை இப்ப டித்தான்
நடுநடுங்கச் செய்தார்கள்!" என்று சொன்னார்.
இன்றல்ல, என்றுமிந்த உபதேச ங்கள்
இறவாத சீர்திருத்த இதயப் பேச்சே!

ஆயக்கா ரர்பாவி இவர்க ளோடு
அமர்ந்திருந்தார் பந்தியிலே! அதனைக் கண்டு
வாயவிழ்த்தார் பரிசேயர்! "என்ன உங்கள்
போதகரே பாவியோடு விருந்துண்கி ன்றார்
நோயாளி களுக்கன்றோ மருத்துவர்கள்
இரக்கத்தை நாடி வந்தேன்! பாவி யைஅல்ல
தேயக்கால் நடப்பதெல்லாம் பாவி கட்கே
நீதிமானைத் தேடியல்ல!" என்றார் இயேசு!

இயேசுநாதர் சீடரினை அழைத்துச் சொன்னார்
"என்னுடைய அதிகாரத் தாலே நீங்கள்
பாசமுள்ளோர் வியாதிகளைக் குணமாக்குங்கள்
பணமட்டும் வாங்காதீர்!" என்று ரைத்தார்
மாசற்ற சீர்திருத்த வாதி செய்யும்
மறுமலர்ச்சி இதுவன்றி வேறே தேனும்
தேசத்தில் கண்டதுண்டோ! "பணங்கா சுக்குச்
சேவையினைச் செய்யவேண்டாம்" என்றார் இயேசு!

அருள்முளைத்து பாவத்தின் வேரை வெட்டி
அப்பழுக்கை நீக்குமிடம் கோயில்! அங்கே
பொருள்கறக்கும் வாணிகர்கள் குவிந்து மக்கள்
புத்தியினைத் திசைத்திருப்பி கொள்ளை கொள்ளும்
திருடரினை இயேசுகண்டார்! பிரம்பெ டுத்தார்
சிற்றினத்தை விரட்டிவிட்டார்! தெய்வ நாட்டம்
பெறுகின்ற வழிசொன்னார் சீர்த்தி ருத்த
பேரின்ப தாள்திறந்தார் இயேசு பெம்மான்!

ஏழைக்கும் கோழைக்கும் எடுத்தார் கையில்
இளைத்துருக்கும் பிள்ளைக்கும், தன்னைக் காக்கா
பாழைக்கும் பதங்குலைந்த வாழ்வில் சிக்கிப்
பரதவிக்கும் மோழைக்கும், நோயில் மாட்டி
ஈழையிலே சிக்குண்ட பிணியா ளர்க்கும்
இதயத்தைத் திறக்கின்ற நெஞ்சம் உண்டா?
பாழடைந்த கண்ணுக்கோர் ஒளியை ஊட்டப்
பணிசெய்யும் சீர்திருத்தம் எங்கே? எங்கே?

மேல்மட்டச் சீர்திருத்தம் மிகமட் டத்தில்
வேக்காட்டில் சாக்காட்டில் இருப்பவர்க்கு
கோல்கொடுக்க கைகொடுக்க வருமா என்றால்
குச்சுவீட்டில் நுழையாது மச்சு வீடு
பால்குடிப்போர் சீர்திருத்தம் உப்பே இல்லா
பழங்கஞ்சிக் கலயத்தில் நுழைவ தில்லை
கால்இருப்போன் முடவனுக்கு வழியைக் காட்டும்
கால்வழியில் பணக்காரன் வரவே மாட்டான்.

வாடையிலே வாடுகின்ற மனித ருக்கு
வெதவெதப்பு தருகின்ற இதயச்சூடு
கோடையிலே வசந்தத்தால் வந்த சூடு
கொடுப்பவனோ தெய்வத்தால் பிழிந்த சாறு.
பாடயிலே குழைகின்ற நாத நீட்டம்
பனிபடுத்த படுக்கையிலே மிதந்த சூடு
நாடயிலே அதைக்காண்போம் அந்தச் சூட்டை
நல்குகின்ற சீர்திருத்தம் செய்தவர் யார்?

பணம்படைத்தோர் சமுதாயச் சகதிச் சேற்றில்
பாதத்தை ஊன்றாமல் மேலி ருந்தே
தினம்செய்யும் சீர்திருத்தம் உண்டு! ஆனால்
தெருப்புழுதி யோடிருக்கும் ஏழை யோடு
மனம்ஒன்றி ஏழையாக மாறிக் கேட்டை
மாற்றுகின்ற சிர்திருத்த வாதி உண்டு.
குணம்நல்லக் குணங்கொண்ட இயேசு நாதர்
ஏழையாகி சீர்திருத்தம் குவித்தச் செம்மல்

வேறு

உயிர்த்திரி எண்ணெய் வற்றி,
ஒளியுற வறுத்துக் கண்கள்
மயிரிழை இழையாய்க் கீழே
மடங்கிடும் போது இயேசு
கயவரைத் தண்ணீர் கேட்டார்
காடியை வாயில் வைத்தார்
நயனில செய்தார் குற்றம்,
"நாயக! பொறுப்பாய்" என்றார்.

வேறு

தத்துவத்தைக் கடைந்துயிர்க்கே உண்பிக் கின்ற
தருணத்தைத் தானேற்று மனித நஞ்சு
வித்திருக்கும் திக்கேறி விளக்கம் ஈந்து
வினையாற்றும் இயேசு நாதர், எதிரி தன்னைக்
"குத்தஒளி வாளெடுத்த பேது ருவை
"குத்தாதே ! வாளெடுப்போன் வாளால் வீழ்வான்"
சத்தான வாசகத்தைக் கேளாய் என்றார்
சாயாத சீர்திருத்தம் இதுதா னன்றோ!

கொலைமலிந்து தெய்வத்தின் பலிபீடத்தில்
கொடுமையெலாம் மலிந்திருந்த அந்த நாளில்
சிலைமலிந்து சிறுதெய்வம் பெருந்தெய் வங்கள்
தெருவுக்கு தெரு மலிந்தே இருந்த நாளில்
விலைமலிந்து போய்விட்ட போலி ஞான
போதகர்கள் மலிந்திருந்த அந்த நாளில்
சிலைமலிவை கொலைமலிவை ஒழித்துக் கட்ட
சீர்திருத்த வாதியாக இயேசு வந்தார்!

மண்ணிடையே பிறந்ததெல்லாம் மண்ணுக் கென்றார்
விண்ணிடையே பிறந்ததெல்லாம் விண்ணுக் கென்றார்
எண்ணத்தைப் பொருத்துத்தான் செயலும் சொல்லும்
எதிரிகளை நேசிக்க வேண்டும் என்றார்

அண்ணனுக்கும் தம்பிக்கும் தாய்தந் தைக்கும்
  அளந்து வைத்த உறவைவிட இறைவனுக்கும்
மண்ணுக்கும் இருக்கின்ற உறவு நல்ல
  உறவென்று சீர்த்திருத்த இயேசு சொன்னார்.

இடையரினை மூன்றுராஜா சந்தித்தார்கள்
  இயேசுநாதர் உங்களுக்குப் பிறந்துவிட்டார்
விடைகாண முடியாத வினாவுக் கெல்லாம்
  விடையளிக்க வந்துவிட்டார் என்று சொன்னார்
கடைநிலையில் இருப்பவரைத் திருத்து தற்கே
  கிருத்துவந்தார் என்றெழுதி இருப்ப தாலே
படையலிட்டார் சீர்த்திருத்தம் அதனால் ஞானப்
  பிதாவுக்குப் பிள்ளைகளை அளித்தார், காத்தார்.

உலகத்தில் அவர்செய்த சீர்தி ருத்தம்
  உள்ளிருக்கும் ஆத்மாவின் சீர்த்தி ருத்தம்
கலகத்தின் கண்ணீரின் கேடு பாட்டின்
  கலக்கத்தின் காரணங்கள் எங்கி ருந்து
இலங்குகின்ற தென்றவரும் கண்டு பூமி
  இன்னலுக்குப் பொன்மொழிகள் உதிர்த்தார், இந்த
உலகத்தை ஆதாய மாக்கினாலும்
  ஆத்மாவை இழந்துவிட்டால் பயனே தென்றார்!

தனையழித்துப் பிறர் வாழ சீர்த்தி ருத்தம்
  தரணியிலே விரவியவர் இயேசு நாதர்
முனைமொடியா சீர்த்திருத்தம் பொதுந லத்தின்
  முழுமைக்குள் முளைப்பதாலே! இயேசுநாதர்
வினையெல்லாம் பிறர்க்கு நன்மை செய்யும்
  வினையாக மாற்றினார்கள் அவரின் நெஞ்சில்
சினையளவும் மாசுதூசு இருக்கவில்லை
  சீர்த்திருத்த பரிசுத்த ஆவி ஏசு!

வேறு

இயேசுவின் கண்கள் வைர விளக்கொளி
இயேசுவின் உதடுகள் திராட்சை இளங்கொடி
இயேசுவின் முகத்தில் ஞானப் பிழம்பொழி
இயேசுவின் அசைவுகள் எல்லாம் அறிவொளி!

கர்த்தர் விதையில் முளைத்த கனியே
காலத்தை வெல்லத் தழைத்த இறையே
சர்வ வல்லமை சத்தியம் நீயே
சரணடை யாத சாந்தம் நீயே

உன்விழி திறந்தால் பாவம் ஒடுங்கும்
உன்வாய் திறந்தால் கொடுமை நடுங்கும்
உன்கால் நடந்தால் அன்பு தொடங்கும்
உன்கை அசைந்தால் உலகே அடங்கும்

வேறு

கேடு களைத்திட கூடு தழைத்திட
நாடு பிழைத்திட
வந்ததுவே ஒரு தென்றல் - அது
இயேசுவெனும் மணமன்றல்

வீடு களித்திட நீடு சுகம்பெற
தேடு சுதந்திரம்
தந்ததுவே ஒரு தெய்வம் - அதைக்
கண்டுகளித்தது வையம்!

ஏடு இனிக்குது நாடு சுவைக்குது
மூடு பனித்திரை
நீக்கிடவே வந்த பாலன் - பாவம்
தாக்கிடவே வந்த சீலன்!

மேடு தகர்த்துப் பூங்காடு இயக்கியே
வீடு அளித்திடும்
நாயகனே நமதேசு - அவர்
நெஞ்சிலே ஏது மாசு?